# என் கண்மணித்தாமரை

பாலகுமாரன்



12.9.11
5.10.2011
25.10.11
28-11-11
15-12-11
29-12-11
19-1-12
12.4.12
2-4-12
10.5.12

# என் கண்மணித் தாமரை

**பாலகுமாரன்**

**விசா பப்ளிகேஷன்ஸ்**
புதிய எண்: 16, பழைய எண்: 55,
வெங்கட்நாராயணா சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 1997
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 2002
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 2007
உரிமை : ஆசிரியருக்கு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

| | | |
|---|---|---|
| TITLE | : | ENN KANMANI THAMARAI |
| BY | : | BALAKUMARAN |
| THIRD EDITION | : | SEPTEMBER, 2007 |
| PAPER | : | 11.6 Cream wove |
| TOTAL PAGES | : | 312 |

விலை ரூ. 98/-

41735

திருமகள் நிலையம்
புதிய எண்.16, பழைய எண்.55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342899, 24327696
Fax : 91-44-24341559

Typesetting : AMARAVATHI Chennai - 83
Cell : 9444169725

Printed by : 6248537

## சமர்ப்பணம்

தன் இறை உணர்வாலும் கூரறிவாலும் என்னோடு வாழ்ந்தபடி என்னை வளர்த்து வரும் என் மனைவி சாந்தாவுக்கு - என் கண்மணித் தாமரை சமர்ப்பணம்.

# தாமரைக்கு வாழ்த்துரை

டாக்டர். வாசவன்

1/11, சத்தியமூர்த்தி நகர்,
நந்தனம், சென்னை - 35.

என்னை வாசிக்கச் செய்து, நேசிக்கத் தூண்டி, பூசிக்கவும் வைத்து விட்ட திரு. பாலகுமாரன் அவர்களுக்கு வயதால் வாழ்த்தி, வாய்மையால் வணங்கி இந்தப் பெருக்கோலையை எழுதுகிறேன்.

பௌதிக நலங்கள்.

என் மகன் தங்கள் வாசகன். அதுவும் தீவிர வாசகன். தங்கள் நாவல்கள் எல்லாவற்றையும் வாங்குவான். என்னிடம் காட்டுவான். நான் அதை எல்லாம் சம்பந்தப்படாமல் சாட்சியாக இருந்து மட்டுமே பார்ப்பேன்.

இப்பொழுதெல்லாம் இலக்கியத்தில் சம்பந்தப்பட்ட எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் ஒதுங்கி இருக்கிறேன்.

இலக்கியத்தில் ஓங்கிய விளம்பர பேனராக இருந்த நான்... எத்தனை எத்தனை சடுகுடுக்கள்?... எத்தனை எத்தனை நூல்கள் நூற்றுக்கணக்கில்? எத்தனை எத்தனை சிறுகதைகள் ஆயிரக் கணக்கில்? எல்லாமே கலைக்கூத்துக்கள்... ஸ்ரீவித்தையை தீவிரமாக உபசரிக்கத் தொடங்கியவுடன், ஏறி நின்றது கோபுரத்தில் அல்ல, குப்பை மேட்டில் என்ற உண்மை புரிந்தது. மாயை தெளிந்தது.

என்னை எனக்குக் காட்டி, எனக்கு அம்மா அருள் செய்த நிலையில், தாகம் தணிந்த வேளையில், என் மகன் தங்களுடைய என் கண்மணித் தாமரையைக் கொண்டு வந்து கொடுத்தான், வழக்கம் போல.

நான், எப்பொழுதுமே உங்கள் நாவல்களில் அட்டைப் படமாக வரும் உங்கள் உருவத்தை உற்றுப் பார்ப்பேன். உங்கள் பார்வையின் தீட்சண்யம் என்னைச் சுழற்றி அடிக்கும். அப்படி நான் வீழ்ந்த போதெல்லாம் உங்கள் பார்வையிலிருந்து



எதையாவது எடுத்துக் கொண்டு நிமிருவேன். அந்த சுவீகரிப்பும், சுகமுமே எனக்குப் போதுமானவையாக இருந்தன.

உங்கள் உருவமே எனக்கு அப்படியொரு திருப்தியைத் தந்து விடுவதால், உங்கள் படைப்புக்குள் நுழைய வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை.

ஆனால், ''என் கண்மணித் தாமரை''யின் அட்டையில், உங்களைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, ''நீ ஏன் கோபுர வாசலோடு நின்று விடுகிறாய்? கர்ப்பக்ருகம் வரை சென்று பார்'' என்று எனக்குள்ளிருந்து ஒரு குரல் கட்டளையிட்டது.

நான் உங்களின் பக்கங்களைப் புரட்டினேன். பிறகு நானே புரட்டி அடிக்கப்பட்டேன். வெந்தழலாய் வெந்தேன். நீராய் புரண்டேன். நானின்றி வான் கலந்தேன். கண்மணித் தாமரையாய் மலர்ந்தேன்...

அபிராமி பட்டரின் வாழ்க்கை என்றால், ஒரு பத்துப் பதினைந்து பக்கங்கள் வரலாம். அபிராமி அந்தாதி பாடிய நிகழ்ச்சியை விவரிப்பது என்றால், மேலும் ஒரு பத்துப் பதினைந்து பக்கங்கள் வரலாம்.

இந்த முப்பது பக்கங்களையும் அர்த்த புஷ்டியாக்குவதற்கு, அம்பாள் 150 பக்கங்களில் அலகிலா விளையாட்டு விளையாடி இருக்கிறாள்.

ஸ்ரீவித்தை ரசமானது, ரகசியமானது.

அதன் ரகசியக் கதவு, குரு மூலமாகத்தான் திறக்கப்பட வேண்டும் இல்லையா? ஸ்ரீவித்தையின் பல கதவுகளைத் திறந்து விட்டிருக்கும் நீங்கள் குரு மூலம் திறக்கப்பட வேண்டிய ரகசியக் கதவை மட்டும் திறக்கவே இல்லை. அதுதான் நெறி.

பாலா திரிபுர சுந்தரி மந்திரத்தின் அக்ஷரங்களைக் கூட வெளிப்படையாகச் சொல்லலாம் - ஆனால், பீஜாக்ஷரத்தை மட்டும் குரு மூலமாகத்தான் பெற வேண்டும்.

பாஷை, அதென்ன அப்படியோர் அமானுஷ்யமான பாஷை. அய்யன் சொற்களில் சொக்கி நிற்கும் போது, அந்தச்

சொற்களுக்குள் இருக்கும் சூட்சுமம், எங்கேயோ தூக்கிக் கொண்டு போய் விடுகிறது.

போன இடம் புரியவில்லை. திரும்பி வந்த இடமும் தெரியவில்லை. இன்னும் சரியாகச் சொல்லப் போனால் வந்தோமா, வரவில்லையா என்பது கூட விளங்கவில்லை.

நூற்றிதொன்னூறு பக்க நூலை, பத்துப் பதினைந்து நாட்கள் படித்தேன். சில இடங்கள் என் மூளையை முளை அடித்துக் கட்டி விடும். பிறகு அதுவாக என்னை விடுவிக்கும் வரை நான் என்னில் இருக்க மாட்டேன். இருக்கவில்லை.

இது நாவலா? வரலாறா, ஆன்மீகக் கருவூலமா? அபிராமிப் பட்டரே தம்மைச் சொல்லிக் கொள்வதற்காக பாலகுமாரனுக்குள் இருந்து வெளிப்படுத்திய குரலா? இன்னது என்று சொல்ல முடியாத அளவுக்கு எல்லாமுமாகிப் பாலித்த அற்புதம் இது.

பெரிய தேரை சிறிய வடத்தைக் கொண்டு இழுப்பதைப் போல, ஒரு பிரமாண்டத்தை இலகுவாக்கி, சாமானியரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய பாஷையில், சினிமா ஷூட்டிங் ஸ்கிரிப்ட் முறையில் சொல்லி இருக்கிறீர்கள். இந்த பாஷைக்கு ''பாலா மந்திர பாஷை'' என்று சொல்லலாமா?

உங்கள் எழுத்தில் அம்பாள் பரிபூரணமாக வாசம் செய்கிறாள். அபிராமி அந்தாதியில் ஒரு ரீங்கார ஒலி இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். உண்மைதான். உங்கள் எழுத்திலும் அதே ரீங்காரம் ஒலிக்கிறது. வெளியே அல்ல, உள்ளே.

அது உங்கள் குருநாதர் உங்களுக்குக் கொடுத்த வரம். ரீங்காரம். இந்த ரீங்காரம் உடல் தாண்டும், உலகம் தாண்டும், காலம் தாண்டும், காலம் முழுமைக்குமான ஆக்கத்தை சுமக்கும், தாய் இந்த ரீங்காரம்.

யாரும், யாரையும் நம்பாத காலம் இது.

லட்சக்கணக்கான பிரதிகளை விற்கும் வியாபாரப் பத்திரிகைகள், தங்கள் வாசகர்களை சுத்தமாக நம்புவதில்லை. அதனால்தான் வைரம், தங்கம், புடவை என்று ஏலம் போட்டு, வாசகர்களை இழுக்கப் போட்டி போடுகின்றன.



ஆனால், நீங்கள் வாசகர்களை நம்புகிறீர்கள். அவர்களை பெரிய வித்வத் சதஸில் உட்கார வைத்து ''என் கண்மணித் தாமரை''யை மனம் குளிர, கைகுளிரச் சம்பாவனை செய்கிறீர்கள். இவ்வளவு பெரிய நம்பிக்கை வேறு யாருக்கு வரும்; பிறர் உயர எவன் தோள் கொடுப்பான்?

இந்த நாவலைப் படித்த ஒரு சிலரால் நாட்டில் தர்மங்கள் போற்றப்படும்.

சரி இதைப் படித்த பிறகு, ஒரு நவாபரண பூஜை செய்தது போன்ற சந்தோஷம் எனக்கு.

பாலகுமாரன்! நான் இதுவரை இப்படி ஒன்றைப் படித்ததில்லை. இனி படிக்க முடியுமா என்பதும் கேள்விக் குறிதான்.

ஐம்பத்து ஐந்து ஆண்டு காலமாக எழுதிக் கொண்டு வரும் நான் சொல்கிறேன், இதைப் போல இன்னொன்று இல்லை. இதற்கு மேலே எதுவும் இல்லை.

''ரஸித்ததைப் பொறாமை காரணமாகப் பாராட்டாத ஒருவன் கொலைகாரனுக்குச் சமமாவான்'' என்று ஒரு சமஸ்கிருத ஸ்லோகம் சாட்டை வீசுகிறது.

அந்தச் சாட்டை என்மீது விழாமல் இருக்க, அந்த ஸ்லோகக்காரனின் காதில் விழும்படி உரக்கக் கூவுகிறேன்.

''பாலகுமாரன்! நீ உன்னதமானவன்.

எல்லாவற்றிலும் இருந்து கொண்டே, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஞானி நீ.

உன் எழுத்தும் வேதம்.

ஐந்தாவது வேதமாக அதை உலகம் பயிலும்.

உன் வேதம் வெல்க...''

என்றென்றும் அன்புடன்

டாக்டர். வாசவன்

★

சிவசிவ

திருச்செந்திலாண்டவன் துணை

ஓம் ஸ்ரீ சத்குரு சேஷாத்ரி சுவாமிகள் திருவடிக்கே

ஓம் ஸ்ரீ யோகி ராம்சுரத்குமார்

பேரன்புடையீர்!

வணக்கம். எல்லாம் வல்ல இறைவன் நம் விருப்பத்தை, நம்மை ஆதரித்து, நாம் அறியாமலேயே அவற்றை நிறைவேற்றியும் காட்டுகின்றான். என் வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளை இறைவன் அவ்வாறு நிகழ்த்திக் காட்டி இருக்கின்றான். அவற்றுள் ஒன்றுதான் தங்களுடன் நான் நட்புக் கொண்டதும்.

தங்களைச் சந்திக்க வேண்டும் என்று நான் பல காலமாக எண்ணிக் கொண்டிருந்தேன். இறைவன் தன் சந்நிதானத்திலேயே நம்மைச் சந்திக்க வைக்க வேண்டும் என்று திருவுளங் கொண்டார் போலும். இறையருளும் குரு வருளும் சேர்ந்து என் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தன. மயிலை, கயிலைக்கு நிகரானது. அங்கு உறையும் ஸ்ரீ கற்பகாம்பாள் கேட்ட வரம் தரும் அன்னை. அவள் உறை யும் இடத்தில் அருள்மிகு அண்ணாமலையாரின் திருச் சந்நதியில் அடியேன் தங்களைக் கண்டேன். தங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே தங்களை என் குருநாதராக ஏற்றுக் கொண்டேன். கண்ணிற்கு அணிகலனான கண்ணோட்டத்தைத் தங்கள் கண்கள் உமிழ்ந்து கொண்டிருந்தன.

தங்கள் விழி பொழியும் கருணை மழையில் பல முறை நனைந்தேன். அப்படி நனையும் பொழுதெல்லாம் நான் பேரானந்தம் அடைந்தேன். மகான்களைப் பற்றிப் பேசினோம். மகத்தான தங்களின் படைப்புகளைப் பற்றியும் பேசினோம். என் மகளின் திருமணம் கைக் கூடி



வர ஆசி வழங்குமாறு வேண்டினேன். மகான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின் நாமத்தை ஜெபித்து ஆசி வழங்கினீர்கள். குருவருளால் என் மகளுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. தங்களின் பழக்கத்தால் தியானம் பழகி வருகின்றேன். அப் பழக்கம் என் அகத்தும் புறத்தும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. படைப்பாளிகள் இலக்கி யங்களை மட்டும் படைக்காமல் இறைவனால் படைக்கப் பட்டவர்களையும் நல்லவர்களாக மாற்றும் பணியைத் தடையின்றி செய்ய வேண்டும். ஓர் எழுத்தாளரின் எழுத்து அவரின் வறுமையைப் போக்குவதைவிட மக்களின் அறியாமையைப் போக்க வேண்டும். இதை உணர்ந்து எழுத்தை மகேசனுக்குச் செய்யும் பணியாகக் கருதி, மக்களுக்குப் பணி புரிந்த, விரல் விட்டு எண்ணத்தக்க அளவே உள்ள எழுத்தாளர்களில் தாங்கள் முதல் இடத்தை வகிக்கின்றீர்கள். தங்களின் நாவல்கள் மூலம் எவ்வளவோ நல்ல கருத்துக்கள் மக்களிடம் போய் சேர்ந்து அவர்களின் வாழ்க்கையை நன்னெறிப்படுத்தி இருக்கின்றன. என்னையே நான் எடுத்துக் காட்டாக ஆக்கி தமிழ் கூறும் உலகு முன், சாட்சியாக நிற்கின்றேன். தங்களின் வார்த்தைகள் மந்திரச் சொற்களாக அமைந்து உள்ளன.

அப்படி மந்திரச் சொற்களாகவே அமைந்த தங்களின் படைப்புதான் ''என் கண்மணித் தாமரை''. ''என் கண்மணித் தாமரை''யைப் படித்து விட்டு எனக்குத் தெரிந்து மனம் திருந்தி மனைவியை மதிக்கக் கற்றுக் கொண்டவர்கள் பலர். அவர்களில் அடியேனும் ஒருவன். அந்நூலைப் படித்த பிறகு அடியேனுக்கு மாதா மாதம் அன்னை அபிராமியின் தரிசனம் கிடைக்கின்றது. இப்பேறு தங்களால் வாய்ந்தது. அந்நூலைத் தாங்கள் எழுதவில்லை. அன்னை அபிராமியே எழுதியதுதான் அது. ஏ அப்பா,

அபிராமி அந்தாதி என்னும் கனியைப் பிழிந்து அக்கனியின் ரசமாகிய அபிராமியை எல்லோருக்கும் காட்டி தரிசிக்க வைத்தீர்கள். அபிராமி பட்டர் தன் வரலாற்றைத் தானே படித்து மனம் மகிழ்ந்து அதை அவர் தாயுமானவரிடம் கூறி, அவரும் தன் வரலாற்றை உங்களைக் கொண்டு எழுத வைத்துப் பார்க்கத் திருவுள்ளங் கொண்டார் போலும். அதனால் எழுந்ததுதான் ''ஆனந்த யோகம்''. தாயுமானவரின் வாக்காகிய ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே அன்றி வேறு ஒன்றும் அறியேன் பராபரமே'' என்னும் கருத்தை உணர்ந்து நீங்கள் அனுபவித்த அந்த இன்பத்தை எல்லோருக்கும் வாரி வாரி வழங்கி உள்ளீர்கள்.

எழுத்து வரம். தவம் செய்தார்க்கே அது வாய்க்கும். தங்களின் எழுத்து இறைவன் தங்களுக்கு அளித்த வரம். நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. நிறைய படிக்கும் பழக்கம் எனக்கு உண்டு. நாவல்களும் விரும்பிப் படிப்பேன்.

நாவல் படிக்கும்போது குறிப்பு எடுத்துப் படித்தது தாங்கள் படைத்த ''ஆனந்த யோகம்'' நாவலில்தான். ''இல்லற வாழ்வு சிறக்க திருவானைக்கா அகிலாண்டேஸ்வரியை வணங்க வேண்டும்'' போன்ற வாழ்க்கைக்குப் பயன்தரும் ஆன்மீகக் கருத்துக்கள் நாவல் முழுவதும் மிளிர்கின்றன. ஆயிரம் பக்கங்களில் எழுதி விளக்க வேண்டிய உபதேச மொழிகளை ஒரே ஒரு வரியில், ஆம் ஒரே ஒரு வரியில் எழுதி என் போன்றோரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டீர்கள். என் உள்ளம் கவர்ந்த அத்திருவாசகம் ''ஆபத்தும் சம்பத்தும் இணை பிரியாதவை'' என்பதுதான்.

தமிழ் வாசகர்களை ஒரு நல்ல பாதையில் அழைத்துக் கொண்டு போகிறீர்கள். இது தற்போது மிகவும் வேண்டப்படுவதே. தங்கள் நாவல்களில் பதிகங்களும் அருட்பாடல்களும் ஆங்காங்கே அமைந்து மனதைப் பண்படுத்துகின்றன. நால்வர் பெருமக்கள், ஆழ்வார் பெருந்தகைகள், வடலூர் வள்ளல் பெருமான், தாயுமானவ சுவாமிகள் போன்ற அருளாளர்களின் பட்டியலில் தங்கள் பெயரும் இடம் பெறும். இது உறுதி.



தங்களின் இறைப்பணியும் உபதேசங்களும் தொடர வேண்டும். இளைய சமுதாயம் எங்கோ சென்று கொண்டிருக்கின்றது. அதற்கு நீங்கள் வழிகாட்ட வேண்டும். தொடர்ந்து அப்பணியைச் செய்ய வேண்டும்.

பேரன்புடைய பெரியீர்!

தங்கள் தொண்டு தொடர்ந்து நடைபெற வேண்டும். அதற்கு இறையருளும் குருவருளும் துணைநிற்கும். தாங்கள் காவிரியாற்று மணலிலும் பல்லாண்டுகள் வாழ்ந்து, என் போன்ற எண்ணற்ற வாசகர்களின் அன்பு மழையில் எப்போதும் நனைந்து கொண்டே இருக்க எல்லாம் வல்ல அருணைப்பதி உறையும், அருட்பிரகாச தவசீலர், கலியுகக் கண்கண்ட கடவுள் யோகி ராம்சுரத்குமார் சுவாமிகளின் திருவடிகளை மனம், மொழி, மெய்யால் வாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றேன்.

என்றும் தங்கள் கருணையில் வேண்டி நிற்கும் தங்கள் சீடன்,

**க. துரியானந்தம்**

*41, ஆடம் தெரு,*
*மயிலாப்பூர்,*
*சென்னை - 600 004.*

அன்புள்ள தமையனார்க்கு நமஸ்காரம்.

''பார்க்குமிடங்கள் எல்லாம் நந்தலாலா'' என்று பாரதி பாடியது போல தீபாவளியன்று எங்கு நோக்கினும் என்னை உற்றுப் பார்க்கும் பாலகுமாரன்கள் வண்ண 'ப்ளோ - அப்'கள். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போதும், தனிமையில் சிந்தித்த போதும் பரவசமூட்டியது. இதுவே இப்படியிருக்கையில், தாங்கள் போனில் வாழ்த்து தெரிவித்ததாக, என் மனைவி தெரிவித்த போது, சற்று வானில் பறந்தேன். மறுநாள் தாங்களுடனே பேசும் பாக்கியம் கிட்டிய போது, என் பெற்றோர், மூதாதையர்கள் செய்த புண்ணியமிது என்று எண்ணுகின்றேன்.

தாங்கள் மனைவி, குழந்தைகள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள். வணக்கங்கள். மீண்டும் தங்களை தங்கள் குடும்பத்தினரோடு சந்திக்கும் நாளை ஆவலோடு எதிர்நோக்குகின்றேன்.

இத்துடன் திருவரங்க திவ்ய தம்பதிகளின் பிரஸாத மும், நம் பெருமாள் சாத்தி, கழித்த சுகந்தத்தினையும் அனுப்பியுள்ளேன்.

''உத்திரத்தில் உதித்த சித்ரா பௌர்ணமி''யே தாங்கள் வாழி பல்லாண்டு.

மிகுந்த அன்புடன்,
R. முரளீதரபட்டர்

31-11-97
15, வடக்கு சித்திர தெரு,
ஸ்ரீரங்கம்,
திருச்சி - 620 006.



மதிப்பிற்குரிய பாலகுமாரன் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்களோடு தொலைபேசியில் பேசியது மிகமிக மகிழ்ச்சியாக இருந்தது. உங்களோடு பேசி முடித்த பிறகு அடுத்த இரண்டு நிமிடத்திற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சும்மா இடதும், வலதும் அலைந்தேன். என்னைப் பார்த்தே கண்ணாடியில் சிரித்துக் கொண்டேன். ஓர் நிதானத்திற்கு வர சில நிமிடங்களாயிற்று.

உங்களுக்கு உதவியாளர்களெல்லாம் இல்லையா. நீங்களே போன் எடுப்பீர்களா, 'சொல்லுங்க ராமச்சந்திரன்' என்று எப்பொழுதும் உற்சாகமாகத்தான் பேசுவீர்களோ. நான் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டேன்.

என் கண்மணித் தாமரையை பாராட்ட போன் செய்தேன் என்றால், 'அப்படியா பாராட்டுங்கள்' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டீர்கள். நான் தடுமாறிய போது எழுதுங்கள் என்று உத்தரவிட்டீர்கள்.

இதைவிட ஆச்சர்யம் அன்று மாலையே கபாலி கோவிலில் எதிரும் புதிருமாக, உங்களைச் சந்தித்தது. 'எந்த ராமச்சந்திரன்?' என்று கேட்டீர்கள். எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. நான், விளக்கியவுடன் 'அடடா... நீங்கள் தானா அது' என்று தோளில் கை வைத்தீர்கள். அவசியம் கடிதம் எழுதுங்கள் என்று உற்சாகப் படுத்தினீர்கள்.

என் ஐந்து வயது மகளை அறிமுகப்படுத்திய போது கை குவித்தீர்கள். என் மனைவியைப் பார்த்து கும்பிட்டீர்கள். வேறு யாரோ இடைமறித்து உள்ளே புகுந்த போது அவர் கைகளைப் பிடித்து வைத்துக் கொண்டீர்கள். சிறிது நேரம் பேசிவிட்டு திரும்பியே பாராமல் நடந்து விட்டீர்கள்.

எனக்கு ஒன்று புரிந்தது. நீங்கள் அந்தந்த நொடியில் வாழ்கிறீர்கள். அதனால்தான் எப்போதும் மலர்ந்தால் போல் இருக்கிறீர்கள்.

இந்த நிலைதான் என் கண்மணித் தாமரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. உங்களிடமிருக்கும் உண்மைதான் உங்களை எழுத வைக்கிறது.

'என் கண்மணித் தாமரை' கடவுளை வாழ்க்கையாகவே எடுத்துக் கொண்டவனின் கதை. அவனின் அவஸ்தை, மேன்மை, அவனுக்கு வந்த சோதனை, ஜெயம் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.

கடவுளை முக்கியமாக எடுத்துக் கொண்டவருக்கு இந்தக் கதை மிக வேகமாய் மனதில் பதிந்துவிடும். பரவசம் கொடுக்கும்.

கடவுளைப் பற்றி அதிகம் அக்கறை இல்லாதவர்களுக்கு உங்கள் எழுத்து நடையின் சுகம் மட்டுமே தெரியும்.

நீங்கள் எழுத்தாளராகச் சிலருக்கும், ஆன்மீகவாதியாகச் சிலருக்கும் காட்சியளிப்பது அவர்களிடம் உள்ள வித்தியாசத்தால் தான்.

நீங்கள் 'எந்த ராமச்சந்திரன்' என்று சாதாரணமாகக் கேட்டு திகைக்க வைக்கிறீர்கள்.

சுப்ரமணியத்திற்கும் கடவுள் தவிர மற்ற விஷயங்கள் முக்கியமில்லை. சாணி உருண்டையில் காசு ஒளித்து எடுத்துப் போகின்ற பிராமணன் ஒரு பக்கமும், மனைவிக்கு இறைத்தன்மை ஊட்டியவாறே நடந்து போகும் சுப்ரமண்யம் ஒரு பக்கமாகவும் காட்டுகிறீர்கள்.

நடராஜ ஐயர் தன் மனைவியை விறகுக் கம்பால் அடிக்கிறார். சுப்ரமண்யம் தன் மனைவி ஆற்றில் எகிறிக் குதிக்க தோள் கொடுக்கிறார். நடராஜ ஐயர் தன் மனைவியை கெட்ட வார்த்தைகளால் கூப்பிட, சுப்ரமண்யம் தன் மனைவியை கண்மணி என்று கூப்பிடுகிறார்.

நடராஜ ஐயர் நாய்போல் அரசர் முன்பு காசுக்காக குழைந்து நிற்கிறார். அரசரிடம் பிரம்படி வாங்குகிறார்.



சுப்ரமண்யத்திற்கும் அதே அரசனால் சோதனை வருகிறது. ஆனால் சுப்ரமண்யத்தை யாராலும் தண்டிக்க முடியவில்லை. சத்யத்தைத் தண்டிக்க எவனாலும் முடியாது.

மாறாய் சத்தியத்தின் காலில் விழுந்து என்னை மன்னித்துவிடு என்று கெஞ்சத்தான் முடியும். சத்யம் சோதனைக்குள்ளாகும் போது தெய்வம் துணைக்கு வந்து விடுகிறது.

அம்பிகை காதுக் கம்மலைக் கழற்றி வானத்தில் எறிந்தாள் என்று கதை கேட்டிருக்கிறேன். நீங்கள் அந்தச் சம்பவத்தை சரியாக விளக்கி இருக்கிறீர்கள்.

ஒரு மனிதனிடம் தோன்றிய சத்திய ஒளி அவன் விரும்பினால் எல்லார் மனதிலும் தோற்றுவிப்பான் என்று தெளிவாகச் சொல்கிறீர்கள். இதுதான் ஆன்மீக விஞ்ஞானம்.

இந்த விஷயம் நிகழ முடியும். எனவே இது விஞ்ஞானம். இது நிகழ மிகுந்த மனோபலம் வேண்டும். எனவே ஆன்மீகம்.

நீங்கள் ஆன்மீகத்தை மிகச் சரியான முறையில் தமிழ் மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறீர்கள். நீங்கள் அதை அனுபவித்துக் கொண்டே கதையாக்குகிறீர்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக உங்கள் எழுத்தில் இந்த இறை தேடலே அதிகம் இருக்கிறது. இறை தேடலில் ஏற்படும் அனுபவங்களை மிக மிக எளிதாக விவரிக்கிறீர்கள்.

உங்கள் கதை வெறுமே சாமி கும்பிடும் விஷயம் அல்ல. நீங்கள் கோவில் தாண்டி, மதம் தாண்டி தத்துவ விளக்கம் தேடி அங்கே தெளிந்ததை எழுதுகிறீர்கள். இப்படி எழுதுபவர்கள் இங்கே மிகக் குறைவு. ஆதலால் தான் உங்கள் எழுத்துக்கு அத்தனை மவுசு.

உங்களை முழுமையாய் விமர்சித்து விட முடியாது. தேவையுமில்லை. விமர்சனம் என்னும் பெயரில் அரை

வேக்காடாய் எதுவும் செய்யலாம். சரித்திரக் கதை எழுதிய கல்கியையே யாரும் சரியாக விமர்சிக்கவில்லை. நீங்கள் இன்னும் கடினமானவர் என்பது என் கருத்து.

எழுதுங்கள் ஐயன், இன்னும் நிறைய எழுதுங்கள் ஐயன். உங்களை 'ஐயன்' என்று விளிப்பது சந்தோஷமாக இருக்கிறது. இது சாதிக் குறிப்பல்ல, மரியாதையான விளிப்பு. மரியாதையும், பிரியமும் கலந்த அழைப்பு.

எங்கள் ஐயன் பாலகுமாரன் நீடூழி நிறைவாய் வாழ மயிலை கபாலீஸ்வரனை எங்கள் குடும்பம் மனமார வேண்டுகிறது. இதுதான் என் விமர்சனம். வேறு விதமாய் என் கண்மணித் தாமரையை, அந்த அபிராமிப் பட்டரின் வாழ்க்கைக் கதையை விமர்சிக்க வேண்டிய அவசியமில்லை.

தமிழ் மக்கள் முன்னிலும் ஆர்வமாய் உங்கள் எழுத்தைப் படிக்கிறார்கள். இவர்கள் பல்கி பெருகுவார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது.

எனவே ஐயன் தொடர்ந்து எழுதுங்கள். இதே விதமாய் எழுதுங்கள். அடிக்கடி சந்திக்க ஆசை வந்தாலும் உங்களை தொந்தரவு செய்யாமல் விலகியே நிற்கிறேன்.

மிகுந்த தோழமையுடன்
**கோ. ராமச்சந்திரன்.**

நார்டன் தெரு.
மந்தைவெளிப்பாக்கம், சென்னை.

## என் கண்மணித் தாமரை

1

திருக்கடவூர் கிராமம் அந்தக் காலை வேளையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

அமிர்தகடேஸ்வரர் கோயிலுக்கு எதிரேயும் அதைச் சுற்றியும் அகலமான மாடவீதிகள் இருந்தன. மாட வீதிகளிலுள்ள எல்லா வீடுகளும் கோயிலின் சுவர் பார்த்து இருந்தன.

திண்ணையில் அமர்ந்து கோயிலின் சுவர் பார்த்து உட்கார்ந்திருக்க, மனம் அதிகம் சலனப்படாமலிருந்தது. அதேசமயம், மனம் முழுவதும் சுவர் தாண்டி கோயிலுக்குள் நடக்கின்ற விஷயங்களோடு பின்னிக்கிடந்தது.

நைவேத்தியத் தட்டை தூக்கிக் கொண்டு மடப்பள்ளி ஆள் நடக்க, குருக்கள் மணியடித்தவாறே, சிறு சிறு சன்னதிக்குள் போவதை, வீட்டில் அமர்ந்தபடியே உணரமுடிந்தது.

கோயிலின் வசந்தமண்டபத்து பக்கம் வேத கோஷம் கேட்டது. அம்பாள் சன்னதிக்கு அருகே தேவார, திருவாசகப் பாடல்கள் கேட்டன.

விறகு உடைக்கும் ஓசையும், நெய் தோசை வாசனையும் மடப்பள்ளியிலிருந்து வந்தன.

கோயிலுக்கு நெல் அளந்துவிட்டு ஒரு மாட்டு வண்டி வடக்கு வீதி வழியாக கிழக்கு நோக்கி போய்க் கொண்டிருந்தது.

''எத்தனையப்பா அளந்தாய்?'' வழியே யாரோ மடக்கி, அக்கறையாய் மாட்டு வண்டிக்காரனிடம் கேட்க,

''நூறு மரக்கா நெல்லு ஸ்வாமி.''

''அப்படியா... எந்த ஊரு?''

''ஆனந்தமங்கலம் ஸ்வாமி.''

''அடிசக்கை நெல்லு காண்பி.''

காலி வண்டியில் ஒட்டிக் கொண்டிருந்த நெல்மணிகளைத் திரட்டி, இருபது நெல்லாக உள்ளங்கையில் சேர்த்து கேட்டவர் கைகளில் போட்டான்.

''நல்ல நிறம்'' வாங்கியவர் நெல்லைப் பிளந்து பார்த்தார். முகர்ந்து பார்த்தார். உள்ளங்கையில் தேய்த்து, உமி ஊதி, அரிசி பார்த்தார். வாயில் போட்டு அரைத்துப் பார்த்தார்.

அரிசி எளிதில் அரைபட்டது.

''உங்களுக்கெல்லாம் திருவெண்காடுதான் கோயில் இல்லையா...''

''ஆமாம் ஸ்வாமி.''

''ஆனாலும், அமிர்தகடேஸ்வரருக்கும் படியளப்பேள் இல்லையா.''

''திருவெண்காடு ஈஸ்வரர் குலதெய்வம். அமிர்தகடேஸ்வரர் காவல் தெய்வம்.''

''அது வாஸ்தவம். காலசம்ஹார மூர்த்தியல்லவா. உயிர் வாழனும்னு ஆசை இருக்கிறவன், இவரைப் பிடிச்சுண்டா போறும் மரணமே வராது.''



''இதுவரைக்கும் யாரும் பிடிச்சிக்கல போலருக்கு ஸ்வாமி.''

அந்த விவசாயி, மாட்டு வண்டிக்காரன் சிரிப்பே இல்லாமல், அந்த அந்தணரிடம் பேசினான்.

''என்னப்பா சொல்றே?''

''சாகாத யாருமில்லையே... எல்லோரும் செத்து தானே போயிருக்காங்க. அப்போ, யாரும் சாமியை நல்லா பிடிச்சுக்கலைன்னுதானே அர்த்தம். காலசம்ஹார மூர்த்திய சரியா கும்பிடலைன்னுதானே அர்த்தம்.''

''சாவுங்கறது உடம்பு பத்தி இல்லையப்பா, ஆத்மாவைப் பத்தின விஷயம்.''

''ஆத்மாவுக்கு சாவு உண்டுங்களா.''

''இல்லை.''

''அப்போ சாமியே கும்பிட வேண்டாமே... அரிசியே அளக்க வேண்டாமே... சாமி.''

''அப்பா... இது பெரிய விஷயம்.''

''எப்போ கேட்டாலும் இப்படித்தான் சொல்வீங்க. உங்களுக்கு புரிஞ்சுபோனதாகவும், எனக்கு புரியாத விஷயமாகவும் எப்பவும் பேசுவீங்க. உங்களுக்கு புரிஞ்சது எனக்கு எப்படி புரியாமப் போகும். இங்கே யாரும் உண்மை சொல்றதேயில்லை. அதான் பிரச்சனை. நாங்களும் பாவ புண்ணியத்துக்கு பயந்து, வீட்ல பொம்பளைங்க பேச்சுக்கு பயந்து, வருஷாவருஷம் அமிர்தகடேஸ்வரருக்கு நூறு மரக்கா நெல்லு கொடுத்துட்டு வர்றோம். சாமி பேரச் சொல்லி யார் யாரோ ஐயருங்க சாப்பிடறாங்க.''

''வேண்டாம். அடுத்த வருஷத்திலேருந்து நிறுத்திப் பாரு. அதனுடைய பலனை அனுபவி. ஆனந்தமங்கலம்

கிராமம் கொடுக்கலேன்னா, எங்க வீட்டுல அடுப்பு எரியாதா என்ன?''

''இந்த கர்வம்தான் ஸ்வாமி உங்களை அழிக்கப் போவுது. அரசாங்கம் தந்த பணத்துல நீங்க ஆட்டம் போடறீங்க.

''சரபோஜி மகாராஜா நீங்க வந்தா எழுந்து நிக்கறாருங்கற திமிர்ல, இறுமாப்பா பேசுறீங்க. உங்கக் கிட்ட பலமில்லை ஸ்வாமி. ஏதோ கொஞ்சமா தெரிஞ்சுக் கிட்டு, கும்பலா சேர்ந்துக்கிட்டு காலத்தை ஓட்டுறீங்க.

''உங்க ஒத்துமை எங்க ஜாதியிலயில்லை. இருந்திருந்தா நூறு மரக்கா நெல்லு, உங்க கோயிலுக்கு வந்திருக்காது.''

''கொடுத்துட்டு ஏண்டா அழறே?''

''இன்னும் கூட சேர்த்து கொடுப்பேங்க. அந்த வக்கு எனக்கிருக்கு. வாங்கறவனுக்கு ஒரு யோக்கியதை வேணு மில்ல.''

''என் யோக்கியதை பத்தி உனக்கென்னடா தெரியும்?''

''கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியணும். மழை வருமான்னு கேட்டா வரும்னு சொல்லத் தெரியணும். வராதுன்னு எச்சரிக்கை செய்யத் தெரியணும். நெல்லு போடு, கரும்பு வேண்டாம். கரும்பு போடு, நெல்லு வேண்டாம்னு காரணத்தோட காபந்து பண்ணத் தெரியணும்.

''ஒரு காலத்துல ஐயமாரெலலாம் மாடு பார்த்து சகுனம் சொல்லுவாங்க. பல்லி சொல்றத வைச்சு வாக்கு சொல்லுவாங்க. பறவை சத்தம் கேட்டு, நமக்கு குறி சொல்லுவாங்க.

''உக்காந்த இடத்தை விட்டு அசையாத, 'வா மாட சாமி, உன் குழந்தைக்கு உடம்பு சரியில்லையா. உழக்கு



நெய் பிள்ளையாருக்கு போடறேன்னு வேண்டிக்க எல்லாம் சரியாயிடும்'னு சொல்லுவாங்க.

''ஊருக்குப் போனா நோய்ப்பட்ட பிள்ளை சிரிச்சுக் கிட்டு வந்து காலைக் கட்டும். அந்த ஐயர் இருக்கிற திசை பார்த்து நாங்க கும்பிடுவோம்.

''சோழராஜா காலத்துல கொடிகட்டிப் பறந்த ஜாதி அது, இப்ப வெறும் போஜன கும்பலாப் போயிடுச்சு.''

''டேய் நீ ரொம்ப அதிகம் பேசறே. இது உனக்கு நல்லதில்லை.''

''என்ன சாபம் விடப்போறியா... நீ ஒரு குப்பையுமில்லைன்னு எனக்கு தெரியும்.''

அவர்களைச் சுற்றி மெல்ல மெல்ல கூட்டம் கூடியது.

சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்த கிராமம், வேலையை விட்டு, அவர்கள் வாக்குவாதத்தைக் கவனிக்க ஆரம்பித்தது.

சுவர் பார்த்து மௌனமாய் உட்கார்ந்திருந்த சுப்ரமணியம் எல்லோரும் தெருவின் நடுவே பார்ப்பதைப் பார்த்து, தெருவை நோக்கி பார்வையை செலுத்தினார். அவர் இறங்கி பார்க்க வீட்டுக்குள்ளிருந்து அவர் மனைவியும் ஓடி வந்தாள்.

''அட... மாடசாமியா... அவனுக்கு பிராமணாளைக் கண்டா ஆகாதே.'' எட்டிப் பார்த்தபடி கூறினாள்.

''யாரு மாடசாமி?'' சுப்பிரமணியம், மனைவியைப் பார்த்து நிதானமாய் கேட்டார்.

''ஆனந்தமங்கலம் கிராம அதிகாரி பிள்ளை. அடுத்த அதிகாரி இவன்தான். அதிகாரம் வர்றதுக்குள்ளே ஒரே

ரகளை. அது சரி, இது தப்புன்னு எல்லாம் தெரிஞ்சா மாதிரி பேச்சு. யாரைக் கண்டாலும் ஓர் இளக்காரம்.

''சரபோஜி ராஜா அறுபதுக்கு நாற்பதுன்னு அளக்க உத்தரவு போட்டாரில்லையா... ஆஹா... அளக்கிறேன்னு உடனே ஒத்துண்டானாம். விளைஞ்சதுல பாதிய சேரியிலே யும், கள்ளு இறக்கற பனந்தோப்பிலேயும், வேலங் காட்டிலேயும் நிலவறையிலும் ஒளிச்சு வைச்சுண்டுட்டா னாம். கேட்டா இவ்ளோதான் விளைஞ்சதுங்கறானாம். பூச்சி போட்டுடுத்து, சாவியாயிருந்ததுன்னு கதையடிக் கிறானாம்.

''ரொம்ப சோதனை போடற அரசாங்க அதிகாரியை, இவனே ராத்திரி திருடனா வேஷம் போட்டுண்டு வந்து வழியிலேயே மடக்கி அடிக்கிறானாம்.

''ஆளைப் பாருங்க. அரைப்பனை உசரத்துக்கு இருக்கான்.''

''பார்த்தா குடிக்கறவனா தெரியலையே...'' சுப்ர மணியம் மனைவியின் பேச்சை ரசித்தவாறே மாடசாமியைப் பார்த்தார்.

''குடிக்கறவன்னு நான் சொன்னேனா. நல்லவன் தான். ஆனா, கர்வி. அதுவும் இப்போ பேசிண்டிருக்காரே.. நாராயண சாஸ்திரிகள்னா அவனுக்கு வெல்லம்.

''போன மாசமும் இதே மாதிரி வாக்குவாதம் நடந்தது. கோயிலுக்கு பதினைஞ்சு வாழைத்தார் இறக்கினான். அவர் ரெண்டே ரெண்டு காய் கேட்டார். முடியாதுன்னுட்டான்.''

''ஏனாம்...?''

''ஏன் கிழக்கு பக்கம் உசத்தி, சூரியன் உதிக்கிறதுனா லேயா... பூமி உருண்டைன்னு சொல்றாளே... அப்போ, பூமிக்கு எது கிழக்கு, அப்படின்னு கேட்டான். இவருக்கு பதில் சொல்லத் தெரியலை. வாழைக்கா கிடையா துன்னுட்டான். ஒன்னுமே தெரியாதவன் சோறு சாப்பிடக் கூடாதுன்னுட்டான்.''



''அடாடா... நாராயண ஐயர் எங்கிட்ட கேட்டிருக்கப் படாதோ... நான் அவருக்குச் சொல்லிக் கொடுத்திருப்பேனே...''

''இப்பவும் ஏதோ வாக்குவாதம்தான்.''

''நான் போய் என்னன்னு பார்க்கறேன்?'' சுப்ரமணியம் நகர்ந்தார்.

''நானும் வரட்டுமா?'' சுப்ரமணியத்தின் மனைவி ஆவல் பொங்கக் கேட்டாள்.

''வாயேன்.''

''யாரும் ஒன்றும் சொல்லமாட்டாளே...''

''சொல்றத்துக்கு என்ன இருக்கு?''

''ஆம்பளைங்கள் பேசற இடத்துல பொம்ம னாட்டிக்கு என்ன வேலைன்னு யாராவது அதட்டலாம்.''

''நான்கூட இருக்கிறபோது யாரும் ஒன்னும் சொல்லமாட்டா, வா.''

புருஷனும் மனைவியும் வாக்குவாதம் நடக்கும் இடம் நோக்கி நடந்தார்கள்.

''எனக்கு ரொம்ப ஆசை, நீங்க பேசறத கேக்கறத்துக்கு. அலட்டிக்காம ரொம்ப அமைதியா தர்க்கம் பண்ணு வேளாமே...''

''எல்லாம் அப்பா கத்துக் கொடுத்தது.''

''உங்க அப்பாகூட, அப்பப்போ ஆத்திரப்பட்டுடுவார். உங்க பேரைச் சொல்லி கோபமே வராது அப்படின்னு சொன்னா, எனக்கு ரொம்பப் பெருமையா இருந்தது.''

''இந்த புத்தி அம்பாள் கொடுத்தது.''

''ஆனா, உங்க புத்திக்கு நீங்க இன்னும் பிரகாசமா இருக்கணும். குடத்துலயிட்ட விளக்கா இருக்கேள்.''

''அம்பாள் பார்த்துக்குவா.'' சுப்ரமணியம் சலனமேயில்லாமல் பதில் சொன்னார்.

அவர்கள் கூட்டம் கூடிய இடத்திற்குப் போனார்கள். சற்றுநேரம் வாக்குவாதத்தை உன்னிப்பாய் கவனித்தார்கள்.

''மாடசாமி. என்பேரு சுப்ரமணியன். எனக்கு இந்த ஊருதான்.''

''பாத்துருக்கேன், ஐயா.'' அந்த இளைஞன் கை கூப்பினான்.

சுப்ரமணியம் அவன் கண்களை உற்று நோக்கினார். அவன் கண்களில் பதில் தேடிக் கிடைக்காத வெறுப்பு இருந்தது. பதில் கிடைக்காத வெறுப்பினால், முகத்தில் ஓர் அலட்சியமிருந்தது.

''உன் கேள்விக்கும், கோயிலுக்கு அரிசி கொடுக்கிறதுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா மாடசாமி?''

''இருக்கு ஐயா. கேள்விக்கு பதில் சொன்னா, கெட்டிக்காரர்களுக்கு இந்த வேளாளன் சோறு போடறான்னு நினைச்சுக்கிட்டு போடுவேன். இல்லைன்னா, அட தண்ட சோறுகளான்னு திட்டிக்கிட்டே போடுவேன். நான் சலிச்சுக்கிட்டே போட்டா எனக்கும் நல்லதில்லே. வாங்கறவங்களுக்கும் நல்லதில்லே.''

''உண்மை. உன் கேள்வி என்ன மாடசாமி?''

''திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் காலசம்ஹார மூர்த்தியா?''



''ஆமாம், மாடசாமி. மார்க்கண்டேயருக்கு பதினாறு வயசு முடியுது. அவரை எமதர்மன் துரத்திக்கிட்டு வர்றான். மார்க்கண்டேயர், அமிர்தகடேஸ்வரரை கட்டிப் பிடிச்சிக்கிட்டு, தன்னைக் காப்பாத்தும்படி கதறுகிறார். எமன் பாசக்கயிறை வீசறான். கயிறு மார்க்கண்டேயனோட சாமியையும் சேர்த்து சுத்தி இழுக்கறது. லிங்க ரூபமா இருந்த ஈஸ்வரர், உள்ளேயிருந்து எழுந்து வந்து, காலனை, வதம் பண்ணின இடம் இது.

''புரிஞ்சுதா, உன் கேள்வியென்ன சொல்லு?''

''காலசம்ஹார மூர்த்திய நமஸ்காரம் பண்ணினா, வேண்டிக்கிட்டா மரணம் வராதா?''

''வராது.''

''சாமி. உடம்பு மரணம், ஆத்மா மரணம்னு குழப்பாதீங்க.''

''ஓஹோ... உனக்கு மரணம் பத்தியே குழப்பமோ... மரணம்னா என்ன மாடசாமி?''

''உடம்பு செத்துப் போறதுய்யா. மூச்சு நின்னு போறது.''

''உங்க தாத்தா இருக்காரா மாடசாமி?''

''இல்லீங்க செத்துட்டாரு.''

''தாத்தாவுக்கு தாத்தா.''

''என்னங்க விளையாடறீங்களா... அவரும் செத்துட்டார்ரு.''

''ராஜராஜசோழன் தெரியுமா?''

''தெரியுங்க. நாங்க அவர் பரம்பரை.''

''அவர் என்ன செய்தாரு, எப்படி ஆண்டார்னு தெரியுமா?''

''கதையா, பாட்டா, கல்வெட்டா இருக்கே. பட்டி தொட்டியெல்லாம் பாடறாங்களே.''

''மூணு தலைமுறைக்கு முன்னாடி இருந்த தாத்தாவ பத்தி உனக்கு ஒன்னும் தெரியல. ஆனா முப்பது தலைமுறைக்கு முன்னாடி இருந்த ராஜராஜசோழனை உனக்கு நல்லா தெரியறது. பட்டிதொட்டியெல்லாம் தெரியறது.''

''ஆமாங்க.''

''அப்போ என்ன அர்த்தம்...''

மாடசாமி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சுப்ரமணியம் கைகட்டி அவனையே பார்த்தபடி இருந்தார்.

''உன் தாத்தாவுக்கு தாத்தா செத்துட்டாரு. ஆனா, ராஜராஜசோழன் சாகலை. சாகவும் மாட்டார். காரண மென்ன... சிவனருள், சிவதியானம், சிவகைங்கர்யம். சிவனுக்கு அவன் எழுப்பிச்ச திருக்கற்றளி.

''உலகத்துல இவன் மட்டும்தான் ராஜாவா... தென்னாட்டை இவன் மட்டும்தான் ஆண்டானா, சோழ வம்சத்தில் இவன் மட்டும்தான் சக்ரவர்த்தியா...

''இவ்ளோ... பெரிய கோயில் எப்படி அவனால் கட்ட முடிஞ்சது. தியானம். இடைவிடாத தியானம். அதாவது இடைவிடாத இறை நினைப்பு. வாழ்க்கை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்த விவேகம்.

''கோட்டை கட்டியிருந்தா மண்ணோட மண்ணாகி யிருக்கும். மண்ணாயிடுத்து. பழையாறைல குட்டிச்சுவர் தான் நிக்கறது. நாலுபக்கத் தெருதான் இப்போதைக்கு நகரமா இருக்கு. ஆனா, அவன் கட்டின கோயில்



அலுங்காம நிக்கறது. ராஜராஜனுக்கு சாவே கிடையாது. பூமி வெடிச்சு சிதறுகிற வரைக்கும் பிரகதீஸ்வரம் இருக்கும். பிரகதீஸ்வரம் இருக்கறவரை ராஜராஜனும் இருப்பான்.

''உடம்பு சாகக் கூடாதுன்னு வேண்டிக்கறதுக்கு உனக்கு உரிமையேயில்லை. நீ விரும்பியா பிறந்தாய். நீ ஆசைப்பட்டா இந்த அப்பா அம்மா கிடைச்சா. நீ தேர்ந்தெடுத்தா ஆனந்தமங்கலம். உன்னை இங்கே யாரோ இறக்கிவிட்டா. யாரோ வந்து எடுத்துண்டு போவா.

''நோயற்று இருக்கணும்னு வேண்டிக்கலாம். சாவற்று இருக்கணும்னு வேண்டிக்க முடியாது. மரண பயம் ஒரு நோய். அந்த பயம்தான் காலன் யமதர்மன்.''

''அடடா...'' சுப்பிரமணியத்தின் மனைவி கைகொட்டி வியந்தாள். எல்லோரும் திரும்பிப் பார்க்க வெட்கப் பட்டாள்.

''மார்க்கண்டேயன் மரணத்திற்கு பயப்பட, அந்த பயம் தீர்த்து வைக்கப்பட்டது. ஒரு பயத்துக்கு ஏன் தர்மராஜன் என்று பெயர்?'' சுப்ரமணியம் கேள்வி கேட்டு தொடர்ந்தார்.

''நன்றாகப் புரிந்து கொள் மாடசாமி. உன் மரண நேரத்தில் இந்த உலகில் செய்த நன்மையும், தீமையும் உன் கண்முன்னே வரும். உன் மனதுக்குள்ளேயே ஒரு நடு நிலைமை உணர்வு தோன்றும். உன் மனதின் அந்த உணர்வுக்குத்தான் யமதர்மன் என்று பெயர்.

''தர்மம் என்பது நடுநிலையானது. உலகத்தில் வாழும் போது நாம் நல்லதின் பக்கமோ, அல்லது தீயதின் பக்கமோ சார்ந்திருக்கிறோம். விருப்போ, வெறுப்போ கொண்டிருக்கிறோம். அன்பாகவோ, கோபமாகவோ

மனிதர்களை அணுகுகிறோம். நடுநிலைமை வருவதே யில்லை.

''வாழும்போது வராத நடுநிலை உணர்வு சாகும் நேரத்தில் வருகிறது. நீ சரியாக வாழ்ந்தாயா என்று உன்னை உன் மனதே எடை போட்டுப் பார்க்கிறது. கடைசி மூச்சிலிருந்து கருவில் குடிகொண்டது வரை, எல்லா விஷயங்களும் தடதடவென்று சித்திரமாய் ஓடுகின்றன. நடுநிலைமையற்ற நேரங்களைக் காட்டிக் கொடுக்கின்றன.

''ஒரு வினை இருப்பின் அதற்கு விளைவுகள் உண்டு. இங்கு செய்த வினையின் விளைவாக மறுபடியும் பிறவி ஏற்படுகிறது. வினைக்கேற்ப அந்தப் பிறவியின் சுக துக்கங்கள் முடிவாகின்றன.

''எனவே வினையைக் குறைத்துக் கொள்ளவே இறை வழிபாடு என்று வைத்துக் கொள்கிறோம். துறவு பூணுகிறோம்.

''மாடசாமி, இறைவழிபாடும் ஒரு வினை. அந்தச் செயலும் அறவேண்டும் என்பதற்காகவே துறவும் தவமும் மேற்கொள்ளப்படுகிறது.

''இப்பொழுது நெல் அளந்தாயே, இது ஒரு வினை. இதற்கொரு விலை உண்டு. இப்போது இவரோடு சண்டை போட்டாயே... இதுவே ஒரு வினை. இதற்கும் விளை வுண்டு.

''உள்ளே மௌனமாயிருப்பதே நலம். அல்லது தவம். செய்யும் செயலோடு மனம் ஒட்டாதிருந்தாலே மௌனம். செயல் என்பது மனம் கட்டளையிட, உடம்பால் நடைபெறுவது. இந்த மனதை இயங்க வைப்பது யார், உடம்பு மாடசாமியா? மனம் மாடசாமியா?



''மனதிற்கப்பால் ஏதும் இருக்கிறதா, மனதை ஏதும் வழிநடத்துகிறதா, இருக்கிறது என்றால் உற்றுப் பார். இல்லையென்று கருதினால் இஷ்டம்போல் ஆடு.

''இவ்வளவுதான் சொல்லிக் கொடுக்க முடியும், மாடசாமி. படிப்பு இங்கே முடிகிறது.

''உன்னைக் குளத்தில் கைபிடித்து இறக்கித்தான் விட முடியும். நீதான் நீச்சலடிக்க வேண்டும். உன் இடுப்பு பிடித்து குதிரையில் ஏற்றிதான் வைக்க முடியும். சவாரி நீதான் செய்ய வேண்டும்.

''உன் மனதை இடைவிடாமல் பார்க்கும்போது மாடசாமி என்கிறவன் மனமல்ல என்பது புரிந்து விடும். பிறகு பார்வையே வேறு. நான் நெல் அளந்தேனென்று ஒரு நாளும் சொல்ல முடியாது.

''மரணமில்லா பெருவாழ்வு என்பது பெயர் நிற்றல். ராஜராஜ சோழனுக்கு மரணமேயில்லை. மாடசாமிக்கு...

''நெல்லளக்கவே சோம்பல் படுகிற மாடசாமி எங்கே, நெடுதுயர்ந்த கற்றளி கட்டின ராஜராஜன் எங்கே. புகழுடம்பே பிரகாசிக்காத போது, ஆத்மா எங்கிருந்து பிரகாசிக்கப் போகிறது, அது மறைக்கப்பட்ட பொருளாகத் தான் இருக்கும்.''

''கெட்டவர்கள் பெயரும் பூமியில் நிற்கிறது ஐயா.''

''நிற்கும், நிச்சயம் நிற்கும். கடைசி நிமிடத்தில் கெட்டது அத்தனையும் விட்டுவிட்டு நன்மையை நோக்கி வாய்விட்டு கதறுகிறானே... அந்தக் காரணத்தால் நிற்கும்.

''நல்லவன் வாழ்ந்ததைவிட, கெட்டவன் திருந்தியது தான் விசேஷம். இன்னும் பல தலைமுறைகளுக்கு பாடம்.

''மரணபயம் நீங்கி வெகுநாள் உன் பெயர் நிலைக்க என்ன செய்யப் போகிறாயென்று யோசி. இப்போது நடு

நிலைமை கொள். விருப்பு வெறுப்பற்று நில். விருப்பு வெறுப்பற்று இருக்க, எதையும் ஏற்கும் மனப்பக்குவம் வேண்டும். எதையும் ஏற்கும் அமைதி தியானத்தால் வரும். தியானத்திற்கு அடிப்படை பக்தி. பக்திக்கு அடிப்படை பணிவு. பணிவுக்கு ஆதாரம் ஸத்சங்கம். நன்மக்கள் கூட்டம்.

''கள் குடியனோடு பழக, அந்த புத்தியும், காமுக னோடு பழக அந்த எண்ணமும், கழகத்தில் கவராடுபவ ரோடு சேர அந்தப் பழக்கமும் உனக்கு வரும்.

''மாடசாமி, போகும் பாதையை தேர்ந்தெடுத்து உன் சக பயணிகளை யாரென்று விசாரித்து வாழ்க்கையை நடத்து.''

''எனக்குப் புரிகிறது ஐயா'' மாடசாமி கைகூப்பினான்.

''ஏன் கிழக்குப் பக்கம் என்று கேட்டாயாம்... நமது உடம்பு ஒரு காந்த ஊசி. காந்த ஊசி வடக்கு பக்கமே நிற்கும்.

''மாடசாமி வடக்குப் பார்த்து நில். இப்போது கிழக்கு உன் வலப்பக்கம் வருகிறது. வலப்பக்கம் பிங்கலை என்ற நாடி ஓடுகிறது, அது உன்னதமானது. வலுவானது. அதனால்தான் மனிதர்கள் எல்லோரும் எல்லா தேசத்திலும் வலது கையை மிகமுக்கியமாகக் கருதுகிறார்கள். வலது கையில் வாளெடுக்கிறார்கள். உணவு உண்கிறார்கள்.

''உன் உடம்பு பூமி. அதாவது மண். உன் உடம்பின் தன்மையிலே பூமியும் இருக்கிறது. பூமியின் வலது பாகத்தைக் கும்பிடுதல் நல்லது.

''மேலும், கிழக்கு என்பது பூமியின் சுழற்சிக்கு எதிரானது. பூமி மட்டுமல்ல, பூமிக்கு மேலுள்ள வெளியும் சுழல்கிறது. அந்த வெளி உன் முகத்தை தடவிவிட்டுப் போக முகம் பிரகாசிக்கும். முதுகைத் தடவிக் கொண்டு



போனால் முகம் பிரகாசிக்குமா. ஒரு மனிதருக்கு முதுகு பிரகாசிப்பதில் என்ன லாபம்.

''சூரியனால் மட்டுமே கிழக்கு ஏற்படவில்லை. பூமி சுழற்சியாலும் ஏற்படுகிறது.

''இரவானாலும், தெய்வ வணக்கம் கிழக்கு நோக்கியே நடைபெற வேண்டும்.

''வேறென்ன கேள்வி மாடசாமி?''

''எதுவுமில்லை ஐயா. நான் தவறாக ஏதும் பேசியிருந்தால்...''

''தவறு உன்மீது இல்லை மாடசாமி, எங்கள்மீது தான். நாங்கள் யாருக்கும் எதுவும் சரியாகச் சொல்லித் தருவதில்லை. ஏன்... எங்களுக்கே எதுவும் தெரியவில்லை. கற்கவும் முயற்சி செய்யாமல், கற்பிக்கவும் நிதான மில்லாமல் வெறும் காந்தப் பசுக்களாக போய்விட்டோம். காசும், நெல்லும், பசுவுமே கணக்கு பார்க்கத் துவங்கிவிட்டோம்.

''எப்போது சந்தேகம் என்றாலும் என்னிடம் வா. மரணமில்லா பெருவாழ்வு என்பது பெயர் நிற்றல். பெயர் நிற்க ஏதேனும் செய்.''

''அடேயப்பா. அடேயப்பா.'' கூட்டம் சுப்ரமணியனை கைதட்டிப் பாராட்டியது. மாடசாமியை வண்டியில் ஏற்றி, உன்னால் நாங்கள் நல்ல விஷயங்களைக் கேட்டுக் கொண்டோம், நலமாய் இரு என்று வாழ்த்தியது.

இதெல்லாம் உமக்கு சொல்லித்தரத் தெரியாதா... நெல் என்ன வகை என்று ஆராய்ந்த அந்தணரைக் கேலி செய்து உள்ளே அனுப்பியது.

கூட்டம் கலையும் நேரம், தெருமுனையில் ஓர் அந்தணப் பெண் ஓடிவந்தாள்.

முப்பத்தைந்து வயதிருக்கும். தலை சிடுக்கு பிடித்திருந்தது. உடைகள் கிழிந்திருந்தன. உடம்பெல்லாம் அழுக்கு படர்ந்திருந்தது. கழுத்தில் தாலிக்கயிறு மட்டும் இருந்தது. கையில் தாமிர வளையல் அணிந்திருந்தாள். நெற்றி முழுவதும் குங்குமத்தை அப்பியிருந்தாள்.

கூட்டத்தைப் பார்த்ததும் தபதபவென்று ஓடி வந்தாள்.

'ராஜம் வர்றா ஓடு. ராஜம் வர்றா ஓடு.' கூட்டத்தில் யாரோ கத்தினார்கள்.

கூட்டம் சிதறி ஓடியது.

சுப்ரமணியனின் மனைவி பயந்து ஓட, சுப்ரமணியம் சட்டென்று அவளைத் தடுத்து நிறுத்திக் கொண்டார்.

நடுத்தெருவில் அவர் அப்படி தொட்டு இழுத்தது அவளுக்கு வெட்கமாய் போயிற்று. ஆனால் வெட்கத்தை பயம் வென்றது.

அந்தப் பைத்தியக்காரப் பெண்ணின் பார்வையிலிருந்து தப்ப, அவள் புருஷனின் முதுகோடு ஒட்டிக் கொண்டாள். புஜத்தின் வழியே தெருவை எட்டிப் பார்த்தாள்.

அந்தப் பெண்மணி மடி நிறைய கற்கள் கட்டி வைத்திருந்தாள்.

கற்களை எடுத்து நாலாபக்கமும் வீசினாள். டபேர் டபேரென்று அந்தக் கற்கள் மரக்கதவு மீதும், ஓடுகள் மீதும் விழுந்து எல்லோருக்கும் பயத்தைக் கொடுத்தது.

''தொலைச்சுடுவேன், தொலைச்சு. என்ன நினைச்சிண்டிருக்கேள் என்னை. நான் காளிடா, மகாகாளி. உங்க ஜாதி மொத்தத்தையும் நிர்மூலமாக்கிடுவேன்.'' உரத்து கத்தினாள்.



அவள் எந்த ஜாதியையும் குறிப்பிடவில்லை. யாருடைய முகத்தைப் பார்த்தும் கூவவில்லை. ஆனால் பார்த்த ஒவ்வொருவரும், தத்தம் ஜாதியை அவள் இழிவு படுத்துவதாகவே நினைத்துக் கொண்டனர்.

''ஒருத்தனும் கிட்டவரப் படாது. போங்கோ, போங்கோ.''

அவள் மறுபடியும் கல்லைத் தூக்கிக் கொண்டு நடையும் தள்ளாட்டமுமாய் தெருவின் மறுகோடிக்குப் போனாள்.

''இந்த ராஜாம்பாளை அவ புருஷன் வீட்டோட கட்டிப் போடப் போறானா. இல்ல... இவ எங்கிட்ட அடிபட்டு சாகப்போறாளா?''

''வரவர தினம் இதே கூத்தாயிடுத்து. கல்லைத் தூக்கி நாலாபக்கமும் வீசறா. எவ்ளோ பெரிய கல்லு .பாருங்கோ.''

''இதான் கடைசி தடவை. இன்னொரு தடவை ராஜம் தெருவுக்கு வந்தா நடக்கறதே வேற. பொம்மனாட்டின்னு கூட பாக்கமாட்டேன். கட்டையோ, கம்போ கையில் எடுத்து வீறு வீறுன்னு வீறிப்பிடுவேன்.''

வேறு யாரோ பைத்தியம் போல் கத்திக் கொண்டிருந்தார்கள்.

''யார் இவா? உனக்குத் தெரியுமா?'' சுப்ரமணியம் மனைவியின் காதோடு கேட்டார்.

அவள் விலகிக் கொண்டாள். அவரோடு வீடு நோக்கி நகர்ந்தாள்.

''எனக்குத் தெரியும். ரொம்ப நன்னாத் தெரியும். எனக்கு கோலமும் தையலும் இந்த அக்காதான் கற்பிச்சா.

ரொம்ப கெட்டிக்காரி. மண்ணுல பொம்மை பண்றதும் ஓலையில கிலுகிலுப்பை பண்றதும், இன்னிக்கெல்லாம் பாத்துண்டிருக்கலாம். ரொம்ப சாது. ரொம்ப பயந்த சுபாவம்.''

''பிறகேன் இப்படி?''

''அவாளுக்கும் அவா புருஷனுக்கும் ஆகலை.''

''என்ன பிரச்சனை?''

''ரொம்ப வயசு வித்தியாசம். உறவுலதான் கல்யாணம். மூத்தாள் செத்துப் போயிட்டான்னு, ரெண்டாந்தாரமா வாக்கப்பட்டா. இவளும் இப்படி ஆயிட்டாளா. அவர் மூணாவது கல்யாணம் பண்ணிக்க வலை வீசிண்டிருக்கார்.''

''அவருக்கு என்ன வயசாறது?''

''நாப்பத்தொம்பதாம். நேத்துதான் அவரம்மா கோயில்ல சொல்லிண்டிருந்தா.''

''நாப்பத்தொம்பது வயசு பிராமணனுக்கு மூணாவது கல்யாணமா. என்ன அநியாயம் இது?''

''பதிமூணு பதினாலு வயசுகுட்டியா இருந்தா சொல்லுடின்னு அவர் அம்மா கேட்டா. நான் காது கேக்காத மாதிரி சும்மா இருந்துட்டேன்.''

''அசிங்கம், அசிங்கம். ரொம்ப அசிங்கம்.''

''அவர் ஏதோ பூஜையெல்லாம் பண்றாராம். அதுக்கு ஏதோ பொண்டாட்டி தேவைப்படறதாம்.''

''இதுக்கு நரபலின்னு பேரு. பதினைஞ்சு வயசு பொண் குழந்தை வாழ்க்கைய அழிச்சு, அப்படியென்ன பூஜை?''

''ஸ்ரீவித்தையாம். சக்கரமாம். மேருவாம். மூணு வேளையும் அபிஷேக நைவேத்தியம் பண்ணணுமாம். இடைவிடாத மந்திர ஜெபம் பண்ணணுமாம்.''



''இதுக்கும் பதினாறு வயசுப் பெண்ணுக்கும், என்ன சம்பந்தம். நைவேத்தியம் பண்றதுக்கு சமையல்காரன் போதாதா. தானே செய்துக்கக் கூடாதா. அம்மாவோ அக்காவோ ஆகாதா...''

''அம்மா கிழவி ஒருத்தி, எப்பவும் திண்ணைல தூங்கிண்டே இருப்பா. வீடு வீடா போய் நான் இன்னிக்கு சாப்பிட வரட்டுமா, நான் இன்னிக்கி சாப்பிட வரட்டுமான்னு லஜ்ஜையில்லாம கேப்பா. இல்லைன்னா பாத்திரம் கொடுத்து கொஞ்சம் குழம்பு கொடேன், கொஞ்சம் ரசம் கொடேன்னு பேத்திய அனுப்புவா. கோயில்ல பிரசாதம்னா முதல்ல நிப்பா.''

''அம்பிகே... இது எல்லாத்தையும் விட அசிங்கம்.''

''அவர் செய்த பூஜைல தப்பு வந்துடுத்து. அதனால தான் இந்த அக்காவுக்கு இப்படி ஆயிடுத்துன்னு சொல்லுவா.''

''ஸ்ரீவித்தைங்கறது அம்பாள் பூஜை. அம்பாள் லோக மாதா தாய். கருணையே வடிவானவள். ஒரு நாளும் இந்த மாதிரி நிலைமையை அவ ஒரு பொம்மனாட்டிக்குத் தர மாட்டா. தப்பு வேற எங்கியோ இருக்கு.''

''நம்ம அப்பாவும் ஸ்ரீவித்தை தானே பண்றார். இதைக் கேட்டதிலிருந்து அவருக்கு ஒரே பயம். எனக்கும் இப்படி ஆயிடுமோன்னு பயம். நானும் பைத்தியம் பிடிச்சு அலைவேனோன்னு பயம்.''

''அட்டா... என்னத்துக்கு தேவையில்லாத நினைப்பு மனம் ரெண்டா பிரியறதுதான் மனப் பிறழ்ச்சி. நல்லது கெட்டது, வேணும் வேண்டாம் அப்படின்னு பிரிச்சு வைக்க. ரெண்டு பக்கமும் அல்லாடினாதான் சிரமம். அப்போ மனசுக்குள்ளே ரெண்டுவிதமாக வாழ்க்கை வாழ ஆரம்பிச்சுடுவோம். இந்த ரெண்டு வாழ்க்கையும்

மோதித்துன்னா, உரத்து இப்படி கத்தும்படியாயிடும். உனக்கு இப்படியெல்லாம் வராது.''

''அந்த அக்காவுக்கு ஏன் வந்ததுன்னு நினைக்கிறேள்?''

''எங்கியோ தப்பா முடிச்சு விழுந்துடுத்து.''

''அப்படின்னா?'' சுப்ரமணியத்தின் மனைவி ஆவலாகக் கேட்டாள்.

''நம்ம எல்லார் உடம்பிலேயும் ஓர் உயிர்சக்தி இருக்கு. அது முதுகுத்தண்டுல மேலும் கீழும் நகரும். அந்த சக்திக்கு குண்டலின்னு பேரு.

''இந்த ராஜம் கோலம் போடுவோ. ஓவியம் வரைவோ. பாட்டு பாடுவோ. எல்லா லலிதாக் கலை யிலையும் பிரகாசமா இருப்போன்னு சொன்னே யில்லையா? மூலாதார சக்தி விழிச்சவாளுக்குத்தான் இதெல்லாம் வரும். சக்தி விழிச்சு அலையறபோது, உள்ளேயோ, வெளியேவோ எதையாவது பார்த்து அதிர்ந்து போனா, சித்த பிரம்மை ஏற்படும். இவாளுக்கு அதான் நடந்திருக்கு.''

''எப்படி இவ்ளோ திடமா சொல்றேள்?''

''ஏதோ ஒரு யூகம்.''

''நீங்க பண்றதும் ஸ்ரீவித்தைதானே... தினம் பாலா திரிபுர சுந்தரி மந்திரம் சொல்றேள். இல்லையா.''

''நிறைய மந்திரம் சொல்றேன். பாலா திரிபுர சுந்தரி மந்திரமும் சொல்றேன். இதை சொல்றதுக்குத்தானே வாழ்க்கை. இதுக்குத் தானே கோயில் சம்பளம்.''

''உங்களுக்கு பஞ்சாங்க பிராமணன்னு பேரு. ஜோஸியம் சொல்றதேயில்லையே... யார் யாரோ ஜோஸியம் சொல்றா. இப்பல்லாம் ஜோஸியத்திலேதான் காசு.''



''நிறைய காசு சம்பாதிச்சு என்ன பண்ணனும்?''

''சந்தோஷமா இருக்கலாம்.''

''இப்ப சந்தோஷமா இல்லையா?''

''ஓ... இருக்கேனே.'' அவள் தன்னை மறந்து கூறினாள்.

''அப்புறம் எதுக்கு காசு?''

''இன்னும் சந்தோஷமா இருக்கத்தான்.''

''இதுக்கு எல்லையே இல்லாத போயிடும் கண்மணி.'' சுப்ரமணியம் பிரியமாய் ரேழியில் நுழைந்து திரும்பிப் பார்த்த மனைவியின் தலையை தடவினார்.

''சிவசிவா... இதென்ன ரேழியில் நின்னு என்னைத் தொட்டுண்டு.''

''இத்தனை நேரம் தெருவுல ஒட்டிண்டிருந்தே. நான் இங்கே தொட்டா தப்போ.'' சுப்ரமணியம் அவள் காதுமடலை மெல்லத் திருகினார்.

''அம்பிகே... எவ்வளவு நன்னாருந்தது தெரியுமா எனக்கு. ஒரு பயத்துல டபக்குன்னு ஒட்டிண்டுட்டேன். ஒட்டிக்கும் போதே தெரிஞ்சது, எல்லாரும் பார்த்து கேலி பண்ணப் போறான்னு. கேலிக்கு பயமாகவும் இருந்தது. ஒட்டிண்டது, சந்தோஷமாவும் இருந்தது.''

''இதுதான்... இதுதான்... ரெட்டை உணர்ச்சி. இந்த ரெட்டை உணர்ச்சியின்போது, அதிர்ச்சியா ஏதாவது நடந்தா, சில சமயம் மனசு அப்படியே உறைஞ்சு போயிடும். எதைப் பார்த்தோமோ அதிலேயே நின்னுடும். மனசு ஒரே இடத்துல நின்னா, அது பித்து நிலை, சித்த பிரமை, பைத்தியம் பிடிச்ச தன்மை.''

''எனக்கு பிடிக்கலையே...''

''நான் மறைச்சிண்டுட்டேன். அதிர்ச்சி நடக்கலை.''

''ஆனா பாவமில்லயா ராஜம் அக்கா?''

''பாவம்தான் கண்மணி.''

''எம்பேர் அதில்லை. தயவு செய்து என்னை கண்மணின்னு கூப்பிடறத நிறுத்துங்கோ.''

''இதுதான் நான் வைச்ச பேரு. நான் கூப்பிடாத யார் கூப்பிடுவா? எனக்கு அப்போ ஏழு வயசு. நீ அப்போ பிறந்த குழந்தை. இதாண்டா உம் பொண்டாட்டின்னு என் அக்கா உன்னை மடியில் போட்டா. அடி என் கண்மணின்னு அப்போ கொஞ்சினேன். அன்னியிலிருந்து நான் கூப்பிடற பேர் அதானே...''

''எனக்குன்னு எங்கப்பா அம்மா வைச்ச பேர் ஒண்ணு உண்டு.''

''உண்டு. ஆனா எனக்கு அது வேண்டாம். அது உங்க பாட்டியோட பேரு. உங்க பாட்டி கல்லு குண்டாட்டம் இருக்கா. அவபேரை சத்தம் போட்டு நான் கூப்பிட முடியுமா. அதான் கண்மணி, கண்மணின்னு கூப்பிடறேன்.''

''பாவம் அந்த ராஜமக்கா. அவாளுக்கு ஒண்ணும் நிவர்த்தி பண்ணமுடியாதா?''

''தடக்கு தடக்குன்னு எங்கியோ எகிறிப் போயிடறியே.''

''நீங்க சொன்னா மாதிரி, எங்கியோ மனசுல உறைஞ்சுடுத்து. அந்த அக்கா மடியில கல்லைக் கட்டிண்டு, நெத்தி முழுக்க குங்குமத்தைத் தீட்டிண்டு கல்லும் கையுமா நின்னாளே... அப்படியே படம் மாதிரி ஒட்டிண்டிடுத்து. அந்த அக்கா சரியானாதான் என் மனசு ஆறும். இல்லேன்னா எப்பவும் இந்தக் காட்சி மனசுக்குள்ளேயே நிக்கும். நானும் இப்படி அலையப் போறேன்னு இடைவிடாத ஒரு பயம்



வரும். அந்த அக்காவை நீங்க சரிபண்ண முடியாதா.'' அவள் கெஞ்சினாள்.

''எனக்கென்ன தெரியும் கண்மணி. நான் வைத்திய னில்லையே.''

''வைத்தியர் கோயிலுக்குள்ளே இருக்கார். அவர் அமிர்தகடேஸ்வரர். அமிர்தம் கொடுத்து சரி பண்ணிடு வார். அவரை நீங்க பிரார்த்தனை பண்ணுங்கோளேன். அக்காவுக்காக பண்ணுங்கோளேன்.''

''நான் என்ன பெரியவன்னு நினைச்சு எனக்கு இந்தக் கட்டளை போடறே.''

''கட்டளைன்னே வைச்சுக்கோங்களேன். பொண்டாட்டி கட்டளை போடப்படாதா.''

''தாராளமா போடலாம்.''

''நமக்கு கல்யாணமாகி ஆறு வருஷமாச்சு. நான் பெரியவளாகி மூணு வருஷமாச்சு. எனக்கு வயத்துல ஒண்ணுமே தங்கலையே... அதை நினைச்சாலும் பயமா இருக்கு. அந்த அக்கா உங்களால சரியாகி, அந்த சந்தோஷத் தோட, அவ என்னை ஆசிர்வாதம் பண்ணினான்னா, நான் ரொம்ப சௌக்கியமா இருப்பேன். நமக்கு ரொம்ப குழந்தைகள் பிறக்கும்னு தோன்றது.''

''எல்லாம் சரி. நான் என்ன பெரியவன்... இதைப் பண்றதுக்கு.''

''உங்களுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்த அன்னிக்கி, எங்கம்மா தனியா கூட்டிண்டுபோய் சொன்னா. என் தம்பி ரொம்ப பெரியவண்டி. மஹா பண்டிதன். எங்க வம்சத்தையே இவன் தூக்கி நிறுத்தப் போறான். அவனை யாரும் தட்டிண்டு போகாம கண்கொத்திப் பாம்பா காத்திருந்து, அவனை உனக்கு கல்யாணம் பண்ணிக்

கொடுத்திருக்கேன். சமர்த்தா நடந்துக்கோ. அவனைவிட்டு நகரப்படாது. அவனுக்கு காவலாவும் இருக்கணும். அவன் காவல்லேயும் இருக்கணும்.''

''அடடே... வேறென்ன சொன்னா?''

''உங்க மனசு ரொம்ப சுத்தமாம். நீங்க போன ஜென்மத்துல கடும் பிரமச்சாரியாம். பிக்ஷாண்டியா அலைஞ்சிண்டிருந்தேளாம். விதம் விதமா அம்பாள் உபாஸனை பாடிண்டிருந்தேளாம். பெத்தவா ஆசைய தீர்த்து வைக்கலையே, கல்யாணம் பண்ணிக்கலையேன்னு கவலைப்பட்டேளாம். அதத் தீர்க்கறதுக்காக இந்தப் பிறவி எடுத்திருக்கேளாம். உங்களப் பத்தி இப்படித்தான் நாடி ஜோஸியத்துல வந்ததாம்.''

''அடிசக்கை. நாமே பஞ்சாங்கம். நமக்கே ஜோஸியமா, நான் சாதாரண பிராமணன் கண்மணி. சாதுவான பிராமணன். எனக்கு வைத்தியமோ மந்திர வித்தையோ தெரியாது. இருந்தாலும் நீ கட்டளை போட்டேங்கறதுனால அந்தப் பொம்மனாட்டி கூட பேசிப் பார்க்கறேன்.''

''நானும் வரட்டுமா.''

''உனக்கு உள்ளே வேலை இருக்குமே...''

''சரி.'' அவள் பின்னடைந்தாள்.

சுப்ரமணியம், ராஜம் என்கிற அந்தப் பெண்மணியை தேடிக்கொண்டு கிழக்கு நோக்கி நகர்ந்தார்.

கருணையுள்ளவளே... லலிதாம்பிகே, எல்லா உயிர் களிடத்தும் வாசம் செய்பவளே... வாசம் செய்கிற போதே அவர்களை அரவணைத்துக் காக்கும் அருட்சக்தியே... சிவப்ரியே... சிவனின் ப்ரியே... உனக்கு வெற்றி உண்டாகட்டும் என்று உன்னை நமஸ்கரிக்கிறேன். உனக்கு



மங்களம் உண்டாகட்டும் என்று உன்னை துதித்துப் பாடுகிறேன்.

இது சூரியனுக்கு கற்பூரம் காட்டுவது போலவும், இடையறாது வீசும் காற்றுக்கு தூபப்புகை காட்டுவது போலவும், மண்ணிலிருந்து எடுத்ததை மண்ணுக்கே உரமாகப் போடுவது போலவும் விசித்திரமானது.

தாயே... இந்த விசித்திரத்தைப் புரிந்து கொண்டேன். உன்னை வணங்குகிறேன். மெல்ல மனதுக்குள் ஸ்லோகத்தை முணுமுணுத்துக் கொண்டு போனார்.

திருக்கடலூர் கிராமத்திலிருந்து அரைக்கல் தள்ளி வயல்களுக்கு நடுவேயுள்ள ஒரு குளத்தில், சரியாக கட்டப் படாத படித்துறையில் அந்த ராஜாம்பாள் முழங்கால் ஜலத்தில் விரித்த ஜடையோடு, கைகூப்பி இவருக்கு முதுகு காட்டி கிழக்கு நோக்கி நின்றிருந்தாள்.

ராஜாம்பாள் முதுகு காட்டி நின்றாலும், அவள் பிடரிக்குப் பின்னே ஒரு முகம் தோன்றி, அவர் வருவதைப் பார்த்து மெல்ல சிரித்தது.

அந்தச் சிரிப்பில் கர்வமிருந்தது.

அந்தப் பெண்ணின் பிடரியில் ஒரு முகம் தோன்றியதும், சட்டென்று ஒரு கலவரம் சுப்ரமணியத்தின் வயிற்றைத் தாக்கியது. கால்கள் ஒரு நொடி தயங்கின.

துர்தேவதை வசப்பட்டிருப்பாளோ. அப்படியானால் கிழக்குப் பக்கம் நின்று கைகூப்ப முடியாதே... சுத்தமான இடத்தில் நிற்க இயலாதே... அவள் முகத்தில் கோபமிருந்ததே தவிர, கோணல் இல்லையே...

துர்தேவதைகள் கோணங்கியல்லவா காட்டும். கெட்ட வார்த்தைகளல்லவா இறைக்கும். அவளிடம் ஆபாச செய்கைகள் ஒன்றுகூடயில்லை.

எனவே, இது துர்தேவதை இல்லை.

மூளை சூடாகி இருக்குமோ? அதீத உஷ்ணத்தில் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டிருக்குமோ. தொற்று நோய் வந்து ஜுரம் ஏற்பட்டு, ஜுரத்தைத் தணிவிக்க குளுமையான மருந்துகள் போடப்பட்டு, உஷ்ணமும் குளிரும் ஒன்றுக்கொன்று எதிராக செயல்பட்டு, உள்ளே தவறு நேர்ந்திருக்குமோ?

அல்லது மண்டையில் யாரும் அடித்திருப்பார்களோ? மிகுந்த அதிர்ச்சி தரத் தக்க வண்ணம் யாரும் நடந்திருப் பார்களோ..

ஆனால் ஒரு குடும்ப ஸ்திரி, மூன்று குழந்தைகளுக்கு தாய், சித்தபிரமையோடு அலைவது எவ்வளவு வேதனை? அந்த குழந்தைகளுக்கு எவ்வளவு தலைகுனிவு?

நிறைய கைவேலைகள் தெரியும். நன்றாக ஓவியம் வரையத் தெரியும். இனிமையாக பாடக்கூடிய பெண் ணென்றால் அவள் நன்கு வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். நன்கு வளர்க்கப்பட்ட பெண் இப்படி பைத்தியமாய் அலைவது அந்தத் தாய்க்கு எவ்வளவு வேதனை? அவள் தந்தைக்கு எத்தனை தலைகுனிவு?

எனக்கு ஒரு மகள் இருப்பின், அவளுக்கு இப்படி யொரு நிலையிருப்பின் என் மனம் எத்தனை பாடுபடும்? என் மனம் எத்தனை தெய்வங்களை நோக்கி இறைஞ்சும்.

வீட்டில் எரிய வேண்டிய குத்துவிளக்கு வீதியில் உருளலாமா? பெண் என்பவள் எவ்வளவு உயர்வான விஷயம். பெண் என்பவள் எத்தனை கம்பீரம்.

இவளை பேசாதே பேசாதே என்று புருஷன் மிரட்டுகிறானாம். வெறும் எடுபிடி வேலைக்கு வைத்துக் கொள்கிறானாம். நீ எனக்கு இணையில்லை என்று



விரட்டுகிறானாம். வயசு வித்தியாசம் அதிகமாம். அதனா லொரு இளக்காரமாம்.

அலட்சியம் தாங்காமல் புத்தி மாறியிருக்குமோ, ஒரு வேளை மனம் ரணப்பட்டு இவள் விஷம் தின்று, விஷம் முழுவதும் வேலை செய்யாமல் புத்தியைத் தாக்கி விட்டதா.

கண்மணி இவளை குணப்படுத்தச் சொல்கிறாள். என்னால் எப்படி முடியும்? எனக்கு என்ன வைத்தியம் தெரியும்?

ஹிதம் சொல்லலாம், ஆனால், இந்தப் பெண்ணுக்கு நான் சொல்வது புரிய வேண்டுமே.

லலிதாம்பிகே... என்னிடம் எந்த மந்திர சக்தியு மில்லை. உன் புகழைப் பாடுவதைத் தவிர எந்தப் பயிற்சியு மில்லை. ஆயினும் லலிதாம்பிகே... இந்தப் பெண்மணிக் காக உன்னிடம் மனமுருகி வேண்டிக் கொள்கிறேன். ராஜம் என்கிற இந்தப் பெண்மணிக்காக உன்னிடம் மனமுருகி வேண்டிக் கொள்கிறேன். ராஜம் என்கிற இந்தப் பெண்ணை குணப்படுத்துவாயாக. அவள் கொதிப்புகளை அடக்கி அமைதிப் படுத்துவாயாக. அவள் ஆவேசங்களை அடக்கி நிதானப்படுத்துவர்யாக.

லலிதாம்பிகே... அவளுடைய உறவுகள் அவளை மறுபடியும் அன்போடு ஆதரிக்க வேண்டும். அவளைக் கொண்டாடும் வண்ணம் அவள் குணம் பெற வேண்டும்.

லலிதாம்பிகே இந்த சகோதரிக்காக உன் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மன்றாடுகிறேன். இவளை என் தமக்கையாகக் கருதி உன்னிடம் கதறுகிறேன்.

நீ மஹா சக்தி. ஆக்கவும் அழிக்கவும் வல்லவள். கோபமும் பிரியமும் கொண்டவள். நல்லதும் கெட்டதும் செய்பவள்.

தாயே... கருணை செய். காப்பாற்று. விதி மாற்றி எழுது.

அருகில் போய் முழங்கால் ஜலத்தில் சுப்ரமணியர் நின்றார்.

''என்ன சுப்ரமணி?'' பெண் மிகுந்த வாஞ்சையோடு கேட்டாள். குரல், முகம் எல்லாம் மாறியிருந்தது. கண்களில் நிதானமிருந்தது. முகம் கழுவி சிறிய பொட்டு மட்டும் வைத்திருந்தாள். தலையிலும் நீர் தெளித்து அதிகம் பறக்காதவண்ணம் அழுந்தச் செய்திருந்தாள்.

''என்னைத் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியுமாவா... நூத்தியொரு அதிரசம் பண்ணினதே நான்தான்.''

''அதிரசமா... புரியலையே...''

''உன் கல்யாணத்துக்கு சீரா பொண்டாட்டியோட அனுப்பறதுக்கு, நான்தான் நூத்தியொரு அதிரசம் தட்டிக் கொடுத்தேன். உம் பொண்டாட்டி சொல்லலையா.''

''அவ சொல்லியிருப்போ, நான் மறந்திருப்பேன்.''

''அரை நாள்லே நூத்தியோரு அதிரசம். ஒவ்வொன்னும் ரெண்டு உள்ளங்கை பெருசு. முடியுமாடி, முடியுமாடின்னு எல்லாரும் கேட்டா. முடிச்சுக் காட்டுறேன்னு உக்காந்தேன். முடிச்சுக் காட்டினேன். அத்தனை பொம்மனாட்டியும் கட்டிப்பிடிச்சு பாராட்டினா. எல்லாம் போச்சு, எல்லாம் போச்சு.''

அவள் கால்களை நகர்த்தாமல் குளத்துப் படியில் உட்கார்ந்து கொண்டாள். முகம் கவிழ்த்து தண்ணீரை வெறித்துப் பார்த்தாள்.

''ஏன் அக்கா இப்படி ஆச்சு?'' சுப்ரமணியம் மிருது வாய் கேட்டார். அவள் சட்டென்று தலை நிமிர்ந்தாள்.



''அக்கான்னா கூப்பிட்டே?'' ராஜத்தின் கண்களில் சந்தோஷம் மின்னியது.

''ஆமாம் அக்காதானே நீங்க.''

''என்னோட சொந்த தம்பி அவன்கிட்ட மனசே சரியில்லடா. பத்துநாள் இருக்கேன்னு செம்பனார் கோயில் போய் கேட்டேன். ஒருவேளை சோறு கூட கிடையாது. போடி வெளியேன்னு கத்தி, ரகளை பண்ணி அனுப்பிச்சிட்டான். கையில குச்சி எடுத்துண்டு, என்னையும் குழந்தைகளையும் மாடு விரட்டற மாதிரி, ஊர் எல்லை வரைக்கும் விரட்டிண்டு வந்தான்.''

அவள் அழவில்லை. ஆனால், இதை நினைத்து அவள் அதிகம் அழுதிருப்பாள் என்பது, அவள் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

என்ன கோரமிது... ஒருவேளை சோறுகூட ஒரு தம்பியால் போட முடியாதா. சாப்பிட்ட பிறகு என்னால் ஒரு வாரம் உனக்கு சோறு போடமுடியாது என்று சொல்லியிருக்கலாமே...

உணவே போடாமல் துரத்துமளவிற்கு என்ன கெடுதல் செய்தாள்? என்ன கெடுதல் செய்திருக்க முடியும்? அதுவும் குழந்தைகளோடு உள்ள பெண்மணியை துரத்த மனம் எப்படி வந்தது?

இந்த ஜாதி குரூரமாகிக் கொண்டு வருகிறது. கேவலமாகிக் கொண்டு வருகிறது. காசு காசு என்று கீழ்த்தரமாகிக் கொண்டு வருகிறது. கண்ணுக்கெட்டிய வரை வயல் வாங்கி, எல்லாம் தன்னுடையது என்று இறுமாந்து குத்தகைக்கு விட்டு, வேளாளரிடம் விரட்டி தானியம் பிடுங்கி, மிகப் பெரிய பேயாட்டம் நடக்கிறது.

வேளாள இளைஞர்களை, மறவர்களை கழுத்தில் கயிறு போட்டு தஞ்சாவூர் சரபோஜி ராஜா போருக்கு இழுத்துப் போய் விடுகிறான். இழுத்துப் போன பையனுக்கு எந்தப் போர் பயிற்சியுமில்லை.

ஏதேனும் ஒரு வெட்ட வெளியில் வேலங்காட்டில் அந்த வேளாளனோ, அந்த மறவனோ குத்துப்பட்டு செத்துப் போகிறான். அவன் செத்துப் போனதுகூட வெகுநாள் கழித்துதான் தெரியவருகிறது.

அந்த வயல், நஞ்சை நிலம் வாரிசு இல்லாத சொத்தாகப் போகிறது. அதை இந்த அந்தணர்கள் குறைந்த விலையில் பட்டயம் எழுதி வாங்கி விடுகிறார்கள்.

படிப்பறிவில்லாத நான்காவது வர்ணத்தாரை வைத்து விவசாயம் செய்கிறார்கள். மூங்கில் கழியால் அடித்து வேலை வாங்குகிறார்கள். பிராமணன் சாபம் பொல்லாதது என்று மிரட்டுகிறார்கள்.

சொத்து சேர்க்க ஆசைப்படும் எந்த ஜாதியும் சீர்குலையும். காசு சம்பாதிப்பதில் ஆர்வம் காட்டும் கூட்டத்தில் கலாசாரம் காணாது போகும். தான் என்று அகங்காரம் தலையெடுக்கும். நண்டு கொழுத்தால் வளையில் தங்காது. வெளியே வந்து நர்த்தனமாடும்.

இந்த ஜாதி கடவுள் வணக்கத்தை விட்டுவிட்டு காலாட்டத் துவங்கி விட்டது. கடவுளின் பெயரைச் சொல்லிக் காசு சம்பாதிக்க முயல்கிறது.

சீரழிவு வெகு வேகமாக இருக்கிறது.

ஒரு மதம் சீரழியக் காரணம், அதன் குருமார்கள். அவர்கள் இளைஞர்களையும் பெண்களையும் தன் வசப்படுத்தி திசை மாற்றுவார்கள். தூண்டிவிட்டு கொடுமைப் படுத்துவார்கள்.



எல்லா மதத்திலும் குருமார்கள் ஒழுக்கத்தோடு சம்பந்தப் பட்டவர்கள். தான் ஒழுக்கமாக இருக்க வேண்டியிருக்கிறதே என்று எரிச்சல் படுபவர்கள். அந்த எரிச்சலை இளைஞர்கள்மீது தந்திரமாக ஏற்றிப் பெண்களை கொடுமைப்படுத்தச் சொல்வார்கள்.

எந்த மதம் பெண்களைக் கொடுமைப்படுத்துகிறதோ, எந்த ஜாதி பெண்களை அவமானப் படுத்துகிறதோ, அது சீர்குலையும். அடிபட்டுச் சிதறும்.

பெண்களை அடிமைப்படுத்திய நாடு பஞ்சத்தாலும், தொற்று நோயாலும் பேரவஸ்தைப்படும். இதனால் இடையறாத உள்கலகம் உண்டாகும். தினசரி வாழ்க்கை தடுமாறும். போர் மூளும். ஆண்கள் அழிவார்கள். வழிபாட்டு ஸ்தலங்கள் இடிக்கப்படும்.

சரித்திரம் திரும்பத் திரும்ப இதைச் சொல்லியிருக்கிறது.

கபாலிகமும், காளாமுகமும் இப்படித்தான் காணாமல் போயின. பௌத்தமும் ஜைனமும் அகந்தையால் அழிந்து வேறு ஊர்களுக்குக் கப்பலேறின.

இப்போது இந்த இந்து மதத்திற்கு கேடு வந்திருக்கிறது. இந்த பிராமண ஜாதி அடக்க ஆளில்லாமல் அலைகிறது. மறவர்கள் இப்படித்தான் அலைந்தார்கள். வீரவசனம் பேசி வம்புச் சண்டைக்குப் போனார்கள். தங்களுக்குள்ளாகவே வெட்டி மடிந்து கொண்டார்கள்.

இடையறாத போர்களினால் நிறைய பேர் பலியானார்கள். அவர்களின் நிலங்கள்தான் இவர்களின் கைக்கு வந்திருக்கின்றன.

'ஜெய விஜயீ பவ' அரசே. உனக்கு வெற்றி நிச்சயம். உன் படைகள் நடந்து போன தூசு அடங்கும் வரை, உன் கோட்டை வாசலில் நின்று, உனக்காக துர்க்கை மந்திரம் சொல்லுவோம் என்று உரக்கச் சொல்லி பைநிறைய பொற்காசுகள் வாங்கினார்கள்.

ஹோமம் செய்வதாய் அரிசியும், பருப்பும், நெய்யும் வாங்கினார்கள். போகும் போது தானம் கொடு என்று மாடும், கன்றும் வாங்கினார்கள்.

அரசன் போருக்குப் போனபோதும் வாங்கினார்கள். போரில் ஜெயித்து திரும்பிய போதும் வாங்கினார்கள். தோற்று இறந்த போதும் வாங்கினார்கள்.

அரசன் கொடுத்த காசை அள்ளிக் கொண்டு வந்து, மறவர் வீட்டு நிலத்தை மடக்கிப் போட்டார்கள். ஒரு சிற்றரசாய் உலவி வந்தார்கள். யாரும் வாள் உருவினால், நாங்கள் சண்டையிட மாட்டோம் என்று கைகட்டிக் கொண்டார்கள்.

சொத்து சேர சேர ஒரு குடும்பத்தில் கலகம் உண்டாகும். செல்வம் சேர சேர ஒரு ஜாதியில் பிளவு உண்டாகும். அதிகாரம் வளர வளர ஒரு மதம் தன் மரியாதை இழக்கும்.

இங்கே அது நடந்து கொண்டிருக்கிறது. அந்த அதிகாரம் மமதையின் ஒரு துளிதான், பெண்ணை கோல் எடுத்து விரட்டுவது, குழந்தைகளை அடித்து துன்புறுத்துவது.

இவளுக்கு, இந்த ராஜத்திற்கு இப்போது தேவை ஆறுதலான வார்த்தைகள்.

''இனிமே, நீங்க உங்க தம்பியண்ட போக வேண்டாம். என் அகத்துக்கு வாங்கோ. என் பார்யாளுக்கு உங்களுக்கு தெரிஞ்சதெல்லாம் சொல்லிக் கொடுங்கோ.



''எனக்கு கோயில் வருமானம் வர்றது. ஏதோ கொஞ்சம் நிலம் இருக்கு. உங்களுக்கு நான் சாதம் போடறேன். பாட்டோ, ஸ்லோகமோ, கோலமோ எல்லாம் நம்ம இடத்திலேயே கொண்டாட்டமா வைச்சுக்கலாம்.

''நான் உங்க உடம் பொறந்தான். நீங்க என் சொந்த தமக்கை. எப்பவேணாலும்...''

''இல்ல சுப்ரமணி எனக்கு எல்லாம் மறந்து போயிடுத்து. சூடான பானையைத் தொட்டு, கை கொப்பளிச்சு, குழம்பு கவிழ்ந்தா மாதிரி ஆயிடுத்து. குழம்பு கவிழ்ந்தது தெரியாது. கை கொப்பளம்தான் கண்ணு முன்னாடியே நிக்கும்.''

''அப்படி கொப்பளிக்கும் படியா என்ன நடந்தது அக்கா?'' சுப்ரமணியம் மிருதுவாய் பேச, அவள் பாசத்தோடு அவரைப் பார்த்தாள்.

''ஸ்ரீவித்தை கத்துக்கணும்னு ஆசை. கதவிடுக்கு வழியா கத்துண்டேன்.''

''புரியலியே...''

''எங்க ஆத்துக்காரர் ஸ்ரீவித்தை உபாசகர். மூணு வேளையும் பூஜை பண்ணி எல்லா நேரமும் மந்திரம் சொல்லி, மடி ஆச்சாரம்னு நிப்பார். இதமா ஒரு தடவை கூட பேசினதேயில்ல. பதினாறு வருஷத்துல ஒரு தடவை கூட என் பேர் சொல்லி கூப்பிட்டதில்லை. 'ஏய்' ம்பார். இல்ல. 'நாயே'ம் பார்.'' ராஜம் சொல்லிவிட்டு மறுபடி தலை கவிழ்ந்து கொண்டாள்.

சுப்ரமணியத்தின் முகமும், மனமும் சுருங்கித் தவித்தன.

''அப்புறம்...''

''என் கோலத்தையோ, பாட்டையோ சமையலையோ அவர் ரசிச்சதேயில்லை. ஏதோ துடப்பத்தால் அடிச்சு, குழந்தைகள் பிறந்தா மாதிரி இருக்கே தவிர, ஆம்படையா னால பிறந்த மாதிரி எனக்கு தெரியவேயில்லை.''

சுப்ரமணியம் கண்களை மூடிக்கொண்டார்.

''லலிதாம்பிகே. மஹாகாளி, சண்டி, பைரவி, ஸ்ரீதுர்க்கே...'' மனம் கோபமாய் கத்தியது.

எத்தனை வேதனையிருந்தா, இந்த நாகரீகமான பெண்மணி இப்படியொரு வார்த்தை சொல்வாள். ஒரு அந்நியனிடம் இதைப் பற்றி சொல்ல வேண்டிய ஒரு தலையெழுத்து, ஒரு பெண்மணிக்கு ஏன் வந்தது?

''அவர் பண்ற ஸ்ரீவித்தைய நாம பண்ணினா சந்தோஷப்படுவாரேன்னு, சொல்லித்தர கேட்டேன். முடியாதுன்னுட்டார். ஏன்னு கேட்டேன். பொட்ட நாய்களுக்கு ஸ்ரீவித்தை எதுக்குன்னு சொல்லிட்டார்.

''எனக்கு உடனே ரொம்ப கோபம் வந்தது. மனசுல ஓர் ஆங்காரம் வந்தது. நீ பொட்டச்சிய தெய்வமா வைச்சு கொண்டாடலாம். அவ எதிரே வந்தா நாயாயிடுவாளோ... நீங்க நமஸ்காரம் பண்ற அம்பாளும் பெட்டைதானேன்னு கேட்டேன். மாறி மாறி அடிச்சார். எட்டி எட்டி உதைச்சார். அம்பாளைப் பத்தியா பேசறே. அம்பாளைப் பத்தியா பேசறேன்னு முஞ்சியிலேயே குத்தினார். தெருவே கூடிடுத்து. இவர் அடிக்கிறதை நிறுத்தவேயில்லை. எங்கப்பா அரிவாளைத் தூக்கிண்டு ஓடி வந்த பிறகு தான் அடிக்கறதை நிறுத்தினார்.''

சுப்ரமணியம் மறுபடி கண்களை மூடிக்கொண்டார். அவர் மனதுக்குள் ஒரு கோபத்தழல் குப்பென்று பற்றி, உடம்பு முழுவதும் பரவியது.



பெண்களை ஹிம்ஸிக்கிறவனின் மரணம் மிகக் கொடுமையாக இருக்கும். பெண்களை தூஷிக்கிறவன் வாக்கு எடுபடாமல் போகும். மரண நேரத்தில் அவன் விருப்பத்தை வெளியிட முடியாமல் நாக்கு இழுத்துக் கொள்ளும். உத்தமப் பெண்களை புறங்கூறியும், அவமதித்தும், மனம் சுண்டிப் போகச் செய்தவனுடைய செல்வம் விரைவில் கரையும். வீணாய் போகும். செல்வம் கரையும் நேரத்தில் அவன் நோய்படுவான். சிகிச்சைக்கு பிச்சை யெடுப்பான்.

சுப்ரமணியம் கோபத்தை மெல்ல தணித்துக் கொண்டார். லலிதாம்பிகே, லலிதாம்பிகே என்று கூறி, வெப்பத்தை ஆற்றிக் கொண்டார்.

''இது நடந்து ஒரு மாசம் இருக்கும்.'' ராஜம்மாள் தொடர்ந்தாள்.

''அவர் மூணு பேருக்கு ஆளுக்கு பத்து மரக்கா நெல்லு தட்சணையா வாங்கிண்டு, மஹா கணபதி மந்திரமும், பாலாதிரிபுர சுந்தரி மந்திரமும் சொல்லித் தந்தார். நான் கதவிடுக்கு வழியா, அவர் பண்றதெல்லாம் உற்றுப்பார்த்து மனசிலே பதிய வைச்சுண்டேன். உற்றுக்கேட்டு மந்திரத்தைக் கத்துண்டேன்.

''அங்க நியாஸம், கரநியாஸம், திக் பந்தம் எல்லாம் கத்துண்டேன்.

''மூணு நாள் தொடர்ந்து அந்த சிஷ்யாள் வந்தா. நான் மூணுநாளும் ஒளிஞ்சிருந்து கேட்டேன். வீட்ல சொன்னா உதை விழும்னு, விடியக் கார்த்தால குளக்கரைக்குப் போய் வெளிச்சம் வர்றவரைக்கும் சொல்லுவேன்.

''குழந்தைகளைக் குளிப்பாட்டறேன், துணி துவைக்கி றேன்னு சொல்லி, உச்சி வேளைக்கு வந்து, குழந்தை

களைத் துணி துவைக்கச் சொல்லிட்டு நான் பாலா சொல்லு வேன். மறுபடி அந்தி சாயறச்ச சொல்லுவேன்.

''பாலா திரிபுர சுந்தரி மந்திரம் சொல்லச் சொல்ல எனக்கொரு சந்தோஷம். கனவுல நூத்துக்கணக்கா யானைகள் வரும். தடுக்குன்னு எழுந்து உக்கார்ந்திருக்கேன். விழிப்பு வந்த நேரத்திலேருந்து விடியற வரைக்கும் சொல்லுவேன். தூக்கமே போயிடுத்து. ஆனா, சிரமமாவே தெரியலை. உடம்பு முழுக்க பரபரன்னு ஒரு சக்தி பரவி, நூறு பேருக்கு சமைச்சுப்போட முடியும்னு தோணித்து. உடம்பிலே அத்தனை சக்தி. அவ்வளவு குதூகலம்.

''ஒருநாள் ராத்திரி சில்லுன்னு காத்து. கொல்லைப் பக்கம் சேவல் கூவித்து. என்ன பொழுது, எத்தனை நாழிகை ஒன்னும் தெரியலை. வானம் மூட்டமா இருந்தது. தெருவிலே வண்டி போச்சு.

''விடிஞ்சுடுத்தான்னு வண்டிக்காரனைக் கேட்டேன். விடியாம போகுமா, விடியும்னான். அவனுக்கு என்ன துக்கமோ. எந்த அர்த்தத்திலே சொன்னானோ... நான் விடிஞ்சுடுத்துன்னு நினைச்சு, குளத்துக்குப் போயிட்டேன். இறங்கி முழங்கால் ஜலத்துல நின்னு, தலையில குட்டிண்டேன். மஹாகணபதி மந்திரம் சொன்னேன்.

''ஆயிரத்தெட்டு முடிச்சுட்டு, பாலா சொல்ல ஆரம்பிச்சேன். தக்தக்குன்னு சுத்தி யாரோ நிக்கறா மாதிரி பிரமை. பிரமையில்லை நிஜம். யாரோ நிக்கறான்னு தெரியறது. ஆனா கண்ணுக்குத் தெரியலை.

''பாலாவை மனசுக்குள்ளே நிறுத்தி, வேகமாகச் சொல்ல ஆரம்பிச்சேன். கூர்மையா சொல்ல ஆரம்பிச்சேன். சுத்தி நின்னவாளெல்லாம் சட்டுன்னு எதிர்கரைக்குப் போயிட்டா. சொடக்கு நேரத்துல எதிர்கரைக்கு போயிட்டா.



மனுஷாளால அப்படி போக முடியாது. அங்கேருந்து அழுகை சத்தம். ஆண் குரல்ல, பெண் குரல்ல, குழந்தைகள் குரல்ல ஒரே கதறல்.

''மனசு பாலாவை சொல்லிண்டே இருக்கு. அதே சமயம், எதிரே நடக்கிற கூத்தையும் பாத்துண்டிருக்கு. மனசுக்குள்ளே பாலா காப்பாத்துவாங்கிற நம்பிக்கையும் இருக்கு. அதே சமயத்துல பயமும் இருக்கு.

''என்ன வேணும்னு எதிர்கரையில இருக்கிறவாள சைகையில் கேட்டேன். நான் பாலா மந்திரம் சொல்றே னோன்னோ, அந்தப் புண்ணியத்தை கேக்கறான்னு எனக்கு புரிஞ்சு போச்சு, அவ்ளோதானே... எடுத்துக்கோன்னு ஓர் எண்ணம் வந்தது.

''ரெண்டு கையாலும் குளத்து ஜலத்தை வாரி, தத்தம் பண்றாமாதிரி அவா பக்கம் விட்டேன். சொடக்கு நேரத்துல நூத்துக்கணக்கான பேர் கை நீட்றா மாதிரி தெரிஞ்சது. ரொம்ப சந்தோஷமா தத்தம் பண்ணினேன்.

''சுப்ரமணியா... ஒரு கைநிறைய ஜலம் எடுத்து விட்டுருக்கேன். ஒரு சொட்டு ஜலம்கூட குளத்துல விழலை. நம்ம கை ஜலத்தை யாரோ வாங்கிண்டுட்டான்ன உடனே ஒரு கிலி, சந்தோஷம், பரவசம், குதூகலம், உதறல், பயம், ஆனந்தம், இடுப்புக்கு கீழேயிருந்து விருட்டுன்னு சுத்தி கிளம்பி நெஞ்சில் குத்திட்டு நின்னது.

''கழுவேத்தறதும்பாளே... அந்த மாதிரி, ஒரு நெருப்புக் கட்டை உடம்புக்குள்ளே ஏறித்து. 'ஹா...'ன்னு அலறினேன். பெரிய அலறல். என்னைச் சுத்தி, என் உடம்பிலேருந்து ஆயிரக்கணக்கான பாம்புகள் போறது. கருப்புப் பாம்பு. எல்லாம் முழங்கை நீளம். வளைஞ்சு வளைஞ்சு ஓடறது.

''திரும்பி வந்துடுத்துன்னா? போங்கோ, போங்கோ போங்கோன்னு விரட்டறேன். பைத்தியம் பிடிச்ச மாதிரி பயத்துல கத்தறேன்.

''யாரோ எரியற சளுந்துக்கட்டையோட ஓடிவந்தா. நம்மூர் தலையாரி சிவனேசன், அம்மா என்ன பண்றிங்க இங்கேன்னு கத்தினான். கை கம்பை பிடிக்கக் கொடுத்து கரையேத்தினான்.

''விடிய இன்னும் இரண்டும் ரெண்டு நாழிகை இருக்கேம்மா, இப்போ குளிப்பாங்களா யாராவது அப்படின்னு கத்தினான்.

''நான் திரும்பி எதிர்கரை பார்த்தேன். சுப்ரமணியா, எல்லாரும் பாட்டு பாடிண்டு மேலே போறாங்க. எனக்கு சந்தோஷமா இருந்தது. அதேசமயம், அடிக்கடி இந்த பாம்பு பிரமை வந்துறது. விரட்டத்தான் கல்லெடுத்து அடிக்கிறேன். நான் அடிக்கிற கல்லு யார் மேலயும் படாது சுப்ரமணியா, யாரையும் காயப்படுத்தறது என் எண்ண மில்லை.

''ஆனா ஒன்னு... இன்னும் ரெண்டு தடவை இந்த பாம்புக் கனா வந்தது, நான் செத்துப் போயிடுவேன். இதுக்கு மேல கத்தவோ, கல்லடிக்கவோ எனக்கு தெம்பில்லை. இருதயம் வெடிச்சு பிராணன் போயிடும்.

''சுப்ரமணியா... அக்கா அக்கான்னு அழகா கூப்பிடறியே... நான் செத்துப் போனா, அமிர்தகடேஸ்வரர் கோயில் கோபுரத்துல, எனக்காக மோட்ச தீபம் ஏத்தறியா?''

அவள் கேட்டுவிட்டு குழந்தைபோல் விசும்பி விசும்பி அழத் துவங்கினாள்.

சுப்ரமண்யத்திற்கு அவள் மனோநிலை மிகத் தெளிவாய் புரிந்தது.



இவள் குண்டலினி சக்தி தடம் புரண்டிருக்கிறது.

உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் முதுகெலும்பின் கீழ் பாகத்தில் ஒரு சக்தி இருக்கிறது. ஒரு துவாரத்தின் கீழே அந்த சக்தி உறங்கிக் கிடக்கிறது.

அந்த சக்தியை தட்டி எழுப்புவதே ஒரு மந்திர வித்தையின் குறிக்கோள். சிலருக்கு பூர்வ ஜென்ம வாசனையால், முற்பிறவியின் தொடர்பால், அதன் தொடர்ச்சியே குண்டலினி சக்தி விடுபட்டு சீறி எழக்கூடும். அதன் விளைவாய் மனிதர்களுக்கு ஒரு பரவசநிலை ஏற்படும். ஒரு மனக் கிளர்ச்சி தோன்றக்கூடும்.

இந்தப் பெண்ணின் குண்டலினி சக்தி அவளைமீறி எழ ஆரம்பித்துவிட்டது. அதன் விளைவாகத்தான் இந்த வேதனை இவளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

முதுகெலும்பின் கீழேயிருந்து உச்சந்தலை வரை ஆறு முடிச்சுகள் இருக்கின்றன. ஒவ்வொரு இடமாய் குண்டலினி சக்தி தாண்டிப் போகிறபோது, சில வினோத அனுபவங்கள் ஏற்படும். சில காட்சிகள் தெரியும். சில சப்தங்கள் கேட்கும்.

குருவின் அண்மை உள்ளவர்கள் மிரட்சியடையாமல் குருவை கேட்டு தெரிந்து கொள்வார்கள். ஒரு நல்ல குருவால் மனதையும், உடம்பையும் சமாதானப்படுத்த முடியும்.

இவள் பகிர்ந்து கொள்ளக்கூட ஆளில்லாமல் பயந்து விட்டாள்.

இவள் சொல்லும் மற்ற கதைகள் நிஜமாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். அல்லது வெறும் மனப்பிரமையாகவும் இருக்கலாம்.

ஆனால், பாம்புகள் நெளிவது என்பது, அவளிட மிருந்து வெளியே போவது என்பது மூலாதார விடுதலையைச் சொல்கிறது.

அங்கிருந்த சக்தி நகரத்துவங்கி விட்டது. ஆனால், வேறு இடம் போகவில்லை. அடுத்த முடிச்சில் தங்குவதற்கு பதிலாக மேலும் கீழும் அலைகிறது. சக்தி அலைகிறபோது ஆவேசப்பட்டு விடுகிறாள்.

இவளுக்கு இதைப்பற்றி சொல்லித்தர வேண்டும். உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களைப் பற்றி விளக்க வேண்டும். ஒவ்வொன்றின் நிறமும், சப்தமும், காட்சியும் அக்ஷரங்களும், அதிதேவதையைப் பற்றியும் விளக்க வேண்டும்.

ஸ்ரீவித்தையைப் பற்றி ஒரு பெண்ணுக்கு விளக்கலாமா என்று தெரியவில்லை. விளக்கினால் புரிந்து கொள்வாளா என்று தெரியவில்லை.

"ஸ்ரீவித்தையா... சுப்ரமணியம் சொல்லிக் கொடுத்தானா. வேதம், வேதாந்தம், உபநிடதம் எல்லாம் சொல்லிக் கொடுக்கச் சொல்லேன்.

ஸ்ரீவித்தையில வாமாச்சாரம்னு ஒரு விஷயம் இருக்கு. அதுவும் வேணா கத்துக்கோ. அந்த பூஜையே பொம்மனாட்டிக்குத்தான். பொம்மனாட்டி கட்டுமஸ்தா இருந்தா பூஜையும் கட்டுமஸ்தா இருக்கும்.

யாராவது வாய்க்கு வந்தபடி கேலி செய்வார்களோ, நான் ஏதேனும் நல்லது செய்ய இவளுக்கு இடைஞ்சலாய் போய் விடுமோ. இவள் புருஷன் கோபமடைவானோ.

வயசுப் பையனோடு என்னடி பேச்சு என்று கோபித்து ஹிம்ஸிப்பானோ.



லலிதாம்பிகே... உன் மந்திரம் சொன்ன இந்தக் குழந்தை, நல்ல பெண்மணி, வீணாய் போகலாமா. பித்தாய் திரியலாமா. இது உனக்கு அழகா, இது நல்லதா, உன் புகழுக்கு களங்கமில்லையா.

பாலா திரிபுர சுந்தரி மந்திரம் சொன்னா பைத்தியம் பிடிக்கும் என்று ஊர் சொல்லலாமா? எப்படி ஒரு இழுக்கு உனக்கு ஏற்படலாம்? எந்தத் தாயாவது தன் குழந்தையை தெருவில் பித்து பிடிக்க விடுவாளா.

லோகமாதா... நீ கருணைக்கடல். ராஜம்மாள் என்கிற இந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை. நீ எனக்கும் தாய். எனவே இவள் என் சகோதரி. இவளை குளிர்விக்க உன் துணையைத் தேடுகிறேன். லலிதாம்பிகே... அருள் செய்.

சுப்ரமணியம் குளக்கரையில் கண்மூடி நின்றார்.

"அம்பி... உன்னை இங்கேருந்து பாத்தா, நீ பொம்மனாட்டி மாதிரியே இருக்கேடா. உன் கட்டுக் குடுமி, கடுக்கண் மூக்கு, நெற்றி, சிவப்பு உதடு, கண், குங்குமப் பொட்டு எல்லாமே பெண் ஜாடையாத்தான் காண்பிக்கறது.

"உன் கைவிரல், உள்ளங்கை, கழுத்து, முதுகு எல்லாமே பெண் தன்மையா இருக்கு.

"சுப்ரமணியா... இத்தனை பிரியமா எங்கப்பாகூட பேசினதில்லை தெரியுமா. நீ சௌக்கியமா இருக்கணும்னு நான் இன்னி முழுக்க பாலா சொல்லப் போறேன். உனக்கு நல்ல குழந்தைகள் பிறக்கணும்னு அம்பாள்கிட்ட வேண்டிக்கப் போறேன்."

சுப்ரமணியனுக்கு அடிவயிறு குழைந்தது. மனம் ஆடியது.

''அக்கா நான் சொல்றத நன்னா கேட்டுக்கோங்கோ. நம்ம அடிமுதுகுத் தண்டுல ஒரு சக்தி இருக்கு. அந்த சக்திக்கு குண்டலினி சக்தின்னு பேரு. அந்த சக்தி இருக்கற இடத்துக்கு மூலாதாரம் என்று பெயர். மூலாதாரத்துல இருக்கற சக்தி மேலே நகர்ந்து, ஸ்வாதிஷ்டானம்கிற இடத்துக்குப் போகும். ஸ்வாதிஷ்டானத்திலேருந்து மணிப்பூரகங்கற இடத்துக்குப் போகும். இந்த மணிப்பூரகம் தொப்புளுக்கு நேரே இருக்கற முதுகுத்தண்டுல இருக்கு. அதுக்கு மேல் இருக்கறது மார் நடுக்குழி. அது அநாஹதம். தொண்டைக்கு நேரே உள்ளே இருக்கறது, விசுத்தி. அதுக்கு மேல புருவத்தில இருக்கிறது, ஆக்ஞா சக்கரம். தலை உச்சியில இருக்கிறது ஸஹஸ்ரம். அந்த குண்டலினி சக்தி நான் சொன்ன இந்த இடங்கள் வழியா நகர்ந்து வரும். அப்படி நகரும் போது லேசான உபாதைகளும், அமானுஷ்ய மான காட்சிகளும் தெரியும்.

''அக்கா... உங்கள மாதிரி கெட்டிக்காராளுக்கு, கவிதை பாடறவாளுக்கு, ஓவியம் வரையறவாளுக்கு, சிற்பிகளுக்கு, நடிகர்களுக்கு, இந்த மூலாதார சக்கரம் லேசா ஒரு விழிப்புல இருக்கும். இது பூர்வ ஜென்ம பலன். கொஞ்சம் அப்யாஸம் பண்ணிவிட்டதனுடைய விளைவு.

''மறுபடியும் சரியா தியானம் பண்ணினா குண்டலினி சக்தி ரெண்டாவது இடத்துக்கு நகரும். அப்போ, கூடுதலான முகப் பொலிவு, கெட்டிக்காரத்தனம் வரும். முன் உணரும் உள்ளுணர்வு அப்படின்னு சிலது உண்டாகும்.

''உங்க சக்தி ரெண்டாவது இடத்துக்குப் போகாம, பழைய இடத்துக்கும் வராம நடுவுல கிடந்து அல்லாடறது.

''இதுக்கு காரணம் இதை நீங்க குரு மூலமா தெரிஞ்சுக்கலை. குளத்துல நடுநிசியில் மந்திர ஜெபம் பண்ற



போது சக்தி வெளியே கிளம்பியிருக்கு. நீங்க, பயந்து போய், அது என்னன்னு புரியாம, அடக்க முயற்சி பண்ணிட்டேள். அது போக வேண்டிய இடத்துக்கும் போகாம, திரும்ப வேண்டிய இடத்துக்கும் திரும்பாம திண்டாடறது.

''ஒரு வித்தையை ஆத்திரப்பட்டோ, அசூயை பட்டோ, நான் ஜெயிச்சக் காட்றேன் பாருன்னு சபதம் போட்டோ கத்துக்கப்படாது. உங்க நிலைமை அப்படி ஆயிடுத்து. நடந்ததை மறந்துடுங்கோ. நீங்களா கத்துண்ட இந்த ஸ்ரீ வித்தையை, நான் உங்களுக்கு கத்து தர்றேன்.

''ஸ்ரீ வித்தையை ஒரு பூஜைன்னு வைச்சுக்கலாம். தாமிரத் தட்டுல சக்கரம் வரைஞ்சு, சக்கரத்தை அம்பாளா நினைச்சு, அதுக்கு உபசாரங்கள் பண்ணி, ஸ்லோகம் சொல்லி மூலமந்திரம் சொல்றதுக்கு முன்னாடி, நம்மை எந்த சக்தியும் தொந்தரவு பண்ணாம இருக்கறதுக்கு திக்கு கட்டிண்டு, பிறகு ஆழ்ந்து ஒரு மூல மந்திரத்தை, உதடு அசைக்காத, நாக்கு அசைக்காத மனசுக்குள்ளே சொல்லணும்.

''இந்த பூஜைக்கு என்ன நியமங்கள் உண்டோ, அந்த நியமங்களோட வாழ்க்கை இருக்கணும்.

''ஆனா, இத்தோட வித்தை முடிஞ்சு போகலை. மந்திரம் மனசோட ஒட்டிண்ட பிறகு ஆழ்ந்து சொல்ல முடிஞ்ச பிறகு, மந்திரத்து மேலேயே மனசு இருக்கற நிலை வந்த பிறகு எந்த நேரமும் மனசிலே மந்திரத்தைச் சொல்லிண்டிருக்கலாம்.

''இப்போ எந்திரமோ, அம்பாள் சிலையோ, ஓவியமோ முக்கியமில்லை. மந்திரம்தான் அம்பாள். சப்தம்தான் ஸ்வாமி அப்படின்னு தெரியவரும். அந்த சப்தத்தோடு இருக்கறபோது உடம்பிலே சில இடங்கள்ல சலனம் வரும். மனசு அங்கே போய் மோதும்.

''உதாரணமா, அடி முதுகுல ஒரு சூடு பரவும். விறுவிறுன்னு ஓர் உணர்வு தோணும். நடு முதுகுல சாரி சாரியா எறும்பு ஊறுறாப் போல இருக்கும். புருவம் மூக்கு வெடைக்கும். கண் நிலை குத்தும். காதுல ஒரு சுவர்கோழி சத்தம் இடைவிடாம கேக்கும். யாருமே தொடாத போதும் உச்சந் தலையை யாரோ தொடற மாதிரி ஓர் உணர்வு இருக்கும்.

''இதுவரைக்கும் வெளியே பாத்துண்டிருந்த நாம உள்ளே பாக்க ஆரம்பிச்சிடுவோம்.

''உள்ளே பாக்கறதுன்னா என்ன தெரியுமா. மனசு எதுன்னு தேடறது. மனசு தேடறபோது, மனசு எதிர்ப்படும். உற்றுப் பாக்கறபோது மறையும். அப்போ, நான் சொன்ன முடிச்சுகள்ல ஒட்டிண்டு நிப்போம். எதுவும் யோசிக்காம அதோடயே அதுவா கிடப்போம். ரொம்ப வினோதமான அனுபவம் இது.

''கண் எதிரில் உள்ளதைப் பார்க்கும். ஆனா, பார்க்காது. காது எல்லா சப்தத்தையும் கேட்கும். ஆனா, ஒட்டாது. உடம்பு இங்கேதான் இருக்கும். ஆனா, எதுவும் தெரியாது.

''இப்படி எப்பவாச்சும் நடக்கும். கால் நாழிகை, அரை நாழிகை இப்படி கிடப்போம்.

''விழிக்கிற போது உடம்புக்கும், மனசுக்கும் அதீத பலம் வந்துருக்கும்.

''அந்த பலத்தை மறுபடியும் பாட்டா, ஓவியமா, கவிதையா, வீணை வாசிப்பா, நாட்டியமா, நாடகமா மனுஷா திசை திருப்புவா. அப்படி திருப்பறதுதான் நல்லது.

''ஒவ்வொரு முடிச்சா தாண்டத் தாண்ட எல்லா கலையும் ரொம்ப சுபலமா மனுஷாளுக்கு வரும்.



''நான் சொல்றது புரிஞ்சுதா. இப்போ என் எதிரே மஹா கணபதி மந்திரம் சொல்லிட்டு, பாலா சொல்ல ஆரம்பிங்கோ. எழுந்து நின்னு சொல்லுங்கோ. இந்த தடவை பாம்பு வராத நான் பாத்துக்கறேன். வரக் கூடாதுன்னு அம்பாளை வேண்டிக்கறேன். சொல்ல ஆரம்பிங்கோ.''

ராஜம்மாளுக்கு அருகே சுப்ரமணியமும் மகாகணபதி மந்திரம் சொல்ல ஆரம்பித்தார். அது முடிந்த பிறகு ராஜம்மாளோடேயே பாலா துவங்கினார்.

ராஜம்மாள் உடம்பில் ஓர் அதிர்வு கிளம்புவது தெரிந்தது. ஓர் உதறல் ஓடுவதை தொடாமலேயே உணர முடிந்தது.

பாலா திரிபுர சுந்தரி மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே, சுப்ரமணியம் இறைவியை இறைஞ்சினார்.

ராஜம்மாளுக்கு உடம்பு அதிர்ந்து போயிருந்தது. சுப்ரமணியம் அவளை நோக்கி திரும்பிக் கொண்டார். உள்ளங்கை ஜலமெடுத்து அடிமுதுகில் சுள்ளென்று அடித்தார். அள்ளி அள்ளி ராஜம்மாளின் உச்சந்தலையில் ஊற்றினார்.

லலிதாம்பிகே... இந்தக் குழந்தையைக் காப்பாற்று. இவள் வேகத்தைச் சமனப்படுத்து.

யாரும் இவளை எந்த ஹிம்ஸையும் செய்ய முடியாத படிக்கு இவளைச் சுற்றிக் காவலிடு.

ஓர் உடம்பு உதறலுக்குப் பிறகு பாம்புகள் ஓடிவருவதுதான் வழக்கம். அவள் உடம்பிலிருந்து பாம்பு வெளியேறுவது போல் தோற்றம் ஏற்படுவது வழக்கம்.

இப்போது ஏற்படவில்லை. மாறாய் ஒரு சக்தி திருகித் திருகி நகர்ந்து கொண்டிருந்தது.

சட்டென்று இரண்டு இடங்களை உடைத்துக் கொண்டு நெஞ்சுக்கூட்டை தாக்கியது. அங்கே தங்கியது.

ராஜம்மாள் பரமானந்தமாய் அது நகர்ந்த சுகத்தை அனுபவித்தாள். கண்மூடிக் கிடந்தாள்.

சுப்ரமணியம் அந்த இடத்தை விட்டு நகர, உள்ளே நகர்ந்த சக்தி நெஞ்சுள் அடங்கி உட்கார்ந்தது.

சுப்ரமணியம் ராஜம்மாளுக்கு முதுகுகாட்டி கரை ஏறினார்.

ராஜம்மாள் கூப்பிய கைகளோடே சுப்ரமணியனைப் பின்தொடர்ந்தாள்.

சுப்ரமணியம் திரும்பிப் பார்த்தார். மெல்லச் சிரித்தார்.

''அம்பி... உள்ளே சரியாயிடுத்துடா.''

''சந்தோஷம்.''

''நீ என்ன பண்ணினே...?''

''சரியாகணும்னு பிரார்த்தனை பண்ணினேன்.''

''இல்லை அம்பி, சரியா பண்ண சொல்லிக் கொடுத்துட்டே. ஒரு வழி காட்டிக் கொடுத்துட்டே.''

''அது நான் இல்லே... அம்பாள்.''

''அம்பி... எனக்கு நீதான் அம்பாள். நீ ஆணா இருந்தாலும் அம்பாள் சொரூபமா இருக்கே. அம்பி... நான் உனக்கு நமஸ்காரம் பண்றேன். எனக்கு குரு நீதான். எனக்கு அம்பாள் நீதான்.

''அம்பி... நான் வாக்கு மாறமாட்டேன். நான் பண்ற பாலா, நான் பண்ணின ஸ்ரீவித்தை உபாஸனை, இந்த ஆயுசு முழுக்க பண்ற எல்லா ஜபதபங்களும் உனக்குப் போய் சேரணும்னு தத்தம் செய்யப் போறேன்.

''இதுதான் என் ஸம்பாவனை. இதுதான் என் குரு தட்சணை. எம்மேல நீ காட்டின பிரியத்துக்கு என்னுடைய நன்றிக் கடன்.



''அம்பி... இனிமே இந்த ராஜாம்பாள் கோலமோ, பாட்டோ, ஓவியமோ பண்ணமாட்டா. சமையலோ துணி துவைக்கிறதோ, குழந்தைகள் பாத்துக்கறதோ செய்யமாட்டா. இனி முழுக்க முழுக்க ஸ்ரீவித்தைதான், மந்திர உச்சாடனம் தான்.

''எவன் கிட்டயோ பொண்டாட்டியா இருந்து அடி படறதை விட, பெத்துட்டோமேங்கற காரணத்துக்காக வீம்புக்கு அம்மாவா இருக்கறதை விட, தபஸ்வியா இருக்கலாம்.

''நான் இந்த பைத்தியக்கார வேஷத்தை கலைக்கப் போறதில்லை. இனிமே, எந்த வீட்டுக்குள்ளேயும் போகப் போறதில்லை.

''கோயில், தெரு, தோப்பு, துரவுதான் என் இடம்.

''அம்பாளே நேரே வந்து எனக்கு மந்திர உபதேசம் பண்ணிருக்கா. இனி அதைச் செய்றதவிட வேற வேலை என்ன.''

''அக்கா. சின்ன வயசா இருக்கேளே, இப்ப போய்?''

''சின்ன வயசுதான். நிறைய பட்டாச்சு.''

''குழந்தைங்களைக் கை தூக்கி விட வேண்டாமா?''

''அம்பாள் பார்த்துப்பா. அம்மா சரியில்லேன்னா குழந்தைய ஆளுக்கொருத்தரா பங்கு போட்டுண்டு வளர்த்துருவா. மூணும் பையன்கள். ஒரு கோவணத் துணி போதும். ஒரு வேளை மோர்சாதம் போதும். உயிர் பிழைச்சுக்கும். பவதிபிக்ஷாந்தேஹின்னு போய் நின்னா, வேளாளனோ, க்ஷத்ரியனோ காசு கொடுப்பான். சேரியில இருக்கிறவா பழமோ காயோ கொண்டு வந்து வைப்பா. என் குழந்தைகளை ஊர் காப்பாத்தும். இந்த சமூகம் காப்பாத்தும். நான் இந்த சமூகத்தைக் காப்பாத்துவேன்.

''அம்பாள் எனக்கு கொடுத்திருக்கிற இந்த மந்திரத்தினால், உன் மூலமா அம்பாள் கொடுத்திருக்கிற ஸ்ரீவித்தையினால் இந்த மொத்த சமூகத்தையும் நான் தூக்கி நிறுத்துவேன். நல்லவாளுக்காக நான் ஜெபம் பண்ணுவேன். நல்லது நடக்கணும்னு பண்ணுவேன்.''

''நீங்க அவசரப்படறேளோன்னு தோண்றது, அக்கா.''

''இல்லை அம்பி. நான் திடும்னு இன்னிக்கு கார்த்தால முழிச்சுண்டு பேசலை. பதினாறு வருஷமா கல்யாணமான நாள்லேருந்து எல்லாரையும் உத்து உத்து பார்த்துட்டுப் பேசறேன்.''

''என்ன பார்த்தேள் அக்கா?''

''எல்லா ஜாதியும் கஷ்டப்படறது அம்பி. எல்லா பொம்மனாட்டிகளும் வேதனைப்படறா. குழந்தைகளும் வயசானவாளும் படற கஷ்டம் சொல்லி மாளாது. சமூகம் முழுவதும் ஓர் அரக்கத்தனமிருக்கு. பொய், புனைச் சுருட்டு, லஞ்சம், ஒழுக்கக் கேடு இந்த சோழ தேசம் முழுக்க பரவிக் கிடக்கிறது.

''பாட்டு கூத்துன்னு, காமாந்தகாரமா ஏதோ நடக்கறது. அதைப் பார்த்துட்டு குழந்தைகள் மனசு திரிஞ்சு போறது. புருஷா வெறிபிடிச்சா மாதிரி அலையறா. இதிலே ஜாதிபேதமே யில்லை. காசு காசுன்னு அத்தனை பேரும் பறக்கறா. காசுக்காக பெத்த தாயை மட்டும் தான் விக்கலை. மத்ததெல்லாம் நடக்கறது.

''கோயில்ல கொள்ளை நடக்கறது. சிரிப்பு, அரட்டை கெட்ட வார்த்தை, சன்னதிக்கு குறுக்கே, இடுப்பிலே கையவைச்சு நிக்கற அயோக்கியத்தனம். மூர்த்திகள் மேல மரியாதையில்லாத சுவாமி தலையிலேயே பூ நறுக்கற குருரம். பட்டை சாதத்துக்கு அடிதடி. பொய் கணக்கு. பித்தளை காசு மாலையை சுவாமிக்குப் போட்டுட்டு, தங்கத்தைச் சுருட்டிண்டு போயிடறது. பாத்திரங்கள் விக்கறது. நெல்லைப் பதுக்கறது.



''கோயில் பசுவை வீட்டுக் கொல்லைல கட்டிட்டு, திருடன் ஓட்டிண்டு போயிட்டான்னு பொய் கணக்கு எழுதிடறது. கோயில்ல வேலை செய்றவாளை நாய் மாதிரி நடத்தறது.

''கண்ட இடத்துக்கும் போயிட்டு மடிவிழுப்பு பார்க்காத கோயிலுக்குள்ளே வர்றது.

''இதைவிட மோசம் க்ஷத்ரியனோட வாழ்க்கை.

''யுத்தம் யுத்தம் யுத்தம்னு வருஷத்துக்கு நாலு யுத்தம். யுத்த பயத்தை மறக்கடிக்க கல்யாணம். அந்தக் கல்யாணத்துக்கு தேவையில்லாத ஆடம்பரம். அந்த ஆடம்பரத்தால அண்ணா தம்பிகளுக்குள்ளே சண்டை, மாமன் மைத்துனன்களுக்குள்ளே பொறாமை.

''ஒவ்வொரு ராஜாவுக்கும் பத்து பதினைஞ்சு பொண்டாட்டி. ஒவ்வொருத்திக்கும் முப்பது நாப்பது சொந்தக்காரர்.

''இவளை அவ குறை சொல்லி, அவளை இவ ஏமாத்தி அந்த ராஜா எப்படி நிம்மதியா தூங்க முடியும்.

''அரண்மனை செலவு தாங்காம யுத்தத்துக்குப் போறான். யுத்தத்துக்குன்னு அதிகமா செலவு பண்றான். கூட்டிண்டு போற வீரர்களை நிறைய காசு தர்றேன்னு பொய் சொல்லி ராஜா ஏமாத்தறான்.

''சம்பளமே கொடுக்க மாட்டேங்கறான். வருமானமில்லாத சைன்யம் தானா கொள்ளையடிக்கிறது.

''தேசத்தைக் காப்பாத்த வேண்டிய மறவன், அபலைகளைக் காப்பாற்ற வேண்டிய வீரன், நல்லதுக்கு காவ

விருக்க வேண்டிய க்ஷத்ரியன் திருடன் மாதிரி கொள்ளை யடிச்சு, பொம்மனாட்டிய கெடுக்கறான்னா எத்தனை கெட்டுப் போன தேசமிது.

''வேலியே பயிரை மேயற கதையில்லையா இது. தங்கையை அண்ணன் கற்பழிக்கற கொடுமையில்லையா இது?

''ஏன் இப்படி நடக்கறதுன்னு கேட்டா கலின்னு சொல்றா, கலிகாலம்னு சொல்றா.

''வைஸ்யர்கள் ஏமாத்துறதிலே உச்சகட்டம் போயாச்சு.

''ஒன்னுக்குப் பத்துவிலை. கடனுக்கு முதல்ல பொருளைக் கொடுத்துட்டு, ஆசைகாட்டி வித்துட்டு அப்புறம் வட்டி போட்டு காசு கேக்கறது, கொடுக்காட்டி உரக்க கத்தறது.

''அம்பி. இதெல்லாம் உன் கண்ணுல படறதா...

''வைஸ்ய பொம்மனாட்டிகள் நிலைமை ரொம்ப மோசம்.

''ஒரு வியாபாரி ஊருக்குப் போனா திரும்பி வர ஒரு வருஷமாகிறது. ஒரு மாசம் வீட்டோட இருக்கான். மறுபடியும் வெளியூர் போயிடறான். அந்தப் பெண்கள் நிலை கொள்ளாம தவிக்கறா. இருக்கானா செத்தானான்னு தெரியாத பயந்து பயந்து பூஜை பண்றா.

''அம்பி, எனக்கு ஒன்னு தோணறது. நான்காவது வருணம் தான் இங்கே ரொம்ப சந்தோஷமா இருக்கு.

''ஆம்படையான் அடிமையா இருக்கான்...

''வெட்ட வெளியில, பொட்ட வெயில்ல வேலை செய்யறான். மாடு மாதிரி உழைக்கிறான். பொம்மனாட்டி களுக்கு தாங்கலை... புருஷனுக்குத் துணையா அவளும் வெய்யில்ல இறங்கிடறா. இறங்கினாத்தான் முடியும்.



''இருட்டின பிறகு நெருப்பு மூட்டி, கஞ்சியோ கூழோ, கள்ளோ கஞ்சாவோ, மீனோ, மாமிசமோ, பாதி பாதியா பகிர்ந்துண்டு பாட்டு பாடிண்டு, ஆட்டம் ஆடிண்டு, சேரிப்பக்கத்திலேருந்து வர்ற சத்தத்தை ரசிச்சிருக்கயோ நீ...

''தன் வேலைக்கு தன்கூட தன் பொண்டாட்டி வந்துட்டான்னு ஆம்பளைக்கு ரொம்ப சந்தோஷம். தான் புருஷனுக்கு உதவி பண்றோம்னு பொம்மனாட்டிக்கு பெரிய கர்வம்.

''அவன் குட்டி குட்டின்னு கொஞ்சறதும், அவ மச்சான் மச்சான்னு இழையறதும்... பார்க்க எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா.

''சேரி நாத்தம்னு சொல்றாளே... அது பொய். இவா மனசுதான் ரொம்ப நாத்தம்.

''அதுகள் வாய்விட்டு சிரிக்கறதுகள். மனசுவிட்டு பாடறதுகள். நெருப்பைச் சுத்தி இடுப்பைக் கோத்துண்டு, ஆம்பளையும் பொம்பளையுமா நாப்பது பேர் நாட்டிய மாடறதைப் பாத்திருக்கயா... நம்ம ஜாதியில் இப்படி ஆடுவாளா?

''சரி. நீ ஆட வேண்டாம். பாடிருக்கியா. குசு குசு குசுன்னு பேச்சு. கேலி. ஏன் இந்த ஜாதி இப்படி மட்டமா போச்சு.

''எனக்கு இனிமே ஜாதி கிடையாது சுப்ரமணி. நான் இனிமே பிராமணத்தியில்லை. நான் இனிமே அம்மா யில்லை. அகமுடையாள் இல்லை. பிச்சி. பைத்தியக்காரி.

''ஒரு பதினைஞ்சு நால [illegible]ணாத போயிடுவேன். சுப்ரமணியா, எங்கேயா[illegible] [illegible]ஞ்சுண்டு குகையிலயோ காட்டுலயோ மலையுச்சியிலேயோ, மரப்பொந்திலேயோ

உக்காந்துண்டு பாலா சொல்லப் போறேன். எனக்கு சோறு போட வேண்டியது அவ பொறுப்பு.

''நீ சொன்ன வித்தை எனக்கு புரிஞ்சு போச்சு. இதை நான் எப்பவோ கேட்டிருக்கேன். எந்த ஜென்மத்திலேயோ பண்ணியிருக்கேன். இது விட்ட குறை தொட்ட குறை. இப்போ என்னை கட்டிப் பிடிச்சிண்டுடுத்து. இனி விடாது. நானும் இதை விடப்போறதில்லை.

''நான் வர்றேன் சுப்ரமணியா. நீ வயசுல சின்னவனா இருந்தாலும் என் குரு. உன்னை நமஸ்காரம் பண்றேன். நீ எனக்கு அம்பாள். தயவு செய்து ஆசிர்வாதம் பண்ணு. நான் இந்த வித்தைய பிடிச்சிண்டு கரையேறணும்னு ஆசிர்வாதம் பண்ணு.''

அவள் குளக்கரையில் உடலை மடித்து சுப்ரமணியத்தின் காலில் விழுந்து வணங்கினாள்.

சுப்ரமணியம் வெட்கத்தில் பின்னடைய, அவள் நின்ற நிலத்து மண்ணை நெற்றியில் இட்டுக் கொண்டாள். உச்சியில் வைத்துக் கொண்டாள். ஒரு துளி வாயில் போட்டுக் கொண்டாள்.

சுப்ரமணியம் உறுத்து தன்னையே அவளாகப் பார்த்தார். அவளைத் தானாக நினைத்துக் கொண்டார்.

அவளுக்கும் தனக்கும் எந்த வித்தியாசமும் இல்லையென்பது சர்வ நிச்சயமாய் தெரிந்து போயிற்று.

''ராஜம்...'' அவளை அன்போடு பெயர் சொல்லி அழைத்தார்.

''நீ பேசவேயில்லை. இத்தனை நேரம் அம்பாள் தான் பேசினாள். உன்மூலம் அவள் தன்னுடைய வேலையை ஆரம்பித்திருக்கிறாள்.



''நான் குரு, நீ சிஷ்யை என்ற பிரிவுகூட இங்கில்லை. நீயும் நானும் அவளின் கருவிகள். இனி நமக்கென்று எதுவுமில்லை. இனி எல்லாம் அவள் ஆட்டம்.

''நீ சொன்னது அனைத்தும் நானும் யோசித்திருக்கிறேன். நானும் வேதனைப்பட்டிருக்கிறேன்.

''ராஜம்... நீ போய் வா. உனக்கு ஓர் ஆபத்தும் வராது. உன் தபஸுக்கு எந்த பங்கமும் வராது.

''உனக்காக நான் பலா, அதிபலா என்கிற மந்திரத்தை காலையும் மாலையும் சொல்லப் போகிறேன். பசியோ, தாகமோ, தூக்கமோ உன்னை வாட்டாது.

''ராஜம்... சௌக்யமாய் போய் வா. உன்னுள் அம்பாள் இருக்கிறாள், கவலைப்படாமல் போய் வா.''

ராஜம் சுப்ரமண்யத்தை பிரதட்சணமாய் சுற்றிக் கொண்டு, அந்த ஊரைவிட்டு நகர்ந்தாள்.

அவள் மறையும் வரை பார்த்துவிட்டு சுப்ரமணியம் வீடு திரும்பினார்.

## 2

முகவாயை முழங்கையில் முட்டுக் கொடுத்துக் கொண்டு, சுப்ரமணியத்தின் மனைவி அவர் சொன்ன விவரங்களை வருத்தத்தோடு கேட்டுக் கொண்டாள்.

அவள் கண்களில் ஜலம் கட்டி ததும்பி நின்று, மெல்லிய கோடாய் கன்னமிறங்கியது.

''என்ன அழகு, எவ்வளவு கம்பீரம், முப்பத்தி மூணு வயசுக்கு வேலை செஞ்சு, வேலை செஞ்சு கடைசல் பிடிச்சா மாதிரியான தேகம்.

''ஒரு நல்ல புருஷன் அவளுக்கு கிடைச்சிருக்கப் படாதா... மேலோட்டமா கொஞ்சினாக்கூடப் போறும். அக்காவுக்கு ரொம்ப சந்தோஷமாயிடும். ஒரு கை மல்லிகைப்பூ வாங்கிண்டு வந்தாப் போறும். தானம் கிடைக்கற காய்கறியை வாசல்ல கூப்ட்டு, இந்தா வைச்சுக்கோ அப்படின்னு கொடுத்தா போதும். வீட்டுக்குள்ளே ஏகப்பட்ட பிரியம் காட்டுவா.

''அவ ஆம்படையானுக்கு அனுபவிக்கத் தெரியலை. அயோக்கியனுக்கு எந்த அனுபவமும் இருக்காது.

''அக்கா செஞ்சது சரி. தெளிஞ்சு போச்சுன்னு வீட்ல போய் நின்னா தலையில வெச்சு கொண்டாடுவாளா என்ன? அதுவும் அந்த முட்டாள் பிராமணன் சுடுசொல் சொல்லாத இருப்பானா.

''குழந்தைகளை யாராவது சொந்தக்காரர் வளர்க்கறாளான்னு பாருங்கோ. சத்தம் போட்டு விசாரிக்க வேண்டாம். வெறுமமே பேச்சு வாக்குல தெரிஞ்சுக்குவோம்.

''அப்படி அவ சொந்தக்காரா யாரும் குழந்தைகளை தொடலேன்னா, நாம அள்ளிண்டிடுவோம்.

''தஞ்சாவூர்லேயும், கும்பகோணத்திலேயும் வேதபாடசாலையில் காசு கட்டி சேர்த்து, பிழைச்சுக்கோடான்னு விட்ருவோம்.

''இடுப்பிலே எப்பவும் அரைப்பொன், காப்பொன்னுன்னு வைச்சுக்கோங்கோ. அக்காவ எங்கே பார்த்தாலும் டக்குன்னு துணியோ, மருந்தோ, சாதமோ வாங்கித் தந்துடலாம். அக்கா காசுன்னு அது இடுப்பிலே அப்படியே இருக்கட்டும். இந்த ஊர்ல ஒரு பொம்மனாட்டி முழிச்சுண்டுட்டா. பூமியில் உள்ள எல்லா பொம்மனாட்டியும் க்ஷேமமா இருக்கணும்னு ஒருத்தி தலைவிரிச்சு கிளம்பிட்டா.



''அவளை யாரும் தடுக்க முடியாது. பொம்மனாட்டில துறவி கிடையாது. ஏன்னா, அவளுக்குத் துறந்து போகத் தெரியாது. ஆனா பொம்மனாட்டி உதறிட்டா செத்தாலும் கிட்ட யாரையும் சேக்கமாட்டா. ஒரு ஈ காக்காவ அண்ட விடமாட்டா.

''நம்ம ராஜமக்கா தகதகன்னு வரப்போறா பாருங்களேன்.

''நானும் வேண்டிக்கப் போறேன். அக்காவை காத்துக் கருப்போ, கெட்ட மனுஷாளோ, நாய் நரியோ, பூச்சி பொட்டோ, ஈ கொசுவோ நெருங்கவே படாதுன்னு தினம் நூத்திஎட்டு தடவை துளசி சுத்தப்போறேன்.

''உக்காந்து உக்காந்து என் உடம்பு தடிச்சி போயிண்டிருக்கு. சுத்தினா எனக்கும் நல்லது. அக்காவுக்கும் க்ஷேமம்.

''அப்புறம்... மறுபடி இன்னொருமுறை சொல்லுங்களேன். அக்கா முகம் எப்படி இருந்தது?''

மனைவி கேட்க, சுப்ரமணியம் மறுபடியும் விளக்கினார்.

நல்லவர்களைப் பற்றி, எத்தனை முறை வேண்டுமானாலும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். இதற்குப் பெயர்தான் ஸத்ஸங்கம். ஸாதுக்களுடைய சங்கம். நல்லவர்களின் தொடர்பு.

வல்லவர்களின் தொடர்பு ஆத்திரத்தையும், அசூயையும் கொடுக்கும். கர்வத்தையூட்டும். நாமும் பெரிதாய் செய்ய வேண்டுமென்று மனம் கோட்டை கட்டும். குறுக்கு வழிகள் தேடும். நைச்சியம் பேசும். நபும்ஸகம் செய்யும். புத்தி உஷ்ணமாகித் தவிக்கும்.

ஆனால், நல்லவர்களின் நட்பு மனதைக் குளுமை யாக்கும். அவர்களைப் பற்றியே ஆழ்ந்து நினைக்கத் தூண்டும்.

சகோதரியாய் வரித்த ராஜம்மாளை நினைத்துக் கொண்டே, கோயிலுக்குப் போனார்.

''வாங்கோ. உங்களுக்குத்தான் காத்துண்டிருந்தோம்.'' ஒரு வயசான குருக்கள் கைகூப்பினார்.

அக்கம்பக்கம் தூண்களுக்குப் பின்னே நின்று கொண்டிருந்தவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அவர்கள் சூழ்ந்து கொள்வதைப் பார்த்தால் சுப்ரமணியத்திற்காக வெகுநேரம் காத்திருந்தது போல் தெரிந்தது.

''சுப்ரமணியம். சௌக்கியமா இருக்கயா?'' யாரோ ஒருவர் அன்பொழுக விசாரித்தார். அந்த அன்பில் பொய் தெரிந்தது. கள்ளமிருநதது.

''சுப்ரமணியத்தோட சௌக்கியத்துக்கென்ன... வசதி யான அப்பா, வளமான அத்திம்பேர், நம்ம திருக்கடவூர் கோயில்ல மாசம் பதினைஞ்சு மரக்காலுக்கு பஞ்சாங்கப் படலம் உத்யோகம்.''

''கார்த்தால சன்னதி திறக்கும்போது, சித்தநேரம் நின்னு இது வருஷம், இது மாதம், இன்ன நேரம், இது திதி, இன்ன நட்சத்திரம் வளர்பிறையா தேய்பிறையா... இந்த சோழ தேசத்துல, எந்தக் கோயில்ல என்ன விசேஷம் அப்படின்னு உரக்கச் சொல்லிட்டு, துண்டை உதறி தோள்ல போட்டுண்டு பட்டை சாதத்தோட ஆத்துக்குப் போயிடலாம்.''

''கண்ணுக்கு குளுமையா ஆம்படையா. காசு பணத்தோட அக்கா அத்திம்பேர். எட்டுக்கட்டு வீடு. ஏழுவேலி நிலம். சரபோஜி ஆட்சியில பிராமணாளுக்கு



என்ன குறைச்சல். கோட்டை வாசல்ல நின்னு ருத்ரம் சொன்னா ரெண்டு கழஞ்சு. சோழி உருட்டி ஜோஸியம் சொன்னா அஞ்சு கழஞ்சு.''

''குரு உச்சம், புதன் நீசம்னு ஏதாவது சொல்லி கறந்துண்டு வந்துடலாம்.''

''நாமெல்லாம் வெறும் தட்டேந்தி குருக்கள். தட்டுல தட்சணை விழுந்தாதான் மரியாதை.''

''வர்ற ஜனங்கள் நமக்கு மேலே எமகாதகன்கள். கற்பூரத்தை ஒத்திண்டு, கொடுத்த விபூதியை நெத்தியில பூசிண்டு அப்படியே கண்மூடி சிவனோட ஐக்கிய மாயிடுவா. நம்மள ஏறெடுத்தே பார்க்க மாட்டா.''

''காசு போடு, காசு போடுன்னு கெஞ்சவா முடியும். நீ அடுத்த தடவை சன்னதிக்கு வா. அப்போ அலைய வைக்கிறேன்னு மனசுல கறுவிக்கத்தான் முடியும்.''

''கர்ப்பக்கிரகத்துச் சூடும், தலையில் விழற வௌவா விட்டையும்தான் கண்ட பலன்.''

''என்ன வேணும்?'' சுப்ரமணியம் அமரிக்கையான குரலில் கேட்டார்.

''நம்ம நடராஜனோட சம்சாரத்தைப் பார்த்தேளா... உங்களுக்கு ஏதாவது தெரியுமா...?''

''யார் நடராஜன்?''

''நான்தான்.''

முகம் முழுக்க வெள்ளை ரோமமும், சிவந்த கண்களும், கட்டுமஸ்தான உடம்புமாய் ஒரு பிராமணன் முன்னேறி வந்து இடுப்பில் கை வைத்து நின்றார்.

உடம்பைச் சுற்றி நீளமான சிகப்பு சால்வை போர்த்தி யிருந்தது. சால்வையின் ஒரு பகுதி பின்னால் தொங்கிக் கொண்டிருந்தது.

இப்பொழுது நிறைய அந்தணர்கள் சரபோஜி போல் நடிக்க ஆரம்பிக்கிறார்கள். மிக அற்பத்தனமாய் ஓர் அரசனைப் போல், தோடாவும் தொங்கட்டானும், பொன் ருத்திராட்சமும், வைர மோதிரமுமாய் மினுக்க ஆரம்பிக்கிறார்கள்.

சரபோஜி மகாராஜாவைப் போல் நடப்பதும் நிற்பதும் திரும்புவதும் செய்கிறார்கள். அடித்தொண்டையில் பேசுகிறார்கள்.

குடிப்பவன் குரல்தான் கனமாக இருக்கும். ரகசியம் பேசுபவனுக்குத்தான் அடிக்குரல் அவசியம். மனம் வெள்ளையாய் இருப்பவனுக்கு குரலும் மென்மையாய் இருக்கும்.

வேதம் சொல்லும் பிராமணனுக்கு குரல் வெங்கலமாயிருத்தல் வேண்டும். கண் ஒளியாய் இருத்தல் வேண்டும்.

இந்த பிராமணனிடம் சாத்வீக புத்திக்குப் பதிலாய், ஆத்திரமிக்க ரஜோ புத்தி தெரிகிறது. பகலில் தூங்கும் தாமஸ புத்தி தெரிகிறது.

தமஸ் உள்ளவனிடம் காமம் அதிகமாக இருக்கும். காமம் அதிகமாக உள்ளவனிடம் தந்திரம் அதிகமாக இருக்கும். தந்திரம் உள்ளவனுக்கு சகமனிதர்கள்மீது நம்பிக்கை இருக்காது.

எதிரேயிருப்பவன் அவநம்பிக்கை மிகுந்த பிராமணன். இவன் உடம்பிலிருந்து கருநீலமும், சிவப்புமான நிறங்கள் வெளியே வருகின்றன. இந்த வர்ணங்கள் இவன் குணத்தைக் காட்டுகின்றன. இவன் கடுங் கோபத்துடனும், மிகுந்த சுயநலத்துடனும் எண்ணங்களை அலைய விட்டுக் கொண்டிருக்கிறான்.

தலைக்கு மேலே சிகப்பு அதிகம் போகிறது. மிகுந்த கர்வத்தோடு வேறு இருக்கிறான்.



துக்கமும் கோபமும் கொண்டவர்கள் மிகவும் பொல்லாதவர்கள். அவர்கள் எதையும் செய்யத் துணிந்தவர்கள். இவர்களிடமிருந்து விலகியிருப்பதே நலம்.

''நான் நடராஜன்னு தெரியாதா உனக்கு. இந்த நடராஜன் யாருன்னு தெரியாதா உனக்கு?''

''நீங்க யாருன்னு தெரியும். ஆனா, நடராஜன்னு தெரியாது.''

''என் பெண்டாட்டி ராஜம் எங்கே?''

சுப்ரமணியம் எதையோ ஒளித்து வைத்திருப்பது போலவும், அசிங்கமாய் அந்த உரையாடல் அமைந்திருந்தது.

சுப்ரமணியம் லேசாக உஷ்ணமானார்.

''உங்க மனைவி யாருன்னு எனக்குத் தெரியாது. அவர்களை நீங்க எங்கிட்ட விசாரிக்கறது நியாயமுமில்லை.''

''குளத்தங்கரையில பேசிண்டிருந்தியாமேடா... அவ என் பொண்டாட்டின்னு உனக்குத் தெரியாது.''

''நீங்க அநாகரீகமா பேசறேள்.''

''கேட்ட கேள்விக்கு பதில். நீ என் பொண்டாட்டியோட பேசிண்டிருந்தியா இல்லையா?''

''உங்க பொண்டாட்டி யாருன்னு எனக்கு தெரியாது.''

''நீ பேசிண்டிருந்தியே... ராஜம். அது அவர் பொண்டாட்டிதான்.''

''ரொம்ப சந்தோஷம், இப்போ தெரிஞ்சு போச்சு.''

''என்ன கேலியா... எங்கிட்ட விளையாடாதே. நான் நெருப்பு.''

''தெரியறதே... ரெண்டு கண்ணும் சிகப்பா மின்னறதே...''

சாதாரணமாகவும் இல்லாமல் கேலியாகவும் இல்லாமல் சுப்ரமணியம் ரெண்டும் கெட்டானாய் பேசினார்.

''என் கண்ணுல மட்டுமில்லடா. என் உள்ளங் கையிலயும் அக்னி இருக்கு. கையத் தூக்கி மூஞ்சிக்கு நேர வைச்சேன். பஸ்பமாய்டுவே...''

''அக்னி எல்லாத்தையும் பஸ்பம் பண்ண முடியுமா. எதை பண்ண முடியுமோ அதைத்தான் பண்ண முடியும். குப்பையை எரிச்சுட்டு, அக்னி மாரைத் தட்டிக்கலாமா... உங்க பிரச்சனை என்ன சொல்லுங்கோ...?''

''எம் பொண்டாட்டிய காணோம். ஓடிப் போயிட்டான்னு எல்லாரும் சொல்றா.''

''பொண்டாட்டி ஓடிப்போயிட்டான்னு புருஷன் தான் சொல்லணும். எல்லாரும் சொன்னா எப்படி...?''

''ராஜம் எங்கே?''

''எனக்குத் தெரியாது.''

''அவளை என்ன பண்ணினே?''

கேள்வியின் ஆபாசம் தாங்காமல் சுப்ரமணியம் கண்களை மூடிக்கொண்டார்.

''நான் பிராமணன். எல்லாருக்கும் எப்பவும் நல்லதே சொல்லணும்னு நினைக்கறவன். எந்த உயிர்க்கும் மறந்து போயும் எந்தக் கெடுதலும் பண்ணாதவன். எல்லாரும் நல்லாருக்கணும்னு நினைக்கறவன்.''

''இந்த வசனமெல்லாம் எங்கியாவது குடியானவன் கிட்டே வைச்சுக்கோ, எங்கிட்டே வேண்டாம். அவ உங்கூட குளக்கரையில பேசிண்டிருந்ததை, ஊர் முழுக்க பாத்திருக்கு.''

''மனசு சரியில்லாத ஒரு பொம்மனாட்டியோட இன்னிக்கு கார்த்தால பேசி, அவா சௌக்கியமாகணும்னு



பிரார்த்தனை பண்ணிண்டேன். அவா உங்க சகதர் மினின்னு தெரியாது. தெரியற சந்தர்ப்பம் வரலை.

''இந்த குருக்களோட சகதர்மினி எனக்குத் தெரியும். அவா ரெண்டு பேரும் என் கல்யாணத்துக்கு வந்திருக்கா.

''இந்த மடப்பள்ளி பிராமணரோட சகதர்மினி எனக்குத் தெரியும். எங்க ஆத்து விசேஷத்துக்கு ரெண்டு பேரும் சமைக்க வந்திருக்கா.

''இவர் மனைவிய இவரோட கோயில்ல பாத்திருக் கேன். இவர் அறிமுகப்படுத்தி வைச்சார். நாள் பார்க்க எங்க ஆத்துக்கு வந்திருக்கார்.

''ஆனா, உங்களை, உங்க மனைவியோட நான் பார்த்ததேயில்லை.

''நீங்க ஏதோ மந்திரவித்தை பண்றேள்னு சொல்லக் கேள்வி. ஆனா, நீங்க சொன்னதேயில்லை.''

''நான் பண்றது ஸ்ரீவித்தை.'' அவர் நெஞ்சில் அறைந்து கொண்டார்.

''அதனால என்ன... அதை இத்தனை உரக்கச் சொல்வானேன்.''

''ஸ்ரீவித்தைக்காரனை பகைச்சுக்காதே. அவன் பொசுக்கிடுவான்.''

''நான் இருக்கறதும், இல்லாத போறதும் பகவான் கிட்ட இருக்கு. இந்த அல்பத்தனமான கூச்சலுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்.''

''அடேய்... என்ன நினைச்சிண்டிருக்கே என்னைப் பத்தி...''

அவர் கூவ ஆரம்பித்தார். மற்றவர்கள் அவரை சமாதானப்படுத்தினார்கள்.

அங்கு கூட்டம் இன்னும் அதிகம் சேர்ந்தது.

''பொண்டாட்டியைக் காணோம், கொஞ்சம் படபடன்னு ஆயிட்டார். நீ தப்பா நினைச்சுக்காதே.''

கிள்ளி விட்டவர்கள், சுப்ரமணியத்திடம் தொட்டி லாட்டினார்கள்.

''அவ என்ன சொன்னா, எங்கே போனா, ஏதாவது தெரியுமா...?''

''தன் மனக்குறையைச் சொல்லி கொஞ்ச நேரம் அழுதா, எங்கே போறேன்னு சொல்லலை. தெரியாது.''

''நேரடியா எதுவும் சொல்லலனாலும் சூட்சமமா ஏதாவது சொன்னாளா... தேடறதுக்காகக் கேட்கறோம்.''

''சூட்சமமா, ரகசியமா எதுவும் பேசலை. நேரடியான பேச்சு. ஒளிவுமறைவில்லாத பேச்சு.''

''உனக்கு விழுந்து நமஸ்காரம் பண்ணினாளாமே... யாரோ சொன்னா.''

''வேதம் படிச்ச பிராமணனை யார் வேணா, எங்கே வேணா விழுந்து நமஸ்காரம் பண்ணலாம்.''

''என்னடா பெரிய வேதவித்தை, நீ என் ஸ்ரீவித்தைக்கு முன்னாடி தூசு. அந்த மொட்டச்சி எங்கே போனா?''

சுப்ரமணியம் மறுபடியும் வேதனைப்பட்டார்.

பிராமண ஜாதியில் மிகக் கேவலமான வார்த்தை அது. பெண்களின் நெஞ்சைக் கிழித்து கோரப்படுத்துகிற சொல்.

மறுபடியும் சுப்ரமணியத்திற்கு மனம் வலித்தது.

''எனக்குத் தெரிஞ்ச அந்த பொம்மனாட்டி ஊரை விட்டுப் போற வரைக்கும் தலையில முடி இருந்தது. ஒரு



வேளை இனிமே நீங்க சொல்ற மாதிரி ஆவாளோ என்னவோ...''

''நான் சாகணும்னு சொல்றயா...'' அவர் குதித்தார்.

''நான் சொல்லல. நீங்கதானே சொன்னேள். உங்க மனைவி தலை முடியை எடுக்கணும்னு ஆசைப்பட்டா, நீங்க செத்தாதான் முடியும்.''

''நீ அதிகப்பிரசங்கின்னு மத்தவா சொன்னது சரியா போச்சு, ஆனா எங்கிட்டே மோதாதே.''

''எனக்கு பார்வைல நல்ல தெளிவு இருக்கு. எங்கேயும் மோதமாட்டேன்.''

''நீ சும்மா இரும் ஓய்... சுப்ரமணியம் கொஞ்சம் உதவி பண்ணேன், அவா எங்கே போயிருக்கானு சொல்லேன்.''

''தெரியாது.''

''மறைக்கறீர்.''

''நான் பொய் சொல்ல மாட்டேன்.''

''அவன்தான் தெரியாதுங்கறானே ஓய்...''

''அப்போது எதுக்குடா அவ நமஸ்காரம் பண்ணினா?''

''மனசு தெளிஞ்சிடுத்து. உள்ளே ஹிம்ஸை பண்ணிண்டிருந்தது நகர்ந்துடுத்து. நல்ல மாதிரியாயிட்டா. அதனால அவா நமஸ்காரம் பண்ணினா.''

''நீங்க கொணப்படுத்திட்டேளாக்கும்.'' அவர் காற்றைக் கையில் துழாவிக் காட்டி கொச்சையாய் பேசினார்.

''அம்பாள் செஞ்சா.''

''நீங்க அம்பாள் ஸ்வரூபமாக்கும்.'' மறுபடியும் துழாவினார்.

''எல்லாம் தேவி ஸ்வரூபம்.''

''என்னைப் பார்த்தா எப்படி தெரியறது.'' முஷ்டியை மடக்கிக் கொண்டு முகத்திற்கு நேரே ஆட்டினார்.

முகம் கோபத்தில் கோணிக் கொண்டிருந்தது.

''உங்க தலைக்கு மேல தேவியோட பாதம் தெரியறது.''

''அப்படி சொல்லுடான்னானாம், கண்டுபிடிச்சுட்டியே... நான் ஸ்ரீவித்தைக்காரன்னு.''

மற்றவர்களை கம்பீரமாய் சுற்றிப் பார்த்தார்.

''உங்க முகம் எருமை முகம் மாதிரி தெரியறது. அம்பாள் காலின் கீழே எருமைதானே இருக்கு. மகிஷாசுரன் முகம் தானே அது.''

குபீரென்று சுற்றியுள்ளவர்கள் இந்த மடக்கலுக்கு வாய்விட்டு சிரித்தார்கள். மடப்பள்ளி ஆள் சற்று அதிகமாகவே சிரித்தார்.

''அடேய் சுப்ரமணியம்...'' அவர் பாய, நாலு பேர் அழுத்திக் கொண்டார்கள்.

'என்னையா எருமைங்கறே... நீ மிதிபடப் போறடா. நீ அடிபடப் போறே. உன் நிலைமை கந்தரகோலமாகப் போறது. உன் தலைக்கு கத்தி வரப் போறது. ரொம்ப சீக்கிரமே இது நடக்கப் போறது. இது சத்தியம்...''

சுப்ரமணியம் அவரைப் புறக்கணித்து கோயில் கருவறை நோக்கி மௌனமாய் நடந்து போனார். அமிர்தகடேஸ்வரர் முன் நின்று தன் உடன் பிறவா சகோதரி ராஜத்தைக் காக்கும்படி வேண்டினார்.

கோயில் வாசலில் சிறுமுரசு அறைவது கேட்டது.

பெருமுரசு அறைந்தால் யுத்தம். சிறுமுரசு அறைந்தால் செய்தி. ஏதோ அரசு செய்தி வந்திருக்கிறது.



எல்லோரும் வாசலுக்குப் போனார்கள். கோயிலை வலமாக சுற்றிக் கொண்டு சுப்ரமணியமும் போனார்.

அவர் வந்ததும் முரசறைவது நிறுத்தப்பட்டது.

சரபோஜி மன்னர் தஞ்சையில் பிள்ளைப் பேறு வேண்டி புத்ரகாமேஷ்டி யாகம் செய்யப் போவதாகவும், நாலுவேத அந்தணர்களும் வந்து நடத்திக் கொடுக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு தக்க உணவும் தகுந்த சன்மானமும் கொடுக்கப்படும் என்றும் முரசறிவிக்கப் பட்டது.

வைஸ்யர்கள் நெல், பருப்பு போன்ற தானிய மூட்டைகளுடன் தஞ்சைக்கு விரைவில் வரவேண்டு மென்றும், அவைகளுக்கு கூடுதல் விலையும், போக்கு வரத்துப் படியும், மாடு கன்றுகள் வேலையாட்களுக்கு அரசாங்கத்தால் தங்குமிடம் ஏற்பாடு செய்யப்படு மென்றும் பறையறிவிக்கப்பட்டது.

மறவர்கள் குடும்பத்தோடு வந்து தனியிடத்தில் தங்கலாமென்றும், பந்தோபஸ்து வேலைகள் தரப்படு மென்றும், கிராமங்களுக்கு தக்க காவல் வைத்து விட்டு வர வேண்டுமென்றும் சொல்லப்பட்டது.

தச்சர், கருமார், வண்ணார், நகை செய்வோர், ஆடுவோர், பாடுவோர், பாணர், தேவரடியார் ஆகிய எல்லா தொழில் செய்பவர்களும் அங்கு வந்து, வரும் ஜனத்திற்கு தொண்டு செய்து, வேண்டுமென்பதை சம்பாதித்துக் கொள்ளலாமென்றும், அதற்கெல்லாம் வரியில்லை யென்றும், இது தவிர வந்தவர் எல்லாருக்கும் துணிமணி போன்ற ராஜ சன்மானங்கள் உண்டு என்றும் கூறப்பட்டது.

தேதி, நட்சத்திரம், கிழமை, நாழிகை எல்லாம் கூறப்பட்டன.

மனதில் சுப்ரமணியம் கணக்கு போட்டு பார்த்ததில் எல்லாம் தவறாக இருந்தது. கருப்பு நேரமாக இருந்தது. சோபிக்காத நேரமாக இருந்தது.

அரசாங்கத்தில் யாரோ தவறான ஆள் அமர்ந்து, தவறான வழியை அரசனுக்கு காட்டிக் கொண்டிருக்கிறான். ஆனால் இதை எடுத்துச் சொன்னால் இன்னும் தவறாகத் தான் முடியும்.

தவறான நேரத்தில் பூஜை செய்யக்கூடாது என்று அரசனுக்கு நிச்சயம் எடுத்துச் சொல்ல வேண்டும். மீறி பூஜை செய்தால் பூஜை செய்பவருக்கும் செய்விப்ப வருக்கும் கெடுதல் ஏற்படும்.

வெங்கடேச தீக்ஷிதர் தலைமையில் அக்ரஹாரத்தில் அன்றிரவு பிராமண சபை கூடுமென்றே சொல்லப்பட்டது.

''எனக்கு பூஜை இருக்கு. நான் சபைக்கு வர முடியாது.'' நடராஜன் காலை உதறிக்கொண்டு, நாலுபேர் பின்தொடர, வெளியே போனார்.

அவரைப் பார்க்கப் பார்க்க, சுப்ரமணியத்திற்கு ஆச்சரியமாக இருந்தது.

கர்வம் கொண்டவன் எல்லோரையும் தூஷிப்பான். எல்லா நேரமும் தூஷிப்பான். கர்வம் கொண்டவன் கடவுள் நிந்தனை செய்யவும் தயங்கமாட்டார்.

இந்த நடராஜன் மிக மோசமாய் என்றோ ஒரு நாள் கடவுள் நிந்தனை செய்யப் போகிறானென்று அவருக்குத் தோன்றியது.

அப்பா தெருவில் எதிர்பட்டார்.

''என்ன சுப்ரமணியம். தஞ்சாவூர் போகப் போறயா...''

''நீங்க என்ன சொல்றேளோ அப்படி.''



''போயிட்டு வரலாம், வாயேன்.''

''நீங்களும் வர்றேளா?''

''நீ நான், அம்மா, உன் பொண்டாட்டி எல்லாருமா வண்டி கட்டிண்டு போயிட்டு வரலாம் வாயேன்.''

அப்பா பேசியதும் சுப்ரமணியத்தின் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. அன்று மனம் சந்தித்த எல்லா விஷயங்களையும் உதறி, இன்னொரு அனுபவத்திற்கு மனம் ஏங்கத் துவங்கியது.

கல்யாணமான இரவு மனைவிக்கு எதிரே உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில்...

''உனக்கு எந்த ஊர் போகணும்னு ஆசை?'' எனக் கேட்டபோது, சட்டென்று அவர் மனைவி உத்திர காசி என்று சொன்னாள்.

''அடேயப்பா. வடக்கே அவ்ளோ தூரம் போகணும்னா ஆசைப்படறே. காசி எவ்ளோ தூரம் இருக்குன்னு தெரியுமா. காடு மலை வழியா மூன்று மாத பிரயாணம்.''

''ஆமாம். கேள்விப்பட்டிருக்கேன். உடம்பிலே வலு இருக்கறப்பவே போயிட்டு வந்துடணும். எனக்கு காசி பார்க்கணும்னு ரொம்ப ஆசை. கங்கைல குளிக்கணும்னு ரொம்ப ஆசை. ஆனா...''

''என்ன ஆனா?'' சுப்ரமணியம் கேட்டார்.

''அதுக்கு முன்னாடி சோழ தேசத்திலே இருக்கற எல்லா கோயிலும் பார்க்கணும். ஆதிசங்கரர் மூகாம்பிகைன்னு ஒரு அம்பாளை சொல்றாரே... அது காவிரி ஆரம்பிக்கற இடத்துக்கிட்ட இருக்காம். அங்கேயும் போயிட்டு வந்துடணும்.''

''அடேயப்பா. ரொம்ப பேராசையா இருக்கே.''

''நான் ஆசைப்பட்டா அது பலிக்கும். நாம நிச்சயமா காசிக்குப் போறோம்.''

அப்படி ஆசைப்பட்டவளுக்கு இந்த தஞ்சாவூர் வாய்ப்பு வெல்லக்கட்டிபோல.

''அப்பா, நீங்க அம்மாகிட்டயும், அவகிட்டயும் சொல்லிட்டேளா.''

''இன்னுமில்லை. நீ போய் சொல்லு. நான் வண்டி ஓட்ட ஆள் பாத்துண்டு வர்றேன்.''

''அப்பா ஆனந்தமங்கலத்தில மாடசாமின்னு ஒரு வேளாளன் இருக்கான். என் வயசுதான் இருக்கும். ரொம்ப வலுவானவன். ரொம்ப மரியாதையானவன். தெய்வ விசுவாசி. அவனைக் கூப்பிடுங்களேன்.''

''கிராம அதிகாரி பிள்ளையில்லையோ...''

''அப்படித்தான் சொன்னான்.''

அப்பா ஆனந்தமங்கலத்தை நோக்கி விரைய, சுப்ரமணியம் வீட்டுக்கு நடந்தார்.

செய்தி சொன்னதும் அவர் மனைவி துள்ளி குதித்தாள். சுப்ரமணியத்தின் அம்மாவை கட்டிக் கொண்டு கொஞ்சினாள். எப்போ கிளம்பறோம் என்று படபடத்தாள்.

அவர்கள் இரண்டு நாளில் கிளம்பினார்கள்.

கிராமத்திலுள்ள அந்தணர்கள் கிளம்ப, இன்னும் இரண்டு மூன்று நாட்களாகும் என்று தெரிந்தது.

மாடசாமி சந்தோஷமாய் வண்டி ஓட்ட ஒப்புக் கொண்டான். கூடவே அவன் பதினாறு வயது தம்பியையும் அழைத்து வருவதாகச் சொன்னான்.



மாயூரம் போய் இரவு அங்கு தங்கி, அங்கிருந்து கும்பகோணம் போய், கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் போக வேண்டும். விரட்டிக் கொண்டு போனால் இரண்டு நாளில் போய் விடலாம். ஆனால், அப்படி போகப் போவதில்லை.

நிதானமாய் கோயில் பார்த்து காவிரியில் குளித்து, உறவினர் வீட்டில் அரைநாள் ஒருநாள் தங்கி, பிறகுதான் தஞ்சாவூர் போக வேண்டும்.

தஞ்சையில் சுப்ரமணியத்தின் அக்கா இருக்கிறாள். கும்பகோணத்தில் சுப்ரமணியத்தின் பெரிய மச்சினன் இருக்கிறார்.

வழிநெடுக பல்வேறு கிராமங்களில் பல உறவினர்கள் இருக்கிறார்கள். அங்கங்கே சிற்றாறுகளைக் கடப்பது தான் சற்று சிரமமான வேலை.

கடலாட அரசர்கள் வருவதால் தஞ்சாவூரிலிருந்து வங்கக்கடல் வரையும் அருமையான பாதை. கள்ளர் பயம் ஏதுமில்லை.

அதையும் தவிர, தஞ்சையில் இப்போது விசேஷமிருப்பதால் முன்னும் பின்னும் கூட்டம் போய்க் கொண்டு தான் இருக்கும். அதிலும் இரவு நேரப் பிரயாணம் மிக சந்தோஷமாக இருக்கும்.

மாடசாமி பலமுறை தஞ்சாவூர் போய் வந்தவன். பாதையின் ஏற்ற இறக்கங்களெல்லாம் அவனுக்கு அத்துப்படி.

வெளியூரிலிருந்து தஞ்சை நோக்கி போகிறார்கள் என்றதுமே, வழியில் ஆட்டம் பாட்டம் கேளிக்கைகளும் வேடிக்கை வினோதங்களும் ஆரம்பமாகி விடும்.

அதுவும் இந்த மராட்டிக்காரர்கள் வந்து தங்கியிருக்கிற கிராமங்களில் வீரவிளையாட்டுகளும், வினோதமான கூத்துக்களும் அதிகமாக இருக்கும்.

தஞ்சாவூர் எல்லைகளில் கும்பகோணம், தஞ்சாவூர் வழியில் அவர்கள் ஆற்றங்கரை ஓரமாக குடிவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஒரு மாதிரி அசட்டு சிகப்பாய், அகலமாய் புடைத்த கன்னமாய், குறுகிய கண்களாய் உரத்துப் பேசிக் கொண்டு நடனமாடுகிறார்கள். இவர்கள் சாதாரணமாக பேசுவதே சண்டையிடுகிற சத்தமாக இருக்கிறது.

பிராமணர்கள் குடுமியோடு மீசை வைத்துக் கொள்கிறார்கள். இடுப்பில் கத்தி வைத்துக் கொள்கிறார்கள். கம்புச் சண்டையும், குஸ்தியும் போடுகிறார்கள். வேதத்தை வேறொரு ஸ்ருதியில் சொல்கிறார்கள்.

தொந்தியும் தொப்பையுமான சோழதேசத்து பிராமணர்களைக் கண்டால் வெகு இளக்காரமாகப் பேசுகிறார்கள்.

அந்த மராட்டிய பெண்களின் புடவைக்கட்டு வினோதமாக இருக்கிறது. புடவை பிருஷ்டத்தோடு இறுகியிருக்கிறது. அதிக மைதீட்டிக் கொள்கிறார்கள். கருப்புப் பொட்டு வைத்துக் கொள்கிறார்கள். மூக்கில் இரண்டு பக்கமும் வளையம் போட்டுக் கொள்கிறார்கள். வயதாக வயதாக தடித்து மிக பிரும்மாண்டமாய் போய் விடுகிறார்கள்.

அவர்கள் கிராமங்களில்தான் வேடிக்கை விளையாட்டுகள் மிக அதிகம்.

வீட்டிற்கு ஒரு பையன்தான் வேதம் படிக்கிறான். மற்றவர்களெல்லாம் பயிர்த் தொழில் மேற்பார்வைக்கு போய்விடுகிறார்கள். அல்லது அரசு உத்யோகத்தில் இருக்கிறார்கள்.



மராட்டி எழுதத் தெரிந்தால் நிச்சயம் அரசு வேலை கிடைத்து விடுகிறது. அரசு வேலையில் நல்ல காசு இருக்கிறது. கௌரவம் இருக்கிறது.

சோம்பலான அரசனின் கீழ் வேலை செய்வது எளிதானது.

வருடத்திற்கு இரண்டு முறை நெல்லும், வரிப்பணமும் அனுப்பிவிட்டு, வீட்டுத் திண்ணையில் பல்குத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம்.

. மராட்டியக் குடும்பங்கள் சோழ பிராமணக் குடும்பங்களைவிட செழிப்பாக இருந்தன.

இந்த புத்தர காமேஷ்டி யாகத்திற்குக் கூட மராட்டிய பிராமணர்களின் கைதான் ஓங்கியிருக்கும். அவனுக்கு சன்மானம் அளித்த பிறகுதான், சோழதேசத்து அந்தணர்களுக்குத் தரப்படும்.

இங்கே யாருக்கு என்ன தரவேண்டும் என்பதையும் அவர்கள்தான் அரசனுக்கு எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் பேச்சைத்தான் அரசன் கேட்பான்.

இதில் மெல்லியதொரு அவமானம் இருந்தாலும், வேறு வழியில்லாமல் சோழ தேசத்துப் பிராமணர்கள் தாங்கிக் கொண்டார்கள்.

ஆனால், சன்மானம் முக்கியமில்லை. அந்த சன்மானம் வந்து ஆகவேண்டியது ஒன்றுமில்லை.

கும்பகோணத்திலும், தஞ்சாவூரிலும் பல கோயில்கள் பார்க்கலாம். வழியில் பல மகான்களைச் சந்திக்கலாம்.

தஞ்சாவூரில் விசேஷமிருப்பதால் சாப்பாட்டுக்குக் குறைவில்லை.

அதுவும் தவிர, தைமாதம், சோழ தேசம் பச்சைப் பசேலென்றிருக்கும். மெல்லிய குளிர்காற்று பகல்

முழுவதும் பரவியிருக்கும். இரவு போர்த்திக் கொள்ள சால்வை தேவைப்படும்.

அவர்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு பயணப் பட்டார்கள். அமிர்தகடேஸ்வரருக்கு அபிஷேகம் செய்த விபூதியை, தனியே ஒரு பித்தளை செம்புடத்தில் நிறைய எடுத்துக் கொண்டார்கள்.

பிரயாணம் இனிதே நிறைவேற வேண்டுமென்று, வண்டி ஏறும்முன், கோயில் வாசலில் நின்று வேண்டிக் கொண்டார்கள். கைகூப்பி கண்மூடி நின்றார்கள்.

''உங்களுக்குத் தெரியுமா, பிரயாணம் சௌக்கியமா நடக்கணும்னு நான் அக்காவ வேண்டிண்டேன்.'' அடிக் குரலில் ரகசியமாய் சுப்ரமணியத்தின் மனைவி கூறினாள்.

சுப்ரமணியம் திகைத்தார். அதேமாதிரி ரகசியமாய், 'நானும்' என்றார்.

வண்டி மாயூரம் போகும் வழியில் உறவினர்கள் பற்றிய கதையாகவும், மனித குணாதிசயங்களைப் பற்றிய பேச்சாகவும் இருந்தது.

''ஸ்ரீவித்தைல நடராஜன் வாமாச்சாரம். அதனால தான் அவன் பூஜைக்கு நம்ம யாரையும் கூப்பிடறதில்லை. சரி, அது ஒரு விதமான பூஜை. செய். வேண்டாங்கலை. பொண்டாட்டிய துரத்திட்டு பலகைல தாசிய உக்காத்தி வைச்சா நல்லதா. மகா பாவமில்லையா.''

''பலகைல தாசிய உக்கார வைக்கிறதா... அப்படின்னா?...'' சுப்ரமண்யம் தகப்பனாரை வியப்போடு கேட்டார்.

''வட இந்தியாவிலேர்ந்து வந்த விஷயம் இது. கிழக்கு கடற்கரைப் பக்கம் இந்த பூஜை பிரசித்தம். தொலைதூரத்திலே இருக்கற வங்காளத்திலே அதிகம்.



அதை இவன் அரைகுறையா தெரிஞ்சிண்டு மனம் போற போக்கிலே செஞ்சிண்டிருக்கான். ரொம்ப ரகசியமா பண்றேன், ரொம்ப ரகசியமா பண்றேன்னு எல்லாரண்டயும் சொல்லிண்டிருக்கான்.''

''அந்த பூஜை என்னன்னு சொல்லுங்கோப்பா?''

''வண்டிய விட்டு இறங்கு.''

நகரும் வண்டியிலிருந்து சுப்ரமணியம் குதிக்க, அப்பாவும் இறங்கினார்.

பெண்டுகளோடு வண்டி முன்னே போக, அப்பாவும், பிள்ளையும் பின்னால் பேசிக் கொண்டு போனார்கள்.

''பூஜைங்கறதை சக்கரம் வைச்சும் பண்ணலாம். விக்ரஹம் வைச்சும் பண்ணலாம். இது ரெண்டு மேயில்லாம மனசுக்குள்ளே வெறும் மந்திர சப்தமாவும் பண்ணலாம்.

''விக்ரஹத்திற்குப் பதிலா நிஜமான பொம்ம னாட்டியாவே உக்கார வைச்சா?... அது பொண்டாட் டடியா இருந்ததுன்னா...''

''அடடே... அப்படி பண்றது வழக்கமா என்ன, மனுஷ ரூபத்தையே தெய்வமா நினைக்கற பழக்கமா.''

''ஆமாம். முழுமனசா எதிரே இருக்கற பொம்ம னாட்டிய அம்பாளா நினைக்கணும். அந்த அம்பாள் பேசும். சிரிக்கும். பாடும், பாடச்சொல்லும். ஆடும், ஆடச் சொல்லும். ஆனா, கோயில்ல இருக்கற சிலை ஒண்ணும் சொல்லாது. நாமளா அந்த சிலையில உணர்ச்சி ஏத்திக்கணும். அம்பாள் சிரிக்கறாப் போல இருக்கு, அசையறாபோல் இருக்கு, கண்ணுல ஒளி காட்றாப்போல இருக்கு. அப்படின்னு கற்பனை பண்ணிக்கணும்.''

''புரியறது.''

''இந்த அம்பாள் பேசும். எனக்கு ஒரு வாய் சக்கரைப் பொங்கல் கொடுறான்னு கேட்கும். வாங்கித் தின்னும். இந்த விஷயம் பூஜை பண்றவனுக்கு தாங்க முடியறதான்னு பார்க்கும்.''

''வாஸ்தவம்.''

''போறும், போறும். ரொம்ப திங்காதேன்னு தட்டப்படாது. தெரிஞ்ச பொம்மனாட்டி தானேன்னு இளக்காரமா நினைக்கப்படாது. அப்படி செய்தா அது பூஜையாகாது.

''தெய்வத்தை மனுஷாளா பாக்கறதுதான் இந்த பூஜையோட நோக்கம். மனுஷ தெய்வம் என்ன கேட்டாலும் கைகட்டி பதில் சொல்லணும், உடனே நிறைவேத்தி வைக்கணும். சத்தியமான பிரியம் இருக்கணும். நிஜமாவே மனசிலே அடக்கம் இருக்கணும். கோபமேயில்லாம இருக்கணும். கோபம் கழிக்கறத்துக்கு அகங்காரத்தைச் சுத்தமா கைவிடணும்.''

அப்பா தொடர்ந்து பேசினார்.

''வாமாச்சார பூஜைங்கறது லேசில்லை. அது நடராஜன் பண்றா மாதிரி கேலிக்கூத்தில்லை. அது சரணாகதி. நிஜமான சரணாகதி.

''அம்பாள் யாரு... எல்லா உயிர்லயும் இருக்கறவ. உம் பொண்டாட்டி உருவத்திலேயும் இருக்கறவ. பொண்டாட்டிய நமஸ்காரம் பண்ண முடியுமா பாரு. வேற பொம்மனாட்டிய மனைல உக்கார வைக்கறதவிட, மனைவியை மனையில் உக்கார வைச்சு, நமஸ்காரம் பண்றது பெரிசில்லையா.''



''மனைவியை நமஸ்காரம் பண்ணலாமாப்பா... அது அவளுக்கு கெடுதல் இல்லையா...''

''அது மனைவியில்லையே... அம்பாளாச்சே... பண்ணினா என்ன? மனைவியை நமஸ்காரம் பண்ணாதவன் எப்படி நாய், பூனை, மரம் செடியெல்லாம் பண்ணப் போறே.''

அப்பா கேட்க, சுப்ரமணியம் திகைத்தார்.

''புரியலையா சுப்ரமண்யா, இந்த பூஜை உன்னை அறிந்து கொள்வதற்கு. உன் அகங்காரத்தை அழித்துப் போடுவதற்கு. தான் என்ற மமதையை கிழித்துப் போடுவதற்கு உண்டான பூஜை.

''மனைவிக்கு தாஸனாக இருக்க முடியுமா என்று பார். சுத்த மனமுள்ளவனாக அவளை வழிபட முடியுமா என்று யோசி. மனைவியை வழிபட முடியுமெனில், எந்த எதிர்பார்ப்புமின்றி மனைவியை நேசிக்க முடியுமெனில், உன்னால் உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் நேசிக்க முடியும்.

''உலகத்தில் எல்லா பூஜையும், எல்லா வழிபாடும் அன்பை வளர்ப்பதற்கே ஓர் உத்தியாய் விளங்குகின்றன.

''ஆனால், எல்லா மதத்தினரும் இறைவழிபாட்டை வெறும் கர்வக் கொப்ப்ளிப்பாய் மாற்றிவிட்டார்கள். அலட்டலாய் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அகம் பாவத்தின் உச்சகட்டமாய் இறைவழிபாடு ஆகிவிட்டது. அதனால்தான், மற்ற மதத்தினர் மீது ஆத்திரம் வருகிறது.

''கடவுள் அறியாதவன்தான் கடவுளை இழிவுபடுத்துவான். தன் மதத்தை அறியாதவன்தான் பிறர் மதத்தைக் கேலி செய்வான். புறங்கூறுவான்.

''இந்த நடராஜன் மிகப்பெரிய முட்டாள். ஸ்ரீவித்தையின் இந்தப் பகுதியைப் பற்றி அவனுக்கு ஏதும் தெரிய

வில்லை. காசு கொடுத்து ஒரு பெண்ணை அழைத்து வந்து அவளை நிர்வாணமாக்கி பூஜை செய்வதாகச் சொல்கிறான்.''

''நிர்வாணமாக்குவதா...?'' சுப்ரமணியம் திகைத்தார்.

அப்பா சங்கடப்பட்டார்.

''சரி. பேச ஆரம்பிச்சிட்டோம். பேசிடுவோம். ஒரு விஷயத்தினுடைய நல்லது கெட்டது நீயும் தெரிஞ்சிக்கணு மோன்னோ... எது கெட்ட வார்த்தைன்னு தெரிஞ்சுக்க. கெட்டவார்த்தைய ஒரு தடவை கேட்டுத்தானே ஆகணும். கேட்டவுடனே மனசு அதை சொல்லத்தானே சொல்லும். அதுமாதிரி இந்த விஷயத்தை உங்கிட்ட சொல்லித்தான் ஆகணும்.''

அப்பா பேச்சைத் தொடர்ந்தார்.

''காசிக்குப் போறவா, அவாளுக்கு எது மிகப் பிரியமோ, எது ரொம்ப விரும்பிச் சாப்பிடற உணவோ, அது வேண்டாம், இனிமே சாப்பிட மாட்டேன் அப்படின்னு விலக்கி வைச்சிடுவா. மாம்பழம் வேண்டாம் அப்படின்னு விலக்கியிருந்தா மட்டும் போறாது. மாம்பழக் குவியலுக்கு பக்கத்திலே போய் உக்காந்துப்பா.

''எந்த உணவுப் பொருளை வேண்டாம் என்றார் களோ, அதை தானமாகவும் கொடுப்பா.

''வேண்டாம் என்பது வன்முறையாய் மறுப்பதல்ல. மனசுக்குள்ளேயே அந்த ஆசையை கிள்ளி எடுத்துட வேண்டியது.

''மனுஷாளுக்குள்ளே ரொம்ப போதையான விஷயம் எது? பெண். ஏன் இது இவ்ளோ முக்கியமாச்சு? பரஸ்பர இயற்கையான ஈர்ப்பு. இந்த ஈர்ப்பு ஏன் போகணும்? இது ரொம்ப அதல பாதாளத்துக்கு இழுக்கற



ஒரு சக்தி. இது வேணுங்கறதுக்காக என்ன வேணா மனுஷாள செய்யத் தூண்டற சக்தி. ஒரு பதினாறு வயசுப் பொண்ணு வேணுங்கறதுக்காக, ஆயிரம் வாலிபர்களை யுத்தத்துல கொல்றது சர்வசாதாரணமா உலகத்துல நடந்திருக்கு. சொத்து மொத்தமும் இழந்தவனெல்லாம் நிறைய பேர் இருக்கான். மதுவைவிட மிக போதையான விஷயம் பெண். மனதை மிக ஆழமாய் காயப்படுத்துகிற விஷயம் காமம். எனவே, இந்த ஆளுமையின் மீது கவனமாக இருக்க வேண்டும். காமத்தை ஜெயித்தாக வேண்டும்.

''காமம் என்பது உடம்பா, மனமா என்று கண்டு பிடிக்க வேண்டும்.

''காமம் என்பது பசிபோல் அல்ல. மனதால் பசியை கட்டுப்படுத்தவே முடியாது. ஓரளவேணும் உணவு போட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால் காமம் என்பதை மனதால் கட்டுப்படுத்தலாம். அறவே இல்லாதொழிக்க லாம். எனவே, காமம் என்பது மனதின் ஆட்டம்தான் என்பது தெளிவாகிறது.

''சற்று பத்தியமாக உணவு சாப்பிட்டால் உடம்பு காமத்தில் ஈடுபடாது. ஆனால் மனம் எகிறிக் கொண் டிருக்கும். ஒருமுறை பழக்கப்பட்டு விட்டால் மீண்டும் மீண்டும் அதையே சிந்தித்துக் கொண்டிருக்கும். மனதுக் குள்ளேயே ஓர் உலகத்தை உருவாக்கி, அங்கே பெண்களை கற்பனை செய்து இடைவிடாது காமத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்.

''இந்த மனம் மைத்துனத்தில் ஈடுபட்டு விட்டால் மற்ற நற்காரியங்களில் ஈடுபடுவது கடினமாகி விடும். சிந்தனையை ஒழுங்குபடுத்துவதில் சிரமம் ஏற்படும்.

''இந்தக் கற்பனையை கலைக்க முற்பட்டவர் மீது கோபம் ஏற்படும். உணவு செரிமானம் குறையும். மூச்சு

லயம் மாறும். முகம் களையிழக்கும். உடல் கொதிப்பு அதிகமாகி, நரம்பு மண்டலத்தை பாதிக்கும். மூளையில் ரத்த ஓட்டம் குறையும். ஞாபகசக்தி மட்டுப்படும். நோயால் தாக்கப்படும் உடம்பாக, சிறிய ஏமாற்றத்தால் துவண்டுபோகும் மனமாக அந்த மனிதன் மாறிவிடுவான்.

''காமம் அமிர்தம். அமிர்தம் என்பது ஒருவகை மருந்து. அளவு மிஞ்சக்கூடாது. அடிக்கடி உண்ணக் கூடாது.

''சரி, இத்தனை வீரியமான ஒரு விஷயத்தை வெல்வது, எங்ஙனம்? அதற்கு என்ன உபாயம்?

''கடவுள் பக்தி, ஸத்ஸங்கம், உபவாசம், வைராக்கியம் என்று பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

''வாமாச்சாரத்தின் படி காமம் என்ற எதிரியை நேருக்கு நேர் சந்தித்தல். எடுத்தவுடனேயே இப்படி யாரும் சந்திக்க இயலாது. அறியாத பாலகனை போருக்கு அனுப்பக்கூடாது. மிகுந்த பலசாலியும், போர் செய்து திறமை பெற்றவருமே எதிரியை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும்.

''சந்தியா வந்தனம், காயத்ரி ஜபம், மஹா கணபதி மந்திரம், பாலாதிரிபுர சுந்தரி மந்திரம் போன்ற மந்திர உபதேசங்கள் பெற்று தனியே ஹோமங்கள் செய்து, யாகங்களில் கலந்து கொண்டு உள்ளே மன அடக்கத்தைத் திடமாக வளர்த்துக் கொண்டவன் வாமாச்சார பூஜையில் முறைப்படி ஈடுபடலாம்.

''பெண்ணை நிர்வாணமாக பார்த்து இதுவல்ல என் ஆசை, இதுவல்ல என் காமம், போற்றுதலுக்குரிய பெண்ணை போகத்திற்கு ஈடுபடுத்த முடியாது. பெண்ணின் அழகு என்னை ஜெயிக்க முடியாது. இது வெறும் போகமல்ல. போற்றுதலுக்குரிய பெண்.



''இதை விட்டு விலகி ஓடினால், மனம் அதை மறுபடி போய் பற்றிக் கொள்கிறது. எனவே இதை ஜெயிக்க முற்றிலும் இதைப்பற்றி அறிந்து கொள்கிறேன். இதை முழுமையாய் அனுபவித்து முடித்து விடுகிறேன். இதனால் கற்பனைக்கு இடம் கொடுக்காமல் நேரடியாக என் காமத்தை நான் சந்திக்கிறேன்.

''நான் சொல்வது புரிகிறதா சுப்ரமணியம், காமத்தைப் பேராசையாக வைக்காமல், அன்பாக மாற்றுகின்ற வழி இது.

''காசு கொடுத்து கூட்டி வரும் தாசியிடம் அன்பு இருக்குமா? அவளுக்கு நம்மீது மரியாதை இருக்குமா? யாருக்கு நம்மீது மரியாதை இருக்கிறதோ, அவர்களை பணிவோடு நடத்தினால் அவர்களுக்கு நம்மீது மரியாதை நிச்சயம் உண்டாகும்.

''இன்னமும் குறிப்பாய் சொல்கிறேன். இந்த ஸ்ரீவித்தை, இந்தவித வாமாச்சார பூஜை மனைவியை வைத்து செய்யப்படுவது.

''அவளை அன்போடு வணங்குவது. வணங்குகின்ற பணிவை நம்மிடம் ஏற்படுத்திக் கொள்வது. அந்தப் பணிவைப் பெரிதாக்கிக் கொள்ளுதல் மூலம் ஆண் என்ற அகங்காரத்தை அழிப்பது.

''இது சிக்கலான விஷயம்தான். இந்த தேசத்தில் ஒவ்வொரு ஆணின் அகங்காரமும் அதிகமாக வெளிப் படுகின்ற இடம் மனைவியின்மீது தான்.

''தெருவிலே வாய்புதைத்து குழையும் நாய் போன்ற ஆண்மகனெல்லாம் மனைவியின் எதிரே காட்டு விலங்குகள் போல் சீறுவார்கள். அந்த விலங்குத்தனத்தை அறுப்பதுதான் இந்த பூஜை.

''மிகமிகப் பணிவாக, தாஸனாக, நெல் முனையள வும் நடிக்காமல் மிக சத்தியமாக மனைவியை ஆராதிக்க உன்னால் முடியுமா. மனைவியை கடவுள் என்று கருத முடியுமா? கடவுளிடம் காட்டும் பணிவை கல்பொம்மை யிடம் காட்டும் அக்கறையை, உற்சவ மூர்த்தியிடம் காட்டும் பரவசத்தை, உன் துணைவியிடம் காட்ட முடியுமா.

''எல்லா உயிரிலும் கடவுள் உண்டு எனில், உன் மனைவியிடம் கடவுள் உண்டல்லவா. அதை வணங்குவது நியாயமல்லவா.

''நாயிடம் கடவுள் உண்டு. நான் நாயை வணங்கு கிறேனே என்று சிலர் இடக்கு பேசலாம்.

''நாயை நாய் வணங்கட்டும். நாம் மனிதர்கள். மனிதர்களை வணங்குவோம். நம் ஆணவம் எங்கு அதிகமாக இருக்கிறதோ, அங்கு ஆரம்பிப்போம். அங்கு ஆணவ அழித்தலை துவங்குவோம்.

''நீ உன் மனைவியிடம் பிரியமாக நடந்து கொள்கிறாய் என்பது எனக்குத் தெரியும். பிரியத்தை வள்ளலாய் நின்று காட்டும் அந்த கர்வத்தையும் அழி.

''தாஸனாய் இருந்து அன்பைக் காட்டு.

''சக்திதான் உண்மையான கடவுள். பெண்தான் உலகத்தின் ஆதாரம். ஆண் அவளுக்கு துணை, பக்கபலம்.

''பெண்ணை ஆள முற்படுகிறபோது அன்பு மரணமடைகிறது. பெண்ணை அகௌரவப்படுத்தும் போது, உலக வாழ்க்கை அழிந்து போகிறது.

''பெண் சலனமுள்ள சக்தி. இடதும் வலதும் மேலும் கீழும் நாலாபுறமும் அது அலைந்து கொண்டிருக்கும். அது நிலைகுத்தி நின்று நகரத் துவங்கியதெனில் யாரும் தடுக்க முடியாது.



''சக்தி சிதறிக் கிடக்கிறவரை நாம் ஆளுமை செய்யலாம். சக்தி ஒருமுகப்பட்டதெனில் எதிர்ப்பது மிகக் கடினம்.

''நடராஜனின் மனைவி அதற்கு உதாரணம். அவள் தாயாய், தோழியாய், சமையற்காரியாய், உடம்பு கொடுக்கும் தாஸியாய், வேலைக்காரியாய் நடராஜனுக்கு இருந்தாள். அவளை நடராஜன் அடித்து உதைத்துக் கொண்டிருந்தான். இப்போது எல்லாம் உதறிவிட்டு, மந்திர ஜெபம் என்று ஒரு முனைப்பட்டு விட்டாள். இனி அவள் நூறு நடராஜனுக்கு சமம். சிதறிக் கிடந்தவள் ஒன்றாகி விட்டாள். இனி அவளைத் தடுப்பது சிரமம். அவளால் மிகச் சுலபமாக திருக்கடலூரை அழிக்க முடியும். மந்திர ஜபத்தால் எல்லோரையும் குலை நடுங்கச் செய்ய முடியும்.

''ஒரு பெண்ணை அவ்விதம் செய்யாமல் அவளை தேவதையாக வழிபட்டு, அவள் தன் எல்லா காரியங் களையும் தேவதையாக செய்வதற்கு, நாம் உதவி செய்து மனைவியை நமஸ்கரித்தால் என்ன...

''பெண்ணிடம் சரண்புகுதல், சக்தியைப் போற்றுதல், மனைவியை மதித்தல் எல்லாம் கலந்த ஒரு விஷயமிது.

''இதை தந்திரமாக நினைக்காதே சுப்ரமணியா. இந்த விஷயத்தில் ஏமாற்ற முயலாதே. ஒரு நாடகம் போலும் இதைச் செய்ய வேண்டாம். அடி மனதிலிருந்து எந்தக் கல்மிஷமுமில்லாமல் கடுகளவு கூட கெட்ட புத்தியில்லாமல் மனம் முழுவதும் சத்தியமாய் உண்மையின் ஒளிப்பிழம் பாய் மாறி, உன் மனைவியை அம்பிகையாய் பாவித்து, அவள் விருப்பம் எதுவோ அதற்காகவே வாழ்வது, அதையே முக்கியமாய் கொள்வது என்று இருக்க முயற்சி செய்.

''இது சில நாள் நாடகமல்ல சுப்ரமணியா, வேறொரு விதமான வாழ்வு. ஸ்ரீவித்தையில் ஈடுபடுபவன் பூரணனாய் இருக்க வேண்டும். எல்லாம் புரிந்து தெளிந்தவனாய் இருத்தல் வேண்டும். இது பூரணனாக ஒரு வழி. இதை உண்மையோடு செய்யும்போது, மிகப்பெரிய உளமாறுதல் ஏற்பட்டு விடுகிறது.

''உன் மனம் உனக்குப் புரிகிறது. உன்னை நீ இனம் கண்டு கொள்ளுதல் நடக்கிறது. உன் பொய்மைகள் சுழலுகிறது.

''சுப்ரமண்யா... உன் மனைவியை பூஜை செய். பூஜை செய்வதற்கு முன்பு முடியுமா என்று யோசனை செய்.''

சுப்ரமணியத்தின் அப்பா சொல்லி முடித்தார்.

மாட்டுவண்டி முன்னால் பெண்களோடு போய்க் கொண்டிருக்க, அப்பாவும் பிள்ளையும் அமைதியாய் பின்னால் நடந்து வந்தார்கள்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு சுப்ரமணியம் பேசத் துவங்கினார்.

''அப்பா ஒரு சந்தேகம், தவறாக நினைக்கக் கூடாது.''

''நீ என்ன கேட்கப் போகிறாய் என்று தெரியும் சுப்ரமணியம். உன் தாயை அமர வைத்து பூஜித்திருக்கிறேன். அவளுடைய அன்பால் மலர்ந்திருக்கிறேன். அவள் அரவணைப்பில் குழந்தையாகி நெஞ்சுக் கூட்டுக்குள் கடவுளை கண்டிருக்கிறேன்.''

சுப்ரமணியத்தை மெல்லியதாய் ஒரு நாணம் போர்த்திக் கொண்டது. தகப்பன் மீதும் தாய் மீதும் அவருக்கு அளவு கடந்த மரியாதை ஏற்பட்டது.



நடந்தபடியே தகப்பனை சுற்றி வந்தார். நடுவழியில் உடம்பெல்லாம் மண்பட, தந்தையை நெடுஞ்சாண் கிடையாய் வணங்கினார்.

மாட்டு வண்டியில் போய் கொண்டிருந்த சுப்ரமணியத்தின் மனைவி இதைப் பார்த்துவிட்டு திகைத்தாள்.

''அம்மா, அவரைப் பாருங்கோ.''

''அவன் அப்பாவை நமஸ்காரம் பண்றான்.''

''என்னாச்சு திடீரென்று?''

'ஏதாவது சொல்லிக் கொடுத்திருப்பா.'

''அப்படியா... அப்படி நமஸ்காரம் பண்ற மாதிரி என்ன சொல்லிக் கொடுத்திருப்பா?''

''ஊருக்குப் போனதும் ராத்திரி பக்கத்திலே உக்காந்து கேளு, அவன் உனக்கு சொல்லித் தருவான்.''

''ஆமாம் கேக்கணும்.'' சுப்ரமணியத்தின் மனைவி உள்ளே சொல்லிக் கொண்டாள்.

மாட்டுவண்டி ஆடுதுறை கிராமத்திற்குள் நுழைந்தது.

கிராமத்திலுள்ள அந்தணர்கள் இவர்களை வர வேற்றார்கள்.

''உங்க ஊர் நடராஜய்யர் வந்திருக்கார். ஏத்த இறக்கமா நாலு சிஷ்யாளோட லலிதா சகஸ்ரநாமம் சொன்னார். எங்க கிராமமே அசையாது அப்படியே நின்னுடுத்து.''

''அடேயப்பா... என்ன படிப்பு,. என்ன தேஜஸ், ஸ்ரீவித்தை உபாஸகராமே... அம்பாள் பலதடவை கண் முன்னால் நின்னிருக்காளாமே...''

''தஞ்சாவூர்ல தனியா சண்டி ஹோமம் பண்ணப் போறாராம். ஜனங்க சௌக்கியமா இருக்கணும்னு வேண்டிக்கப் போறாராம்.''

''ராஜா ஒரு யாகம் பண்றபோது, இதுக்கு ராஜாவை எதிர்பார்க்கப்படாது. ராஜாவ எதிர்பார்க்காம செய்துக்கலாம், உங்களால் முடிஞ்சது யத்கிஞ்சிதம் சொர்ணம் கொடுங்கோன்னார்.''

''கிராமத்திலே இருக்கறவா எல்லாரும் சேர்ந்து நூறு சக்கரம் காசு தர்றோம். உங்களால் முடிஞ்சது நீங்களும் ஏதாவது பண்ணனும். பிராமணாளுக்கு பிராமணா தராம வேறு எதுக்கு இருக்கோம் சொல்லுங்கோ.''

அப்பா ரெண்டு சக்கரம் காசு கொடுத்தார்.

''நடராஜன் எங்கே தங்கியிருக்கார்?'' பவ்யமாகக் கேட்டார்.

''அக்ரஹாரத்தில்தான். இன்னிக்கி அஞ்சு சுமங்கலிங்களுக்கு தனித்தனியா மந்திரோபதேசம் பண்றார். இருக்கிறதிலேயே பெரிய வீடு அவருக்கு ஒதுக்கியிருக்கோம்.''

''இருக்கட்டும் இருக்கட்டும். எங்களுக்கு திண்ணை போறும்.''

''உங்களோட பொம்மனாட்டிகள் இருக்காளே...''

''இருக்கட்டுமே... ஆடுதுறை வளமான ஊர். நல்ல மனுஷா இருக்கற இடம். எங்களுக்கு எந்த பயமுமில்லை.''

அக்ரஹாரத்தில் ஒரு வீடு அவர்களை முன்வந்து அழைத்தது.

வயதான தம்பதிகள் சுப்ரமண்யத்தின் அப்பாவை விருந்தாளிகளாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்.

உள்ளே வீட்டிற்கு அழைத்துப் போய் கால் அலம்பவும் குடிக்கவும் தண்ணீர் கொடுத்தார்கள். உடனடியாய் பசி தீருவதற்கு பழங்களும் மோரும் கொடுத்தார்கள்.



வீட்டுப் பெரியவர் எவ்வளவு தடுத்ததும் கேளாமல் விசிறத் துவங்கினார்.

வீட்டுக்கிழவியோடு அம்மாவும், சுப்ரமணியம் மனைவியும் சமையற் கட்டுக்குள் போனார்கள்.

அரை நாழிகையில் எல்லோருக்கும் உணவு போடப்பட்டது.

கிழவர் ஆடுதுறையில் வசிப்பதற்கு முன் தஞ்சையில் தன் வாழ்நாட்களின் பெரும்பகுதியை கழித்தவர். மன்னர் சரபோஜியின் மந்திரியிடம் கணக்கராக இருந்தவர். மாதத்திற்கு முப்பது சக்கரம் சம்பளம் வாங்கியவர்.

ஆனந்தராயர் என்கிற மன்னரின் முதல் மந்திரியிடம் அணுக்கத் தொண்டராக இருந்தவர். ஆனந்தராயர் சென்ற இடங்களுக்கெல்லாம் கூடவே பயணப்பட்டவர்.

வடக்கே விஜய நகரம் வரையில், தெற்கே கன்னியாகுமரி வரையில், மேற்கே சேரநாடு முழுவதும் குதிரையில் ஏறி வலம் வந்தவர்.

இரண்டு பெரிய ஓலைக்கூடைகளுடன் மேலே மான் தோல் தைத்து மூடி குதிரை வரும். அந்த ஓலைக்கூடையில் கணக்கு புத்தகங்கள் இருக்கும்.

ஊர் பற்றிய குறிப்புகள் எழுதியதோடு, முதலமைச்சர் ஆனந்தராயர் மன்னர் சார்பாய் இடும் கட்டளைகளை ஓலையில் எழுத்தாக்குவதும் இவர் வேலை.

தள்ளாமை காரணமாகவும், மனவேதனை காரணமாகவும் இந்தக் கிழவர் வேலையை விட்டு அரசர் கொடுத்த சன்மானங்களுடன் ஆடுதுறைக்கு வந்துவிட்டார்.

''ஆடுதுறையில் இருந்த வீடு மட்டுமே சொந்தம். நான்கு பையன்கள். மூன்று பெண்கள். இரண்டு பையன்களும், மூன்று மாப்பிள்ளைகளும் தஞ்சை மன்னரிடம்,

அரசு சேவையில் இருக்கிறார்கள். கஜானாவிலும், சேனை வரவு செலவு கணக்கிலும், வரிவசூல் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள்.

''உலகத்திலேயே மிக கேவலமான உத்யோகம் வரி வசூலிப்பதுதான். வரி சரியாக வசூலிக்காவிட்டால் அரசன் கோபமாவான். வசூலிக்க முயற்சித்தால் ஜனங்கள் கண்ணீர் விட்டு கதறுவார்கள்.

''ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு சோகத்தைச் சொல்லும். கேட்டால் இரவுத் தூக்கம் வராது.

''ஆனால், எப்படியும் வசூலித்தாக வேண்டுமென்று பேஷ்வாவின் கட்டளை.

''சில சமயம் சித்ரவதை செய்ய நேரும். பலநேரம் அரசாங்க அதிகாரிகள், படைத்தலைவர்கள் கள்ளும் கையூட்டும் வாங்கிக்கொண்டு விளைச்சல் இல்லை யென்று எழுதிக் கொண்டு போவார்கள். விளைந்ததும் பூச்சியடித்தது என்று எழுதிக் கொள்வார்கள்.

''அந்த அதிகாரிகள் கிராமங்களில் நான்கைந்து நாட்கள் தங்கி, பல்வேறு விதமான சுகங்கள் அனுபவித்துப் போவார்கள்.

''வரி வசூலாகப் போகும் நெல் மூட்டையை, வழியே இவர்களே திருடர்போல் மறித்து வேறு வண்டியிலேற்றி, சிவகங்கை தேவர்களுக்கு கிடைத்த வரையில் விற்று விடுவார்கள்.

''சிவகங்கை வானம் பார்த்த பூமி. பஞ்சப் பிரதேசம். இந்த மாதிரி கொள்ளையடிக்கப்பட்ட நெல்லுக்கு ஒரு வரவேற்பு உண்டு. சிவகங்கை ஜமீனே அதிகாரிகளை அனுப்பி, கொள்ளையடித்த நெல்களை வாங்கிக்



கொள்கிறார்கள். அப்படி நெல் வரவில்லையென்றால் அவர்களே மறவர்களை அனுப்பி நெல்லை கொள்ளை யடிக்கிறார்கள். வசூலித்த வீரர்களை வெட்டிப் போடு கிறார்கள். அல்லது மொட்டையடித்து, சவுக்கால் விளாறி துரத்துகிறார்கள்.

''தஞ்சை விவசாயிகள் மிகப்பெரிய ஏமாற்றுக் காரர்கள். கேட்ட வரியை பதில் சொல்லாமல் கொடுத்து விட்டு முத்திரை வாங்கிக் கொள்வார்கள். பிறகு, காடுகளில் ஒளிந்திருக்கும் பாண்டிய தேசத்து மறவர் களுக்கு தகவலனுப்புவார்கள்.

''வண்டி போகும் வழி, வீரர்களின் எண்ணிக்கை, அதில் நன்கு சண்டை போடக்கூடிய படைத்தலைவனின் பலம், பலவீனம் எல்லாம் காட்டிக் கொடுத்து விடுவார்கள். இலவசமாய் கள் பானையை பின்னே கட்டி அனுப்பு வார்கள். எங்கே கூடாரம் அடிக்கிறார்களோ, அங்கே சிறுவர்களை விட்டு விற்கவும் செய்வார்கள்.

''முட்டக் குடித்த அதிகாரிகளை, படைவீரர்களை, சிவகங்கை வீரர்கள் வெட்டிப் போட, பாதிவண்டி நெல் பாண்டிய மறவருக்கு, மீதிவண்டி நெல் சோழ விவசாயிக்கு.

''ஒரு தேசத்து மக்களே, அரசுக்கு எதிராய் கொள்ளை யர்களை ஊக்குவிக்கிறார்கள். வெறும் கம்பு சுற்றும் தடியன்களை, சூதாடுகிற முரடர்களை ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறார்கள்.

''சோழ மண்டலத்தில் வாழ்க்கை எவ்வளவு கேவல மாகப் போயிற்று என்பதை நினைத்தால் கண்ணிலிருந்து ரத்தக்கண்ணீர் வரும்.''

''ஏன் அரசனுக்கு வரி கொடுக்க மறுக்கிறார்கள்?''

''அநியாய வரி. பொறுப்பற்ற ஆட்கள். விளைச்சலில் ஐந்தில் நாலுபங்கு அரசருக்குக் கொடுத்து விட வேண்டும். மீதி ஒரு பங்கு நெல்லுக்கு, பணமாய் வரி செலுத்த வேண்டும்.

''விவசாயி எவ்வளவு வயிறெரிவான் என்று அரசாங்கத்தில் யாருக்குமே தெரியவில்லை.

''இது தவறென்று தெரிகிறது. ஆனாலும், மன்னர் சரபோஜியை யாரும் தட்டிக் கேட்க முடியவில்லை.

''வரிவசூலில் ஊழல் ஆரம்பித்தால், அரசாங்கத்தின் எல்லா துறையிலும் ஊழல் மிகும், மிகுந்துவிட்டது.

''கோட்டைக் காவலிலிருந்து கோயில் சேவகம் வரை காசு காசு என்று அதிகாரிகள் லஞ்சப்பணத்திற்கு பேயாய் பறக்கிறார்கள். அப்படி லஞ்சம் வாங்கி சம்பாதித்தவர்கள் ஒழுக்கக் கேடான வழிகளில் வாழ்கிறார்கள்.

''அரசு எவ்வழி மக்கள் அவ்வழி. அரசனுக்கு மூன்று பட்டமகிஷிகள் என்றால், லஞ்சம் வாங்கி சம்பாதித்த அதிகாரி தனக்கு இரண்டு மனைவியாவது வேண்டுமென்று நினைக்கிறார்.

''ஆடலும் பாடலும் ஆபாசமாகி வருகின்றன.

''சரபோஜிக்கு முந்திய அரசர் ஷாஜி, கோயில் நிலங்களுக்கெல்லாம் வரிவசூல் செய்தார்.

''இவை, வரிவசூல் தள்ளுபடி செய்த நிலங்களென்று சொல்லியும் அரசர் கேட்கவில்ல.

''நெல் விளைந்தால் அது அரசருக்கென்றும், பூ விளைந்தால் அது கடவுளுக்கென்றும் விளக்கம் சொன்னார். கடவுளுக்கு மலர்கள் போதும், காலாட் படைக்கு சோறு வேண்டும் என்ற புதிய தத்துவம் சொன்னார்.



''ஷாஜியின் காலத்தில் காவிரி குறுக்கே சிக்க தேவராயர் என்ற கர்நாடக அரசர் அணை கட்டினார்.

''திருச்சிராப்பள்ளி, தஞ்சை நிலங்கள் வறண்டு போயின.

''மதுரையில் அமர்ந்து திருச்சிராப்பள்ளியை ஆண்ட நாயக்கர்கள், தஞ்சை மன்னர் ஷாஜியோடு சேர்ந்து கர்நாடகத்தின் மீது படையெடுத்தனர்.

''இவர்கள் போவதற்குள் அணை தானாகவே உடைந்து காவிரியில் பெருவெள்ளம் வந்துவிட்டது. தண்ணீரில்லாமல் பயிர் நாசம், பெரு வெள்ளத்தாலும் பயிர் நாசம்.

''விவசாயிகளுக்கு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொந்தரவு. ஏதேனும் ஒரு விதத்தில் வேதனை இங்கே. எப்படி வரிவசூல் செய்ய?''

அந்தக் கிழவர் சுருக்கமாய் தன் வாழ்க்கை அனுபவங் களை, அரசாங்க அவலங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார்.

''சோழ தேசம் இத்தனை கஷ்டங்களை இதற்கு முன் பட்டதில்லை. திருக்கடவூர் கடற்கரைக்கு அருகே, தஞ்சையிலிருந்து வெகுதொலைவே இருப்பதால் உங்களுக்கு இந்த அநியாயங்கள் தெரிவதில்லை. தஞ்சை, கும்பகோணம், மாயூரம் பக்கங்கள் இந்த வரி விகிதம் மிக அதிகம். இந்த ஆடுதுறையில் வேளாளர்கள் விவசாயம் செய்வதையே நிறுத்தி விட்டார்கள். நிலத்தைத் தரிசாய் விட்டுவிட்டு, சரபோஜியின் காலாட்படையில் சேருகிறார்கள். வேளாளர் திசை மாறினால் தேசத்திற்கு அழிவல்லவா.

''ஆனால், இதை யாரும் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

''சரபோஜிக்கு முன்னால் இருந்த ஷாஜி மன்னரின் காலத்தில் இன்னொரு கேவலம் நடந்தது.

''மதுரையை ஆண்ட மங்கம்மா, தஞ்சைமீது படையெடுத்தார். தளவாய் நரஸப்பய்யா என்பவர் தலைமையில் மிகப்பெரிய படையொன்றை தஞ்சையைக் கைப்பற்றி கொள்ளையடிக்க அனுப்பினாள்.

''தஞ்சைக்கு அருகே வந்ததும் தஞ்சையின் அமைச்சர் லாகோஜீ என்பவர் ஏராளமாக லஞ்சம் பணம் கொடுத்து தஞ்சைமீது படையெடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். பல லட்சம் மொஹராக்கள் லஞ்சம் வாங்கிய அந்தத் தளபதி தஞ்சையின்மீதும் படையெடுக்கவில்லை. மதுரைக்கும் திரும்பவில்லை. பெரும்படையை கலைத்து விட்டு ஆயிரம்பேர் கொண்ட சிறுபடையாக தன் பாதுகாப்பிற்கு வைத்துக் கொண்டு, ஊதாரித்தனமாக காசு செலவு செய்து கொண்டிருக்கிறார். எளிதாய் சம்பாதித்த லட்சக்கணக்கான பணம், எந்த ஒழுக்கத்திற்கும் அடங்காத ஆயிரம் பேர் கொண்ட படை, இதற்கு கீழ்த்தர புத்தியுள்ள ஒரு தலைவன்... ஒரு தேசம் என்ன பாடுபடும் என்பது அந்தணர்களான உங்களுக்குப் புரிகிறதா?''

அப்பாவும் பிள்ளையும் நடுக்கூடத்தில் அந்த அந்தணர் முன்னே, கவலையோடு கைகட்டி உட்கார்ந்திருந்தார்கள். சற்றுத் தள்ளி சுப்ரமணியத்தின் மனைவியும், அம்மாவும் இந்தப் பேச்சை காது கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''லஞ்சக் காசு ஊரில் புரண்டால் நல்லது நடக்குமா. நகை விலையும் , புடவை விலையும், அதிகமாகி விட்டன. கைக்கு வந்த காசை எறிந்துவிட்டு, புடவை அள்ளிக் கொண்டு போகிறார்கள்.



''தேவரடியார்களிடம் அதை முழம் போட்டுக் கொடுத்துவிட்டு அங்கேயே குடியிருக்கிறார்கள்.

''தினமும் ஒரு புடவையோடு தாசிகள் ஊர்சுற்ற, குலப் பெண்களுக்கு ஏக்கம் வருகிறது. புருஷன்மீது மரியாதை குறைகிறது.

''காசு கொடுப்பவரை நோக்கி பாட்டுப்பாட புலவர்களும் வாழ்த்துச் சொல்ல, அந்தணர்களும் துடியாய் துடிக்கிறார்கள்.

''கோயிலுக்கு படைத்தலைவர்கள் வந்தால், பெருந்தனக்காரர் வந்தால், ஒவ்வொரு சன்னதியிலும் அவர்களுக்கு பரிவட்டம் கட்டுகிறார்கள். தேசமில்லாது ஊர் சுற்றிக் கொண்டிருக்கிற திருட்டுத் தலைவனுக்கு சிவனையும் விஷ்ணுவையும்விட மாடு வெட்டி சாராயம் படைக்கும் தேவதைகள் பிரியமாக இருக்கின்றன, கோயிலுக்குள்ளேயே குடிக்கலாம். கோழி அடித்து திங்கலாம் என்பது அவனுக்கு சௌகர்யமாக இருக்கிறது.

''நான் மறவன். காளிதான் என் தெய்வம் என்று குடிவெறியில் கூவுகிறான்.

''அங்கே கொண்டாட்டங்கள் அதிகமாகி விட்டன. இடையறாது உயிர்பலி கொடுத்து கோயில் முழுவதும் ரத்தச்சேறாக இருக்கிறது. மாமிசத் துணுக்குகள் அகற்றப் படாமல் அந்த இடத்தில் கிருமிகள் அதிகமாகின்றன. தொற்றுநோய்கள் பரவுகின்றன. தொற்றுநோய்க்கு பயந்து மறுபடியும் பலிகள் துவங்குகின்றன. தஞ்சையைச் சுற்றி பல கிராமங்களில் குழந்தைகள் சாவு சாதாரணமாகி வருகிறது.

''குலப்பெண்கள் வறுமை காரணமாக சூல இலச்சினை இட்டுக்கொண்டு, தேவரடியாராக மாறுகிறார்கள். அப்படி மாறிய தேவரடியார்களுக்கு அதிகப் பணம் கொடுக்க படை

வீரர்கள் தயாராயிருக்கிறார்கள். இதற்காக படை வீரர்களுக்கு நடுவே ஒரு அடிதடி சண்டைகூட நடக்கிறது.

''நாட்டின் நிலைமை கண்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. எனக்கு உடம்பில் தெம்பிருக்கிறது. இன்னும் பத்து வருடங்கள் அரசு வேலை செய்திருக் கலாம். ஆனால் விருப்பமில்லை. மனம் மிகவும் தளர்ந்து விட்டது. அரசாங்க தொந்தரவு அதிகமில்லாத கிழக்குப் பக்கம் நகர்ந்து வந்துவிட்டேன். கடற்கரைப் பக்கம் போகப் போக, கடைமடைப் பாசனம். இருபோகம் பயிர் செய்வதே பெரிய காரியம்.

''இங்கே, ஆடுதுறையில் விளைச்சல் நன்றாக இருக் கிறது. தஞ்சாவூர் மன்னர்களின் தொந்தரவும் அதிக மில்லை. அதனால்தான், இங்கே இந்த நாலுகட்டு வீடு வாங்கி வந்துவிட்டேன்.

''இங்கே நிலம் இன்னும் வாங்கவில்லை. என் புத்திரர்கள் அனுப்பும் காசு போதுமானதாக இருக்கிறது.

''யாரோ கொள்ளையடித்த நெல், சந்தைக்கு வரும் போது, நல்ல விலைக்கு வாங்கிப்போட்டு விடுகிறேன்.

''இந்த சோழதேசம் சுபிட்சமாக வேண்டுமென்று தினமும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்.

''ஆனால், வேடிக்கை பாருங்கள், உங்களுடைய திருக்கடவூரிலிருந்து யாரோ ஒரு நடராஜய்யர் இங்கு வந்து காசு வசூலித்து பூஜை செய்கிறார். எதற்கு காசு வசூலிக்கிறீர்கள், பூஜைக்குண்டான பொருள்கள் வாங்கவா என்று கேட்டேன். இந்த ஊரில் பூஜை செய்வதற்கு சம்பாவனையாம். சன்மானமாம். என்ன அநியாயம் இது?

''உங்களுக்கு ஒரு கேவலம் தெரியுமா? மாட்டுச் சாணத்தில் பொற்காசுகளைப் போட்டு புதைத்து,



அவைகளை வறட்டியாக்கி, பெரிய ஓலைக் கூடைகளில் வைத்து, இதற்காகவே ஒரு மாட்டுவண்டி ஏற்பாடு செய்து, அதில் சீடர்களையும் ஏற்றி வருகிறார்.

''நான் கண்டுபிடித்து விட்டேன் என்று தெரிந்ததும் கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்புவிப்பதற்காக இப்படி செய்கிறேன் என்கிறார். நான் ஏழை பிராமணன். என்னிடம் எருமூட்டைதான் இருக்கிறது என்று திருடர்களிடம் கைகூப்பி அழுவாராம்.

''ஒருமுறை ஒரு கொள்ளைக்காரன் இவரை கோவணத் தோடு குதிக்கச் சொன்னானாம். இவரும் குதித்தாராம்.''

''ஏன் குதிக்கச் சொல்கிறான்?''

''கோவணத்திலோ, ஆசனவாயிலோ காசு வைத்திருந்தால் விழுந்து விடுமல்லவா... அதற்குத்தான்.''

''மூங்கில் கழியில் ஓட்டை போட்டு அது முழுவதும் பொற்காசுகள் எடுத்துப் போவார்களென்று கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''இல்லை. அது அந்தக் காலம். கொள்ளையர்கள் தடியோடு போகிறவர்களைப் பார்த்தவுடன், தடியை அடித்து உடைத்து விடுகிறார்கள். சோற்றுப் பானையை கவிழ்த்து விடுகிறார்கள். மாட்டு வண்டியை உதறிப் பார்த்து விடுகிறார்கள். காசை வாயில் ஒளித்து வைக் கிறார்கள் என்று கன்னத்தில் அறைந்து பேச வைக் கிறார்கள். ஆனால் எரு மூட்டையில் காசு போகுமென்று எந்தக் கொள்ளைக்காரனுக்கும் தோன்றாது. உங்கள் ஊர் நடராஜன் கொள்ளைக்காரர்களுக்கெல்லாம் கொள்ளைக் காரன்.

''ஆனால், இந்த சாமர்த்தியமெல்லாம் பூஜையில் காணப்படவில்லை.

''பனைவிசிறியால் முதுகை சொறிந்து கொள்வதும், சிடர்களை சள்ளென்று எறிந்து விழுவதும், நடு பூஜையில் முகம் திருப்பி காசு படைத்தவர்களை வரவேற்பதும்... மிக அட்டகாசமாக செய்து கொண்டிருக்கிறார்.

''இந்த அசிரத்தை பூஜையை அவலமாக்குகிறது. சர்க்கரைப் பொங்கலை சமையலறையில் ருசி பார்த்து விட்டு, பின்னர் பூஜைக்கு அனுப்பியதாக என் மனைவி சொன்னாள். இப்படியெல்லாம் செய்வது நல்லதா, ஸ்ரீ வித்தைக்காரர்களைப் பற்றி ஏற்கெனவே நல்ல அபிப்ராயமில்லை. இதில் இப்படியெல்லாம் ஆசாரக் குறைவாக இருந்தால் இன்னும் கேவலப்படுத்தாதா?

''உங்கள் ஊர் நடராஜன் என்னிடம், நான் அரசு அதிகாரியாக இருந்தேன் என்று தெரிந்ததும், என்னையும் தன்னோடு தஞ்சைக்கு வரச்சொன்னார். வேண்டிய பணம் கொடுப்பதாகக் கூறினார்.

''மறுபடி மராட்டிய மன்னர்கள் வாழும் தஞ்சையை மிதிக்க எனக்கு இஷ்டமில்லை. மராட்டிய சப்தம் காதில் பட்டாலே எனக்கு தலைவலி வந்துவிடுகிறது.

''இங்கே உலகளந்தான் என்கிற தமிழ் புலவரிடம் கம்பநாட்டாரின் ராமாயணம் படித்துக் கொண்டிருக் கிறேன். நாலாயிர திவ்ய பிரபந்தமும், தேவார, திருவாசகங்களும் பயின்று கொண்டிருக்கிறேன். என் மனைவியும் என்கூட தமிழ் பயின்று கொண்டிருக்கிறாள்.

''நான் ஒரு பிராமணன். அரசு அதிகாரியாக இருந்தவன். என்னால் அரசாங்கத்து ஊழலை சீர்திருத்த முடியவில்லை. மக்களுக்கு நன்மை செய்ய முடிய வில்லை. யார் கண்ணீரையும் துடைக்க எனக்கு வக்கில்லை.



மக்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று இடைவிடாது இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்.

''இந்தப் பிரார்த்தனைதான் என் வேலை. என் தொழில். என் பதினோரு வயதிலிருந்து நான் இதைத்தான் செய்திருக்க வேண்டும். இதைச் செய்யாதது என் தவறு. அரசு வேலையில் அமர்ந்தது மகாபாவம். கூலிக்கு வேலை செய்தது கேவலம். லஞ்சம் வாங்கி அரசனை ஏமாற்றிய மறவனைப் போல, சூல இலச்சினை இட்டுக் கொண்டு தேவரடியாராக மாறிய குலப்பெண் போல, வழிப்பறிக் கொள்ளை செய்த வேளாளன் போல, அரசுக்கு வரி கொடுக்காமல் ஏமாற்றும் வைஸ்யன் போல இதுவும் ஒரு கேவலம்.

''உங்களை நான் வரவேற்றதே நீங்கள் குலதர்மம் மீறாத அந்தணர்களென்று பார்த்தவுடனேயே புரிந்து போயிற்று. நீங்கள் தங்க சம்மதித்தது மிகப்பெரிய சந்தோஷம்.

''நீங்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் நல்ல சகுனங்கள் தெரிந்தன. சுவர் பல்லி சந்தோஷமாய் கத்திற்று. வாங்கோ வாங்கோ என்று அதுவும் உங்களை வரவேற்றது.

''வீட்டுப் பல்லி மிக மெல்லிய உணர்வுடைய ஜந்து. அதற்கு அதிர்வுகள் மூலம் மனிதர்களை அறியும் திறனுண்டு. நல்ல அதிர்வு கொண்டவர்களை சுவர் பல்லி சந்தோஷ மாய் வரவேற்கும். அதாவது, பதிலுக்கு அதிரும்.

''உங்களுக்கு தஞ்சையில் முறையான வரவேற்பு கிடைக்க, அங்கேயே இருக்கும் என் மகனுக்கு ஓலை கொடுக்கிறேன். இதையும் தவிர அய்யாவையன் என்ற அந்தணர்தான் இந்த புத்ரகாமேஷ்டி யாகத்தை முன்னின்று நடத்துகிறார். அவருக்கும் ஓர் ஓலை தருகிறேன்.

''தங்குமிடம், முதற்பந்தி உணவு, ராஜாவின் கையிலிருந்து நேரடி சன்மானம் போன்றவை கிடைக்கும். அய்யாவையனை அறிமுகப்படுத்தும்படி என் மகனுக்கு எழுதுகிறேன்.

''ஏன் இந்த பிராமணன் தானாக வந்து உதவிகள் செய்கிறான் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இதற்கு காரணமிருக்கிறது. நான் சரியான பிராமணனாக இல்லை. பல்லிளித்து காசு வாங்கும் கூலிக்காரனாக வாழ்ந்திருந்தேன். போற்றுவார் யாருமில்லாததால் குலத் தொழிலை விட்டு திசை திரும்பி விட்டேன். நீங்கள் அப்படி திரும்பி விடக்கூடாது.

''குறிப்பாய் என் அடுத்த தலைமுறை, அதாவது உங்கள் மகன் சுப்ரமணியம் திசை திரும்பக் கூடாது.

''உங்கள் மகன் மிக லட்சணமாக இருக்கிறார். அவர் முகம் மிகப் பிரகாசமாக இருக்கிறது. பெரிய கண்களும், மேடான நெற்றியும், வில்போல் வளைந்த மேலுதடும், அகன்ற மார்பும் அவரை இறையருள் பெற்றவர் என்பதைத் தெரிவிக்கின்றன.

''சுப்ரமணியத்தின் மனைவி, சிறு பெண்ணாக இருந்தாலும் நிறைவான அமைதியோடு இருக்கிறார். நல்ல புருஷனை அடைந்த பெண்ணுக்குத்தான் இப்படியொரு நிறைவு வரும். சரணடைந்த மனதிற்குத்தான் ஓர் அமைதி யான சந்தோஷம் இருக்கும். நல்ல புருஷனிடம் சரணடைந்த பெண்கள் என்பதை இப்போது காண்பது அரிதாக இருக்கிறது.

''ரிஷிகளின் பத்தினிகள், மகாவீரர்களின் மனைவிகள் எப்படி இருந்திருப்பார்கள் என்று பார்த்ததில்லை. சுப்ர மணியத்தின் மனைவியைப் பார்க்கும் போது இப்படித் தான் இருந்திருப்பார்கள் என்று எண்ண முடிகிறது.



''உங்கள் வருகையால் எங்கள் இல்லம் புனித மாயிற்று. நான் தன்யனானேன். வழிநடைக்கு இந்த அதிரசங்களையும், எள்ளுருண்டைகளையும், பருப்புத் தட்டைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

''எங்கள் உபச்சாரத்தில் ஏதும் குறையிருந்தால் மன்னித்துக் கொள்ள வேண்டும். எங்கள் பேச்சில் ஏதும் பிழையிருந்தால் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் மகன் இல்லத்தில் தங்கி பேரக்குழந்தைகளை ஆசீர்வதிக்க வேண்டும்.

''இரவு இங்கு தங்கிவிட்டுப் போவீர்கள் என்று நினைத்தேன். ஆனால், குடந்தைக்குப் போய் மகள் வீட்டில் தங்க உத்தேசித்திருக்கிறீர்கள்.

''நிலாக்காலம், நடப்பது மிக சுகமாக இருக்கும். பெண்டிருக்கு இரவு கிராமங்களைக் காட்டுங்கள். மராட்டியர்கள் வழியெல்லாம் நெருப்பு மூட்டி, பாட்டும் கூத்துமாய் வேடிக்கை காட்டுவார்கள். பெண்களுக்கு மிகவும் பரவசமாக இருக்கும். இதற்கென்று வரமுடியுமா. இப்போது பார்த்தால்தானே ஆயிற்று. அதனால்தான் இங்கு தங்க வற்புறுத்தவில்லை.''

அவர்கள் எழுந்து வண்டி ஏறினார்கள். விடை பெற்றார்கள். மௌனமாய் கிராமம் தாண்டினார்கள்.

வளர்பிறை நிலவு நன்கு இருட்டிய பிறகு மெல்ல வெளிவந்தது. பூமி முழுவதும் ஒளியை வாரியிறைத்தது.

சுப்ரமணியத்தின் அப்பாவும், அம்மாவும் வண்டி யில் சுருண்டு தூங்கியபடி வர, சுப்ரமணியமும், அவர் மனைவியும் வண்டிக்கு நல்ல இடைவெளி விட்டு கைகோர்த்தபடி வந்தார்கள்.

மாடசாமி இங்கிதம் தெரிந்தவன். காது சுற்றி துணியை தலைப்பாகையாக கட்டிக் கொண்டு, புருஷனும் மனைவியும் சந்தோஷமாகப் பேசி வரட்டும் என்று வண்டியோட்டினான்.

கணவனும், மனைவியும், ஒருவர் இடுப்பை ஒருவர் சுற்றி, கட்டிக்கொண்டு நடந்தார்கள். சின்னதாய் கிள்ளிக் கொண்டார்கள். கன்னத்தை பரஸ்பரம் வலிக்க திருகிக் கொண்டார்கள்.

''இந்த தலைப்பாகையும், இந்த வேஷ்டியும் பார்த்தா குடியானவன் போல இருக்கு.''

''சரி. நான் குடியானவன். நீ யாரு?''

''நான் வேளாளச்சிதான். எங்க மாமனுக்கு உச்சிப் போதுக்கு கஞ்சி எடுத்துட்டுப் போறோமில்ல...''

அவள் நடித்துக் காட்டினாள்.

தலையில் சும்மாடு வைத்து, கஞ்சி கலயம் வைத்து வரப்பில் நடப்பவள் போல் நடித்துக் காட்டினாள்.

''அடேங்கப்பா... தத்ரூபமா நடிக்கறியே...''

''இப்போ நான் நாலாவது வருணம். ஏஞ்சாமி... நிலத்துல களை பிடுங்கிப் போடட்டுங்களா. மொத்தமும் எடுத்துப் போடறேனுங்க. முக்கா மரக்கா நெல்லு கொடுங்க சாமியோவ்'' அவள் பேசினாள்.

''ஐயரம்மோய்...'' அவன் கூவினான்.

''உங்க கொல்லை அத்திமரத்திலே தேன் கட்டியிருக்குங்க. புகைபோட்டு தேன் எடுக்கறேன். ஓடு சாத்திக்கங்கோ.''

முந்தானையால் உடம்பு மூடிக்கொண்டு தேனெடுப்பது போல் நடித்தாள். கூடு பிழிந்தாள். புறங்கை நக்கினாள். சப்பு கொட்டினாள்.



சுப்ரமணியம் வியந்து கைதட்டினார்.

''ஒண்ணுமே தெரியாதவள்னு நினைச்சேன். எல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்கியே... கள்ளி'' பாராட்டினார்.

''இப்ப நான் சரபோஜி'' சுப்ரமணியம் கை விரித்து அகலமாய் நடந்தார்.

''நீ சரபோஜியுடைய பொண்டாட்டி'' அவளை சுட்டிக் காட்டினார்.

''நானா... நான் எங்கே சரபோஜி பொண்டாட்டிய பார்த்திருக்கேன். அந்த பொண்கள்லாம் மாளிகைவிட்டே வரமாட்டாளாமே. நான் வேணா வேற வேஷம் போடறேன்.''

''என்ன வேஷம்?'' சுப்ரமணியம் ஆவலோடு கேட்டார்.

''தாம் தி தாம், தை த தை.'' அவள் அடவு பிடித்துக் காட்டினாள்.

''அடடா... இவாளோடெல்லாம் பழக்கமா.''

''இந்தா. ஆயிரம் மொஹரா. கண்ணுக்கு விருந்தாக நடனமாடு.''

அவர் கனமான பொற்கிழியைப் போடுவது போல் நடிக்க, அவள் குனிந்து வாங்கிக் கொண்டாள். கனம் தாங்காமல் தடுமாறினாள்.

கொண்டுபோய் பொற்கிழியை ஓரத்தில் வைத்து விட்டு, அவருக்கு எதிரே வந்து, இடுப்புப் புடைவையை நெஞ்சுக்கு நடுவே உருட்டி சுருக்கிக் கொண்டாள். நிலவொளியில் கற்சிலை போல் நின்றாள்.

சரபோஜி டக்கென்று நட்டுவனாரானார்.

''தகதோம் தகதோம், தைதைதை தத்தித்தோம் தளாங்கு தத்தித்தோம்'' தாளம் சொல்ல, அவள் மெத்தென்ற மண்ணில் துள்ளிக் குதித்து ஆடினாள்.

உடம்பை வளைத்து பல்வேறு விதங்களாய் காட்சி கொடுத்தாள். கிளியை கையிலேந்திய மீனாட்சி போல், ஒயிலாய் இடுப்பு வளைந்து நின்றாள்.

பின்னால் நீலவானமும் நிலவும் தோன்ற, அதற்கு முன்னே மனைவி மீனாட்சி சிலைபோல் நிற்க, சுப்ரமணியம் அதிர்ந்து போனார். கைகூப்பி பக்தனைப் போல நின்றார்.

எங்கிருந்தோ நெடியான செண்பக வாசனை அவர்களைச் சுற்றிக் கொண்டது.

அவருக்கு மனைவியின் காலில் விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்போல் தோன்றியது.

அவர் குனிய, அவள் தடுத்தாள்.

''தப்பு, உடனே உணர்ச்சி வசப்படக் கூடாது.''

அவரைவிட்டு ஓடிப்போய், வண்டியில் ஏறிக் கொண்டாள்.

அங்கிருந்தபடியே புருஷன் கம்பீரமாய் நடந்து வரும் அழகை வியந்து பார்த்தாள்.

யாருக்கு கிடைக்கும் இப்படியொரு கொடுப்பினை? எந்தப் புருஷனுக்கு மனசு வரும் மனைவியை நமஸ்கரிக்க.

அம்மா சொன்னது சரி. அந்த ஆடுதுறைப் பிராமணன் சொன்னது சரி. இவர் சர்வ லட்சணம் பொருந்திய மனிதர். தன்னை மறந்து தெய்வ உபாஸனை செய்கின்ற மகான். ஒரு மகானை, மாமனிதனை, புருஷனாய் அடைவதற்கு போன பிறவியில் தவம் செய்திருக்க வேண்டும். அந்த தவம் இந்தப் பிறவியிலும் தொடர வேண்டும்.

மகானுக்கு மனைவியாகி விட்டோம் என்று கர்வப் படாது, இன்னும் பிறவிகள் இருப்பின் உன்னோடேயே இருக்க வரம் கொடு என்று தவம் செய்ய வேண்டும்.



மனைவியின் தவம் எது? புருஷனின் மனம் கோணாது நடத்தல்.

அவர்கள் நடுநிசி தாண்டியதும் ஒரு தோப்புக்குள் புகுந்து, வண்டியை விட்டு இறங்கி மாடுகளை இளைப்பாற விட்டனர்.

அங்கங்கே தட்டுப்பந்தல் போடப்பட்டிருந்தது. புது மணல் பரப்பப்பட்டிருந்தது.

அப்பாவும், அம்மாவும் இளைப்பாற சுப்ரமணியமும், அவர் மனைவியும் கூத்து பார்க்கப் போனார்கள்.

சத்ரபதி சிவாஜி பற்றிய நாடகம், மராட்டிய வசனத்துடன் நடந்து கொண்டிருந்தது. நடுநடுவே தமிழும் பேசினார்கள்.

வடக்கே தொலைதூரத்திலேருந்து பரத கண்டத்திற்குள் புகுந்த அந்நியர்களை சிவாஜி தாக்கிய விதம், அலறவைத்த வித்தைகள் என்று ஆரவாரமாய் நாடகம் நடந்து கொண்டிருந்தது.

கோயில்கள் அந்நியர்களால் இடிக்கப்பட்டது, சிலைகள் அவமானப் படுத்தப்பட்டது, பெண்டுகள் மானபங்கப் படுத்தப்பட்டது, தங்கள் மதத்திற்கு மாறும்படி மக்கள் வற்புறுத்தப்பட்டது, எல்லாம் நாடகத்தில் காட்டப் பட்டன.

அந்த நாடகம் மிகுந்த வேதனை கொடுத்தது. பாதியில் எழுந்து சுப்ரமணியமும், அவர் மனைவியும் கீற்றுக் கொட்டகையில் படுத்துக் கொண்டார்கள்.

அவள் சில நொடிகளில் உறங்கிப் போனாள்.

சுப்ரமணியத்திற்கு உறக்கமே வரவில்லை. தூக்க மில்லாத விழிப்பு நிலையிலும், கனவுகள் போல் விதம்விதமாய் காட்சிகள் வந்தன.

ஒரு பெண் தலைவிரி கோலமாய் அழுவது போல தோன்றியது. உற்றுப்பார்க்க ராஜத்தின் சாயல் இருந்தது. அவர் எழுந்து உட்கார்ந்து பாலா திரிபுரசுந்தரி மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்.

ஏன் தேசம் பலஹீனமாகிக் கொண்டிருக்கிறது என்று வேதனைப்பட்டார். அந்த வேதனை உணர்வோடே மந்திரம் சொன்னார்.

உட்கார்ந்தபடியே உடம்பு தூங்கியது. ஆனால் மனம் இடைவிடாது மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தது.

தொடர்ந்து மந்திரம் சொல் என்று மனதை அவர் கட்டளையிடவில்லை. ஆனால், அவர் கட்டளையின்றி மனம் இயங்கிக் கொண்டிருந்தது. மனம் தனித்துத் திரிவதை, எதுவும் எதிர்பாராது தானாய் தெரிவதை அவரால் உணரமுடிந்தது.

அந்த உணர்வு பரம சந்தோஷமாக இருந்தது.

வெளிச்சம் பரவிய நேரத்தில் அவர் எழுந்து காவிரி நோக்கிப் போனார்.

## 3

பயணத்திற்கு புறப்படுமுன் காசுகொடுத்து வாழைப் பழங்களும், கொய்யாவும் வாங்கினார்கள். ஒவ்வொருவரும் ஆறேழு பழங்கள் சாப்பிட்டு கட்டிக் கொடுத்த அதிரசத்தையும் உணவாக எடுத்துக் கொண்டார்கள்.

உற்சாகமாய் நான்கு பேருமே மாட்டு வண்டியை விட்டு இறங்கி நடக்கத் துவங்கினார்கள்.



வழியில் உயரமான சுதை உருவங்களுடன், கோரமான தோற்றங்களுடன் தேவதை உருவங்கள் செய்து வைக்கப் பட்டிருந்தன. மிக சக்தி வாய்ந்த தெய்வம் நெருங்கி கும்பிட்டுப் போங்கள் என்று அந்தக் கிராமத்து மக்கள் வேண்டிக் கொண்டார்கள்.

அந்த வழியே நடந்து போகும் கிராமத்து ஜனங்களை ஒரு பூசாரி விரித்த சடையோடு கை அகட்டி மறித்தான்.

''என்னைத் தாண்டி போயிடுவியா நீ?'' என்று சன்னதம் வந்தது போல் கத்தினான்.

''ஆத்தா ஆடு கேக்கறா, கொடுத்துட்டுப் போடி'' என்று மிரட்டினான்.

ஒரு கிழவி சுருக்குப்பை எடுத்து காசு எடுக்குமுன் மொத்தமாய் பிடுங்கினான். முகத்தில் விபூதி அடித்தான். பெரிய சப்தம் எழுப்பி மிரளவைத்தான். அவன் மகளிடமே ஆடு வாங்கி, தன் மகனிடம் கொடுத்து பலியிடச் சொன்னான்.

ஆடு தரதரவென்று இழுத்துப் போகப்பட்டது. பின்னங் கால்களை இறுக்கி பிடித்துக் கொள்ள, தலையில் தண்ணீர் தெளித்தான்.

ஆடு தண்ணீர் பட்டதும் தலை சிலுப்பிற்று.

''ஆடு சரின்னு சொல்லிடுச்சு. ஆத்தா உத்தரவு கொடுத்துட்டா.''

கையிலிருந்த நீண்ட வாளால் ஆட்டை ஓங்கி வெட்டினான்.

சுப்ரமணியம் கண்களை மூடிக் கொண்டார். அவர் மனைவி ஐயோ என்று கத்தினாள்.

ஆட்டின் உடம்பு துள்ளித் துடித்தது. ரத்தம் தரையெங்கும் பரவியது.

கத்தியால் ரத்தத்தை எடுத்துப் பூசாரி காசு கொடுத்தவளின் தலையில் தேய்த்தான்.

அந்தக் கிராமத்து ஜனங்கள் அங்கேயே சமையலுக்கு ஏற்பாடு செய்ய பறந்தார்கள்.

எவ்வளவு தந்திரமான வியாபாரம். எவ்வளவு வேகமான காசுபிடுங்கல். இந்தப் பூசாரியின் வளமான வாழ்க்கைக்கு இந்த ஆடு பலியாயிற்று. இது வீண் பலி.

அந்தக் கிராம தேவதை சிலைக்குக் கீழே கழுத்தில் கத்தி வைத்துக் கொண்ட மனிதர் சிலைகளும் இருந்தன.

அரசர் போரில் ஊனமடையாது திரும்பி வந்தால் மறவர்கள் தங்களை தேவதைகளுக்கு பலி கொடுத்துக் கொள்வார்கள். அப்படி பலி கொடுக்கும் இடம் இது என்று சொல்லித்தான் இந்தச் சிலைகள் இருக்கின்றன.

மனித வாழ்வு எவ்வளவு மகோன்னதமானது. அதில் இந்த மாதிரி பலிகள் அவசியம்தானா? இது தற்கொலை என்று ஏன் தெரியவில்லை.

ஆடு பலி கொடுத்தால்தான் அம்மன் சந்தோஷ மடைவாள் என்றால், அந்த அம்மன் கடவுள்தானா? ஒரு அப்பாவி மிருகத்தைக் கொலை செய்வதிலா ஒரு தெய்வம் சந்தோஷமடையும்.

இது யார் ஆரம்பித்த பழக்கம், எங்கிருந்து வந்த வழக்கம்?

வேதகாலத்திலும் பலி கொடுப்பது இருந்திருக்கிறது. எருதுகளையும், குதிரைகளையும், ஆடுகளையும் வெட்டி அக்னி குண்டத்தில் போட்டிருக்கிறார்களே...

இப்போது தஞ்சையில் நடைபெறப் போகும் யாகத்திலும் இது செய்யப்படுமோ, வாயில்லாத ஜீவன்கள் வதைக்கப்படுமோ?



கடவுள் அன்பு ரூபமென்றால் இந்தக் கொலைக்கு என்ன அர்த்தம்? சக்தி தாய்வடிவமென்றால் இந்த பலிக்கு என்ன அவசியம்?

எல்லா சமயங்களும் மிருகவதை செய்கின்றன. பறவைகளையும், மீன்களையும், ஆடுகளையும், மாடு களையும் துரத்தித் துரத்திக் கொல்கின்றன.

கடவுளும், கடவுள் தன்மையும் குரூரமிக்கதாய் போய்விட்டது.

பின்னால் அவர் மனைவி மௌனமாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

அவர் மெல்ல அருகில் போய் விசாரித்தார்.

''நம்ம திருக்கடவூர் ஊர்தான்னா சொர்க்கம். ஏண்டா கிளம்பினோம்னு இருக்கு. இன்னும் கொஞ்ச தூரம் நடந்து போனா, மனுஷாளை வெட்டி பலி கொடுப்பாளோன்னு இருக்கு.

''சோழநாடு சோறுடைத்துங்கறாளே. ஏன் ஆடு வெட்டி திங்கணும். ஏன் மாமிசத்துக்கு அலையணும். நெல்லே விளையாத தேசத்துல, மரமே இல்லாத பாலை வனத்துல ஆடோ, மாடோ, ஒட்டகமோ வெட்டித் திங் கலாம். கடல்தான் வாழ்க்கைன்னு இருக்கறவன் மீன் திங்கலாம். இவா ஏன் ஆடு வெட்டறா. இதுக்கு ஏன் ஸ்வாமிய இழுக்கறா?''

அவருக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

அவர் கேள்வியும் அதுவாகவே இருந்தது. ஆனால், மனைவியின் மனதை மாற்றி சந்தோஷப்படுத்த வேண்டு மென்று அவருக்கு உதயமாயிற்று.

தேவார, திருவாசகங்களைப் பாட ஆரம்பித்தார்.

செடிகளையும், மரங்களையும் அடையாளம் காட்டினார். தும்பைப் பூவை மாலையாகக் கட்டிக் கொடுத்தார்.

பிற்பகலில் ஆழமில்லாத காவிரிக் கால்வாயில் அவர்கள் நீராடினார்கள்.

அவளுக்கு சுமாராகத்தான் நீந்தத் தெரிந்திருந்தது.

அவளை நீரில் மிதக்க விட்டு, வயிறு தாங்கி, கைவீசி கால் உதைத்து நீந்தக் கற்றுக் கொடுத்தார்.

ஆள் அரவமில்லாத அந்த இடத்தில், அவர் மனைவி துளைத்து நீந்தினாள். கும்மாளம் போட்டாள்.

வாழைமட்டையை கட்டிப்பிடித்துக் கொண்டு வெகு தூரம் ஆற்றோடு போனாள். பிறகு கரையேறி, ஒட்டிய ஆடைகளோடு புருஷன் இருக்கும் இடம் நோக்கி குலுங்கலாய் ஓடிவந்தாள். அவர் தோளில் கால் ஊன்றி நின்று, நீரில் குதித்தாள்.

'ஈஸ்வரா... நான் எல்லா அபச்சாரமும் பண்றேன்'' என்று சொல்லிக் கொண்டே ஆனந்தமாய் நீந்தினாள்.

புதருக்குப் பின்னே, ஒரு புடவை மறைப்பு புருஷன் கட்டித்தர, அங்கு உடை மாற்றிக் கொண்டாள்.

கும்பகோணம் நெருங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மாடமாளிகையோடு உள்ள முரட்டு கிராமங்களைத் தாண்டிப் போக வேண்டியிருந்தது.

திருப்புவனத்துக்கு அருகேயுள்ள கிராமத்தில் தன் அண்ணாவிற்கு வேட்டியும், மன்னிக்கு புடவையும் வாங்கிக் கொண்டாள்.

வாழைத்தாரும், வெள்ளரிப் பிஞ்சும், பனையோலைப் பெட்டியில் அடைக்கப்பட்ட கருப்பட்டியும் மாட்டு வண்டியில் ஏறின.



கும்பகோணம் தெருக்களில் வழியடைத்து பந்தல் போட்டிருந்தார்கள். பளபளக்கும் பித்தளைப் பாத்திரங்களை கோயில் மண்டபங்களில் குவித்து விற்றார்கள்.

இரண்டு பெரிய குடங்கள் வாங்கிக் கொண்டு, அதில் துணிகளையும், கருப்பட்டிகளையும் போட்டு, அதைச் சுற்றி கதம்ப மாலை அணிவித்து, அண்ணனின் வீடு வந்ததும் ஒரு குடத்தைத் தலையிலும் ஒரு குடத்தை இடுப்பிலுமாய் சுமந்து, வாசற்படியில் நின்று, 'அண்ணா' என்று குரல் கொடுத்தாள்.

அந்தத் தெருவே அவள் இறங்கிய கோலத்தை விநோதமாகப் பார்த்தது.

எல்லோரும் பார்க்கிறார்களா என்று அவளும் பார்த்துக் கொண்டாள்.

''நான் ஒரு குடத்தை எடுத்துக்கட்டுமாடி'' என்று சுப்ரமணியத்தின் அம்மா கேட்டபோது, 'வேண்டாம் உங்களுக்கு கை வலிக்கும்' என்று மறுத்து விட்டாள்.

''ஆமாம். எனக்கு கை வலிக்கும். இன்னிக்குத்தான் முதல் முதலா பித்தளைக் குடமே தூக்கப் போறேன்.'' அம்மா முணுமுணுத்தாள்.

சுப்ரமணியத்திற்கு சிரிப்பு வந்துவிட்டது.

''இவளுக்கு அலட்டிண்டு நிக்கணும். தானே சம்பாதிச்சு, சீர்கொண்டு வந்தா மாதிரி சகோதரனுக்கு முன்னாடி காமிக்கணும். தெருவிலே இருக்கறவா, ஹான்னு இவளைப் பார்க்கணும்.''

''நத்தைக்கு மீசை இருந்தா முறுக்கத்தான் செய்யும். முதுகில் கூட்டைத் தூக்கிண்டு போறேன்னு, முச்சந்தியில நின்னு காட்டிட்டுத்தான் போகும். பண்ணட்டும்'' முணுமுணுத்தாள்.

சுப்ரமணியத்தின் மனைவி கம்பீரமாய் உள்ளே போனாள்.

குழந்தைகள் அவளைச் சுற்றி கூச்சலிட்டன.

அண்ணாவையும், மன்னியையும் கிழக்குப் பார்த்து நிற்க வைத்து, குடங்களை அவர்கள் காலின்கீழ் வைத்து விழுந்து நமஸ்கரித்தாள்.

''ஆசீர்வாதம் பண்ணுங்கோண்ணா'' என்று விரும்பி கேட்டுக் கொண்டாள்.

''தீர்க்க சுமங்கலியா இருக்கணும்.''

''பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழணும். எல்லா சுகங்களையும் அனுபவிச்சு, பல க்ஷேத்திரங்களுக்கு போகும்படியான பாக்கியம் கிடைச்சு, அந்தப் புண்ணியத்தினாலே வம்சவிருத்தியாகணும். தொங்க தொங்க தாலி கட்டி நிறைவா வாழணும். எல்லா நல்ல மனோரதங்களும் ஈடேறணும்.''

அண்ணாவும், மன்னியும் பல்வேறு அலங்கார வார்த்தைகளுடன் வாழ்த்தினார்கள்.

சுப்ரமணியத்தின் மனைவி கம்பீரமாய் வீட்டைச் சுற்றி வந்தாள். மன்னியோடு குசுகுசுவென்று பேசினாள்.

''ரொம்ப இளைச்சுட்டேள் அண்ணி. அண்ணாவும் வாடலாத்தான் தெரியறார். எங்கிட்ட சொல்லப்படாதா. கொல்லைப்பக்கம் வாங்கோ, எங்கிட்ட சொல்லுங்கோ?'' மன்னியை இழுத்துக் கொண்டு கொல்லைப்புறம் ஓடினாள்.

''என்னடா ஆச்சு?'' அப்பா திரும்பி சுப்ரமணியத்திடம் கேட்டார்.

''என்னதுப்பா?''

''உம் பொண்டாட்டி பத்து பன்னிரெண்டு பெத்த மாதிரி நிறைய பேசறா.''



''இவன் வழிமுழுக்க கொஞ்சிண்டே வந்தான். இவன் உச்சந்தலையில் கால்வைச்சு, ஓடையில குதிச்சு குளிச்சா. நீங்க கொடுத்த காசிலே அவ அண்ணாவுக்கு, கருப்பட்டியும், வெங்கலப் பானையும் வாங்கிண்டா, அவ்ளோதான். கர்வம் கொடி கட்டிப் பறக்கறது.''

''பறக்கட்டுமேம்மா. உம் பேரன், உன் பேத்தி. அவா கர்வப்பட்டா உனக்கா வலிக்கிறது...''

''எனக்கு ஒரு வலியுமில்லை. பொம்மனாட்டி கொஞ்சம் அடக்கமா இருக்கணும்.''

''அவ சந்தோஷமா இருக்காம்மா. அண்ணா ஆத்துக்கு வந்திருக்கோம்னு சந்தோஷமா இருக்கா. அவ மன்னியோட அப்பாவும் ஒரு வகையில நமக்கு உறவு. இத்தனை நாள் வீட்டோட அடைஞ்சு கிடந்தாளா... இங்கே எல்லாரையும் பார்த்தவுடனே உரக்கக் கத்தணும், பேசணும்னு தோணறது. அவ சந்தோஷத்தை வேடிக்கை பாரேன்.''

''சரி.'' அம்மா பிள்ளைக்கு அடங்கினாற்போல பதில் சொல்லிவிட்டு, பேத்தியை முறைத்துப் பார்த்தாள்.

கொள்ளுப் பேரன்கள் சுற்றிக் கொண்டதும், அவள் முகமும் சிரிப்பானது.

மைத்துனனின் மனைவி, தொண்டை தேசத்துப் பெண். திருவான்மியூர் கிராமம். மெல்லிய கருப்பு. ஆனால் முகம் மிகக் களையாக இருக்கும். தேனினும் இனிய குரல். பாடப்பாட கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

அவளுடைய தந்தை எந்தக் கோயிலையும் சார்ந்தவரல்ல. வைதீக காரியங்களில் ஈடுபட்டவருமல்ல. நஞ்சையும், புஞ்சையும் வைத்து நிர்வாகம் செய்து

கொண்டிருப்பவர். உறவினர் நிலங்களை குத்தகைக்கு எடுத்து, வரி போக மீதத்தைப் பங்கு போட்டுக் கொள்பவர். சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் இருந்தாலும் தமிழ்மீது மிகப் பிரியமுடையவர்.

அவரைச் சுற்றி எப்போதும் நகரத்தார்களும், வேளாளர்களும், காவல் படையிலுள்ள முதலியார்களும், பாண்டிய நாட்டு மறவர்களும் அமர்ந்திருப்பார்கள்.

தஞ்சாவூர்க்காரர்களோடு பார்க்கும்போது, அந்த திருவான்மியூர் அந்தணரின் ஆச்சாரம் சற்று குறைவுதான். ஆனால், முகத்தில் கவலையே தெரியாது. பிரச்சனை எவ்வளவு இருந்தாலும், சிவபெருமான் திருநாமம் சொல்லி தாண்டும் மனப்பாங்கு உடையவர். கோபமே இல்லாதவர்.

அந்த குணம் அவர் மகளுக்கும் இருந்தது.

தொண்டை தேசமென்பதால் சமஸ்கிருத ஸ்லோகங் களை விட தேவார, திருவாசகங்கள் மீது அந்தக் குடும்பம் காதலாகியிருந்தது. தினமும் உண்மையாய் உளமுருகிப் பாடியது.

சுப்ரமணியத்தின் கல்யாணத்தில் பிற்பகல் விருந்திற்குப் பிறகு, நலங்கு ஆரம்பிக்கும் நேரத்தில், பந்தலின் ஓரத்திலிருந்து மைத்துனன் மனைவி குடும்பம், 'பொன்னார் மேனியனே' என்று பாடத் துவங்கியது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

மைத்துனனின் மனைவியும் போய் அவர்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டாள்.

கணீரென்று அவள் குரல் பந்தலைச் சுற்றி வட்ட மிட்டது.



''தோடுடைய செவியன்'' என்று மனசெல்லாம் இனிப்பு ஏற்றியது. புத்தி முழுவதும் தேன்சுவை பரவியது.

அந்த தேவார, திருவாசகப் பாடல்களைக் கேட்க கேட்க, உடம்பும் மனதும் சுகமாய் சுருண்டு கொண்டன. இறையுணர்வு என்ற போதையில் தள்ளாடி அலைந்தன.

கைத்தாளம், மிருதங்க சப்தம், வேய்ங்குழல் என்றே வாத்திய சுற்றத்தோடு அருவியாய் அவர்கள் பாடிக் கொண்டே போனார்கள். நலங்கே மறந்து போனது.

யாரோ ஒரு பெண்மணி ஞாபகப்படுத்திய போது, 'சிவனுக்கும் பார்வதிக்கும் பாட்டாய் நலங்கு நடந்து கொண்டிருக்கிறது. பேசாமல் கேட்டுக் கொண்டிரு' என்று அவளை அதட்டினார்கள்.

அந்தி சாயும்போது, மாலை நேரத்து ஸந்தியா வந்தனம் ஞாபகம் வந்து, அந்தணர் கூட்டம் மனசு கனத்தோடு எழுந்தது.

பேருக்கு ஒரு நலங்கு நடந்தது.

நலங்கு முடிந்த கையோடு மனைவியை வலியக் கூட்டி, பாட்டுப் பாடிய அந்த குடும்பத்தினரின் முன்னே, மைத்துனள் மனைவியின் தகப்பனார், தாயார் கால்களில் மனம் கனிந்து சுப்ரமணியம் வணங்கினார்.

''சர்வேஸ்வரா'' என்று கண்ணில் நீர்வழிய கைகூப்பினார்.

''நான் பெரிய பிரபு இல்லை. நிலம் நீச்சு வைத் திருக்கிற மிராசுதார் இல்லை. சாதாரண பஞ்சாங்க பிராமணன். என்னால் முடிந்தது யத்கிஞ்சிதம்... சம்பாவனை.'' ஐந்து தங்க மொஹராக்களோடு வேட்டி துண்டும் கொடுத்தார்.

"என் சிவனே... நான் என் சந்தோஷத்திற்கல்லவா பாடினேன்." பாடியவர் சம்பாவனையை மறுத்தார்.

"அப்படியாகவே இருக்கட்டும். கேட்ட என் சந்தோஷத்தை நான் எப்படி வெளிப்படுத்துவது. என் வெளிப்படுத்தலை வேறு எவ்விதம் காண்பிப்பது. தயவு செய்து ஏற்றுக் கொள்ள வேண்டும்."

தட்டை காலில் வைத்து மறுபடியும் நமஸ்கரித்தார்.

அந்தப் பெரியவருக்கு மனம் நெகிழ்ந்து விட்டது.

"தீர்க்காயுசா இருக்கணும். எல்லா சுகபோகங்களும் கிடைச்சு சந்தோஷமா இருக்கணும். ஈஸ்வர பிரத்யட்சம், அம்பாளுடைய சாட்க்ஷாத்காரம். ரொம்ப சீக்கிரம் கிடைக்கணும். பேரும் புகழுமா பவனி வரணும். ததாஸ்து, ததாஸ்து, ததாஸ்து."

உணர்வு பூர்வமாய் பொங்கிப் பொங்கி வாழ்த்தினார்.

வெகுநாள் கழித்து அந்தப் பெண்ணைப் பார்க்கும் வாய்ப்பு இன்று கிடைத்திருக்கிறது.

உடம்பு வாளிப்பாய் இருந்தாலும், முகம் வாட்ட மாயிருந்தது. வீட்டு வேலைகள் பரபரவென்று செய்தாலும், முகத்தில் ஒரு சுமூகமில்லாமல் இருந்தது.

"உங்களைப் பார்த்ததில் ரொம்ப சந்தோஷம்."

கூடத்திற்கு வந்து நமஸ்கரித்து விட்டுப் போனாள்.

"சமையல்ல ஏதாவது பிடிச்சது உண்டா, தள்ளுபடி உண்டா? தெரிஞ்சா அதுக்கேத்தபடி செய்துருவேன்." தாழ்ந்த குரலில் அனுமதி கேட்டாள்.

'எது வேண்டுமானாலும்' என்று சொன்ன பிறகு உள்ளே ஓடினாள்.



கும்பகோணக் காவிரியில் குளித்துவிட்டு வருவதற்குள் சமையல் தயாராக இருந்தது.

சிறிய பூஜைக்குப் பிறகு, பத்து நிமிடம் வேதகோஷத்திற்குப் பிறகு இலை போடப்பட்டது.

இரண்டு வகைக் கூட்டும், மூன்று வகைப் பொரியலும் பச்சடியும் பாயசமும், உளுந்து வடையும்... என்று ஒற்றைப் பெண் அமர்க்களமாய் சமைத்திருந்தாள்.

குழந்தைகளோடு பெரியவர்களும் உட்கார்ந்து குதூகலமாய் சாப்பிட்டார்கள்.

"புத்ர காமேஷ்டி யாகம் சரபோஜி ராஜா பண்றாரா, நாம பண்றோமான்னு தெரியலை. நம்ம ஆத்து விசேஷத்துக்குக் கூட, இப்படி விருந்து அமையாது. பாவம், தனி பொம்மனாட்டியா எத்தனை தினுசு பண்ணியிருக்கா. ரொம்ப சமர்த்து. ரொம்ப சமர்த்து."

அம்மாவும் அப்பாவும் மாறிமாறி பாராட்டினார்கள்.

"உங்களுக்கு என் சமையல் பிடிச்சிருக்கா?" அந்தப் பெண் பரிமாறிக் கொண்டே சுப்ரமணியத்தைக் கேட்டாள்.

"ரொம்ப, ரொம்ப... இந்த அக்கறைக்கு நாங்க என்ன பதில் கைம்மாறு பண்ணப் போறோம். நிறைய காசு பணத்தோட ரொம்ப க்ஷேமமா..." சுப்ரமணியம் பேச அவள் கைத் தூக்கி மறுத்தாள்.

"காசு வேண்டாம். நிம்மதி கிடைச்சாப் போறும். காசால கிடைக்கிற சந்தோஷம் துக்கத்திலேதான் போய் முடியறது. எனக்கு காசு பணம் வேண்டவே வேண்டாம்."

"நிம்மதிங்கறது பொதுவான வார்த்தை. காசு பணம் வேண்டாம்னா வேற எதுக்கு ஆசைப்படறேள்?"

''ஸ்வாமியப் பாக்கணும். கடவுள்னா என்னன்னு தெரிஞ்சுக்கணும். ஸ்வாமிங்கறது ஸ்ரீ சக்கரமா. மந்திர சப்தமா. மனுஷாளா... இதெல்லாம் இல்லாத ஒன்னா அல்லது இதெல்லாம் சேர்ந்தது தானா அப்படின்னு தெரிஞ்சுக்கணும்.'' மைத்துனனின் மனைவி குரல் தழுதழுக்க சுப்ரமணியத்திடம் பேசினாள்.

''அதெல்லாம் அப்புறமா தெரிஞ்சுக்கலாம். முதல்ல ரசத்தை ஊத்து.'' எதிர் இலையிலிருந்து மைத்துனன் கூவினான்.

நீ பேசியது போதும் என்று மறைமுகமாய் கட்டளை யிட்டது போல் அந்த அதட்டல் இருந்தது.

ஆனால், அந்தப் பெண்மணி இதை புறக்கணித்தாள்.

''எனக்கு எவ்ளோ சீக்கிரம் தெரிஞ்சுக்க முடியுமோ, அவ்ளோ சீக்கிரம் தெரிஞ்சுக்கணும். இது சாவகாசமா தெரிஞ்சுக்கற விஷயமில்லைன்னு எனக்குத் தெரியும்.''

''இது சாகறபோது தெரியற விஷயம்டி.'' புருஷன் கூச்சலிட்டான்.

''அப்படியானா எனக்கு இப்பவே சாகணும்.'' அவள் சட்டென்று பதில் சொன்னாள்.

''ஏய்...'' மைத்துனன் எதிரிலிருந்து எச்சில் கை தூக்கி அதட்டினான்.

''சாப்பிடும்போது கோபப்படக் கூடாது. ஸ்வாமிய தெரிஞ்சுக்க ஆசைப்படறதுக்கு எல்லா உயிருக்கும் உரிமையுண்டு. இதுக்கு அகமுடையான் கிட்ட அனுமதி கேட்கணும்னு அவசியமில்லை. அனுமதி கொடுத்துட்டா கிடைக்கிற விஷயமுமில்லை.''

''அவாளுடைய ஆசை நியாயம். அந்த வேகம் நியாயம். இந்த வேகம் இருந்தாதான் எப்போதாவது கிடைக்கலாம்.''



''நான் அதெல்லாம் வேண்டாம்னு சொல்லலை. சாப்பிடறபோது எதுக்கு சுவாமிப் பேச்சு?''

''நாம் சாப்பிடறது, கொள்றதே ஸ்வாமிய தெரிஞ் சுக்கத்தானே... வேற எதுக்காகவும் நாம பொறக் கலையே...''

''இதோ இந்த நல்ல சாப்பாடு சாப்பிடற திருப்தியில சொல்றேன். உங்களுடைய நல்ல மனோரதங்கள் நிச்சயம் நடக்கும். யாரும் தடுக்க முடியாது.'' சுப்ரமணியம் அடிமனதிலிருந்து பேசினார்.

அவள் மறுபடியும் நமஸ்கரித்து விட்டு, அவர் குவித்த உள்ளங்கையில் உத்திரணி ஜலம் ஊற்றினாள்.

''பதிலுக்கு எனக்கொரு உதவி பண்ணனுமே...'' சுப்ரமணியம் அவளைப் பார்த்துப் பேசினார்.

'நானா... உதவியா... என்ன...?'' அவள் வியந்தாள்.

''நீங்க சாப்பிட்டு முடித்து பிறகு, சிரமமில்லை யென்றால், நம்ம சோழ தேசம் சௌக்யமா இருக்கணும்னு பதிகம் பாடணும். உங்களுக்கு என்ன தோணறதோ, அதைப் பாடணும். நீங்க பாடி நான் கேட்டு ரொம்ப நாளாச்சு.''

வெற்றிலையும், கொட்டைப் பாக்கும், மல்லிகைப்பூ வாசனையில் நனைக்கப்பட்ட சுண்ணாம்பும் கலந்து போட்டுக் கொண்டபோது, மைத்துனன் மனைவி வெங்கலத் தாளத்தோடு கூடத்தின் ஓர் ஓரத்தில் வந்தமர்ந்தாள்.

''திருநெடுங்களம்னு ஓர் ஊர்'' மெல்லப் பேசத் துவங்கினாள்.

''தஞ்சாவூர்லேருந்து திருச்சிராப்பள்ளி போற வழியில இருக்கு. திருச்சிராப்பள்ளியிலிருந்து கிட்டக்க. ஸ்வாமி பேரு நித்ய சுந்திரேஸ்வரர் அல்லது நெடுங்கள

நாதர். இறைவியின் பெயர் மங்கள நாயகி அல்லது ஒப்பிலா நாயகி.

"இது சிறிய ஊர். பழைய கோயில். அகத்திய முனிவர் வழிபட்ட தலம். திருஞான சம்பந்தர் இங்கே தன் கோஷ்டியோடு போனபோது, கோஷ்டியில் நிறைய பேருக்கு வெப்பு நோய் வந்துடுத்து.

'நாங்கள் குறைகளுடையவர்கள்தான். சாதாரண மனுஷாதான். எங்கள் குற்றங்களை மன்னித்துவிடு. ஆனால், சிவனே தெய்வம் என்ற கொள்கையால் நாங்கள் சிறந்தவர்கள். எங்களுக்கு வந்த துன்பத்தை நீக்கிவிடு' அப்படின்னு பாடினார்.

"எப்பவோ பல நூறு வருஷங்களுக்கு முன்னாடி பாடின பாட்டு, இப்பவும் வருத்தமா இருக்கு. இன்னிக்கும் நாம குறையுள்ளவர்கள் தான்.

"இந்த சோழ தேசத்துல எல்லா விஷயங்களும் முட்டாள்தனம்தான், ஆனாலும், சுவாமி முக்கியம்ன்னு நிறைவு உடையவர்கள் சிலபேர் இருக்கிறதினாலே, இந்த தேசத்துக்கு வந்த கஷ்டத்தை சிவபெருமானே... நீ நீக்க வேண்டும்."

அவள் விளக்கி விட்டு பாட ஆரம்பித்தாள்.

"மறையுடையாய் தோல் உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்று உன்னைப் பேசின் அல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே."

உயிர் துடித்தது. அவள் பாடப் பாட உள்ளம் சுழன்று லேசாயிற்று. கண்களில் நீர் கட்டி நின்றது. கண்களில் கட்டிய நீர் வழியாதிருக்க, மூக்கு உறிஞ்ச வேண்டியதாயிற்று.



சுப்ரமணியம் அந்த அழகுத் தமிழில் தோய்ந்து நின்றார்.

பேசும் பாஷையில் இறைவனைத் துதிப்பது எத்தனை சுகம். வடமொழியில் யாரும் பேசுவதில்லை. ஆனால், வடமொழி அறிந்தவர்கள் தமிழில் பேச மட்டுமே உபயோகப் படுத்துகிறார்கள். தமிழ்ப் பாடல்களை பாராட்டாது ஒதுக்கி விடுகிறார்கள்.

இதோ, காது குளிர தமிழ்ப் பாட்டு உள்ளே இறங்கி, உள்ளத்தைக் கவ்வி, கண் சொருக வைக்கிறது. பிசிறே இல்லாத தமிழ். பிழையே இல்லாத தமிழ். மந்திரம் போலும் சொல் வலிமையுள்ள தமிழ்.

இன்று பாடினாலும் நோய் தீர்க்கும் இப்பதிகம். துன்பம் நீக்கும் இந்தப் பாட்டு.

இந்த அழகுத் தமிழை மக்கள் ஏன் ஆதரிப்பதேயில்லை.

அரசு மொழி மராட்டி. அதிகாரிகள் நிறைய பேர் தெலுங்கர். பேச்சு வன்மையுடைய பிராமணர் மொழி சமஸ்கிருதம். மறவர்களும், வேளாளர்களும் மட்டுமே தமிழை ஆதரிக்கிறார்கள். மற்றவர்கள் வெறும் கர்வத்தால் இந்த இனிமையைப் புறக்கணிக்கிறார்கள். தமிழ் பாட்டு கேவலம் என்று அகந்தை மிக்க அந்தணர்கள் நினைக்கிறார்கள்.

சுப்ரமணியம் யோசித்துக் கொண்டே இருக்க, மைத்துனனின் மனைவி தொடர்ந்து பாடினாள்.

"நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்று அடங்கூற்று உதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே."

''என் அடியார்களுக்கு அருகே வராதே என்று எமனை உதைத்தவனல்லவா நீ. உன் அடிகளைப் போற்றி நிற்கும் அன்பர்களின் துன்பத்தைக் களைவாய். நெடுங்களம் என்ற ஊரில் வாழ்பவனே...'' அந்தப் பெண் விளக்கமும் சொன்னாள்.

''இன்னிக்கும் யாருக்காவது உடம்பு சரியில் லேன்னா, இந்தப் பாடல்களைப் பாடினா போறும். மனசு சரியில்லேனனா இதை உக்காந்து பாடினாப் போறும். மனசோ, உடம்போ உடனே சரியாயிடும்.''

சுப்ரமணியம் திரும்பிப் பார்க்க, அவர் மனைவியின் கன்னத்தில் கண்ணீர் வழிந்திருந்தது.

''என்ன... உனக்கு பாட்டு பிடிச்சுடுத்தா, உன் கண்ணிலும் ஜலம் வர்றது.''

''ராஜமக்காவை நினைச்சுண்டேன். அவா மனசும் உடம்பும் சௌக்கியமா இருக்கணும்னு வேண்டிண்டேன்.'' ரகசியமாய் சொல்லி கைகூப்பினாள்.

''கொஞ்சம் சிரம பரிகாரம் பண்ணிக்கோங்கோ. சாயந்திரமா வெய்யில் தாழ கோயிலுக்குப் போகலாம்.''

பலரும் பல மூலைகளில் சுருண்டு கொள்ள, சுப்ரமணியம் கொல்லைப் புறத்து வேப்பமரத்து நிழலில் போய் அமர்ந்தார்.

அவர் பின்னாலேயே அவர் மனைவியும் வந்தாள்.

''ரொம்ப பாவம்'' என்று பொதுப்படையாய் ஆரம்பித்தாள்.

''யார்?''

''எங்க மன்னிதான்.''

''என்ன சமாச்சாரம்?''



''அண்ணா தட்டைத் தூக்கி மூஞ்சியில் அடிக்கிறானாம். சின்னத் தப்புக்கெல்லாம் கண்ட மேனிக்கு கத்தறானாம். ஒரு தடவை சவுக்குக் கட்டையால அடிச்சுட்டானாம். ரொம்ப அசிங்கமா போயிடுத்தாம்.

''வேத பாடசாலைல பாடம் சொல்லித் தர்றதோட கணக்கு வழக்கு உத்யோகமாம். அதிலே ஏதோ குளறுபடி யாம். அதிகாரிகளை அனுசரிச்சுண்டு போகணுமாம்.

''எதுக்கு பள்ளிக்கூடம், ஏன் பாடம்னு கேலியாம். அங்கே எதிர்த்துப் பேசமுடியாம அந்தக் கோபத்தை இவா மேல காண்பிக்கிறானாம்.''

சொல்லும்போதே அவளுக்கு குரல் உடைந்தது. முகத்தில் வேதனை மின்னிற்று.

''உங்களை எங்க அண்ணாகிட்ட பேசச் சொல்றா. நல்லவர்தான். ஆனா, ஏன் இப்படி முன்கோபியா இருக்கார்னு வருத்தப்படறா.''

''கணவன் - மனைவி விஷயத்தில் யாரும் தலையிடக் கூடாது. தலையிட்டு சமாதானமாகாவிட்டால் அது நமக்கும் நல்லதல்ல. அவர்களுக்கும் நல்லதல்ல. வேறொருவர் தலையிடும் அளவுக்கு விஷயம் பெரிதாகவுமில்லை.''

''இந்தப் பிரச்சினை தீர வேண்டுமே'' அவர் மனைவி வற்புறுத்தினாள்.

''வேண்டுவோம். மாலை எங்கேனும் கோயிலுக்குப் போய், ஸ்வாமியிடம் பிரார்த்தனை பண்ணிக் கொள்வோம். நம்முடைய பிரார்த்தனை இந்தக் குடும்பத்தை சந்தோஷ மாக்கும். கவலையே படாதே.''

''நீங்கள் இருக்கும்போது எனக்கென்ன கவலை?''

''பிறகு ஏன் அழுதாய் கண்மணி. மன்னியின் நிலைமையை நினைத்ததும் உனக்கு அழுகை வந்துவிட்டதா?''

''என் சொந்த அண்ணன் தன் அகமுடையாளை ஹிம்ஸை செய்கிறான். அவமதிக்கிறான். ஏய் என்று நாலு பேர் முன்பு எச்சல் கையை ஓங்குகிறான். ஆனால், எனக்கு புருஷனாக வாய்ந்த நீங்களோ, என்னை உள்ளங்கையில் வைத்து தாங்குகிறீர்கள். 'கண்மணி, கண்மணி' என்று குழந்தையைப் போல கொஞ்சுகிறீர்கள். நான் தோள்மீது கால் வைத்து ஏறுகின்ற அளவுக்கு என்னிடம் பிரியமாய் நடந்து கொள்கிறீர்கள். நான் கேலி செய்தாலோ, கோபப்பட்டாலோ பொறுத்துக் கொள்ளுகிறீர்கள்.

''மன்னியைப் போல் 'பாடவோ, பேசவோ, சமைக்கவோ ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனாலும், நான் சௌக்கியமாக, சந்தோஷமாக, அதீத சுதந்திரமாக வாழ்கிறேன்.

''என் அதிர்ஷ்டத்தை நினைத்து எனக்கு அழுகை வந்து விட்டது. நான் பிழைபட ஏதாவது நடந்திருந்தால் தயவு செய்து பொறுத்துக் கொள்ள வேண்டும். மன்னியைப் போல் கெட்டிக்காரியாக இருக்க சொல்லித் தர வேண்டும். நான் என்ன செய்தாலும், எத்தனை அசட்டுத்தனங்கள் செய்தாலும் என்மீது பிரியம் குறையாதிருக்க வேண்டும். மறுக்காமல் சரியென்று சொல்ல வேண்டும்.''

சுப்ரமணியத்தின் மனைவி அவருக்கு அருகே உட்கார்ந்து, இழைந்து கொஞ்சினாள். மடியில் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

''இவ்வளவுதானா. இல்லை இன்னும் வேறெதும் இருக்கிறதா?'' சுப்ரமணியம் கேட்டார்.

''மன்னியின் முகம் மலரும்படி ஏதாவது செய்யுங்களேன்?''



''நான் என்ன சித்து வேலைக்காரனா, இல்லை சொக்குப் பொடி போடுபவனா.''

''ஆமாம். ரெண்டும்தான்.''

''என்ன சொல்கிறாய் கண்மணி?''

''மன்னி கைகூப்பி, எவ்வளவு பவ்யமாக உங்களிடம் பேசினாள். சுவாமியைப் பார்க்க வேண்டுமென்று எப்படி வரம் கேட்டாள். நான் ஆடிப்போய் விட்டேன். எல்லாம் தெரிந்த மன்னி, நீங்கள் யாரென்று தெரியாமலா கேட்பாள். நான்தான் அசடு. புருஷன்மீது மரியாதையே இல்லாமல் ஆடியும், பாடியும் கேலி செய்துவருகிறேன்.''

''கண்மணி. நீ இயல்பாயிரு.''

''எனக்கொரு சந்தேகம்?''

''என்ன?''

''நீங்கள் இவ்வளவு நல்லவராயிருக்கறத்துக்கு என்ன காரணம்? படிப்பா, பழக்கமா, இறையருளா.''

''இறையருள்தான் கண்மணி. உலகத்தின் எல்லா காரியத்திற்கும் இறையருள்தான் காரணம். ஆமாம். நீ என்று நல்ல சமையல் செய்ய கற்றுக் கொள்ளப் போகிறாய்?'' பேச்சு மாற்றினார்.

''மன்னியின் சமையல் அற்புதம் இல்லை...'' அவளும் திசை மாறினாள்.

புருஷன் தலைக்கு எண்ணெய் தடவி, குடுமியை சிக்கெடுத்து, வாரிவிட்டாள். மீதி எண்ணெயை முதுகில் அழுத்தித் தேய்த்தாள்.

''கடலை மாவு கொண்டு வருகிறேன். முகம் தேய்த்து மேலுக்கு குளித்து விடுங்கள். எல்லோருடனும் கோயிலுக்குப் போகலாம்.''

உள்ளே ஓடினாள்.

ஓடிய வேகத்திலேயே திரும்பி வந்தாள்.

''அப்பா, அண்ணா, மன்னி எல்லோரும் தஞ்சாவூருக்குக் கிளம்புகிறார்களாம். உங்கள் உத்தேசத்தை விசாரித்து வரச் சொன்னார்கள்.''

''நாம் இன்றிரவு இங்கு தங்கிப் போவோம்.''

''அப்படியா... ஏன்?'' அவள் வியப்போடு புருஷனைக் கேட்டாள்.

''உன்னுடைய மன்னிக்காக கும்பேஸ்வரரிடம் வேண்டிக் கொண்டு போகலாம். மங்களாம்பிகை சன்னதியில் ஏதாவது வேண்டுதல்கள் செய்து கொள்ளலாம்.''

அவள் சரியென்று சொன்னாள்.

சற்று நேரம் கழித்து...

''நமக்கு மாட்டு வண்டி வேண்டாமா?'' கவலையோடு கேட்டாள்.

''அதற்கும் கும்பேஸ்வரரிடமே வேண்டிக் கொள்ளலாம்.'' சுப்ரமணியன் கண் சிமிட்டினார்.

''இன்று தங்கிவிட்டு வருகிறேன் என்று சொன்னாயாமே...'' அப்பா கேட்டார்.

''ஆமாம் அப்பா.''

''என்ன?'' அப்பா வினவினார்.

''மனைவியை நமஸ்கரிக்க முடியுமா என்று யோசிக்கிறேன்.''

''அப்படியா மிகுந்த சந்தோஷம். இன்று அற்புதமான நாள். திதி, வாரம், யோகம் எல்லாம் இன்று சிறப்பாக இருக்கிறது. இரவு குளிர ஆரம்பித்துவிடுகிறது.



''உன் ஒவ்வொரு செயலிலும் உன்னை வேடிக்கைப் பார்க்கக் கற்றுக்கொள். உன்னையே நீ விலக்கிப் பார். உன்னை வேறு யாரோவாகவோ நினைத்துக் கொள். அப்போது இது எளிதில் கைக்கூடும்.''

''உங்கள் ஆசீர்வாதம் அப்பா.''

''சுப்ரமணியம் எனக்கு பல நல்ல சொப்பனங்கள் ஆகின்றன. உன் தலையில் யாரோ கிரீடம் வைப்பது போலவும், உன்மீது பூ மழை பொழிவது போலவும், உன்னைக் கருப்புநிற ஒற்றைக் கொம்பு யானை துரத்தி தூக்குவது போலவும் கனவு கண்டேன். யானை துரத்துவதாய் கனவு காண்பது நல்லது. நீ உயர்ந்த நிலைக்கு போகப் போகிறாய் என்றே இதற்கு அர்த்தம்.

''ஆனால், யானை தூக்கும்போது நீ பயந்து அலறுகிறாய். நானும் உன் அம்மாவும் ஈஸ்வரன் பெயர் சொல்லி அலறுகிறோம். யாரோ சிலர், பிராமணர்கள் தான் உன் அவஸ்தையைக் கண்டு கொக்கரித்து சிரிக்கிறார்கள்.

''நம் அலறலெல்லாம் பொய்யாகும் வண்ணம் யானை உன்னை தலையில் வைத்து சந்தோஷமாய் நடனமாடுகிறது. எல்லோரும் உன்னைப் பணிந்து நிற்கிறார்கள்.

''இந்தக் கனவு பயமாகவும் இருந்தது, பரவசமாகவும் இருந்தது.

''சுப்ரமணியம். நீ ஸ்வாமியின் அருள் பெற்றவன். உனக்கு ஈஸ்வர தரிசனம் கிடைக்கும் என்று உனக்கு ஜாதகம் கணித்த அன்றே எனக்குச் சொல்லப்பட்டது.

''உனக்கு அஞ்சாமிடமான பூர்வ புண்ய ஸ்தானத்தில் குரு இருக்கிறார். பனிரெண்டாம் இடமான மோட்ச ஸ்தானத்தில் கேது. இந்த ரெண்டு அம்சமும் இருக்கிறவாளுக்கு தரிசனம் கிடைக்கிறதோட மட்டுமில்லாம, மறுபிறவியும் கிடையாது.

''நீ பிறந்தபோது நூற்றுக்கணக்கான பச்சைக்கிளிகள் கூரை முழுக்க உட்கார்ந்திருந்தன. ஒரு அஞ்சு நிமிஷம் எல்லாம் இடைவிடாம கூச்சல் போட்டன. அப்புறம் தானா பறந்து போயிடுத்து. கிளி அம்பாள் அம்சம்.

''சுப்ரமணியம், அப்படி ஈஸ்வர தரிசனம் கிடைத்தால், உன்னுள் சர்வேஸ்வரனைக் கண்டால், உன் தகப்பனான என்னையும் கரையேற்றி விடப்பா.''

சுப்ரமணியத்தின் அப்பா கை கூப்பினார்.

சுப்ரமணியத்திற்கு அடிமனதில் ஏதோ புரிந்தது. யார் யாரைக் கும்பிடுவது என்று கேள்வி வந்தது. கும்பிடுபவர் யார், கும்பிடப்படுகிறவர் யார் என்று பார்க்கத் தோன்றியது.

தன்னையே வணங்குவது போல தகப்பனை வணங்கினார்.

எல்லோரும் மாட்டு வண்டியில் ஏறிக் கிளம்ப, சுப்ரமணியமும் அவர் மனைவியும் கோயிலுக்குப் போனார்கள்.

மங்களாம்பிகை சன்னதியில் யாரோ அவருக்கு மாலை அணிவித்தார்கள். கூடைநிறைய பூக்களும், பழங்களும், பட்சணங்களும் தனித்தனியே கொடுத்தார்கள்.

கடைத்தெருவை வேடிக்கைப் பார்த்து வரும்போது ஒரு பத்து வயது சிறுமி நீண்ட வாழை மட்டையில் செண்பகப் பூக்களைத் திணித்து நாரால் சுற்றிக் கட்டி யிருந்தாள். மூன்று சக்கரத்திற்கு இரண்டு வாழை மட்டைகள் விற்றாள்.

வீட்டிற்கு வந்து பிரித்துப் பார்க்க, இருநூறு பூக்கள் இருந்தன. வீடு முழுக்க விசிறிவிட்டது போல் வாசனை வீசிற்று. ஒரு பூவை எடுத்து முகர்ந்தால் கிறுகிறுப்பு ஏற்பட்டது.



பூக்களை ஓரம் வைத்துவிட்டு, குத்துவிளக்கு வெளிச்சத்தில் அவர்கள் பட்சணங்கள் சாப்பிடத் துவங்கினார்கள்.

வாசற்கதவைத் தாளிட்டுவிட்டு கூடத்தின் எல்லா மூலைகளிலும் சுப்ரமணியம் விளக்குகள் ஏற்றினார். நடுக் கூடத்தில் கோலம் போட்டார். அகலமான நாற்காலியைக் கொண்டு வந்து கோலத்தின்மீது வைத்தார்.

நாற்காலியின்மீது மடித்த வேட்டிகளை வைத்தார். பட்டு சால்வையை நாற்காலியின்மீது விரித்தார்.

''ஏதாவது பூஜை செய்யப் போகிறீர்களா?''

''ஆமாம்.''

''என்ன பூஜை?''

''அம்பாள் பூஜை.''

''நாற்காலியும், பட்டு விரிப்பும் எதற்கு, விக்ரஹம் வைக்கவா?''

''ஆமாம்.''

''விக்ரஹம் எங்கிருக்கிறது?''

''எனக்குப் பின்னால் நின்று பேசிக் கொண் டிருக்கிறது.''

அவள் திரும்பிப் பார்த்தாள். புரிந்து கொண்டாள். ''நானா...?'' என்று கேட்டாள்.

''ஆமாம். நீதான் இன்றைய பூஜைக்கு விக்ரஹம்.''

''இப்படிச் செய்யலாமா?''

''எப்படி?''

''மனுஷாள் மனுஷாளை பூஜை செய்யலாமா?''

''மனுஷாள் பசுவை பூஜை செய்கிறபோது, மனுஷாள், மனுஷாளை பூஜை செய்யக்கூடாதா.''

''எனக்கொன்றும் ஆகிவிடாதே.''

''எனக்கு ஏதாவது ஆனபிறகுதான் உனக்கு ஆகுமே தவிர, என்னை மீறி உனக்கொன்றும் ஆகாது.''

''பூஜை என்றால் என்ன செய்வீர்கள்?''

''பஞ்ச உபச்சாரங்கள், அர்ச்சனைகள், பிரார்த்தனைகள் எல்லாம்தான்.''

''மனைவிக்குப் போய் புருஷன் பூஜை செய்வானா?''

''நீ மனைவியே அல்ல. மகா சக்தி.''

''நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?''

''இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இந்த மாலையை கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டும்.''

''பிறகு...''

''ஒரு ராணியைப் போல் அமர்ந்து, உனக்கு என்ன வேண்டுமோ அதையெல்லாம் என்னிடம் கேட்க வேண்டும்.

''நான் உனக்கு விசிறுகிறேன். கால் பிடித்து விடுவேன். பாட்டு பாடுவேன். ஏன் நடனமாடச் சொன்னால்கூட ஆடுவேன். உணவு ஊட்டுவேன். சின்னச் சின்னதாய் அலங்காரங்கள் செய்வேன்.''

''அடேயப்பா... கேட்கும்போதே கூச்சமாக இருக்கிறதே...''

''நீ என் கண்மணி அல்லவா... என் உயிர்த் தோழி அல்லவா... குயிலாகவும் மயிலாகவும் நான் உணரும் தேவதையல்லவா...''

''என்ன அது, குயில் மயில்?''

''உன் தோற்றம் மயில். உன் பேச்சு குயில். கண்ணைத் திறந்தாலும் நீ, கண்ணை மூடிக்கொண்டாலும் நீ.''



''அடேயப்பா... பேச்சு கவிதையாக இருக்கிறதே...''

''சூரியனைப் பார்த்து நிலவு பிரகாசிக்கவில்லையா. ஒரு பெரிய கவிதையைப் பார்த்து சிறிய கவிதை வருகிறது.''

''நான் இந்த விளையாட்டுக்கு வரவில்லையப்பா.'' அவள் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

''இது விளையாட்டே இல்லை. உலகத்தின் எல்லா உயிர்களிடமும் கடவுளைப் பார்ப்பது ஸ்ரீ வித்தையின் குறிக்கோள். மனைவியிடம் கடவுளைப் பார்ப்பது அந்தப் பாடத்தின் ஆரம்பம். எனவே தயவு செய்து, கூச்சப் படாதே.''

''சரி... நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?''

''சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்ளவேண்டும். ஒரு ராணியைப் போல கம்பீரமாய் அமர்ந்து கொள்ள வேண்டும்.''

அவள் அமர, அவர் மனைவிக்கு மாலையிட்டார். கை நிறைய செண்பகப்பூ எடுத்து, தலையில் சொரிந்தார்.

அவளுக்கு எதிரே சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார். அவள் கால்களை எடுத்து மடியில் வைத்துக் கொண்டார். கணுக்கால்களைப் பிடித்துவிட்டார். விரல் களை நீவினார். சொடக்கு எடுத்துவிட்டார். ஆடுதசைகளை மெல்ல பிடித்து விட்டார். முழங்கால் முட்டுகளை கட்டை விரலால் அழுத்தி இதம் செய்தார்.

''தளர இரு கண்மணி. இங்கு யாருமில்லை, நம்மைத் தவிர.''

''நீங்கள் ஏன் என்மீது இவ்வளவு பிரியமாக இருக்கிறீர்கள்?''

''நீ நல்லவள் கண்மணி. என்மீது நீ அளவுகடந்த பிரியத்தோடு இருக்கிறாயே... நானும் உன்மீது பிரியமாகத் தானே இருக்க வேண்டும்.''

''நான் ஒன்றும் அவ்வளவு அழகில்லையே...''

''யார் சொன்னது, நீ பேரழகி. எவ்வளவு நீரோட்டமுள்ள கண்கள் உன்னுடையது. உன் உதட்டழகை நான் எவ்வளவு முறைப் பார்த்து வியந்திருக்கிறேன் தெரியுமா. சிறிய மூக்கு, செதுக்கின முகவாய், சரிந்த தோள்கள், மூங்கில் புஜங்கள், அளவான மார்புகள், வயிறு ஆலிலை. இடை அமிர்த வீடு... உன்னை உட்கார்ந்து பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது.''

கைகளில் சந்தனம் குழைத்து, அவள் கன்னத்தில் தடவினார். கழுத்தை நீவினார். புஜங்களிலும் நெஞ்சிலும் தடவிவிட்டார். வயிறு, இடுப்பு எல்லா இடத்திலும் அப்பினார்.

''அப்பா...'' அவள் வாய்விட்டு சிரித்தாள்.

குங்குமத்தைத் தன் இடது உள்ளங்கையில் ஏந்தி நெற்றியில் திலகமிட்டார்.

கழுத்தில், தோள்களில், நெஞ்சுக் குழியில், தொப்புளில், முலைக்காம்புகளில், உள்ளங்கைகளில் பொட்டுகளிட்டார்.

முகத்தை உள்ளங்கையில் தாங்கி புருவமெழுதினார். கண்ணுக்கு மை எழுதினார்.

பிறகு, மஞ்சளைக் குழைத்து முழங்காலிலிருந்து பாதம் வரை தடவினார்.

உள்ளங்காலைத் தூக்கி அங்கேயும் மஞ்சளால் துடைத்தார். குங்குமக் குழம்பால், அவள் புறங்காலில் கோடுகள் போட்டார்.



மனைவியின் உடம்பு சந்தோஷத்தில் நடுங்குவது அவருக்குத் தெரிந்தது.

குனிந்து அவள் இரண்டு பாதங்களையும் எடுத்து, தன் தலையில் சூடிக்கொண்டார்.

''ஈஸ்வரா... என்ன இது?''

''நீ அம்பாள் கண்மணி.''

''இல்லை. நான் உங்கள் மனைவி.''

''ஆறு வருடமாகத்தான் நீ மனைவி. திருமணமான பிறகுதானே மனைவி. குழந்தையாய் இருந்தபோது நீ தெய்வம் தானே... அந்தக் குழந்தைத் தனத்தை, தெய்வ ரூபத்தை நான் இன்னமும் உன்னுள் பார்க்கிறேன். நல்லவர்கள் தெய்வரூபம் கண்மணி. நீ நல்லவள், மிக மிக நல்லவள்.''

''என்னை அதிகமாகக் கொண்டாடுகிறீர்கள்?''

''இல்லை கண்மணி. உன்னை மாதிரி மனைவி கிடைக்க தவம் செய்திருக்க வேண்டும். உனக்கு பிரிய மானதையே நான் எப்பொழுதும் செய்து கொண்டிருக்க வேண்டும். உன் விருப்பம் எது கண்மணி?''

''நீங்கள் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்பது தான் என் விருப்பம்.''

''நீ இருக்கும்போது எனக்கென்ன குறை. இதைத் தவிர உனக்கு வேறென்ன விருப்பம் கண்மணி?''

அவள் யோசித்தாள்.

அவர் மெல்ல அவளுக்கு விசிற ஆரம்பித்தார்.

அவள் காற்று சுகத்தில் கண்மூடிக் கொண்டாள்.

அவர் இன்னும் அக்கறையாக, மிருதுவாக விசிற ஆரம்பித்தார்.

மெல்ல பாட ஆரம்பித்தார்.

தாலாட்டு போல சிறிய வார்த்தைகள் கொண்ட அழகான பாடல். எல்லா குழந்தைகளுக்கும், எல்லா தாயாரும் பாடுகின்ற பாடல்.

அவள் மெத்தென்று நாற்காலியில் சரிந்து உட்கார்ந்தாள். கண்களை மூடிக் கொண்டாள்.

அந்தப் பாட்டு அவளை கிறங்கடித்தது.

அந்தப் பாட்டு அவள் வாயில் கைசூப்பித் திரிந்த குழந்தைக் காலங்களை நினைவு படுத்தியது.

விசிறி விசிறி உடம்பு குளிர்ந்து போன பிறகு, அவளுக்கு தூக்கமில்லாமல் விழிப்புமில்லாமல் ஒரு நிலை வந்தது.

அவள் உடை நெகிழ லஜ்ஜையின்றி சரிந்து உட்கார்ந்தாள். சந்தோஷமான அலட்சியம் அவளிடம் பரவியிருந்தது.

இருட்டு கொடுத்த தைரியம். குத்துவிளக்கின் ஒளி கொடுத்த மயக்கம். இரவின் குளுமை கொடுத்த சுகம். புருஷனின் பாட்டு. விரும்பித் தின்ற இனிப்புப் பண்டங்கள்... அவளுக்குள் போதையை ஏற்படுத்தின.

அவள் மெல்ல தான் மயங்கிக் கிடப்பதையே பார்க்க ஆரம்பித்தாள்.

சுப்ரமணியம் மரப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டார். அது முழுதும் அரக்கு குங்குமம் இருந்தது.

தலையை பின்னுக்குத் தள்ளி, கால் அகட்டித் உட்கார்ந்திருந்தவளின் எதிரே உட்கார்ந்து கொண்டார். அவளை வியப்போடும் பிரியத்தோடும் பார்த்தார்.

மனசுக்குள் அவளை நோக்கி கைகூப்பினார்.

''ஓம் தேவ்யை நமஹ. ஓம் துர்காயை நமஹ. ஓம் த்ரிபுவனேஸ்வரியே நமஹ.''



குங்குமத்தை அவள் பாதங்களில் போட்டு அஷ்டோத்ரம் சொல்ல ஆரம்பித்தார்.

''ஓம் ஶிவாயை நமஹ. ஓம் ஜயாயை நமஹ. ஓம் விஜயாயை நமஹ.''

மனதின் அடியிலிருந்து மனைவியைப் போற்றினார்.

''ஓம் வ்யாதி நாஶின்சை நமஹ. ஓம் ம்ருத்ய நாஶின்யை நமஹ. ஓம் பய நாஶின்யை நமஹ.''

மனைவியை தெய்வமாக வழிபட்டார்.

''ஓம் துர்காயை நமஹ. ஓம் ஶரண்யாயை நமஹ. ஓம் பக்த வத்ஸலாயை நமஹ. ஓம் ஸெக்யதாயை நமஹ.''

மிகுந்த பரவசத்தோடு அவள் காலில், குங்குமத்தைப் போட்டார்.

''நாணாவித பரிமள பத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி.''

பூக்களை வாரி அவள் கால்களில் போட்டார்.

அவளுக்கு உள்ளே அவளைப் பற்றி பெருமையாக இருந்தது. அந்தப் பெருமையை அவளால் பார்க்க முடிந்தது.

அவளுடைய பெருமை அவளைச் சுற்றி வந்தது. அவளோடு கைகோர்த்துக் கொண்டது. அவளை விட்டு விலகி நின்றது. தான் வேறு, தன் உணர்வுகள் வேறு என்பது அவளுக்குப் புரிந்தது.

தன்னை தன் உணர்வுகள் தாக்குவதையும், உணர்வுகளால் தாக்கப்படாமல் நாம் நகர்ந்து கொள்ளலாம் என்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

உணர்வுகள் அருகே வரும்போது உற்றுப் பார்க்க, அந்த உணர்வுகள் உரசாமல் நகர்ந்து போவதை கவனித்தாள்.

கர்வப்படக் கூடாது என்று கட்டளை போட்டால் கர்வப்படும். பொய் சொல்லாதே என்று மனசுக்குக் கட்டளை போட்டால் அது பொய் சொல்லும்.

கர்வப்படுன்னு விட்டுட்டு, கர்வப்படறதை வேடிக்கை பார்த்தா, நம்ம கர்வம் நம்ம எதிர்க்கயே வெட்கப்பட்டு நம்மை விட்டுட்டு ஓடிடும்.

கர்வப்படாதேன்னு வெறுமனே விட்டுட்டு சொன்னா எப்படி? எப்படி கர்வப்படாம இருக்கணும்னு கத்துக் கொடுக்க வேண்டாமா.

இப்பத்தான் தெரியறது. இதுவொரு வித்தைன்னு.

இத்தனை நாள் என்னை ஏன் உத்துப் பார்க்கலை? இத்தனை நாள் ஏன் இப்படி பிரிச்சுப் பிரிச்சுப் பார்க்கலை?

என் பேச்சுதான் நான். என் சிரிப்புதான் நான். என் அன்புதான் நான். என் கோபம்தான் நான்னு தப்பா நினைச்சுண்டேன். இதெல்லாம் நானில்லை. நான் வேற. நான் என்பது முற்றிலும் வேறொன்னு.

ஏதோ தெரியறது. உள்ளே உக்காந்துண்டு வேடிக்கை பார்த்துண்டிருக்கு.

இவன் பாடினதை, இவன் பேசியதை, இப்போ உட்கார்ந்துண்டு பூஜை பண்றதை எல்லாத்தையும் வேடிக்கைப் பார்த்துண்டிருக்கு.

பூஜை பண்ணனுமா, பண்ணிக்கோயேன். உள்ளே இருந்தபடியே, உள்ளிருக்கிறதை உணர்ந்த படியே மனசை, கண்ணை, எதிராளியை ஒட்டுமொத்தமா பார்க்கறது.

எதிரே இருக்கறவாளைக் கண் பாக்கறது. கண்ணை மனசு பாக்கறது, மனசை 'அது' பாக்கறது. அதுக்கு அபிப் பிராயமேயில்லை. வெறும பாக்கறது.



அடேயப்பா... இத்தனை நாள் எப்படி இதெல்லாம் தெரியாம இருந்தது?

திடீர்ன்னு எப்படி தெரிஞ்சது? இந்த மனுஷன் தெரியப்படுத்தறாரோ... ஏதோ மந்திரம் சொல்லி மனசுக்குள்ளே வெளிச்சம் காட்றாறோ...

கண்ணைத் திறக்க பிடிக்கலை. காது கேக்கப் பிடிக் கலை. மனசுக்குள்ளேயே உட்கார்ந்து மனசை பார்க்கணும், போல இருக்கு. இதை விட்டு வர இஷ்டமில்லை.

சர்வசதாகாலமும் இங்கியே கிடக்கணும் போல இருக்கு.

இதுதான் ஸ்ரீ வித்தையா? இதுக்கு பேர்தான் தபஸ்ஸா.

இங்கேருந்துதான் ஆரம்பம். எல்லாமே இங்கேருந்து தான் ஆரம்பம். வெளியே பார்க்கறதை, உதறிட்டு உள்ளே பார்க்கணும். உள் பார்வையாலேயே எல்லாத்தையும் பார்க்கணும். உள்ளேருந்து வெளியே பார்க்கணும்.

இப்போ பார்க்கலாமா, நெஞ்சு அடியிலேருந்து உலகத்தைப் பார்க்கலாமா.

எதிர்ல இருக்கறது யாரு. இவா பேரென்ன? இவா என்ன செய்துண்டிருக்கா?

அவள் பார்க்கத் துவங்கினாள்.

எதிர்க்க இருக்கறது பரமஹம்ஸம்.

எல்லாம் தெரிந்த பூரணம். புருஷனா இருக்கறதுக்கு ஆசைப்பட்டு பூமிக்கு வந்திருக்கு. பொண்டாட்டியோட இருக்கறதுன்னா என்ன அப்படின்னு தெரிஞ்சிக்கறதுக்கு பூமிக்கு வந்திருக்கு.

மிகப் பெரிய ஜோதி இது. அணையாச் சுடர். தன் வெளிச்சத்தை தனக்குள்ளே மறைச்சுண்டு, எதிர்ல இருக்கிற எல்லார்கிட்டயும் பிரியமா இருக்கறது.

எல்லோரையும் சுபாவமான கருணையோட பார்க்கறது. வரவழைச்சுண்ட அன்பில்லை. நாடகமாட பிரியமில்லை. தம்பட்டமான அவையடக்கமில்லை.

ஒரு காற்று போல எல்லாரையும் சமமாய் தொட்டு விட்டுப் போகிறது. பேதா பேதமின்றி ஒரே அளவாய் பேசுகிறது.

உலகம் முழுவதும் வினைகளால் ஆக்கப்பட்டிருக்க, இது தன்னுடைய விளைவுகளுக்கு தான் பொறுப்பல்ல என்று உட்கார்ந்திருக்கிறது. தன்னுடைய செயல்களால் என்ன விளைவு ஏற்பட்டாலும், அதைப் பிரித்துப் பார்த்து ஏமாறாமல் சாதாரணமாய் எடுத்துக் கொள்கிறது.

இது சலனமில்லாத சந்தோஷம். சாத்வீகமான பிரவாகம். இடையறாத அன்பு. கார்மேகம், மழை பொழிய காத்திருக்கும் கடவுள் தனம்.

இது என்னை பூஜை செய்யவில்லை. என்னில் தன்னைக் கண்டு தன்னையே பூஜை செய்கிறது.

நான் இப்போது உடையும் மனமும் நெகிழ்ந்து கிடக்கிறேனே... இதை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுகூட தெரியாது இருக்கிறது.

இது புருஷனுமில்லை. பெண்ணுமில்லை.

அடேயப்பா... எவ்வளவு உன்னதம் இது? இப்படியொரு உன்னத நிலை இருக்கிறதென்று இந்த ஜனங்களுக்கு ஏன் தெரியவில்லை?



என் சொத்து, என் நிலம், என் மனைவி, என் மகள், என் மகன் இப்படி ஏதும் உண்டா. இது உண்மைதானா... இப்படி உரிமை கொண்டாட எவருக்கேனும் உரிமை உண்டா.

உதறி விடுவோமே என்று பயந்துதானே உரிமை கொண்டாடுகிறாய். கலவரம்தானே உறவுக்குக் காரணம். அதீத பயம்தானே, குழு மனப்பான்மை.

என் காற்று, என் வெளி என்று நீ உரிமை கொண்டாடுவதுண்டா. இல்லையே... ஏன், அது உதறாது. நீ எத்தனை அடித்தாலும் உன்னை விட்டு விலகாது. உன் காற்று உன்னைச் சுற்றிக் கொண்டு தானிருக்கும். நீதான் ஒரு நாள் காற்று வேண்டாமென்று விலகி விடப் போகிறாய். உன் உடம்புதான் காற்றை உதாசீனப்படுத்தப் போகிறது.

உள்ளே பார்க்கத் தெரிந்து விட்டால் உறவு முக்கியமே யில்லை. தனிமை புரிந்து விட்டால் பயமேயில்லை.

தனிமை என்பது தனியாக இருப்பதல்ல. தன்னைப் பார்ப்பது. எந்தக் கும்பலிலும், எல்லா நேரத்திலும் தன்னையே பார்ப்பது.

அவள் புரிந்து கொண்டு சிரித்தாள். தன்னைப் பார்த்து சிரித்தாள். கண்களைத் திறக்காமல் உள்ளே கவனித்துக் கொண்டிருந்தாள். எதிரே உள்ளவரின் அசைவுகளை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவரும் அவளை வியப்போடு கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளின் மலர்ந்த தன்னுணர்வு அவரையும் தொட்டது. அவரும் தான் என்பதைப் பார்க்க ஆரம்பித்தார்.

நான் பார்க்கிறேன் என்பதை யோசிக்க ஆரம்பித்தார்.

பார்க்கிறேன் என்பது புரிகிறது. நான் என்பது என் மனசா. தூங்கும்போது மனசு எங்கே. தூங்கினால் எது விழித்திருக்கிறது. இப்படி சிந்திக்கிற சக்தி எங்கிருந்து வருகிறது.

நான் என்பது எங்கே? நான் உணர்வுகளையெல்லாம் விலக்கித் தள்ளினாலும் நான் தொடுகிறேன். நான் விழிக்கிறேன். நான் பாடுகிறேன். நான் சிந்திக்கிறேன் என்பதாகவே முடிந்தது.

பூஜை ஒரு கர்வம். மொழி ஒரு கர்வம். இந்த ஸ்ரீவித்தை ஒரு கர்வம். நான் உறுதியாய் சம்மணமிட்டு உட்கார்ந்திருக்கிறேனே... இது, அமர்தல் கூட கர்வம்.

உதறு. உதறு. எல்லா வினைகளையும் உதறு. எல்லா செயல்களையும் நிறுத்து.

பெண், ஆண் என்பதுகூட கர்வம். நான் நீ என்பது கூட அகந்தை. வெறுமே கிட, விட்டு ஒதுங்கி, பிரிந்து மடங்கு. மடங்கிச் சிரி. சரிந்து கிட.

கிடக்கிறேன் என்று எண்ணாதே. அதுவும் துற.

அவர் குங்குமம் தரையில் பரவ, தரையில் சாய்ந்தார்.

அவள் காலில் முகம் வைத்துக் கொண்டார்.

நான் புருஷனில்லை. ஆணில்லை. அகந்தையில்லை. எனக்கு எந்த வலுவுமில்லை. வலு கொடுக்கும் எந்த எண்ணமுமில்லை. எண்ணம் உண்டாக்கும் எந்த உந்துதலுமில்லை.

என் உயிர் துடிக்கிறது. அது என் கட்டளையில்லை. மூச்சு இயங்குகிறது. என்னால் அல்ல. நான் அசைகிறேன். ஆனால் சம்பந்தப்படவில்லை. நான் இந்த உலகில் இருக்கிறேன். ஆனால், எதுவாகவுமில்லை.



இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றே. வாழ்வதும் வாழாதிருப்பதும் ஒன்றே.

செயல்களை உடல் செய்கிறது. செய்யச் சொல்லி மனம் உந்துகிறது. ஆனால் மனம் என்பதை நான் அணைத்துக் கொள்ளவில்லை. என் மனதோடு எனக்கு எந்த ஸ்நேகமுமில்லை. எந்த சம்பந்தமுமில்லை.

உடம்பினால்தான் மனம். மனதால்தான் உடம்பு. இவையிரண்டும் தாண்டி உள்ள ஓர் அம்சம்தான் நான்.

அது வெறுமே வேடிக்கை பார்க்கும். ஒட்டாது வாழும். வாழ்கின்ற மனதை வேடிக்கை பார்க்கும்.

இவ்வுலகம் புலன்களால் உண்டாக்கப்படும் ஒரு தோற்றம். புலன்களை உள்முகமாய் திருப்ப, இவ்வுலகம் வேறுவிதமாய் காட்சியளிக்கிறது.

நிறங்கள் மாறுகின்றன. நீள அகலங்கள் மாறுகின்றன. எதிர்ப்படுவனவற்றின் உள்ளும் புறமும் எனக்கு தெரிய வருகிறது.

எனக்குள் இருக்கிற சக்தியும், எனக்கு வெளியே இருக்கிற பிரபஞ்ச சக்தியும் ஒன்றே என்பது தெரிய வருகிறது. இந்த இரண்டையும் உடம்பு பிரித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரிவு தற்காலிகம் என்பது தெரிகிறது.

எனவே, நான் என்பது உடம்பல்ல. நான் என்பது மனமல்ல. நான் என்பது அந்த சக்தி. நானே அந்த சக்தி. உள்ளே இருப்பதும் வெளியே இருப்பதும் நானே. எங்கும் பரவியிருப்பது நானே. நானே இந்த பிரபஞ்சம். நானே முதல். நானே சக்தி. நானே ஆதி. நானே கடவுள். நானே அது. அதுவே நான். நானே எல்லாம்.

உள்ளே ஒரு மகத்தான சக்தி வெடித்துச் சிதறி உடம்பைப் பிளந்து கொண்டு எல்லா இடமும் பரவி சுப்ரமணியத்தை நிறைவாக்கியது.

சுப்ரமணியம் பிதற்ற ஆரம்பித்தார். எந்த பொருளுமற்ற சப்தங்களாய் பலவற்றை எழுப்பினார்.

காது முழுவதும் வேறு எந்த சப்தமும் கேட்காது, ஒரு ரீங்காரம் அடைத்துக் கொண்டது. உடம்பு அதிர்ந்தது.

மூடிக்கிடந்த கண்முன்னே கருமணல் துகள்கள் படர்ந்தன. அசைந்து அசைந்து நகர்ந்தன.

அந்த அசைவுதான் எல்லாம் என்பது தெரிந்தது. சந்தோஷச் சிரிப்பு வந்தது. ஒரு நிறைவால், நிம்மதியால், கண்களிலிருந்து கண்ணீர் பொங்கியது. கைகள் விரிந்து தானாய் முத்திரைகள் காட்டின.

மனசு உடம்பை விட்டுவிட்டது. உடம்பு அதன் இஷ்டத்திற்கு நகர்ந்தது.

''என்ன செய்ய...'' என்று மனசிடம் உத்தரவு எதிர் பார்த்து, மனசு ஏதும் சொல்லாமல் போகவே வெறுமே கிடந்தது.

அனிச்சையாய் இயங்கும் உறுப்புகள், தன் வேலையை செய்து கொண்டிருந்தன. ஆனால் அவைகளின் வேலையும் மட்டுப்பட்டது.

நுரையீரல் அசைவு வேறு லயத்திற்குப் போயிற்று. இதனால், உடலில் மாற்றங்கள் ஏற்பட்டன. மூளை குளுமையாயிற்று. இருதயத்தினுடைய சத்தம், துடிப்பு மெதுவாயிற்று. நாடிகளின் வேகம் குறைந்தன.

அவர் உடல் ஒரு வளமான மரத்தின் அமைதியைப் போல் உள்ளே காணப்பட்டது.



அவர் நட்டு வைத்த மரம்போல் சம்மணமிட்டுக் கிடந்தார்.

பின் இடுப்புக்குக் கீழிருந்த ஒரு சுருண்ட பாம்பு தன்னை விடுவித்துக் கொண்டது. சுருட்டி இறுக்கிய பிரம்பு கழல்வது போல், வேகமாய் ஓர் உணர்வு சுழன்றது. அது சுழன்றதன் விளைவாய் இடுப்பின் அடியிலிருந்து ஒரு சூடு உடம்பின் எல்லாப் பக்கத்திற்கும் ஓடித் தாக்கின.

வாணக்குழாய் வெடித்தது போல தீயும் நெருப்புப் பொறிகளும் தன்னிலிருந்து நாலா பக்கமும் படர்வதை உணர்ந்தார்.

பாம்பு பாதை தெரிந்து கொண்டது. சற்று தயங்கி முதுகெலும்பு வழியே மேலேறியது. இன்னொரு முடிச்சை முன் தலையால் மோதிச் சிதறடித்தது.

பாம்பு விரிந்தபோது எழுந்த மஞ்சள் சுருள் புகை மறைந்து, வெள்ளை வெளேரென்ற வெளிச்சம் ஆக்ர மித்துக் கொண்டது. பாம்பு மேலே நகர்ந்தது. தொப்புளுக்கு அருகேயுள்ள இன்னொரு முடிச்சின்மீது மோதியது.

'டம் டம் டம்' என்று காதருகே யாரோ முரசு கொட்டினார்கள்.

சிகப்பு புள்ளி தோன்றி வேகமாக அருகே வந்து, படேரென்று கண்முன்னே ரத்த மயமாகியது. தழலுக்கு அருகே உட்கார்ந்தது போல ஒரு சூடு பரவியது. விட்டு விட்டு சுட்டது.

பாம்பு இன்னும் நகர்ந்து, மார்புக் குழி அருகே வேகமாக மோதியது.

வெளி வெப்பத்தைத் தோல் உணர்ந்தாலும் உள்ளே, எலும்பு மஜ்ஜைகளூடே கொல்லும் குளிர் படர்ந்தது. நடுக்கிப் போட்டது.

மார்பின் குறுக்கே கைகளைக் கோர்த்துக் கொண்டு சுப்ரமணியம் குளிர் தாங்காமல் கத்தினார்.

சொடேரென்ற வேகத்தோடு கண்ணெதிரே பல சுழல்கள் பிரிந்தன. இடதும் வலதுமாய் புகை நிறத்து சுழல்கள் அவரை நோக்கித் தாவி வந்தன.

கண்முன்னே அறுகோண முக்கோணம் தெரிந்தது. அதைச் சுற்றி பல்வேறு சுருள்கள் இருந்தன.

அவர் உயிர்சக்தி அந்த அறுகோண முக்கோணத்தின் நடுவே, வேகமாகப் போய் இடித்தது. அவர் சக்தி அதை இடிக்கையில் அறுகோணம் வலமாய் நகர்ந்தது. வழிவிட்டது.

நீலம் நீலம் நீலம் என்று முடிவுறாத நீல வெளியினூடே அவர் போய்க் கொண்டிருந்தார்.

உடம்பு எந்த அசைவுமின்றி அலட்சியமாய் அங்கே கிடந்தது. மனம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

உள்ளிருந்த உயிர்சக்தி வெளியிலுள்ள உயிர்சக்தியை தொடர்பு கொண்டு, அது பரவிக் கிடக்கும் இடமெல்லாம் தானும் பரவி, அதன் வலிவு மொத்தமையும் வெளிப் படுத்திக் காட்டியது. அண்ட சராசரங்களுக்கும் நகர முடிந்தது. ஒரு பிரபஞ்சப் பார்வை தோன்றியது.

உள்ளிருந்தபடி பிரபஞ்சம் முழுவதும் பார்க்க முடிந்தது. எல்லா உயிர்களையும் உணர முடிந்தது. எல்லாம் அறியும் ஒரு பெரிய அறிவு தனக்கு ஏற்படுவதை அவர் உணர்ந்தார்.

உடம்பு பார்க்கும் உலகத்திற்கும், உள்ளிருந்து பார்க்கும் உலகத்திற்கும் உண்டான வேறுபாட்டைப் புரிந்து கொண்டார். இதுதான் பொய்க்கும் உண்மைக்குமான



வேறுபாடு என்பதைத் தெரிந்தார். இதுதான் அன்புக்கும் அறிவுக்குமான வேறுபாடு என்பதைப் புரிந்து கொண்டார்.

இந்த பிரபஞ்ச அறிவை வைத்துக் கொண்டு என்ன செய்வது? இவ்வளவு பெரிய சுமையை வைத்துக் கொண்டு எப்படி வாழ்வது, இந்த நிலையிலேயே இருந்தால் உடல் தாங்குமா, இந்த இருதயத் துடிப்பு நகருவதற்குப் போதுமா. இந்த நாடித்துடிப்பு ஜீரண சக்தியை ஏற்படுத்துமா.

இது பசியற்ற நிலை. அசைவற்ற நிலை. இப்படியே பல காலம் கிடக்க முடியும். தன்னை அனுபவித்தபடியே இருக்க முடியும்.

இப்போது இருப்பதா, எழுவதா?

எழுந்து என்ன செய்வது?

எழுந்தால் இழப்போமோ...

இழந்தது மீண்டும் கிடைக்குமோ...

வெறும் இருத்தல் மட்டும் செய்யவா இங்கு பிறந்திருக்கிறோம். நான் மட்டுமே இங்கு இருக்கவோ வந்திருக்கிறேன்.

அப்படி இருக்க வேண்டுமெனில் இது இங்கு தோன்றியிருக்காது. தன்னை இனம் காட்டிவிட்டு நகரத் தான் இது இங்கு வந்திருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக் கிறது.

எனவே, நான் விழித்துதான் ஆக வேண்டும். விழித்து என்ன செய்ய வேண்டும் என்று இந்த நிலையிலேயே யோசிக்க வேண்டும்.

விழித்த பிறகு புத்தி கர்வம் கொள்ளுமோ... எல்லாம் தெரிந்து விட்டது என்று எல்லாரிடமும் கூறுமோ.

ஏதோ சில மனோவசியங்களை வைத்துக் கொண்டு நான் மகான் என்று அலட்டிக் கொள்ளுமோ. முகப் பிரகாசத்தை வைத்துக் கொண்டு, முனிவரைப் போல நாடகம் போடுமோ.

மனசு ஒரு மோசமான மிருகம். அது மயங்கி இருக்கும் போதே, ஒரு கடிவாளம் போட்டுவிட வேண்டும். ஓர் அதட்டலுக்கு இருக்கும் பயத்தை, பழக்கத்தை ஏற்படுத்திவிட வேண்டும்.

சுப்ரமணியம் மனமல்ல. மனோவசியனல்ல. முகமல்ல. புத்தியல்ல. கண்வழியே உலகம் பார்த்தாலும், மனம் வழியே உலகம் ஸ்பரிசித்தாலும், மனதிற்கடியில் கிடக்கின்ற சக்தியை மறக்காது இருக்க வேண்டும். அவ்வப் போது அதன் வழியாகவும் உலகம் பார்க்க வேண்டும்.

இதுதான் வாழ்க்கையின் சூட்சுமம்.

இதுதான் கடவுள் தெரிந்து கொண்டதின் அர்த்தம்.

உடம்பு மறையும் வரை, மரணம் வரும்வரை உடம்பின் எல்லைகளை உணர்ந்து, ஊரோடு ஒட்டி வாழ வேண்டும். உடம்பு தாண்டி எல்லையற்ற சக்தி இருப்பதை தெரிந்து கொண்டதால், அந்தப் பாதையை அறிந்து கொண்டதால் அங்கே போய் வந்தபடி இருக்கவேண்டும். அங்கிருந்து வாழ்க்கையைப் பார்த்து, வாழத் தெரியாதவர் களுக்கு உதவி செய்ய வேண்டும். வாழ்வது எப்படி என்று கற்றுத்தர வேண்டும். வாழ்ந்து காட்ட வேண்டும். ஆமாம். வாழ்வது எப்படி?

அமைதியாக.

அமைதி என்பது என்ன?

ஆசையற்று இருத்தல்?



ஆசையற்று இருக்க என்ன செய்ய வேண்டும்?

என்ன இருக்கிறதோ அதை மட்டும் ஏற்க வேண்டும். என்ன இல்லையோ அதை மறக்க வேண்டும். கிடைத்ததைக் கொண்டாட வேண்டும். விதித்ததை அனுபவிக்க வேண்டும். இனித்தாலும், கசந்தாலும் நீயே என்று பிரபஞ்ச சக்தியை பற்றிக் கொள்ள வேண்டும். அந்த சக்தியோடு மனம் லயித்துக் கிடக்க வேண்டும்.

உள்ளும் புறமுமாய் அந்த சக்தி இடைவிடாது நகர்ந்து கொண்டிருக்கிறது. எல்லா உயிரிலும் ஆடிக் கொண்டிருக்கிறது. உயிரற்றதிலும் இருக்கிறது. சக்தியற்ற இடமேயில்லை. எல்லாம் சக்தி.

அந்த பிரபஞ்ச சக்தி பிரியமாய் உலகை அணைத்துக் கொண்டிருக்கிறது. மிக இதமாக உலகை அணைத்துக் கொண்டிருக்கிறது. அந்த சக்தி சிறிது வேகமாய் அசைந்தா லும் உலகம் சிதைந்துவிடும்.

திசைமாறி. உருண்டு ஓடி, ஓடும் வேகத்தில் நெருப்பாகி, நெருப்புக் கோளமாய் எங்கோ மோதி சிதறி, சிதறிய துண்டுகள் மறுபடி குவிந்து ஜீவராசிகள் தோன்றி இன்னும் ஓர் உலகம் படைக்கும்.

இது நடக்கப்போகும் காலம் தொலைவில் இல்லை. சில நூறு வருடங்களில் நடைபெறத்தான் போகிறது.

அதற்குமுன் இந்த மனித ஜாதிக்கு கடவுள் தெரிதல் அவசியம்.

இப்போது யாரிடம் போய், எதைக் கடவுள் என்று சொல்வது? உள்ளே கண்டதை எங்கே விண்டுரைப்பது? எங்ஙனம் விளக்குவது?

ஒரு சக்தி அணைத்துக் கொண்டிருக்கிறது. உலகத்தை ஏந்திக் கொண்டிருக்கிறது.

எதைப் போல?

ஓர் உபமானம் தேவைப்படுகிறது.

ஒரு தாய் போல என்று உபமானம் வருகிறது.

யார் தாய்?

இவள்தான்.

மனைவியைப் பார்த்து நமஸ்கரித்தார். கால்களைத் தடவி, தலையில் வைத்துக் கொண்டார்.

''அபிராமி அபிராமி'' கைகூப்பிக் கொஞ்சினார்.

செண்பகப் பூக்களை வாரி மடியில் போட்டார். இன்னும் கொஞ்சம் எடுத்து அவள் மார்புகள்மீது சொரிந்தார். இன்னும் ஒரு கை எடுத்து அவள் தோள்களில் வைத்தார். இன்னும் ஒரு கை செண்பகம் எடுத்து அவள் தலையில் சொரிந்தார்.

''அபிராமி... அபிராமி...'' பூக்களைக் கையிலேந்தி விலகி நின்று தரிசித்தார். அவளை நோக்கி இறைந்தார்.

இன்னும் ஒரு கை அள்ளிக் கொண்டார்.

மனைவியை வலம் வந்தார்.

மறுபடியும் அவள் தலையில் சொரிந்தார்.

அவள் கால் அகட்டி கை விரித்து இடுப்புத்துணி மட்டும் லேசாய் தூக்கியிருக்க, அவள் கழுத்து நிறைய சங்கிலிகளோடும், கை நிறைய வளையல்களோடும், காதுகளில் வைரக் கம்மல்களோடும், கம்மலில் தொங்கிய தொங்கட்டான்களோடும், உடம்பெல்லாம் சிதறியிருந்த நெடி மிகுந்த செண்பகப் பூக்களோடும் கண்செருகிக் கிடந்தாள்.

அவள் முகத்தில் ஒரு சந்தோஷம் ததும்பி வழிந்தது. இடையறாத ஒரு புன்னகை இதழ் கடையோரம் மின்னிக்



கொண்டிருந்தது. ரசம் ததும்பிய கண்கள் இலக்கின்றி அலைந்து கொண்டிருந்தன.

கை கூப்பி அவர் நிற்பதைப் பார்த்து சிரித்தாள், வாய் பொத்தி நகைத்தாள்.

''ஏய்...'' என்று சொடக்குப் போட்டு கூப்பிட்டாள். புருஷன் அருகே வந்ததைப் பார்த்து மறுபடியும் சிரித்தாள்.

''டேய்... என்னை பிடிச்சிருக்கா?''

''பிடிச்சிருக்கம்மா...''

''நான் அம்மாவா...?''

''ஆமாம் தாயே...''

''இந்த அம்மாவை உனக்குப் பிடிக்குமா?''

''எனக்கு எல்லாம் நீதான் தாயே...''

''டேய்...''

''சொல்லு...''

''டேய்...''

''சொல்லும்மா.''

''எனக்கு தாமரைப்பூ வேணும்டா.''

''இதோ கொண்டு வரேன்.''

''கிடைக்குமா?''

''நீ கேட்டா கிடைக்காத இருக்குமா. கிடைக்கும் தாயே.''

''எங்கே கிடைக்கும்?''

''தேடிண்டு போனா தெரியும்.''

''எங்கே தேடிண்டு போவே?''

''நீ எங்கே சொல்றியோ அங்கே.''

''சீக்கிரம் வந்துடறியா.''

''இதோ கால் நாழிகைல ஓடி வந்துடறேன்.''

அவர் வெளியே ஓடினார். தெருவில் இறங்கினார்.

இடதா வலதா எப்படி போவது?

''வலது.'' மனம் சொல்லிற்று.

வலது பக்கம், நீள கும்பகோணத் தெருவில் ஓடினார். உள்ளுணர்வு திரும்ப சொன்ன இடமெல்லாம் திரும்பினார்.

ஒரு தெருவின் நடுவில் சடேரென்று திறந்தவெளியும் குளமும் தெரிந்தன. நிலவொளியில் தடாகம் மின்னியது. தடாகத்தின் நடுவே தாமரை இலைகளும், அங்கங்கே தாமரைப் பூக்களும் இருந்தன.

மேல்துண்டை கரையில் வைத்துவிட்டு வேட்டியை அவிழ்த்து உதறிவிட்டு, கோமணத்தோடு நீருக்குள் குதித்தார். தாமரையை நோக்கி நீந்தினார்.

கால்களை உதைத்து நின்றபடியே தாமரை பறித்தார். நகர்ந்து நகர்ந்து மற்ற தாமரைகளையும் கொய்தார். நீந்திய படியே ஒரு கொடியை எடுத்து ஐந்து தாமரையை ஒன்றாகக் கட்டினார்.

தாமரையை உயர்த்தியபடி மல்லாக்க நீந்தினார்.

துணிகளை வாரிக் கொண்டார். கோமணத்தோடு வீடு நோக்கி நடந்தார். ஈரம் உலர்வதற்காக வேகமாய் நடந்தார்.

வீட்டு வாசலில் நின்று, வேட்டியை பஞ்சகச்சமாய் கட்டிக் கொண்டார். மேல்துண்டால் தலைதுவட்டி குடுமி முடிந்து கொண்டார்.

ரேழி பிறையிலிருக்கும் விபூதியை நெற்றியில் பூசிக் கொண்டார். குங்குமம் இட்டுக் கொண்டார். ஈரமான மேல்துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டார்.



உள்ளே போனார்.

உள்ளே அவர் மனைவி அதே நிலையில் அசையாது கிடந்தாள். கண்மூடி உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா...'' என்று மெல்ல விளிக்க கண் திறந்தாள். தாமரைப் பூக்களை நீட்ட, மிக ஆவலாய் வாங்கிக் கொண்டாள். முகர்ந்து பார்த்தாள். வாசனை அனுபவித்தாள். கன்னத்தில் வைத்துக் கொண்டாள். சுகம் அனுபவித்தாள். புரட்டிப் புரட்டி அதன் அழகைப் பார்த்தாள், பரவசப்பட்டாள்.

அதே வேகத்தில், திரும்பி சுப்ரமணியத்தை நோக்கினாள். கண்களை மூடித்திறந்தாள். நன்றி என்று சொல்லாமல் சொன்னாள். மிகுந்த ஸ்நேகமாய் சிரித்தாள்.

வலது கையில் தாமரை வைத்து, இடது கையை அவருக்காய் நீட்டினாள்.

அவர் அருகே வந்து பற்றிக் கொள்ள, இழுத்து தன் எதிரே மண்டியிட வைத்தாள்.

அவர் நெற்றியைத் தடவினாள். தாமரையால் முகத்திலடித்தாள். மார்பின் நடுவே வருடினாள். இடக் கையால் அணைத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். முதுகு முழுவதும் மலர்களால் வருடிக் கொடுத்தாள்.

என் அப்பா.

என் ராஜா.

என் தங்கம் என்று கொஞ்சி, உச்சி முகர்ந்தாள்.

அவள் உச்சி முகர, அவருக்குள் ஒரு திகைப்பு ஏற்பட்டது. மனைவி என்று அவர் கொண்டிருந்த ஆளுமை உணர்வு முற்றிலும் நசுங்கியது. கம்பீரம் நழுவி நழுவி சிறு புள்ளியாகியது. விரிந்த பரந்த அறிவெல்லாம் சுருங்கி

ஒன்றுமில்லாமல் போனது. மறதியைப் போல ஓர் உணர்வு அவரைச் சூழ்ந்து கொண்டது. இனி சகலமும் புதிதாய் கற்க வேண்டும் என்பது போல் தோன்றியது. அப்படி ஏதும் கற்க வேண்டுமா என்கிற கேள்வி எழுந்தது.

வெறுமே கிடக்கும் ஒரு தன்மை, அவர் மனதில் பல்கிப் பெருகியது.

அவள் எழுந்து நின்றாள். வலக்கையில் தாமரையும் இடக்கையில் சுப்ரமணியத்தின் கையையும் இறுகப் பற்றி நடக்க ஆரம்பித்தாள். நான்கு தூண்கள் உள்ள அந்தக் கூடத்தைச் சுற்றி வந்தாள். ஒவ்வொரு குத்துவிளக்கு எதிரிலும் நின்று அவைகளை ஆச்சரியத்தோடு பார்த்தாள். குத்துவிளக்கு வெளிச்சத்தின் ஒளியில் சுப்ரமணியத்தின் முகத்தைப் பார்த்தாள். தரையில் விரித்த பாயில் அமர்ந்து கொண்டாள். சுப்ரமணியத்தின் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டாள். சுப்ரமணியம் எட்டி விசிறியை எடுத்துக் கொண்டார். அவள் உறக்கத்துக்குள் நகர்வது அவருக்குத் தெரிந்தது. அவரது கையை எடுத்து கழுத்தின் குறுக்கே வைத்துக் கொண்டாள். அந்த முன் கையை மெல்லப் பற்றிக் கொண்டாள். வலக்கையில் தாமரைப் பூ இருந்தது. அவள் தூங்கத் துவங்கினாள். அவர் மெல்ல விசிறினார். தூக்கத்திற்கு நுழையும் முன்பு லேசாய் தலை திருப்பி ஒருமுறை அரைக்கண்ணால் பார்த்தாள். மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு, பார்வை எல்லாவற்றையும் அப்படியே நழுவவிட்டு தூங்கிப் போனாள்.

சுப்ரமணியம் பாறைபோல் அசையாது உட்கார்ந்து அவளுக்கு விசிறிக் கொண்டிருந்தார். குளிர் அதிகமாக, விசிறுவதை நிதானமாக்கினார். அவள் குளிரில் குறுக்கிக் கொள்ள, அவள் புடவையை இழுத்து அவள் உடம்பு முழுவதும் மூடினார்.



தன்னுடைய பாவனைகள். மன ஓட்டங்கள், செயல்கள், அத்தனையும் உற்றுப் பார்த்தார். அப்படி பார்க்க இன்னும் அடக்கம் ஏற்பட்டது. மிகப் பெரிய பிரபஞ்ச சக்தி முன்புதான் தூசியாகும் என்பது புரிந்தது.

தன்னை உடம்பாகப் பார்க்கும் போதுதான், தன்னை உடம்பு வழியாகப் பார்க்கும் போதுதான் பொருளற்ற பொருளாகும் உணர்வு தோன்றுகிறது. அறிந்ததை விலக்கி விட்டு தன் சக்தியின் வழியே பார்க்கையில் தான் மிகப் பிரம்மாண்டம் என்று தெரிந்து போயிற்று. மனம் நினைக்க முடியாத அளவிற்கு நீளமும் அகலமும், உயரமும் பருமனும் அதீத வலிவும் கொண்டது என்பது புரிகிறது. துணியால் மறைத்து சூரியனைப் பார்ப்பதும் துணியை விலக்கிப் பார்ப்பது போலவும் இது இருக்கிறது. தண்ணீரில் மிதந்து நெளியும் சூரியனைப் பார்ப்பது போலவும், நேரடியாய் சூரியனைப் பார்ப்பது போலவும் இரண்டு குணங்கள் இருக்கின்றன. தேகத்தில் ஒட்டிக் கொண்ட மனோசக்தி குழந்தைபோல பிதற்றுகிறது. நிலவைக் கூப்பிடு என்று குழந்தை சொல்ல, உடனே ஆர்வமாய் கைதட்டி நிலவை ஆசையாய் கூப்பிடும் குழந்தை போல உடம்பு சார்ந்த புத்தி இயங்குகிறது.

உடம்போடு மனோசக்தி ஒன்றிய மக்கள் கடவுளை கைதட்டி கூப்பிடுகிறார்கள். நிலா நிலா ஓடி வா என்று குழந்தைபோல் பாட்டு பாடுகிறார்கள். நிலா உள்ளங் கையில் வரும் என்று நினைக்கிறார்கள். வந்தால் என்ன செய்வது என்று அந்தக் குழந்தைக்குத் தெரியாது. ஆனாலும் ஆர்வத்தோடும் ஆசையோடும் கூப்பிடுகிறது. எதற்கு கூப்பிடுகிறோம் என்று தெரியாது கூப்பிடுகிறது.

ஆனால் விவரம் தெரிந்த மனிதன் நிலவை வா வா என்று கூப்பிட மாட்டான். அவன் நிலவை ரசிக்கிற விதமே

வேறு. அது கிரஹம் என்று அவனுக்குத் தெரியும். அது மிகப் பிரம்மாண்டம் என்பதை அவன் அறிவான். அது வரும் போகும் பொருளல்ல. எந்நேரமும் இருக்கின்ற ஒரு விஷயம் என்பது அவனுக்குத் தெரியும்.

பார்வை வேறாகி விட்டதால், முதிர்ந்த ஆளுக்கு குழந்தை நிலவைக் கூப்பிடுவது பைத்தியக்காரத்தனமாகி விடாது.

சுப்ரமணியத்தின் பார்வை வேறாகிவிட்டது. அவர் நெடுமூச்சு விட்டு தன் மனைவியைப் பார்த்தார். குளிர் அதிகமானதால் விசிறுவதை நிறுத்தினார்.

கைகளை நெஞ்சுக்குக் குறுக்கே கட்டி தியானத்தில் ஆழ்ந்தார்.

அது உறக்கமில்லை. விழிப்புமில்லை. மனம் எண்ணுதலை நிறுத்திவிட்டு மௌனமாய் நான் என்ற நினைப்போடு மட்டுமே இருந்தது. வெறுமே கிடந்தது. தன் உடம்பு, மனம் எல்லாம் அமைதியாகத் தூங்குவதை அவர் பார்த்துக் கொண்டிருந்தார். தூங்காமல் தூங்கினார். தன் தூக்கத்தைத் தானே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார்.

தன்னை மறந்து தூங்கும் மனைவியை, அவள் இருப்பை மிகுந்த நேசத்தோடு உணர்ந்தார்.

முதல் வெளிச்சம் பூமியில் தோன்றியபோது அவர்கள் இருவரும் எழுந்து கொண்டார்கள்.

இரண்டரை நாழிகையில் குளித்து, மாற்றுடை உடுத்தி வீடு பூட்டிக் கொண்டு, அக்கம் பக்கம் சொல்லிக் கொண்டு தஞ்சாவூர் நோக்கி நடக்கத் துவங்கினார்கள்.

கும்பகோணம் - தஞ்சாவூர் சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.



முன்னே போகும் பார வண்டியில் தலை சுமையை இறக்கி வைத்துவிட்டு, அதற்குப் பின்னே இடைவெளி விட்டு புருஷனும் மனைவியும் நடந்து போனார்கள்.

கிராமங்கள் தாண்டும்போது அவர்களின் பிரகாச மான முகங்கள் மக்களைக் கவர்ந்தன. நிறைய பேர்கள் கை கூப்பினார்கள்.

''வரணும்... வரணும்... எந்த ஊர்...?''

''திருக்கடவூர்.''

''அபிராமி... அபிராமி...'' கேட்டவர் கைகூப்பினார்.

''உள்ளே வந்து தாகசாந்தி பண்ணிட்டு போலாமே.''

''திரும்பி வரும்போது வர்றோம்.''

புருஷனும் மனைவியும் பேசிக் கொள்ளவில்லை. மற்றவர்களோடுதான் பேசினார்கள். மற்றவர்களோடு பேசும் போதே தங்களுக்குள்ளாக அன்பைப் பகிர்ந்து கொண்டார்கள்.

''சின்னக் குழந்தையா இருக்காளே... தஞ்சாவூர் வரைக்கும் நடப்பாளா... இந்த ஊர் ஜமீன் வண்டி சாய்ந்தரம் கிளம்பறது. தாமதிச்சேள்னா அதில ஏத்தி விட்டுரலாம்.''

''இல்லை. அவளுக்கு நடந்து பழக்கம். மாட்டு வண்டின்னாதான் கொஞ்சம் பயம், உடம்பு வலிக்கும்னு.''

''ராத்தங்கல் கபிஸ்தலத்துல வச்சுக்கோங்கோ. ரொம்ப நல்ல ஊர். கோட்டை மாதிரி பத்துப் பதினைஞ்சு வீடு இருக்கு. யார் எப்ப போனாலும் இல்லைங்காத சாதம் போடுவா. நான் வேணா கபிஸ்தலம் வரைக்கும் வரட்டுமா துணைக்கு.''

யாரோ உதவிக்கு வருவதாய் சொன்னார்கள்.

தோள் வரைக்கும் நிழல் கொடுக்கும் தாழங் குடையை ஒரு மறவ இளைஞன் கொண்டுவந்து கொடுத்தான். காசு கொடுக்க மடியைத் துழாவினபோது "இல்லை, ஐயன்... இது தானம்" என்றான். முதுகு வளைத்து கைகூப்பினான்.

உயரமும் அகலமும் அரும்பு மீசையுமாய் இருந்த அந்த மறக்குல இளைஞனை பிரியத்தோடு பார்த்தார்கள்.

"தினமும் ஒரு தாழங்குடை செய்கிறேன்" ஐயன். முதல் நாள் செய்த தாழங்குடையை மறுநாள் காலை யாருக்காவது கொடுத்து விடுவேன்."

"ஏதேனும் வேண்டுதலா, தம்பி?"

"இல்லை. ஐயன். நான் போர்வீரன். என் கத்தியை வைத்துக் கொண்டு அரசருக்கு உதவலாம். சாதாரண மக்களுக்கு என்ன விதமாய் உதவ முடியும். உங்களுக்குக் கொடுத்தது ஆறாவது குடை. நேற்று ஒரு வேளாளருக்குக் கொடுத்தேன். அதற்கு முன்தினம் ஒரு கிழவிக்குக் கொடுத்தேன். உங்களைப் பார்த்ததும் தரவேண்டும் என்று தோன்றியது. உங்கள் இருவர் முகங்களிலும் மிகப் பெரிய சந்தோஷம் இருக்கிறது, என்னை ஆசீர்வதியுங்கள் ஐயன்." அவன் மறுபடியும் கைகூப்பினான்.

"உலகத்தின் உன்னத விஷயங்கள் உன்னை வந்து அடையட்டும். சுகம் என்பதின் முழுமையை நீ நிச்சயம் உணர்வாய். நிறைய பேருக்கு நிழலாக இருப்பாய். ஈஸ்வரன் நிழல் உன்மீது படியும்." சுப்ரமணியம் மனம் குளிர வாழ்த்தினார்.

"தஞ்சையில் சந்திப்போம். ஐயன், இனிமேல்தான் கும்பல் அதிகமாகும் என்று பேசிக் கொள்கிறார்கள். நீங்கள் அதிகம் தாமதிக்காது தஞ்சை போய் சேர்ந்து விடுங்கள். தங்குமிடங்கள் பிரச்சினையாகலாம். இதைத்



தவிர ஐயன், போர் வீரர்கள் வேலையின்றி சுற்றி வருகிறார்கள். பொல்லாத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். கேட்டால் மன்னர் பெயரைச் சொல்கிறார்கள்.

"மராட்டிய போர் வீரர்களுக்கும், சோழ போர் வீரர்களுக்கும் அவ்வளவு சுமுகமில்லை. போர் வீரர்களிடம் மட்டுமில்லை. பிராமணர்களிடமும் இரண்டு பிரிவு இருக்கிறது. மராட்டிய அந்தணர்கள் தான் முன்னின்று புத்ர காமேஷ்டி யாகம் நடத்துகிறார்கள். சோழ தேசத்து பிராமணர்கள் உணவு பரிமாறுவதைக் கவனித்துக் கொள்கிறார்கள்.

"அல்லது அரசர் சரபோஜி வருகிற வழியில் வரிசையாய் அமர்ந்து வேதம் சொல்கிறார்கள். இந்த யாகம் நல்ல விதமாய் நடக்குமா என்பது பற்றி எங்களூரில் இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன.

"எங்கேனும், எந்தவிதமாக வேணும் சச்சரவு மூண்டால் அதைத் தூண்டிவிடவென்றே தனியே ஒரு குழு அலைகிறது."

"யாரால் இவையெல்லாம் நடக்கின்றன?" சுப்ரமணியம் வியப்போடு கேட்டார்.

அவர்கள் ஊரைத் தாண்டிக் கொண்டே பேசியபடி நடந்தார்கள்.

"ஐயன், நான் கேள்விப்பட்ட வரை மன்னர் சரபோஜிக்கு மூன்று மனைவிகள். அந்த மூவரில் இளைய வளை அருகே வைத்து அவள் தர்ப்பைப் புல்லோடு நிற்க மன்னர் இந்த யாகத்தைச் செய்கிறார். மற்ற இரண்டு மனைவியருக்கும் இதில் வருத்தம். இந்த யாகம் பலிக்கக் கூடாது என்கிற எண்ணம். பலித்தால் மூன்றாவது

மனைவிக்குக் குழந்தை உண்டாகி தாம் புறக்கணிக்கப் பட்டு விடுவோமோ என்கிற பயம்.

''இது சம்பந்தமான சச்சரவு அடிக்கடி அரண்மனை யில் நடந்து வருகிறதாம். மன்னரின் கோபத்திற்கு மூத்த அரசி இலக்காகி இருக்கிறாராம். அது மட்டுமில்லாது எழுந்திருக்க முடியாது நோய்வாய்ப்பட்டிருக்கிறாராம்.''

''என்னவித சுகவீனம்?'' சுப்ரமணியர் அந்த முத்தரைய வம்சத்து இளைஞனைக் கேட்டார்.

''அரசர் அரசியை சவுக்கால் விளாரிவிட்டதாகப் பேச்சு.''

''ஈஸ்வரா... ஏன் இந்தக் கொடுமை?'' சுப்ரமணியத்தின் மனைவி காது பொத்திக் கொண்டு கூவினாள்.

''அரசி பிள்ளை பெறவில்லை என்று கோபமாம்.''

''மன்னருக்கு பைத்தியமா பிடித்து விட்டது...'' மறுபடி சுப்ரமணியத்தின் மனைவி கத்தினாள்.

''ஆமாம் என்பதாய் ஜனங்கள் பேசிக் கொள் கிறார்கள்.''

''வீட்டில் இத்தனைக் கொடுமைகள் செய்துவிட்டு ஊரை வளைத்து சோறு போட்டால் சரியாகி விடுமா...''

''இதைத்தான் அய்யாவையனும் கேட்கிறார்.''

''அமைச்சரா?''

''ஆமாம் அவருக்கு கபிஸ்தலம்தான் ஊர். விருந்தோம்பல் மொத்தமும் அவர் தலைமையில் தான் நடக்கிறது. இவர், அவர் என்று இல்லாமல் எல்லோருக்கும் உணவு போட வேண்டும் என்ற கருத்துடையவர். யாக விஷயங்கள் மராட்டிய பாணியில் இருக்கின்றன. இங்குள்ள தேவதைகளை மராட்டியர்கள் வணங்குவ



தில்லை. வெறுமே பவானி பவானி என்று கத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தப்படுகிறார்கள்.''

''ஏகப்பட்ட செய்திகள் சொல்கிறாயே அப்பா...''

''நல்லவர்கள் வருத்தப்படக் கூடாது என்பதில் எனக்கும் அக்கறை உண்டு ஐயன். தமிழ் பேசும் நமது சோழ மண்டலத்து மனிதர்கள், அவர் எந்த வகையினராய் இருந்தாலும் சரி.'' அந்த முத்தரையர் மறக்குலத்து இளைஞன் சற்று வேகத்துடன் பேசினான்.

''சோழ மண்டலத்தின்மீது அத்தனைக் காதலா தம்பி?''

''இல்லை... தமிழ்மீது காதல்.''

''உன் பெயர் என்ன தம்பி?''

''ஞானசம்பந்தன் ஐயா.''

சுப்ரமணியன் மெல்ல நெருங்கி அவன் கைகளைக் கோர்த்துக் கொண்டார்.

''வாழ்க ஞானசம்பந்தன். வளர்க தமிழ். வாழிய மானுடம்.''

''ஐயன், என்னைத் தொட்டு விட்டீர்கள். நீங்கள் என்னைத் தீண்டலாமா?''

''தமிழைத் தீண்டத்தகாது என்று யார் சொன்னார்கள் ஞானசம்பந்தன்.''

''நீங்கள் வித்தியாசமான ஐயன் என்று பார்க்கும் போதே தெரிந்துவிட்டது. நான் நல்லவர்களுக்குத்தான் தாழங்குடை கொடுத்திருக்கிறேன்.''

''நன்றி சம்பந்தன். தஞ்சையில் நிச்சயம் சந்திப்போம். எல்லை முடிந்துவிட்டது, ஊர் திரும்பு.''

புருஷனும் மனைவியும் உமையாள்புரம் நோக்கி நகர்ந்தார்கள்.

அன்றிரவு ஒரு கிராமத்தில் தங்கி, மறுநாள் விடியல் நேரத்தில் நாலு குதிரைகள் பூட்டிய சாரட்டில் காசு கொடுத்து மறுபடி பயணத்தைத் துவங்கி, பள்ளி அக்ர ஹாரம் தாண்டி, தஞ்சாவூருக்குள் நுழைந்தார்கள். இறங்கி ஜனங்களோடு கலந்தார்கள்.

தஞ்சாவூர் நெரிசலாக இருந்தது. முன்னும் பின்னும் ஜனங்கள் அலைந்து கொண்டிருந்தார்கள்.

''எந்த முட்டாள் பார்ப்பான் ராஜாவுக்கு தேதி வச்சுக் கொடுத்தான்...'' யாரோ ஒருவர் கூவ,

''ஏன்... நான்தான்'' என்று அந்தணரல்லாத ஒருவர் கூவினவருக்கருகே வந்து தட்டினார்.

''கிறுக்குப் பிடிச்ச குரங்கய்யா நீரு... பத்து நாள் முன்னாடி தான் நாத்து பறிச்சு நடவு போட்டிருக்கு. இப்ப போய் புத்ரகாமேஷ்டியாகம் தேவைதானா... மடை திருப்பணும். நீர் பாய்ச்சணும்... ஒத்த ஆள் இல்லையே. அத்தனை பேரும் வழிச்சுக்கிட்டு மகாராஜாவ பார்க்க போயிட்டானுவ.''

''நீரும் வழிச்சுக்கிட்டுதான் வந்திருக்கிரு, அப்புற மென்ன?''

''அங்க ஏவறத்துக்கு ஒருத்தனுமில்லை. நான் மட்டும் இருந்து என்ன பண்றது சரி... நீரில்லாத நெல்லு காஞ்சி, சப்பை மாடு மேயட்டும்னு விட்டுட்டு வந்துட்டேன்.''

''அடடா... தைமாசம் என்னத்தைய்யா அறுப்பீரு?'' எதிரிலுள்ளவர் வியக்க, முதலில் கூவியவன், முண்டாசை அவிழ்த்து இதைத்தான் என்று கத்தினான்.

சுற்றியுள்ளோர் சிரித்தார்கள். கெட்ட வார்த்தைக்கு சிரித்தாலும் நெஞ்சடியில் எல்லோருக்கும் வேதனை இருந்தது.



''அட... நீங்க ரெண்டு பேரும் ஏன்யா கூவுறீக... ராசாவுக்கு பிள்ளை பொறக்கணும்னு அவசரம். அதுக்கு யாகம் பண்றாக, நீங்க அறுத்தா என்ன... கட்டினா என்ன...''

''அவசரமா புள்ளை பொறக்கணும்னா அஞ்சோ பத்தோ கூட கொடுத்து வாங்கிக்கிறது... வயல் வேலைய நாசம் பண்ணினா... அடுத்த வருஷம் நாக்கதான் வழிக்கணும்.''

''அஞ்சோ பத்தோ கூட கொடுக்கறதுக்கு இது என்ன மாடா கன்னா...''

''புள்ளை, அதுக்கு உண்டான சாங்கியம் செய்தாதான் புள்ளை பொறக்கும். ராணிக ஒத்துழைப்பு சௌக்ய மில்லை.''

''ஏன் ராஜா மேல தப்பு சொல்ல மாட்டியோ?''

''சொல்லமாட்டேன். ராஜாவுக்கு குழந்தை பொறந்து ஒரு வருஷமாச்சு. ஆனா அது ராணிக்கு பொறக்கலியே. குப்பிக்குன்னா பொறந்திருக்கு.'' வேறு ஆள் பேசினான்.

''குப்பின்னு சொன்னா உமக்குப் புரியாது. ரூபா தேவி...'' அந்த தஞ்சாவூர் ஆள் சர்வ அலட்சியமாய் அந்தப் பெயரைச் சொன்னான்.

''அவா நடனமாடறவா இல்லியோ...''

''அதெல்லாம் எப்பமோ வுட்டுட்டா.''

''எப்போ...''

''ராஜா கத்திக் கல்யாணம் பண்ணின்டாரே அப்பவே...''

''அதென்ன கத்திக் கல்யாணம்.''

''அது மராட்டிக்காரங்க நாகரீகம். ஒரு பொண்ணை மராட்டிய ராஜாங்களுக்குப் புடிச்சிருச்சுன்னா தன் கத்திய

அவ வீட்டு வாசப்படி முன்னாடி, ராஜா நட்டுட்டு வந்துடுவான். அந்த வீட்ல இருக்கற பொண்ணு அந்த கத்திக்கு மாலை போட்டுரணும். அப்படி மாலை போட்டா... சீர்வரிசை வரும். இல்லைன்னா ஆள்படை வரும். வீட்ல இருக்கறவங்களை அடிச்சுப் போட்டுட்டு, பொண்ணை தூக்கிட்டு போயிரும். சாமர்த்தியம் இருக்கறவங்க தடுத்துக்கலாம். ஆனா ராஜாவ எதிர்க்க யாருக்கு சாமர்த்தியம் இருக்கும். ராஜ குடும்பத்தை எதிர்க்க, எவனுக்கு சாமர்த்தியம் இருக்கும். அதுவும் இவ நடனக் காரி. வாடின்னா வரவேண்டியவ.''

''நடனக்காரிங்கறியே... ராஜாதானா...''

''பெரும் பாதுகாப்பில்லையா... அரண்மனைக்கு இருக்கறதை விட பெரிய பாதுகாப்பு, இவா மாதிரி இருக்கறவா வீட்டுக்கு இருக்கும். தெரிஞ்சுக்கோ.''

''சரி... குப்பியோ... ரூபாவோ அவளுக்குத்தான் குழந்தை பொறந்துருச்சே. அப்புறம் எதுக்கு புத்ர காமேஷ்டி?''

''அந்தப் பையனுக்கு அங்கீகாரம் எந்த பட்ட மகிஷியும் தரமாட்டா. எந்த ராஜாங்கமும் தராது. அதனால அரசாங்கம் ஆதரவு பெற்ற ராணிக்கே குழந்தை பொறக்கணும்னு யாகம். அதிலயும் மூணாவது ராணிக்கு யோகம்...''

நடுத்தெருவில் ஆள்பவரின் சொந்த வாழ்க்கை, மக்கள் வாயில் மாட்டிக் கொண்டு சிரிப்பாய் சிரித்தது.

''குழந்தைப் பேறு இல்லைன்னா, கருங்குரங்கு ரசாயனம் சாப்பிடலாம்பாளே...'' யாரோ ஒருவர் ஆர்வமாய் அபிப்ராயம் சொல்ல...

ஊர் சிரித்தது.



''நான் ராஜாவுக்கு, ராஜா பொறக்கணும்னு சொல்றேன். இவ ராஜாவுக்கு குரங்கு பிறக்கணும்னு சொல்றான். அடுத்த பட்டம் நல்லவிதமா இருக்கணும்னு உனக்கு ஆர்வமே இல்லையா...''

''அடவிடுங்கப்பா... தஞ்சாவூரை ராஜா ஆண்டா என்ன... குரங்கு ஆண்டா என்ன... எல்லாம் ஒண்ணுதான். மராட்டிக்காரன் பிரம்பு சுழட்டிண்டு வருவான். நாம தொப்பியக் காணோம், துணியக் காணோம்னு ஓடுவோம். யாகத்தை ஒரு தடவை வேடிக்கைப் பார்த்துட்டு சாப்பாட்டுக் கூடம் பக்கம் உக்காந்துக்குவோம். ஒரு நாளைக்கு ரெண்டு தடவை சாப்பிட்டு, எத்தனையோ நாளாச்சு. தஞ்சாவூருக் காரன் அடிச்சு தொரத்தற வரைக்கும் நான் இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போப்போறேன்.''

சுப்ரமணியம் மனைவியோடு அந்த கும்பலிலிருந்து விலகி சிறிய கடைத்தெரு வழியே நடந்தார்.

ஒரு வீட்டின் கதவின் முன்னே நின்று தட்டினார்.

''யாரது...?'' மராட்டியக் குரல் கேட்டது.

''நான்தான் சுப்ரமணியம் திருக்கடவூர்.''

''அம்பி வந்தாச்சு, அம்பி வந்தாச்சு.'' உள்ளே குரல் கேட்க, கதவு திறக்கும் ஓசை கேட்டது.

அது ஒரு வீட்டின் கொல்லைப்புறம். கதவு திறந்ததும் பெரிய தோட்டம் தெரிந்தது. தோட்டத்தின் ஊடே நடந்து போக, ஒரு மாளிகையின் பின்புறம் என்பதை உணர முடிந்தது.

சுப்ரமணியத்தின் அண்ணா, அமைச்சர் அய்யாவை யனிடம் கணக்காக வேலை பார்த்து வந்தார். எப்போதும் அமைச்சரோடு இருக்க வேண்டும் என்பதற்காக அய்யாவையனின் வீட்டு பின்பக்கம் தங்கியிருந்தார்.

வீட்டுப் பெண்டுகளின் போக்குவரத்திற்காக பின் பக்கக் கதவு திறந்து விடப்பட்டிருந்தது. அதற்கு ஆள் காவலும் இருந்தது.

அமைச்சர் பின்பக்கம் வரமாட்டார். அண்ணாவின் வீட்டுப் பெண்கள், அமைச்சர் இருக்கும் இடத்திற்கு போகமாட்டார்கள். அண்ணா மட்டும் இரண்டு பக்கமும் அலைந்துவிட்டு வருவார்.

அமைச்சர் வீட்டுப் பெண்கள், அமைச்சரின் கபிஸ்தலம் கிராமத்திலேயே இருந்தார்கள். அமைச்சர் தனியாக இருந்தார். அதுதான் அரசாங்கக் காரியங்களைக் கவனிக்க அவருக்கு சௌகரியமாக இருந்தது. அண்ணாவின் வீடு அவர்கள் இருவரையும் மிகுந்த பிரியத்தோடு வரவேற்றது.

''தஞ்சாவூர் பார்க்கனும்... தஞ்சாவூர் பார்க்கணும்னு தஞ்சாவூர் வந்துட்டியா...'' சுப்ரமண்யத்தின் மன்னி, சுப்ரமணியத்தின் மனைவியை ஆரத் தழுவிக் கொண்டாள்.

சுப்ரமணியத்தின் அக்காவும், அதாவது சுப்ரமணியத்தின் மனைவியின் தாயும், தகப்பனும் தஞ்சாவூரில்தான் இருந்தார்கள். மகனோடு வசித்து வந்தார்கள். அரண்மனையை ஒட்டி அவர்கள் வீடு இருந்தது. இது சற்று தள்ளி உள்ள இடம். அமைச்சர் வாழும் இடம்.

நல்ல அமைச்சன், அரசன் வாழும் இடத்துக்கு மிக நெருக்கமாக இருக்க மாட்டான். ஓடினால் கால் நாழிகை நேரத்தில் அடையக் கூடிய தூரத்தில் இருப்பான்.

சுப்ரமணியனும் அவர் மனைவியும் ரோடினார்கள். தனி அறையில் அருகருகே படுத்து அயர்ந்து தூங்கினார்கள்.

விடிந்து சூடான அரிசிக் கஞ்சி குடித்த பிறகு கிணற்றடியில் குளித்துவிட்டு, ஜபதபங்கள் ஆன பிறகு



வெய்யில் சுள்ளென்று உறைக்கும் நேரத்தில், சுப்ரமணியமும் அவர் அப்பாவும், அவர் அண்ணாவும் அமைச்சர் அய்யாவையன் முன்பு கைகட்டி நின்றார்கள்.

வீட்டுக்குள்ளிருக்கும் வழியே போய் அந்த வயதான மந்திரியை விழுந்து வணங்கினார்கள்.

அவர் வீட்டு வாசலில் மிகப் பெரிய கூட்டம் காத்துக் கிடந்தது.

''என்ன சரபேசா... அப்பாவும் தம்பியும் வந்திருக்காளா... அப்பா பல தடவை வந்திருப்பார். தம்பிக்கு இதுதான் முதல் தடவையா...'' மந்திரி குசலம் விசாரித்தார். அவர் முகம் கவலையோடு இருந்தார்.

''எப்படி இருக்கு திருக்கடலூர்?''

''மூணுபோகம். இந்த வருஷம் நல்ல மழை. எல்லா குளத்திலேயும் ஜலம் இருக்கு. கரும்பு பயிர் காணலியே தவிர, நெல் நன்னா விளைஞ்சுருக்கு. வாழையும் பரவாயில்லை. மாடு கன்னுகளுக்கு குறைவேயில்லை.''

''சந்தோஷம். திருட்டு பயம் உண்டா?''

''பெரிசா எதுவுமில்லை.''

''கோயிலுக்கு நாலுவேளையும் பூஜையாறதா?''

''ஆஹா...''

''அரசாங்கத்தை சபிக்கறவா திருக்கடவூர்ல இருக்காளா?'' அய்யாவையன் கேள்வி கேட்டார். அவருடைய கண்கள் வாசல் ஜனங்களைப் பார்த்தபடி இருந்தன. சட்டென்று இவர்களுக்குத் தாவின. இவர்கள் முகபாவத்தை எடைபோட்டுவிட்டு மறுபடியும் வீட்டு வாசலை ஆராய்ந்தன.

அய்யாவையன் மறுபடி கேட்டார். ''அரசாங்கத்தை யார் வைகிறார்கள்? உம்பேரென்ன. சுப்ரமணியமா... நீ சொல்.''

அப்பா வாய்மேல் விரல் வைத்து சுப்ரமணியத்தை, 'உஷ்' என்று எச்சரித்தார். எதுவும் சொல்லாதே என்று கட்டளையிட்டார்.

சுப்ரமணியம் அப்பாவை புறக்கணித்தார்.

''வேளாளர்கள் சபிக்கிறார்கள்.''

''என்ன?'' அமைச்சர் அய்யாவையன் சட்டென்று திரும்பினார். அந்தத் திரும்பலில் ஓர் அதட்டலிருந்தது.

அந்த இடம் பரபரப்பாயிற்று.

''என்ன சபிக்கிறார்கள்?''

''குறை கூறி சபிக்கிறார்கள். அரசர் எங்கள் வயிற்றில் அடிக்கிறார்களே என்று சபிக்கிறார்கள்.''

''எப்படி வயிற்றில் அடிக்கிறோம்.''

''ஐந்தில் நாலு பங்கு வரி என்பது வயிற்றிலடிக்கும் விஷயம்தான். அதில் மீதி ஒரு பங்கிற்கு காசாக வரி வசூலிப்பது மிக மிக அதிகம்.''

''வேளாளர்கள் நெல்லைப் பதுக்குகிறார்கள். விளைய வில்லை என்று பொய் சொல்லுகிறார்கள். அதனால்தான், வரி வசூலிப்பு அதிகரித்துக் கொண்டே போய் விட்டது. சரி வேறு ஏதும் குறை சொல்கிறார்களா...?''

''கிராமங்களுக்கு பாதுகாப்பில்லை என்று சொல் கிறார்கள்.''

''யாரிடமிருந்து?''

''அன்னியரிடமிருந்து. குறிப்பாய் ராமநாதபுரத்து மறவர்களிடமிருந்து.''

அய்யாவையன் எழுந்தார். சுப்ரமணியத்தின் அருகே வந்து தோளை தட்டிக் கொடுத்தார்.



''கேள்வி கேட்டதும் பொய்யற்று பதில் சொன்ன உன் தன்மை எனக்கு பிடித்திருக்கிறது. மறவரால் தஞ்சைக்கு ஆபத்தில்லை. தஞ்சைக்கு ஆபத்து அன்னிய மதத்தினரால் வரப்போகிறது. கப்பலில் கூட்டமாய் கூட்டமாய் வெள்ளைப் பூசணியைப் போல, பழுத்த பரங்கியைப் போல ஆட்கள் இறங்குகிறார்கள். இங்கிலீஷ் என்ற கூட்டமாம்.

''விதம்விதமான பீரங்கிகளும், வெடி மருந்துகளும் சென்னைப் பட்டணம் வந்துவிட்டன. சிகப்புத் தொப்பியும், கருநீலக் கால்சராயுமாய் கும்மினிப் பட்டாளம் இடங்கள் வாங்கிக் கொண்டிருக்கின்றன. வாங்கின இடத்தில் மிகப் பலமான கோட்டை எழுப்புகிறார்கள். காரைக்காலில், பாண்டிச்சேரியில் வேறு மொழி பேசும் பரங்கியர்கள் இறங்கி விட்டார்கள். அவர்களிடமும் பீரங்கிகள் இருக்கின்றன. இவர்கள் ஃபிரஞ்ச் வியாபாரிகள்.

''ஃபிரஞ்சு வியாபாரிகளுக்கும் ஆங்கிலேய வியாபாரிகளுக்கும் அவ்வளவு நல்ல உறவில்லை. இதைத் தவிர மைசூர் சுல்தான்கள் சுதந்திரமாய் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். டில்லிக்குக் கட்டுப்படாத சிற்றரசர்களாய் தங்களை அறிவித்துக் கொள்கிறார்கள். தென்னிந்தியாவில் மிக முக்கியமான உணவு அரிசி. அரிசி சிறப்பாக விளையும் இடம் தஞ்சாவூரும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களும்.

''எனவே மைசூர் சுல்தான்களும் மதுரை நாயக்கர் களும், ராமநாதபுரத்து மறவர்களும் புதிதாய் வந்த வெள்ளைப் பரங்கியர்களும் உணவுக்காக தஞ்சையை குறி வைக்கிறார்கள்.

''சுப்ரமணியம், இந்த நேரத்தில் இந்த யாகம் தேவை யற்றது.

''இந்தச் செலவுக்குப் பதிலாக படைகளை வலுப் படுத்தலாம். பாசன வசதிகளை அதிகப்படுத்தலாம். கோட்டைக் கொத்தளங்களை வலுப்படுத்தலாம். தனக்கு மகனில்லையே என்று ராஜா சரபோஜி கவலைப்பட, இதோ... யாகம் செய்து குழந்தை பெற வைக்கிறேனென்று சிலர் இறங்கியிருக்கிறார்கள். தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள திட்டம் போடுகிறார்கள்.

''தஞ்சாவூரை, சோழ தேசத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். காசு கொடுத்து எத்தனை எதிரிகளை சமாளிப்பது?

''ஆயிரக்கணக்கான வருடங்களாய் சேமித்து வைத்த பொற்காசுகள் கரைந்து கொண்டிருக்கின்றன. அந்நியர் களுக்கு கப்பமாய் தங்கம் போய்க் கொண்டிருக்கிறது.

''சுப்ரமணியம் இந்த தேசம் தன் எல்லா குணங் களையும் விட்டுவிட்டு தவிக்கப் போகிறது. நம்முடைய மொழி, நம்முடைய மதம், நம்முடைய கலாச்சாரம் எல்லாம் அன்னிய தாக்கத்தில் அகப்பட்டு மூச்சுத் திணறப் போகின்றன.

''சுப்ரமணியம், இந்த தேசத்தை இனிமேல் அரசர்கள் காப்பாற்றப் போவதில்லை. அந்தக் காலம் முடிந்து விட்டது. அறிவாளிகள்தான் காப்பாற்றப் போகிறார்கள்.

''சுப்ரமணியம் இனிமேல், சமஸ்கிருதத்தை வைத்துக் கொண்டு, பாடாதே, தொடாதே என்பதெல்லாம் முடிந்து விட்டது. அந்நியரிடமிருந்து நம் கலாச்சாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் நம் மக்களை ஒன்று



திரட்டியாக வேண்டும். நமக்குள் ஒற்றுமை வேண்டும். போலி ஆச்சாரங்களை விட்டுவிட்டு, உண்மையாய் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். உன் தகப்பனார் தடுத்த போதும், வேளாளர்களுடைய வேதனையை என்னிடம் நீ சொன்னாயே... இதுதான் உண்மைக்கு அருகே நிற்றல்.

''மாதம் மும்மாரி பெய்கிறதா என்று அரசன் கேட்பதும், பெய்கிறது என்று அந்தணர் சொல்வதும் இனி சரிவராது.

''பெண்களை அதிகம் வஞ்சித்து விட்டோம். நமது பெண்களின் கண்ணீர் தரையில் விழ விழ, ஆண்களின் தலை தரையில் உருண்டு கொண்டே இருக்கிறது.

''இதே சமயம், பெண்களிடமும் நேர்மையில்லை. பல்வேறு விதமான பொய்கள் அவர்களிடமும் ஏற்பட்டு விட்டன.

''புத்ர காமேஷ்டி யாகம் மூன்றாவது பட்ட மகிஷியை வைத்து நடந்து கொண்டிருக்கும் போது, இரண்டாவது மனைவி கருவுற்றிருக்கிறார் என்கிற செய்தி, பூனேயிலிருந்து வருகிறது. இரண்டாவது அரசியார் அங்கிருந்து கிளம்பி பூரண கர்ப்பிணியாய் தஞ்சையில் பிள்ளை பெற வேண்டுமென்று வந்து கொண்டிருப்ப தாகவும் ஆட்கள் வந்து சொல்கிறார்கள்.

''அவர்கள் சொல்கிற கணக்கைப் பார்த்தால் யாகம் நடப்பதற்கு முன்பே குழந்தை பிறந்து விடுமென்று வைத்திய கணக்கு சொல்கிறது. ஆனால் ஜோஸியர்கள் அந்த மனைவிக்கு பிள்ளை பிறக்க வாய்ப்பே இல்லை யென்று தெளிவாகச் சொல்கிறார்கள்.

''நான் இரண்டாவது அரசியை சோதிக்க ஒற்றர்களை அனுப்பியிருக்கிறேன். என் வேலை எனக்கே வெறுப்பாகத் தான் இருக்கிறது. ஆனால் சரியான வம்சம் அரசாள வேண்டுமென்பதே முக்கியம்.

''எனவே, சுப்ரமணியம்... சோழ மன்னனை, மக்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று நாம் எல்லோரும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

''இது யாகம். இது புத்திரனுக்காக என்பது ஒரு காரணம். இந்தக் காரணத்தை முன்னிட்டு தஞ்சாவூர் முழுவதும் வேதபாராயணங்கள் நடத்த விரும்புகின்றேன்.

''உன் தோற்றப் பொலிவு அற்புதமாக இருக்கிறது. உள்ளே கனல் மூண்டவனுக்குத்தான் முகத்தில் இவ்வளவு ஒளியிருக்கும்.

''இலவச போஜனத்தில் நீயோ, உனது வீடோ கலந்து கொள்ள வேண்டாம். யாக சாலையில் தினந்தோறும் ஏதேனும் ஓர் இடத்தில் அமர்ந்து சோழ மண்டலத்திற்காக பிரார்த்தனை செய்.

''இந்த யாக விஷயங்களை மராட்டிய பிராமணர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். அதில் நாம் யாரும் கலந்து கொள்ள வேண்டாம்.

''என் வீட்டில் மூன்று ஆட்கள் வைத்து தினசரி முப்பது நாப்பது பேருக்கு உணவு தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன். குழந்தைகளுக்கு பழங்களும், பட்சணங்களும் தரச் சொல்லியிருக்கிறேன்.

''காலையில் யாகசாலைக்குப் போய்விட்டு வந்து விடுங்கள். பிற்பகல் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இரவு சுற்றியுள்ள க்ஷேத்திரங்களுக்கு போய் வாருங்கள். ஏதேனும்



பிரச்சனை என்றால் என் பேர் சொல்லுங்கள். இரவு சந்திப்போம்.''

அய்யாவையன் கை கூப்பினார். நிதானமாய் எழுந்து வாசலுக்குப் போனார்.

அப்பாவும், அண்ணாவும் பின்கட்டு வழியாக தங்கள் இடத்திற்குப் போக, சுப்ரமணியம் மட்டும் அய்யாவையன் பின்னால் போனார்.

வாசற்படியில் ஒரு காலை வைத்த அய்யாவையன் சுப்ரமணியம் பின்தொடர்வதைப் பார்த்தார். திரும்பி, என்னவென்று கேட்டார்.

இந்தக் கேள்வியிலும் லேசான கோபமிருந்தது. எதற்கு பின்தொடர்கிறாய் என்ற அதட்டலிருந்தது.

அதிகாரத்தில் இருப்பவர்கள் கவலையாலும் காபந்து எண்ணத்தாலும் இப்படித்தான் கடுகடுப்பாக இருப்பார்கள். அதிகாரத்திலுள்ளவர்கள் சிரிக்கக் கூடாது. சிரித்தால் அவர்களிடம் தேவையற்ற சலுகைகள் கேட்கப் படும்.

அய்யாவையன் இப்படியிருப்பது இயல்பு. நெல்முனை கூட இதைத் தவறாகக் கொள்ளக் கூடாது.

சுப்ரமணியம் அந்த அதட்டலான கேள்விக்கு மெல்ல கைகூப்பினார்.

''உங்களுக்கு அருகேயிருப்பது சந்தோஷமாக இருக்கிறது. உங்களிடம் பேசாமலேயே அதிகம் தெரிந்து கொள்ளலாம் என்று தோன்றுகிறது. அரசாங்க ரகசியம் ஏதுமில்லை என்றால் உங்களுக்கு அருகேயிருக்கப் பிரியப்படுகிறேன்.'' சொல்லிவிட்டு மறுபடியும் கை கூப்பினார்.

அய்யாவையனுக்கு சுப்ரமணியத்தின் பேச்சு பிடித்திருந்தது.

''சரி. வா. ஆனால், ஒரு விஷயம் கற்றுக் கொள். வாசலிலுள்ளவர்கள் என்னிடம் விதம் விதமான குறைகள் சொல்வதற்காக வருகிறார்கள். இந்தக் குறைகளை கூட்டியும், குறைத்தும் சொல்வார்கள். அவர்கள் பேசும் போது எந்த முகமாறுதலும் காட்டி விடாதே.

''நடுநிலை வகிப்பவனுக்கு உணர்வுகளே இருக்கக் கூடாது. இருந்தாலும் காட்டிக் கொள்ளக் கூடாது. எனக்கு அருகேயிருப்பது என்பது எளிதல்ல. இது மிகக் கடினமானது'' சொல்லிவிட்டு மிக லேசாய் சிரித்தார். ரேழிக்குப் போனார்.

புருஷன் மனைவித் தகராறு, நிலம் நீச்சு பிரிப்பதில் சண்டை, ஐநூறு சக்கரம் கடன் வாங்கிய மராட்டி பிராமணன் கடனைத் திருப்ப முடியாது என்று சொல்லி விட்டான் என்று பிராதுகள் சொல்லப்பட்டன.

ஒரு பெண் விதவையாகி விட்டாள். அவளை தீயில் குளித்து சதியில் ஈடுபட வேண்டும் என்று ஊரார் வற்புறுத்த, அந்தப் பெண்ணின் உறவினர்கள் அவளைத் தூக்கிக் கொண்டு, தொண்டை நாட்டிற்கு போய், மயிலை திருவல்லிக்கேணி கிராமத்தில் தங்கிவிட்டார்கள்.

பத்து அடிதடி கூலி ஆட்களோடு நிறைய காசு செலவழித்து, அவளை மீட்டுக் கொண்டு வரப்போனால், கும்பனி கட்டியிருக்கும் சிறிய கோட்டைக்குள் தஞ்சம் புகுந்து விட்டார்கள்.

பேசி அனுப்பி விடுகிறோம் என்று தந்திரமாக வெளியே வரச்சொல்லி, அந்தப் பெண்ணை அப்படியே



தூக்கி ஓடிவரும் போது மயிலையிலேயே தீமூட்டி அவளை தள்ள முற்பட்ட போது, ஒரு பரங்கித்துரை தன் பட்டாளத்துடன் உள்ளே புகுந்து, மூன்று பேரை சுட்டுக் கொன்று மற்றவர்களை விரட்டியடித்து விட்டான்.

'எங்கள் மதத்தில் நீ ஏன் தலையிடுகிறாய்?' என்று கேட்ட போது, 'எங்கள் மதத்திற்கு வந்துவிடு' என்று பரங்கியன் அந்தப் பொண்ணைப் பார்த்து கை நீட்டினான்.

அந்தப் பெண் நீட்டிய கரம் பற்றி அவனோடு குதிரையில் ஏறிக் கொண்டாள். பரங்கியன் மதத்திற்கு மாறி, சிலுவை அணிந்து கொண்டு, பெயரும் மாற்றிக் கொண்டாள்.

''தஞ்சையிலிருந்து ஆயிரம் பேர் படையனுப்பினால் சௌகர்யமாக இருக்கும். பெண்ணை நிச்சயம் மீட்டு வந்துவிடலாம். மீட்டு வந்து தஞ்சையிலேயே தகனம் செய்து விடலாம்.''

அமைச்சர் அய்யாவையன் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவல் எழுந்தது.

''நாளை, சொல்கிறேன். அரசியிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன்.''

அமைச்சர் அவர்களைத் திருப்பி அனுப்பினார்.

''நீ அமைச்சராக இருந்தால் என்ன செய்வாய் சுப்ரமணியம்?''

''அந்தப் பெண்ணை விதவையாக வாழ அனுமதிப் பேன். தற்கொலை தவறு என்று தர்மம் சொல்கிறது. அப்படியானால் சதியும் தவறு. சதிக்கு ஆசைப்படுகிற பெண்ணைக்கூட நாம் காரண காரியங்கள் காட்டி நிறுத்த வேண்டும்.

''அரசனுடைய மனைவியர் அரசன் போரில் இறந்த பிறகு, தப்பித்துப் போக வழியில்லாமல் மாற்றரசர்கள், கோட்டைக்குள் புகுந்து விடுவார்களே, உள்ளே புகுந்து தங்களை பலாத்காரம் செய்வார்களே, தாங்கள் இனி அடிமையாய் வாழ நேரிடுமே, அந்த வாழ்வு தனக்கும் தன் தேசத்திற்கும் அவமானம் தருமே என்பதால் தீக்குளித்து இறந்தார்கள். மான அவமானத்திற்கு பயந்து பிராணஹத்தி செய்து கொண்டார்கள். இது தனிமனித விருப்பு வெறுப்பு. இது சடங்கேயில்லை.

''இங்கே இவர்கள் செய்வது வன்முறை. காட்டு மிராண்டித்தனம்.''

''அவள் மதம் மாறிவிட்டாள் என்பதை கவனித்தாயா?'' அமைச்சர் கேட்டார்.

''இதுதான் கவலையாக இருக்கிறது ஐயன். இந்த முட்டாள்களால் அது நடந்து விட்டது. இந்த முரடர்களால் அவள் மதம்மாறி விட்டாள்.

''அன்பு எல்லா மதத்திற்கும் பொதுவானது. அரக்கத் தனம் எல்லா மனிதர்களிடமும் இருப்பது. ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி பேசி, இந்து மதத்தில் கசடுகள் தேங்கி விட்டன. நாம் மறுபடியும் தெளிய வைக்க வேண்டும்.''

''தெளிவா... நம்முடைய மதத்திலா... இப் போதைக்கு இல்லை. சுப்ரமணியம் போலியான பெருந் தலைகள் அதிகமாகி விட்டன. உரக்கப் பேசத் தெரிந்தவ னெல்லாம் காவி உடுத்திக் கொண்டு, சன்யாசி என்று அலட்டுகிறான்.

''தவம் குறைந்து விட்டது. அடுக்கடுக்காய் பொய் சொல்கிறார்கள். ஆரவாரமாய் இருப்பதே ஞானம்



என்கிறார்கள். தங்களைச் சுற்றி ஆட்கள் சேர்த்துக் கொண்டு மோசமாய் விளம்பரம் செய்துவிடுகிறார்கள்.

''இந்த புத்ர காமேஷ்டி யாகத்திற்கு ஒரு ஜடாமுடி வந்திருக்கிறார்.

''தினமும் தேவரடியார் பாத பூஜை செய்வார்கள் என்கிறார். அவர்கள் விளக்கேத்தி ஆடி, பாத பூஜை செய்வார்களாம். இதைப் பார்க்கக் கூட்டம் அலை மோதுகிறது. பெண்களை முன்னே வைத்து இந்த ஆட்கள் பெரிய ஆளாகிறார்கள்.

''முகத்தில ஒளியேயில்லை. பேச்சில் தெளிவில்லை. செய்கையில் சுத்தமில்லை. பெரிதாய் பல்லைக் காட்டி ஈயென்று சிரிக்கிறான். தன்னை யாரெல்லாம் பார்க்கிறார்கள் என்று நாலாபுறமும் பார்க்கிறான்.

''ஆனாலும், இந்த மூடஜனங்கள் அவனைச் சுற்றி நிற்கிறார்கள். அவன் செம்பைத் தங்கமாக மாற்றுவான் என்று யாரோ சொல்லிவிட, அவன் பின்னால் சுற்று கிறார்கள்.

''அரசரும் சரியில்லை. அந்தணர்களும் சரியில்லை. வழிகாட்ட தலைவனில்லா ஜனங்கள் இப்படித் தான்தோன்றியாய் தான் அலைவார்கள்.

''என் கவலையெல்லாம் என்ன தெரியுமா சுப்ரமணியம்? கும்பல் கும்பலாய் மதம் மாறிவிடப் போகிறார்களே என்பதுதான் என் பயம். நாம ஏதாவது செய்தாக வேண்டும் சுப்ரமணியம்.''

அய்யாவையன் வாசலில் உள்ளவர்களோடு தொடர்ந்து பேசினார்.

தங்க இடம் கேட்டும், மாடுகளுக்கு தீவனம் கேட்டும் பல ஊர்மக்கள் அவரை அணுகினார்கள்.

நாளை மாலைக்குள் இதைப் போல் மூன்று மடங்கு கூட்டம் தஞ்சையில் இருக்கும் என்று ஒற்றர்கள் சொன்னார்கள்.

திருவண்ணாமலையிலிருந்து சரபோஜியின் இரண்டாவது மனைவி கிளம்பிவிட்டார் என்றும், எப்போது வேண்டுமானாலும் பிள்ளைப் பேறு நடந்து விடுமென்றும் அந்த அரசியிடமிருந்து வந்த தூதுவன் சொன்னான்.

''ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்'' என்று அவனுக்கு மொஹராக்கள் கொடுத்த அய்யாவையன் அவன் நகர்ந்ததும் அவனைப் பின்தொடருமாறு ஒற்றர்களை அனுப்பினார்.

இறங்கி, நாலு சக்கர சாரட்டில் உட்கார்ந்து கொண்டார்.

அந்த சாரட்டில் எதிரும் புதிருமாய் ஆசனங்கள் இருந்தன. கூண்டு போல இருந்த அந்த வண்டியில் ஜன்னல்கள் இருந்தன. ஜன்னலில் திரைச்சீலைகள் இருந்தன.

அந்த சாரட்டில் இரண்டு குதிரைகள் பூட்டப் பட்டிருந்தன. குதிரைகளுக்கு முதுகு காட்டி சுப்ரமணியம் உட்கார, எதிர்ப்பக்கம் அய்யாவையன் உட்கார்ந்து கொண்டார்.

தஞ்சையில் அய்யாவையனுக்கு உண்டான செல்வாக்கு தெளிவாகத் தெரிந்தது. அரசர் குலத்தைச் சேர்ந்த மராட்டியர்கள்கூட எழுந்து நின்றார்கள். சத்தமாய் பேசிய மராட்டிய பிராமணர்கள் சட்டென்று அடங்கி, கை கட்டினார்கள். யாரோ இரண்டு இளைஞர்கள் கைகலப்பு செய்வதைப் பார்த்துவிட்டு, வண்டியை நிறுத்தி



அவர்களை அழைத்தார். மிக வேகமாக மராட்டியில் அவர்களை கடிந்து கொண்டார்.

''நீ இருக்கிற இடம் தெரியாமல் உன்னை அழித்து விடுவேன்'' என்று கடுமையாக எச்சரித்தார்.

யாக சாலைக்கு சற்று முன்னரே இறங்கி, மூன்று வீரர்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு, எதிர்ப் பட்டவர்களை குசலம் விசாரித்துக் கொண்டே போனார்.

வெளியூரிலிருந்து தஞ்சைக்கு வந்திருந்தவர்களை தடுத்து நிறுத்தி எங்கிருந்து வருகிறீர்கள், எங்கு தங்கப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார். அப்படி சந்தித்த பல பேரின் பெயர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பல நாட்கள் தங்கிப் போகவேண்டும் என்று உபச்சாரமாய் கேட்டுக் கொண்டார். சட்டென்று திரும்பி உணவுக் கூடத்திற்குப் போனார்.

தஞ்சாவூரிலுள்ள கோயில் மடப்பள்ளி ஆட்களால் உணவு தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

வாழைக்காயும், பூசணியும், கத்தரியும், வெண்டை யும், முருங்கையும், பாகலும் கூடை கூடையாய் வந்திறங்கின.

பெரிய பெரிய பாத்திரங்களில் அன்னம் வடித்துக் கொண்டிருந்தார்கள். பொரியலும், ரசமும் வாசனையோடு தயாராகிக் கொண்டிருந்தன.

உச்சிப் பொழுதுக்கு ஒரே பந்தலில் நாலாயிரம் பேர் சாப்பிடலாமென்று கணக்கு சொன்னார்கள்.

சமையலறையை நடுவில் அமைத்து நாலாபக்கமும் பரிமாறும் இடங்கள் கட்டியிருந்தார்கள்.

அங்கிருந்து ஒரு பாதையாக சாலைக்குப் போயிற்று.

மராட்டிகள் கணபதி பூஜையை விஸ்தாரமாக செய்கிறவர்கள்.

கணபதி பூஜை நடந்து கொண்டிருந்தது. யாகத்தீயில் அன்னம் ஒரு பக்கமும், சமித்து ஒரு பக்கமும், அருகம்புல் ஒரு பக்கமும், பழவகைகளைப் பிசைந்து ஒரு பக்கமும் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளைப் புகை சுருள்சுருளாய் மேலே எழுந்து கொண்டிருந்தது.

அந்த சுருள் வெள்ளைப் புகையைப் பார்த்ததும் சுப்ரமணியம் அவருக்குத் தோன்றிய விசித்திர அனுபவங்களை நினைத்துக் கொண்டார்.

ஹோம குண்டத்திற்கு அருகே போக, மனம் ஒருமைபடத் துவங்கியது.

ஹோமத்தீயை வலமாய் வர, உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

அய்யாவையனோடு அரண்மனைக்குள் போனார்.

அரண்மனை மிக பெரிதில்லை. அதே சமயம் சிறிதுமில்லை.

அரண்மனைக்குள் குதிரைகள் அதிகமிருந்தன. எல்லா பக்கமும் ஏகப்பட்ட குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அரண்மனைக்கு நடுவேயுள்ள திறந்தவெளியில், கூடாரம் அடித்து, பலபேர் தங்கியிருந்தார்கள்.

பல கட்டுக் காவல்கள் தாண்டி, ஒரு திறந்த வெளிக்கு வந்தபோது திறந்த வெளியின் மறுமுனையில்



அருமையான வேலைப்பாடமைந்த தர்பார் மண்டபம் இருந்தது.

சுவர் முழுவதும் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. மேல்தளத்திலிருந்து விசித்திரமான விளக்குகள் தொங்கின.

இரண்டு ஆள் உயரத்தில் ஒரு மேடைமீது சிம்மாசனம் இருந்தது.

அய்யாவையன் அரசனுக்கு வலப்பக்கமாய் நேர் கீழே ஓர் ஆசனம் போடச் சொன்னார். அந்த ஆசனத்தை சுப்ரமணியனுக்கு சுட்டிக் காட்டினார்.

அங்கிருந்தபடி, அந்த சபா மண்டபத்தில் எல்லா இடமும் பார்க்க முடிந்தது.

''சுப்ரமணியம், நீர் இதில் அமர்ந்து கொள்ளும். இங்கே அமர்ந்து இடைவிடாது இன்று பகல் வரை, லலிதா சகஸ்ரநாமம் சொல்லும். இங்கே உரத்து பல பேச்சுகள் நடக்கலாம். அதைக் காதில் போட்டுக் கொள்ள வேண்டாம். நீர் மௌனமாய் உமது தொழிலைச் செய்யும். அரசன் இருக்கும் இடத்தில் அம்பிகையின் பெயர் சொல்வது, அரசனுக்கு நல்லது.

''ஜாதகப்படி, அரசனுக்கு நேரம் சரியில்லை. பதட்டமான முடிவுகளுக்குப் போக வாய்ப்பிருக்கிறது. அதற்கேற்பவே பல விஷயங்கள் நடைபெறுகின்றன.

''இரண்டாவது மனைவிதான் உண்டாகி இருக்கிறாரே... பிறகு எதற்கு புத்ர காமேஷ்டி யாகம் என்று அரசன் யோசிக்க ஆரம்பித்து விட்டார். யாகத்தைப் பூரணமாக்காமல் நிறுத்தக் கூடாதென்று அறிவுரைகள் சொல்லியிருக்கிறோம்.

''உக்ரமான, கோணலான எண்ணங்கள் தணிவதற்கு லலிதா சகஸ்ரநாமம் உதவும். தயவுசெய்து தொடர்ந்து

சொல்ல வேண்டும். சோழ தேச சுபிட்சத்திற்காகச் சொல்ல வேண்டும்.''

அய்யாவையன் கைகூப்பினார்.

சுப்ரமணியம் பதிலுக்கு வணங்கி விட்டு அவருடைய ஆசனத்திற்குப் போனார்.

மெல்லிய குரலில், சபைக்கு இடைஞ்சல் இல்லாமல், லலிதா சகஸ்ர நாமம் சொல்ல ஆரம்பித்தார்.

அரசவை தொடங்கியது. மன்னர் தரிசனம் கொடுத்தார்.

அகலமும் உயரமும் கொண்ட பிரும்மாண்டமான உருவம். உருண்டை விழிகள். நல்ல மராட்டிய சிகப்பு. கொழுத்த கன்னங்கள். கூர்மையான நாசி. நீண்ட அங்கியும், உடைவாளும் முத்து தலைப்பாகையும் அணிந்து ஆசனத்தில் சப்தமெழ அமர்ந்தார்.

பலமாக இருமினார்.

''என்ன... என்ன?'' பலபேர் காரணம் கேட்டார்கள்.

''ஹோமப்புகை படுக்கையறைக்கு வந்துவிட்டது. அதனால்தான் சற்று இருமல்.'' மன்னர் மராட்டியில் சொல்ல, எல்லோரும் நல்லது நல்லது என்றார்கள்.

ஹோமப்புகை அரசனைத் தொட்டது மிக நல்ல செயல் என்றார்கள்.

வலப்பக்கம் நேர்கிழாக இருந்ததால் மன்னர் பார்வை சுப்ரமணியத்தின் மீது படவேயில்லை.

சுப்ரமணியத்திற்கும் மன்னர் தெரியவில்லை.

ஆனால், மன்னரைப் பார்க்க நெருக்கியடித்து வரும் மக்களை சுப்ரமணியம் பார்க்க முடிந்தது. ஒவ்வொருவர்



கண்களிலும் உள்ள பயத்தையும், ஆவலையும் அவரால் கவனிக்க முடிந்தது.

மன்னரிடம் எல்லோரும் பை நிறைய பொற்காசு களைத்தான் எதிர்பார்த்தார்கள், ஆனால், யாருக்குமே பை நிறைய பொற்காசுகள் கிடைக்கவில்லை. அளந்து தான் தரப்பட்டது. உறவினர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் தனியே ஒரு மரியாதை இருந்தது. மராட்டிய தேசத்தி லிருந்து வந்திருக்கிறார்கள் என்றால், 'யாரது?' என்று ஆவல் பொங்கக் கேட்கப்பட்டது.

அவர்களுக்கு கிராமங்கள் பெயரைச் சொல்லி தங்க வீடும் நிலமும் உடனே கொடுக்கும்படி உததரவாயிற்று.

இதையெல்லாம் ஆனந்தராயர் கவனித்துக் கொண்டார்.

''அய்யாவையன் எங்கே?'' மன்னர் தேட, அய்யாவையன் எழுந்து நின்றார். கை கூப்பி, மன்னரைப் பார்த்து, 'நாராயண நாராயண' என்றார்.

''ஏதும் சேதி உண்டா?''

''உண்டு. நேற்று முன்தினம் திருவண்ணாமலை விட்டு கிளம்பிவிட்டார்கள். நாளை கும்பகோணம் வந்து தங்கிவிடுவார்கள். எதிர்கொண்டு அழைத்துவர, ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்.''

''பூரண கர்ப்பிணியாய் இருக்கிறாளா?''

''அப்படித்தான் சொல்லப்படுகிறது.''

''அப்படியானால், இந்தப் பயணம் நல்லதா?''

''நல்லதில்லைதான். நீங்கள் உடனே வந்து குழந்தையைப் பார்க்கும்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.''

''சரி. தொடர்ந்து செய்திகள் சொல்லிக் கொண்டிருங்கள்.'' மன்னர் லேசான அசிரத்தையுடன் பேசினார்.

''வேறு ஏதேனும் செய்ய வேண்டுமா அரசே?''

''ஆமாம். பிறகு சொல்கிறேன்.''

மன்னர் சற்று நேரம் பாடல் கேட்டார். சற்று நேரம் ஆடல்கள் பார்த்தார்.

யாகத்திற்கு வெளியூரிலிருந்து வந்த பசுக்களில் சில அவருக்கு காண்பிக்கப்பட்டன. தாயும் கன்றுமாய் மூன்று ஜதைப் பசுக்கள் அவர் எதிரே நிறுத்தப்பட்டன.

''எதனுடைய கன்று எது என்று குழந்தைகள்கூட சொல்லிவிடும். இல்லையா அய்யாவையன்...''

மன்னர் சற்று ஏக்கமாய் பேசினார்.

''ஆமாம் மன்னா'' என்று பலபேர் சொல்ல, நெடு நேரம் பசுக்களையே பார்த்துக் கொண்டிருந்தார். கை நீட்டி, பசுக்களைத் தொடுவது போல் பாவனை செய்து, கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''அய்யாவையன் யாகம் முடிந்த பிறகு இந்த மூன்று பசுக்களையும், மூன்று பிராமணர்களுக்கு தானம் கொடுத்து விடுங்கள். சபை கலையலாம்.''

எழுந்து சிம்மாசனத்தின் பின்வழியே இறங்கி, மறைந்து போனார்.

அந்தணர் கூட்டம் அய்யாவையனைச் சுற்றிக் கொண்டது.

என்னை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்... என்னை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்... என்று பல பேர் அவரிடம் சொல்லிவிட்டுப் போனார்கள்.

அந்த பசுக்கள் எங்கிருக்குமோ, நாமும் அங்கே இருப்போம். அப்போதுதான் சட்டென்று தானமாய் வாங்கலாம் என்று யாரோ வெளிப்படையாய் திட்டம் போட்டார்கள்.



அரசவையிலுள்ள மற்ற மந்திரிகளோடு அய்யாவையன் தலை குனிந்து கிசுகிசுப்பாய் பேசத் துவங்கினார்.

கணக்கர்களை வரச்சொல்லி, தனித்தனியே உத்தரவு வழங்கினார்.

பண்டாரங்களிலிருந்து நெல் எடுத்துக் கொள்ள நறுக்குச் சீட்டுகள் கொடுத்தார். கருவூலத்திலிருந்து பொற்காசுகள் எடுத்துக் கொள்ள தடியான முத்திரை ஓலைகள் வழங்கினார்.

யாரையோ பார்த்து விட்டு, அங்கேயே இரு என்று கை காட்டினார்.

சுப்ரமணியத்தை முடித்துக் கொள் என்று சைகை செய்தார். சுப்ரமணியம் முடிக்கும் வரை காத்திருந்தார்.

சுப்ரமணியத்தோடு சாரட் வண்டியில் ஏறி, தஞ்சையின் வடக்கு திசையை நோக்கி வண்டியை ஓட்டச் சொன்னார்.

வழியில் சட்டென்று இறங்கிக் கொண்டு, சுப்ரமணியத்தையும் குதித்து இறங்கச் சொல்லி வண்டியை முன்னே போகச் சொன்னார். வயல்களூடே நடந்தார்.

நடுவே, திடல் போல இருந்த இடத்தில் வேப்ப மரத்தடியில் நின்று கொண்டார்.

எதிர்ப்பக்கத்திலிருந்து யாரோ மூன்று பேர் வந்தார்கள். அமைச்சரைக் கும்பிட்டார்கள்.

''என்ன, என்ன செய்தி?''

வந்தவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

''எதுவாயினும் சொல்லுங்கள். என்ன செய்தி?''

''மொத்தமும் நாடகம். பொய். அரசி கர்ப்பமாக வில்லை. கர்ப்பிணி போல் உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். தன்னைச் சுற்றியுள்ள கூட்டத்தையே பொய் சொல்ல வைத்திருக்கிறார்கள்.''

''எப்படி கண்டுபிடித்தீர்கள்?''

''அரசியோடு கூட இருந்த பெண்ணுக்கு, பலகாரத்தில் மருந்து தடவி, அவளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படுத்தினோம். அருகேயுள்ள வைத்தியரிடம் அழைத்துப் போவதாய் சொல்லி, மாட்டு வண்டியில் ஏற்றி, இங்கே கொண்டு வந்து விட்டோம்.

''அரசியிடம் அவள் நிலைமை மிக மோசமாய் இருக்கிறது. அவளுக்கு தொற்று நோய் கொண்டிருக்கிறது என்று சொல்லி, அவளை அங்கேயே விட்டுப் போகுமாறு பெண்டுகள் வைத்துச் சொல்ல ஏற்பாடுகள் செய்திருந்தோம்.

''நாங்கள் அனுப்பிய பெண்ணிடம் அந்தத் தாதியை குத்திக் கொல்லுமாறு கட்டளையிட்டு விட்டு ரத்தக் கத்தி காட்டினால் காசு தருவதாக அரசி சொல்லியனுப்பினார்.

''அந்தப் பெண்ணுக்கு பக்கத்தில் ஆட்டுக் குட்டியை கட்டிப் போட்டோம். கத்தியால் குத்தி ரத்தம் காட்டினோம். அரசி ஐம்பது மொஹராக்கள் கொடுத்தார்.

''அரசியார் கொலை செய்யச் சொன்னதை அவளிடம் தெரியப்படுத்தினோம். அவள் ஆத்திரப்பட்டு எல்லா வற்றையும் கக்கி விட்டாள்.

''அரசியார் மிகத் தந்திரமாக ஒரு வேலை செய்கிறார்கள். அவர் சாயலிலுள்ள உறவுக்காரப் பெண்ணை அவரோடேயே வைத்திருக்கிறார்கள். அவள் பூரண



கர்ப்பிணியாய் இருக்கிறாள். அவளுக்கு குழந்தை பிறந்ததும் குழந்தையை எடுத்துக் கொண்டு, பதினைந்தாயிரம் மொஹராக்கள் கொடுத்து அவளை வடக்கே அனுப்பி விட்டு, அந்தக் குழந்தை மன்னருக்கு பிறந்தது என்று அறிவித்துவிடப் போகிறார்கள்.

''புத்ர காமேஷ்டி யாகம் உச்சகட்டமாய் நடக்கும் போது நகர் பிரவேசம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். குழந்தை பிறந்ததை தஞ்சை முழுதும் பரப்பவும், வாணவேடிக்கை செய்யவும், குலவையிடவும், கூத்துக்கள் நடத்தவும், இங்கே முன்கூட்டி ஆட்கள் அனுப்பியிருக்கிறார்கள்.''

அய்யாவையன் கவலையானார்.

''அரசி கர்ப்பிணி இல்லையென்று அரசியின் குழுவில் எத்தனை பேருக்குத் தெரியும்?''

''பதினாறு பேருக்குத் தெரியும். ஆறு பல்லக்குத் தூக்கிகள், எட்டு தாதியர். ஒரு போர் வீரர். ஒரு வைத்தியர் என்று பதினாறு பேர் அறிவார்கள்.''

''பதினாறு பேர்களை வைத்துக் கொண்டு ஒரு ரகசியத்தை எப்படிக் காப்பாற்ற முடியும்? எவ்வளவு முட்டாள்தனமான அரசி அவள்? என்ன அபத்தமான திட்டம் இது?

''பிள்ளை பெற்றவள் முகத்தைப் பார்த்தால் தெரியாதா. குழந்தைக்கு பால் கொடு என்று மன்னர் சொன்னால் என்ன செய்வாள்? பிற்பாடு தெரியவராதா? இது பிள்ளை பெறாத உடம்பு என்று புருஷனுக்கு தெரிந்து விடாதா?

''அரசுக் கட்டிலை பிடித்துவிட வேண்டும் என்ற பேராசை. அதற்கு முட்டாள்தனமாக ஒரு திட்டம். பதினாறு பேரையும் எத்தனை நாள் காசு கொடுத்து காப்பாற்ற

முடியும். யாராவது ஒருவர் திரும்பினாலும், அரசிக்கு எவ்வளவு பெரிய அவமானம்.''

''அரசி வேறு திட்டம் கூட வைத்திருக்கிறார்கள்.''

வந்தவர்கள் தலைகுனிந்து கொண்டு பேசினார்கள்.

''என்ன திட்டம்?''

''நாங்கள் கடத்திக் கொண்டு வந்த தாதியைத் தவிர, மற்ற பதினைந்து பேரையும் வெட்டிக் கொன்று போடுவதற்கான திட்டங்கள் வைத்திருக்கிறார்கள். தஞ்சைக்கு வந்த மூன்று நாளில் பதினைந்து கொலைகள் செய்ய முன்கூட்டியே பொற்காசுகள் கொடுத்து விட்டார்கள்.

''அதற்குண்டான ஏற்பாட்டை அரசியாருடைய அண்ணனும் அப்பாவும் பின்தொடர்ந்தபடி செய்து வருகிறார்கள்.

''அவர்கள் திட்டம் அரசியையும், அரசியின் குழந்தையையும் வைத்து, அரசைப் பறிக்கிற திட்டமாக இருக்கிறது.''

அய்யாவையன் கண்களை மூடிக் கொண்டார். சரி என்று சொன்னார்.

''அந்தத் தாதி எங்கே?''

''அவளை கும்பகோணத்தில் விட்டு வந்து விட்டோம். ஒரு மறவர் வீட்டில் கடுங்காவலில் வைத்திருக்கிறோம். தப்பி ஓட முயன்றால், குத்தி கொன்றுவிட உத்தரவிட்டிருக்கிறோம்.''

''உடனடியாய் அவளை இங்கே கொண்டு வந்து, என் மாளிகையின் முதல் தளத்தில், வலப்புறத்து அறையில் அடைத்து விடுங்கள். அவள் உயிருக்கு ஆபத்து என்று பயமுறுத்திக் கொண்டிருங்கள். சிவகங்கை சீமைக்கு



அனுப்பி விடுகிறோம் என்று உறுதி கூறுங்கள். காசாசைக் காட்டுங்கள்.

''இனி, அரசியின் கண்களில் பட வேண்டாம். மிக கவனமாக இருங்கள். வேறு ஒற்றர்களை அனுப்பி அங்கே அரசிக்கு அருகேயிருக்கும் பெண்ணுக்குக் குழந்தை பிறக்கும் செய்தியை எனக்குச் சொல்லுங்கள்.''

இடுப்பிலுள்ள சுருக்குப் பையைத் திறந்து, அதிலுள்ள காசு மொத்தத்தையும் அவர்கள் கையில் கொட்டினார்.

உச்சி வெயிலில் தங்க மொஹராக்கள் மின்னின.

அய்யாவையன் வரப்பினூடே சாலை நோக்கி நடந்தார்.

சாரட் திரும்பி வந்து அவரையும், சுப்ரமணியத்தையும் ஏற்றிக் கொண்டது.

மண்சாலையில் தஞ்சையை நோக்கி வேகமாகப் போனது.

''சுப்ரமணியம், உன்னை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். பெண்களை வதைப்பது சரியா?''

''மிகவும் தவறு.''

''பெண்களை கொலை செய்யலாமா?''

''கூடாதென்று தர்மசாஸ்திரம் சொல்லுகிறது.''

''ராஜத் துரோகம் செய்த பெண்களை என்ன செய்யலாம்?''

''நாடு கடத்தலாம். ஆனால் மரண தண்டனை விதிக்கக் கூடாது.''

''ஒரு பெண்ணுக்கு மரண தண்டனையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றால், மந்திரி பொய் சொல்ல வேண்டும். தர்மம் முக்கியமா? பெண் முக்கியமா?''

சுப்ரமணியம் மௌனமாக இருந்தார்.

''இன்னும் தெளிவாகக் கேட்கிறேன் சுப்ரமணியம். மன்னரின் இரண்டாவது அரசி, யாராலோ தூண்டப்பட்டு மிகமோசமான ஒரு காரியத்தில் ஈடுபட்டு விட்டார். ஆண்களிடம் சொல்லவே கூடாத ஒரு பொய். மிக எளிதிலே கண்டுபிடித்து விடக் கூடிய ஒரு பொய். அதைத் துணிந்து சொல்லியிருக்கிறாள். அதுவும் பதினாறு பேரை வைத்துக் கொண்டு... என்ன அறிவீனம்?

''மன்னருக்கு ஏற்கனவே சந்தேகம். என்ன சொல்லி இந்த அரசியை நாம் காப்பாற்ற முடியும். இவள் காப்பாற்றப்பட வேண்டுமா, இல்லையா? மன்னருக்குத் தெரிந்தால் நிச்சயம் வெட்டிக் கொன்று போடுவார். மிக முரட்டுத்தனமாய் அரசியின் குடும்பத்தை அழிப்பார்.

''தர்மம் முக்கியமா, அரசி முக்கியமா, தர்மத்தைக் காப்பது அவசியமா, அல்லது அரசி கொலை செய்யப் படாமல் இருப்பது முக்கியமா?''

''தர்மம்தான் முக்கியம் அய்யாவையன்'' சுப்ரமணியம் நிதானமாக பதில் சொன்னார்.

''அந்தண இறுமாப்போடு பேசாதே சுப்ரமணியம். அரசன் இதற்காக அரசியை அடித்தே கொல்வார். அந்த அலறலை யார் கேட்பது? மரண பரியந்தமும் இந்த வேதனை என் மனதில் நின்றுவிடும்.''

''அய்யாவையன் நான் இந்த அரசியை பெண்ணென்றே பார்க்கவில்லை. மிக மோசமான புத்தியுடைய அரசியல்வாதியாகப் பார்க்கிறேன். இவர் வைத்திருக்கும் திட்டத்தைப் பாருங்கள். ஒரேயொரு தாதியைத் தவிர, பதினாறு பேரை கொலை செய்ய திட்டம் தீட்டியிருக்கிறார் என்றால் இவர் சாதாரணமானவரல்ல.



''இவரது மகன் ஆட்சிக்கு வந்துவிட்டால், இவர் அதிகாரம் மிக மோசமாகப் போய்விடும். மன்னர் இந்த மகனை தன் மகன் என்று ஏற்றுக் கொண்டுவிட்டால், தன் தந்திரத்தால் பெற்ற வெற்றியை இவர் பல்வேறு விதமாக வெளிப்படுத்துவார்.

''அரசனது குடும்பத்தில் கலகத்தையும், களங்கத்தையும் உண்டாக்குவார். படைத்தளபதிகளைத் தன் பக்கம் சேர்ப்பார்.

''எனக்குத் தெரிந்து சரித்திரத்தில் எந்த அரசியும் இத்தனை மோசமான திட்டம் போட்டதில்லை. இந்த அரசி தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும்.

''பிள்ளைப் பேறு என்பதில் பெண் ஆணுக்கு துரோகம் செய்யவே கூடாது. மனைவி இதில் புருஷனை ஏமாற்றவே கூடாது. குடும்பத்தின் அஸ்திவாரம் இங்கு ஆடிப் போகிறது.

''இதை அரசு என்கிற விஷயத்தில் செய்வது மிகக் கேவலம். மாற்றரசர்களுக்குத் தெரிந்தால் கொண்டாட்டமாகப் போகும். அரசருக்கு ஒரு நடனக்காரியின் மூலமாக ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இதைக் கேள்விப்பட்ட அவனும் பட்டத்துக்கு வர துடிக்கக் கூடும்.

''எனவே அரசியுடைய இந்த அபத்தமான போக்கை தடுத்து நிறுத்த வேண்டும். மன்னருக்கு இதை தெரிவித்தே யாக வேண்டும்.

''மன்னர் பொறுமையில்லாதவர். அதீத ரஜோகுண முள்ளவர். நடுசபையில் வெட்டிப் போட்டு, ரத்தக்களறி உண்டாக்குவார். கொன்றால்கூட பரவாயில்லை. சித்ரவதை செய்ய உத்தரவிட்டு விட்டால் அது நல்லதல்ல. இதனால் தஞ்சாவூருக்கு கெடுதல் விளையும்.''

''அரசருக்கு அரசியின் சூழ்ச்சி தெரிந்துவிட்டது என்று ஓர் அவசர ஓலை அனுப்பினால் என்ன?'' சுப்ரமணியம் கேட்டார்.

''சரி வராது... அரசருக்கு இதைச் சொல்லாமல் இருப்பதற்காக, அமைச்சரான நான் கண்டிக்கப்படுவேன். அரசி மீதுகூட அரசருக்கு சந்தேகம் வரலாம். அமைச்சர் மீது வரக்கூடாது. எனக்கு இந்த விஷயம் தெரிந்து விட்டது என்றால் இன்னும் அரை நாழிகையில் அரசருக்குத் தெரிந்தாக வேண்டும்.''

''வேறுவழியில்லை ஐயன். அந்த அரசி தண்டிக்கப் படுவதை இனி கடவுளால்தான் தடுக்க முடியும்.''

சாரட் வண்டி அரண்மனைக்குள் நுழைந்தது.

அய்யாவையன் உள்ளே போனார். அரசரிடம் பேசினார்.

அரசரின் குரல் கோபமாக அரசவை முழுவதும் எதிரொலித்தது.

சட்டென்று அரசர் வெளியே வந்தார்.

படைத்தளபதிக்கு உத்தரவிட்டார்.

முப்பது குதிரை வீரர்கள் வடக்கு நோக்கி அரசியைத் தேடிக்கொண்டு போனார்கள்.

அந்த அரசியை வெட்டிப்போட அரசர் உத்தர விட்டிருக்கிறாராம். அரசியைச் சுற்றியுள்ள தாதிப் பெண் களையும், பல்லக்குத் தூக்கிகளையும், சவுக்கால் அடித்துத் துரத்த கட்டளை பிறப்பித்திருக்கிறாராம்.

கூடவே வந்த கர்ப்பிணியை ஆயிரம் மொஹராக்கள் கொடுத்து, வடதேசம் துரத்திவிட உத்தரவாம்.

இவர்கள் யாரும் தஞ்சை எல்லைக்குள் கால் வைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாம். அரசியே



ஏமாற்றுகிறார்கள் என்றதும் அரசருக்கு மனம் சலித்து விட்டதாம்.

இன்று முழுவதும் யாகம், அரசரில்லாமல்தான் நடக்கும்.

ஆனந்தராயரையும், அய்யாவையனையும் சகலமும் கவனிக்கச் சொல்லிவிட்டு, அரசர் ஆறாவது தளத்திற்குப் போய் விட்டார்.

யாருக்காக யாகம் செய்யப்படுகிறதோ, அவர் வரப் போவதில்லை. ஒருவேளை அரசர் ஆறாவது தளத்தில் பணிப் பெண்கள் சூழ உட்கார்ந்து மது அருந்தக் கூடும். எனவே, யாகத்தின் அவிர்பாகமும் அங்கு போவதற் கில்லை. அவிர்பாகத்தை வேறு யாருக்கு கொடுப்பது.

முதல் மனைவியின் தம்பியும், மூன்றாவது மனைவியின் அண்ணனும் அவிர்பாகத்திற்கு அடித்துக் கொள்வார்கள். மராட்டிய பிராமணர்களை கெஞ்சுவார்கள். தாஜா செய்வார்கள்.

'எனக்கு அவிர்பாகம் தரவில்லை என்றால்...' என்று மிரட்டுவார்கள்.

பூஜை செய்பவர்கள் கவனம் சிதறும். தடாரென்று அங்கே ஒரு பேரம் வந்துவிடும். ஏகப்பட்ட பேச்சு சப்தம் எழும்.

இத்தனை பேர் கூடி, இத்தனை செலவு செய்து விமரிசையாக நடக்கிற இந்த யாகம் பிரயோஜனமற்றுப் போகும். எதிர் விளைவுகள் ஏற்படும்.

அக்னியை தூண்டிவிட்டு, தேவதைகளை வர வழைத்து விட்டு வெறுமே பேசிக் கொண்டிருப்பதும், கோபப்பட்டுக் கொண்டிருப்பதும், ஆத்திரப்படுவதும் பாவம்.

யாகம் நடக்கும் போது, உரக்கப் பேசக் கூடாது. யாகத்திற்கு சம்பந்தமில்லாத விஷயங்கள் மீது கவனம் போகக் கூடாது. ஒரு யாகம் மூளியாகிவிடக் கூடாது.

ஆனால், ஆகும் போல் தெரிகிறது. இந்த இடத்தில் அதிக கோபங்கள் கொப்பளிக்கும் என்று தோன்றுகிறது.

''தாயே... இதென்ன தஞ்சை நகருக்கு வந்த சோதனை... இதை எப்படி போக்குவதென்று தெரியவில்லையே...''

தர்பார் மண்டபத்தின் வாசலில் தனியே நின்று கொண்டிருந்த போது சுப்ரமணியத்தின் தோளை யாரோ தொட்டார்கள்.

சுப்ரமணியம் திரும்பிப் பார்த்தார்.

நடராஜய்யர் வெண்தாடியும், காவிப் பல்லுமாக அருகே நின்று கொண்டிருந்தார்.

அவர் சிகப்பு சால்வையிலிருந்து அத்தர் வாசனை யடித்தது. கழுத்தில் தங்க ஹாரங்கள் மின்னின. வைர மோதிரங்களின் வெளிச்சம் வாரியடித்தது.

''என்ன அய்யாவையரை பிடிச்சுட்டே போல இருக்கே. எங்கியோ சாரட்டுல போயிட்டு வந்தியாம். என்ன விசேஷம்?''

''ஒன்றுமில்லையே...''

''சொல்லு அம்பி... ராஜா ரொம்ப கத்தினாராம். எதுக்கு?''

''ராஜா கத்தினாரா தெரியலையே...''

''நல்ல பிராமணன் பொய் சொல்லப்படாது.''

''உள்ளே இருந்து ஏதோ சத்தம் வந்தது. அது ராஜா குரலான்னு எனக்குத் தெரியாது.''

''சரி, அய்யனோட எங்கே போனே?''



''வயலுக்கு.''

''எதுக்கு?''

''மனுஷா வயலுக்கு எதுக்குப் போவா?''

''அடேய்... எங்கிட்டேயே ஆட்டங் காட்டறியா... உள்ளங்கையில் மையைத் தடவி, கிழக்குப் பார்த்து, நின்னேன்னா சகலமும் தெரிஞ்சு போயிடும். நானா கண்டு பிடிச்சுப்பேன். இருந்தாலும் சொல்லு, அரண்மனை ஏன் பதட்டமா இருக்கு? ராஜா வரமாட்டாராமே... என்ன காரணம்?''

''தெரியலை.''

''சுப்ரமணி, நீ அயோக்கியன்டா. பிராமண துரோகி.''

சுப்ரமணியம் பதில் பேசாதிருந்தார்.

''காரணமல்லாமயா நான் கேக்கறேன். ராஜாவுக்கு நேரம் சரியில்லையடா. எல்லா கிரஹமும் வக்கரிச்சுண்டு கிடக்கு. தேசத்துல ரத்தஆறு ஓடப்போறது. அதை நான் தடுத்து நிறுத்த வேண்டாமா... அதுக்கு நீ உதவி பண்ண வேண்டாமா...''

''எப்படி தடுத்து நிறுத்துவேள்?''

''மந்திரசக்தி, மாயாசக்தி எல்லாத்தையும் பிரயோகப் படுத்துவேன். காத்தை திசை திருப்புவேன். மழையை தடுத்து நிறுத்துவேன், வெள்ளம் வரப்பண்ணுவேன்.''

''இதுல ஏதாவது ஒன்னுபண்ணி என்ன விஷயம்னு தெரிஞ்சுக்கறது. என்னைப்போய் துளைப்பானேன்?''

''சொல்லமாட்டே இல்லியா... சரி. நாப்பது மொஹரா தர்றேன். சொல்லு...''

சுப்ரமணியம் நடராஜய்யரோடு விளையாட ஆரம்பித்தார்.

''உள்ளேயிருந்து குரல் கேட்டது. ஆனா, கத்தினது ராஜாவான்னு தெரியாது. என்னை அய்யாவையன் தஞ்சாவூருக்கு வெளியே கூட்டிண்டு போனார். அது கிழக்கயா, மேற்கேயான்னு தெரியாது. ஒன்னே ஒன்னு தெரியும்.''

''என்னது?''

''நீங்க எரு மூட்டைல காசு ஒளிச்சுண்டு வர்றேள்னு, தஞ்சாவூர்ல நிறைய பேருக்கு தெரிஞ்சுடுத்து. உங்க வண்டிக்காக நிறைய பேர் காத்திண்டிருக்கா. அதனால, இருக்கற காசை இடம் மாத்தி காப்பத்திக்கோங்கோ.''

நடராஜய்யர் முகம் வெளிறிற்று.

''எருமூட்டை சமாச்சாரம் யார் சொன்னா?''

''ஆடுதுறையிலேயே பேசிண்டாளே...''

நடராஜய்யர் பயத்தில் நிற்க, அய்யாவையன் இறங்கி வந்தார்.

'சுப்ரமணியம் வா' என்று நடந்து கொண்டே அழைத்தார்.

சுப்ரமணியம் பின்தொடர, நடராஜய்யர் தாவி சுப்ரமணியத்தின் முதுகைப் பிடித்துக் கொண்டார்.

''என்ன நீ பாட்டுக்கு ஓடறே. வாங்கின கடனை வைச்சுட்டுப் போடா'' உரக்கக் கத்தினார்.

சுப்ரமணியத்திற்கு கலவரத்தில் நாக்கு ஒட்டிக் கொண்டு விட்டது.

''கடனா... நானா...'' சிரமப்பட்டு நாக்கு பிரித்து, குழறிக் கத்தினார்.

பத்து தப்படி தொலைவில் போன அய்யாவையன் திரும்பிப் பார்த்தார். என்ன என்று குரல் கொடுத்தார்.



''படிச்ச பிராமணனா இருக்கானேன்னு நாப்பது சக்கரம் காசு கடன் கொடுத்தேன் ஸ்வாமி. ஏமாத்திப்பிட்டு தஞ்சாவூர் வந்துட்டான்.''

''உமக்கு எந்த ஊர்?''

நடராஜய்யர் அய்யாவையனுக்கு அருகே ஓடினார்.

''எம்பேரு நடராஜன். கௌண்டன்ய கோத்ரம், ரிக்வேதம். ஆனாலும், ஸ்ரீ வித்தை உபாஸகம். தினசரி அப்யாஸம். சாக்த உபாஸகம். அம்பாள் ப்ரத்யட்சம், க்ஷேடாசிவரைக்கும் போயிருக்கேன். ரெண்டாயிரம் பேருக்கு உபதேசம் பண்ணியிருக்கேன். நான் சொன்ன வாக்கு பலிக்கும். மழை பெய்யும்னா பெய்யும். நில்லுன்னா நிக்கும். உங்களை நமஸ்காரம் பண்றேன்.''

வெறுமே குனிந்து வணங்கினார்.

''மழையை வா, போன்னு சொல்வேள். கடனை வசூலிக்க மட்டும் இத்தனை தூரம் வருவீரா.''

''என்ன பண்றது ஸ்வாமி. பிராமணா ஏமாத்தறா?''

''உண்மை. பிராமணர்கள் தான் ஏமாற்றுகிறார்கள். வெட்கமில்லாமல் காசுக்கு ஆசைப்படுகிறார்கள். எத்தனை காசு நாற்பது சக்கரமா?''

''அது போகட்டும். அம்பாள் கிருபையில் ஒரு மந்திரிக்கு உண்டான வருமானம் எனக்கு வருகிறது. உங்களைப் போன்ற மகானின் அறிமுகம் கிடைத்தது. மிகப் பெரிய பாக்கியம். பெரியவாளிடம் ஒரு விண்ணப்பம்.''

''என்ன?''

''அரசரைச் சந்திக்க வேண்டும்.''

''காசு வசூலிக்க வேண்டாமா?''

''விட்டு விட்டேன்.''

அருகே இருந்த கணக்கிடம் ஓலை வாங்கி, தன் கை சாத்திட்டு, இவரை மட்டும் அரசரிடம் அழைத்துப் போ என்று, அருகே இருக்கிற காவலாளியிடம் சொல்ல, நடராஜய்யர் ஒரு நன்றிகூட சொல்லாமல் காவலாளியின் பின்னே போனார்.

அரண்மனை வாசலில் சுப்ரமணியமும், அய்யாவை யனும் சாரட் வண்டியில் ஏறிக்கொண்டார்கள்.

''நடராஜய்யர் நல்லவரில்லை?'' சுப்ரமணியம் பேசினார்.

''பார்த்ததுமே தெரிகிறது.''

''அவரிடம் நான் கடனே வாங்கவில்லை.''

''வினாடி நேரத்தில் புரிந்து கொண்டேன்.''

''அவர் தன்னைப் பற்றி சொல்லிக் கொண்ட தெல்லாம் அதிகம்.''

''நடராஜய்யர் பொய்யன் என்று எழுதி ஒட்டி யிருக்கிறது.''

''இருந்தும் அவரை அரசரிடம் அனுப்பிவைத்து விட்டீர்களே...''

''இது அவருக்கு தண்டனை. அரசரிடம் இப்போது போனவர்கள் சட்டென்று வரமுடியாது. மது அருந்திய அரசர், அதுவும் வருத்தத்தில் மூழ்கிய அரசர், மிக மோசமாக நடந்து கொள்வார். எதிரே இருப்பவர் தவறாகப் பேசினால் பிரம்பால் விளாறி விடுவார். போய் அடிபடட்டும்.''

சுப்ரமணியத்தின் மனம் துணுக்குற்றது.

''வேண்டாம் ஐயன். அவர் ஸ்ரீவித்தை உபாஸகர். அவரை அடிபட வைப்பானேன்.''



''உண்மையான ஸ்ரீ வித்தைக்காரனை யாரும் தொட முடியாது. நடராஜன் உண்மையா, பொய்யா என்று மாலைக்குள் தெரிந்துவிடும்.

அவர்கள் வீடு திரும்பினார்கள்.

''நீ உன்னுடைய கட்டுக்குப் போ. உன் குடும்பத் தினரோடு இரு. வேண்டும் என்கிறபோது கூப்பிடுகிறேன்.''

சுப்ரமணியம் அவரை வணங்கிவிட்டு, விரைவாக அவரிடத்திற்கு வந்தார்.

அண்ணாவும் அப்பாவும், வீட்டுப் பெண்களும் சூழ்ந்து கொண்டார்கள். குழந்தைகள் பிரமிப்போடு பார்த்தார்கள்.

அப்பா முகமலர்ச்சியாய், ஆரவாரத்தோடு பேசினார்.

''பாலா திரிபுரசுந்தரி மந்திரம் சொல்றவன் முகம் இப்படித்தான் ஆகர்ஷிணமாக இருக்கும். இப்படித் தான் வசீகரிக்கும். இப்படித்தான் உயர்ந்த இடத்து சம்பந்தங்களைக் கொண்டு வந்து சேர்க்கும்.''

தனக்கு கிடைக்காத சிறப்புகள் எல்லாம் பிள்ளைக்கு கிடைக்கிறதே என்ற நிறைவோடு பேசினார்

சுப்ரமணியம் தன் அனுபவங்களைச் சொல்ல, வீடு வாய் பிளந்து கேட்டது.

அரசவைப் பற்றி தாழ்ந்த குரலில் விவரிக்க, வியப்போடு கேட்டுக் கொண்டது.

''புள்ளை வயித்துல வாங்காதவ, புள்ளைத்தாச்சியா நடிக்கிறாளா... யார் பிள்ளையையோ தன் பிள்ளைன்னு சொல்லப்போறாளா... கலிகாலங்கறது இதுதான்.''

''யாகத்துக்கு ராஜா வரலைன்னா என்னவாகும்?''

''பகவானே... ஒதுங்கி நிக்கறதுதான் இந்த ராஜாங்கத்துல உத்தமமான காரியம்.''

''ராஜா சரியில்லைன்னா தேசத்துல யார்தான் ஏமாத்தறதுன்ற கணக்கு வழக்கே இருக்காது.''

ஒவ்வொருவரும் அபிப்ராயம் சொன்னார்கள்.

எல்லோரும் உட்கார பெண்டுகள் பரிமாறினார்கள்.

சுப்ரமணியம் சிந்தனை வயப்பட்டவராகவே இருக்க, பரிமாறும் போது அவர் மனைவி உற்றுப் பார்த்துவிட்டு போனாள்.

எல்லோரும் மாலை வேளையில் பிரகதீஸ்வரர் கோயிலுக்குப் போனார்கள். வானளாவிய அந்தக் கட்டிடத்தை வியப்போடு பார்த்தார்கள்.

எல்லா இடங்களிலும் மராட்டிய பிராமணர்கள் கையே ஓங்கியிருந்தது.

மராட்டி மொழி பேசிக்கொண்டு வந்தால், வரிசையில் நிற்காமல், உள்ளே போய்விடலாம்.

தமிழில் கேள்வி கேட்டாலும் மராட்டியர்கள் மராட்டியில்தான் பதில் சொன்னார்கள். நிறைய சோழ பிராமணர்கள் மராட்டிக் கற்றுக் கொண்டு, மராட்டி பேசி, எல்லாவற்றிலும் முன்னுரிமை வாங்க முயற்சி செய்தார்கள். மராட்டிய பிராமணர்களை குருஜீ என்று அழைத்தார்கள்.

'கல்லு மாதிரி இருக்கே உடம்பு' என்று பொய்யாய் வியந்தார்கள். மகாவீரன் என்று தன் வீட்டுப் பெண்டுகள் எதிரே, மராட்டியர்களைப் பாராட்டினார்கள்.

இந்தச் சலுகையை வைத்துக் கொண்டு மிகவும் முன்னே போய் சுவாமி தரிசனம் செய்தார்கள். துண்டு நிறைய புளியோதரை வாங்கிக் கொண்டார்கள்.



மராட்டியர்களுக்கு இந்த தந்திரம் புரிந்தது. ஆனாலும் புகழ்ச்சி தேவைப்பட்டது.

அன்றைய அவிர்பாகத்தை யாகம் செய்கிற மராட்டிய பிராமணர்களே எடுத்துக் கொண்டார்களாம். அரசர் நாளையும் வரமுடியாது என்று தகவல் அனுப்பி விட்டாராம். எனவே, நாளை அவிர்பாகத்திற்கு இப்போதே அங்கு பெருத்த சண்டை மூள்கிறது. வெகு விரைவில் அடிதடி ரகளை ஆரம்பிக்கும் என்று தெரிகிறது. யாகசாலைப் பக்கம் போகாமலிருப்பது நல்லது. அப்படி போனாலும் எதிலும் கலந்து கொள்ளாமலிருப்பது உத்தமம்.

ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஏன் அரசர் வரவில்லை என்று பேசிக் கொண்டார்கள். மைசூரிலிருந்து நவாப்பு படையெடுத்து விடுகிறானோ, மதுரையிலிருந்து நாயக்க மன்னர்கள் உள்ளே நுழைந்து விட்டார்களோ... என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

யுத்த முஸ்தீபு இல்லையே என்று ஆச்சரியப் பட்டார்கள். ஆனாலும் கூத்தும், பாட்டும், வாண வேடிக்கையும், தீவட்டி வெளிச்சத்தில் உணவு வியாபாரமும் தங்கு தடையின்றி நடந்து கொண்டிருந்தன.

திடீரென்று நாலு குதிரை வீரர்கள் தோன்றினார்கள்.

கும்பகோணத்தில் அரசருக்கு ஆண் குழந்தை இரண்டாவது அரசி மூலம் பிறந்திருக்கிறது என்று சிறு பறையடித்து செய்தி வாசித்தார்கள். புத்ரகாமேஷ்டி யாகத்தோடு இதையும் சேர்த்து கொண்டாட உத்தரவு என்று சொன்னார்கள்.

கூட்டத்தை நோக்கி இரண்டு கைப்பிடி காசு எறிந்தார்கள்.

கூட்டம் காசு பொறுக்க அலைந்தது. 'போடுறா இன்னும் போடுறா...' என்று கூவியது.

''ரெண்டு கைப்பிடி போட்டுட்டு, ஜனங்களுக்கு மரக்கா மரக்காவா கொட்டினேன்னு பொய் கணக்கு எழுதுவான். வெட்டணும்டா இவங்கள.'' அந்தக் கூட்டம் ஆத்திரப்பட்டது.

தீப்பந்தத்தில் இரும்புக் கம்பியை காய்ச்சி, குதிரையின் ஆசனவாயில் குதிரைக்காரனுக்குத் தெரியாமல் சூடு போட்டது. குதிரை மிரண்டு ஓட, குதிரைக்காரன் இடுப்பிலிருந்து பையைப் பிடுங்கி வீசியது.

முந்நூறு, நானூறு சக்கரக் காசுகள் கீழே சிதறின.

ஜனங்கள் 'ஓ' வென்று கூச்சலிட்டு, காசு பொறுக்கி னார்கள். குதிரைகள் மிரள மிதிபட்டார்கள்.

ஜனங்களைக் கலைக்க வீரர்கள் சவுக்கால் அடித்தார்கள்.

''ராஜாவுக்கு குழந்தை பிறந்திருக்கு. அதுக்காக ஜனங்களை சவுக்கால் அடிக்கிறியா... உன்னை என்ன பண்றேன் பார்.'' பிராமணர்கள் கறுவினார்கள்.

''மீசை முளைச்ச ஆம்பளையா இருந்தா உம்பேர் சொல்லுடா. நீ என்ன கதியாகறே பார்...'' சூளுரைத் தார்கள்.

குதிரையில்லாத மறவர்கள் குதிரையுள்ள மறவர் களைப் பார்த்து கோபப்பட்டார்கள். அவனை கயிறு வீசி இழுத்துப்போடு, என்று கூச்சலிட்டார்கள்.

வேறொரு குதிரைக்கு சூடு வைக்கப்பட்டது. வேறொரு பை இழுக்கப்பட்டது.

வியாபாரிகள் சட்டென்று விலையேற்றினார்கள்.

ஒரு காசுக்கு ஓர் அப்பம் என்பது, மூன்று காசுக்கு ஓர் அப்பம் என்று மாறியது.

''காசு தெருவுல கிடக்கு. அப்பம் தெருவுல கிடக்கா... சட்டியிலயில்லே இருக்கு.'' சாதுர்யமாய் பேசினார்கள்.



எல்லாரிடமும் ஒரு கோபமும், எரிச்சலும் நிறைந்திருந்தது. உரக்க இடைவிடாது ஒருவரையொருவர் குறை சொல்லி கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கோவிலில் எல்லா பூஜையையும் போட்டது போட்டபடி விட்டுவிட்டு, மராட்டிய பிராமணர்கள் அரசனிடம் தானம் வாங்க, அரண்மனை நோக்கி ஓடினார்கள்.

ஆனால், அரசரை எழுப்பவே முடியவில்லை யென்று அரண்மனை அதிகாரிகள் கைவிரித்து விட்டார்கள்.

தஞ்சையில் அன்றிரவு ஒரு குழப்பமான சூழ்நிலை யாக முடிந்தது.

விடிவதற்கு எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தார்கள். விடியுமுன்னே அரண்மனை வாசலில் போய் நின்று கொண்டார்கள்.

மாட்டுவண்டி கட்டிக்கொண்டு, வெண்ணாற்றங் கரைக்குப் போய், சுப்ரமணியம் வீடு காவிரி ஸ்நானம் செய்தது.

ஆற்றில் எல்லோரும் திளைத்துக் குளித்தார்கள். வெய்யிலேறிய நேரத்தில் வீடு வந்தார்கள்.

சுப்ரமணியனோடு அப்பாவும், அண்ணாவும் அரண்மனை தர்பாருக்குப் போக, வாசலிலுள்ள அய்யாவையன் உள்ளே போகும்படி சைகை காட்டினார்.

இப்போது தர்பாரின் வலது ஓரத்தில் சுவரை ஒட்டிய இடத்தில் இடம் கிடைத்தது.

மராட்டிய பிராமணர்கள் நடுக்கூடத்தை அடைத்துக் கொண்டு நின்றார்கள்.

அய்யாவையன் உள்ளே போகும் வேகத்தைப் பார்த்து விட்டு, அரசர் எழுந்து விட்டதாகப் பேசிக் கொண்டார்கள்.

நாலு நாழிகையில் அரசர் வெளியே வந்தார். யார் செய்தி பரப்பியது என்று கோபப்பட்டார்.

அந்த குதிரை வீரர்கள் மண்டபத்திற்கு கீழே வந்ததும் அந்த உயரத்திலிருந்து குனிந்து, கையிலுள்ள பிரம்பால் அவர்களை அடித்தார். மராட்டியில் கர்ஜித்தார்.

மெய்க் காவல்படை வீரர்களை அனுப்பி, செய்தி சொன்ன வீரர்களை அடித்து நொறுக்கச் சொன்னார்.

பிரம்புகளாலும், தோல் சவுக்குகளாலும் அந்த குதிரை வீரர்களுக்கு சரமாரியாக அடி விழுந்தது.

சபை மண்டபத்தில் அலறல் எதிரொலித்தது. அரசியை இன்னமும் வெட்டவில்லை என்று அய்யாவையன் தெரிவித்ததும், கும்பகோணத்திற்கு சாரட்டுகளை அனுப்பி, அந்த அரசியை இழுத்துவர கட்டளையிட்டார்.

அரசருடைய அனுமதி இல்லாமலேயே இரண்டாவது அரசியால் தூண்டப்பட்டே குதிரை வீரர்கள் செய்தி பரப்பி இருப்பதாக விசாரித்ததில் தெரிய வந்தது.

ஜனங்கள் குழம்பினார்கள். காரணம் புரியாமல் தவித்தார்கள். ஏன் அரசர் கோபப்படுகிறார் என்று தெரியாமல், வாய்க்கு வந்தபடி வதந்தி பரப்பினார்கள்.

''ராஜா அதை தன் குழந்தை இல்லேன்னு சொல் விட்டார். தெளிவா சொல்லிட்டார்.''

''ஏன் ஓய்...?''

''ராஜாவுக்கு தன்னைப்பத்தி தெளிவாக தெரியும். அதனாலேயே தன் குழந்தை இல்லேன்னுட்டார்.''

''என்ன ஓய் சொல்றீர்?''

''கலப்பையே இல்லை. எப்படி உழறது.''

''கலப்பையா... என்னது... ஓஹோ... ஓஹோ... இந்த செய்தி உமக்கு எப்படித் தெரியும்?''



''ராணி பக்கத்திலேருந்து மாந்த்ரீகத்துக்கு என்கிட்ட தானே வர்றா.''

''தானம் வாங்க வந்த மராட்டியக்காரனையெல்லாம் பாரேன். பேந்தப் பேந்த முழிக்கறான்.''

சிம்மாசனம் விட்டு கிளம்பிய ராஜா, சட்டென்று நின்றார். ''அய்யாவையன்...'' என்று கூப்பிட்டார்.

''பிராமணன் மது அருந்தலாமா?''

''கூடாது.''

''கூடாது என்று எதில் சொல்லப்பட்டிருக்கிறது?''

அய்யாவையன் தயங்கினார்.

''மனுதர்ம சாஸ்திரத்தில்'' என்று சுப்ரமணியம் எழுந்து பதில் சொன்னார்.

''நீங்கள் சொல்வது சத்தியம்தானா?'' அரசர் கோபமாய் சுபரமணியத்தை பார்த்துக்கேட்டார்.

''மூன்று காலத்திற்கு சத்தியம்.''

சுப்ரமணியம் இடக்கை மேல் வலக்கை வைத்து சொன்னார்.

''அப்படியானால், என் அரண்மனை வாசலில் குடித்து விட்டு உட்கார்ந்திருக்கின்ற, அந்தணனை பிரம்பால் அடித்து விரட்டுங்கள். தஞ்சையின் எல்லைக்குள் வரக்கூடாது என்று கட்டளையிடுங்கள்.''

சபைக்கு நடுவே கிழிந்த ஆடையும், கலைந்த குடுமியுமாய் நடராஜய்யர் இழுத்து வரப்பட்டார்.

அரசர் தானம் கொடுக்காமல் போன ஆத்திரம் மராட்டிய பிராமணர்களுக்கு இருந்தது. இந்த மடையன் தான் அரசனை கோபமடையச் செய்து விட்டான் என்று ஒருவர் கத்த, மராட்டிய பிராமணர்கள், அந்த சோழ

தேசத்து அந்தணனை எட்டி உதைத்தார்கள். தலைமயிரைப் பிடித்து உலுக்கி, முகத்தில் அறைந்தார்கள். குனிய வைத்து முதுகில் ஓங்கி ஓங்கி அறைந்தார்கள். கால்களால் மிதித்தார்கள்.

முஷ்டியை மடக்கி முகத்தில் பலங்கொண்ட மட்டும் குத்தினார்கள். எழுப்பி முழு வேகத்தில் பிடித்துத் தள்ளினார்கள்.

யாரோ ஒருவன் தொடைக்கு நடுவே முழு பலத்தோடு எட்டி உதைத்தான்.

நடராஜய்யர் கைகூப்பி அலறினார். அலற அலற அடி வாங்கினார்.

''அப்பா... நம்ம நடராஜய்யர்...'' என்று சுப்ரமணியம் போக, அப்பா அவரைத் தடுத்து நிறுத்தினார்.

''அவன் பொண்டாட்டிய அடிச்சவன், அதே மாதிரி அடிவாங்கறான் பார்... ஸ்ரீ வித்தை பண்றவன் தப்பு பண்ணினா இந்த கதிதான் ஆகும். வாங்கட்டும் விடு.''

அவர்கள் மௌனமாய் அரசவையை விட்டு வெளியேறினார்கள்.

புத்ரகாமேஷ்டி யாகம் எந்த சந்தோஷமுமில்லாமல் தொடர்ந்து நடந்தது.

தஞ்சையிலுள்ள ஒரு காளி கோயிலில் சுப்ரமணியம் போய் உட்கார்ந்து கொண்டார். மந்திர ஜபம் செய்ய ஆரம்பித்தார்.

அன்று மாலை அரசி அரண்மனைக்கு வந்து விட்டதாக பேசிக் கொண்டார்கள். அரசர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாக தெரிய வந்தது.

இரவு சபை கூடியது.



முக்கியமான நபர்கள் மட்டுமே தர்பார் மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட்டார்கள். நாலு நாழிகையில் அய்யாவையன் திரும்பி வந்தார்.

கொல்லைக் கதவு தட்டினார். ஆட்களைக் கிணற்றில் நீரிழுக்கச் சொல்லி, தலையில் இட்டுக் கொண்டார்.

மன்னரே எழுந்து, பொய் சொன்ன அரசியை பிரம்பால் அடித்தாராம். உதவியாய் இருந்த வைத்தியனை யானையை விட்டு மிதிக்கச் செய்து கொன்றாராம். இந்தத் திட்டத்திற்கு உதவியாக இருந்த அரசியின் தமையனையும் நஞ்சு புகட்டி கொல்ல உத்தரவிட்டாராம். காசுக்கு ஆசைப்பட்டு, இந்தத் திட்டத்திற்கு சம்மதித்த குழந்தையின் தகப்பனின் கண்களைத் தோண்டும்படி கட்டளையிட்டாராம். பல்லக்குத் தூக்கிகளையும் தாதிகளையும் அடிமைகள் என்று முத்திரை குத்தி, முதுகில் சூடு போட்டு, மராட்டிய பிராமணர்கள் எடுத்துக் கொள்ளும்படி ஆணையிட்டாராம். அந்தக் குழந்தையின் தாய்க்கு ஐந்நூறு மொஹராக்கள் கொடுத்து ஊர்விட்டுப் போகும்படி மன்னிப்பாராம்.

யாகம் தொடருமாம் எல்லோரும் இருந்து யாகத்தை நடத்திக் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோளாம்.

சுப்ரமணியத்திற்கு மனம் தளர்ந்து விட்டது.

அய்யாவையனிடம் விடைபெற்றுக் கொண்டு, அவர் கொடுத்த சாரட் வண்டியில் மனைவியோடும், குழந்தைகளோடும் கும்பகோணம் பயணப்பட்டார்.

அப்பா இன்னும் சில நாள் தஞ்சாவூரிலேயே இருக்க ஆசை தெரிவித்தார்.

ஒரு பகற்பொழுது பிரயாணத்தில், கும்பகோணம் வந்துவிட்டார்கள்.

கும்பகோணத்திலிருக்க மனைவி விருப்பம் தெரிவித்தாள்.

சுப்ரமணியம் நான்கு நாட்கள் மைத்துனன் மனைவியிடம் நிறைய தேவார, திருவாசகங்கள் கற்றுக் கொண்டார்.

அய்யாவையன் தனக்குக் கொடுத்த சன்மானமான இருபத்தைந்து பொன் கழஞ்சுகளை அவளுக்கு குரு தட்சணையாக வழங்கினார்.

தம் மனைவிக்கு பல நல்ல விஷயங்கள் கற்றுக் கொடுக்கும்படி, கைகூப்பி வேண்டிக் கொண்டார்.

மைத்துனனுக்கு மஹா கணபதி மந்திரத்தையும், பாலா திரிபுரசுந்தரி மந்திரத்தையும் உபதேசம் செய்தார்.

உள்ளே ஒரு கோபம் வரும்போதெல்லாம், பாலா திரிபுர சுந்தரி மந்திரத்தை இடைவிடாது சொல்லும்படி கேட்டுக் கொண்டார்.

தனியே திருக்கடவூர் நோக்கி பயணப்பட்டார்.

வழிநடைக்கு கட்டுசோறும், சிறிது காசும் எடுத்துக் கொண்டார்.

திருபுவனம் தாண்ட, கோயில் வாசலில் ராஜம் எதிர்ப்பட்டாள்.

காவி உடுத்தி, தலைமுடி நீக்கி, நெற்றியில் திலகம் தீட்டி, கழுத்தில் பவழமாலை அணிந்து, வலக்கையில் கோலும், இடக்கையில் திருவோடுமாய் எதிரே நின்று சிரித்தாள்.

''ராஜம் அக்காவா...''

''ஆமாம் எப்படி அடிபட்டான் பாத்தியா... எத்தனை பேர் அவனை அடிச்சா பாத்தியா... எங்க அம்மாவுக்கு கோபம் வந்துடுத்து. பராசக்திக்கு ரௌத்ரம் வந்துடுத்து, உன்னையா அடிச்சான். அவனை என்ன பண்றேன் பாருன்னு, அவனைப் புரட்டி எடுத்துட்டா.''



''நீங்க பார்த்தேளாக்கா.''

''கும்பகோணத்துல உட்கார்ந்துண்டு பார்த்தேன். அவன் அடிபடறது என் உள்ளங்கையில் படமாத் தெரிஞ்சுது.''

''நான் என்ன பண்ணினேன்னு தெரிஞ்சுதா அக்கா?''

''அவனைக் காப்பாத்தப் போனே. உங்கப்பா தடுத்தார். மகாகாளி எதிர்க்க உட்கார்ந்து தேசத்துக்காக மந்திரம் ஜெபிச்சே.''

''அக்கா நான் உங்களை நமஸ்காரம் பண்றேன்.''

சுப்ரமணியம் பரபரப்பாக இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டார்.

''நீ எனக்கு குரு சுப்ரமணியம். பண்ணக்கூடாது.''

''வித்தை கத்துக் கொடுத்தவன் ஆச்சார்யன், குருவாக முடியாது. ஞானமடைஞ்சவன் தான் குரு. அவனுக்கு உலகம் முழுவதும் தெரியும். எல்லா விஷயமும் தெரியும். ஞானிகள் இயற்கையை ஜெயிச்சவா. நீ ஞானி அக்கா. நீதான் என் குரு. நீதான் எனக்கு வழிகாட்டி. நீதான் என்னை கரையேத்தற தோணி.''

சுப்ரமணியம் அவளை கிழக்கே நிற்க வைத்து, காலில் விழுந்து நமஸ்கரித்தார். அவள் தன் வலக்கையை சுப்ரமணியத்தின் தலையில் வைத்தாள்.

சுப்ரமணியத்தின் உடம்பு நடுங்கத் துவங்கியது.

## 4

அக்காவின் கையிலிருந்து உடம்பின் வெப்பத்தைத் தாண்டி, வேறொரு வெப்பம் இருப்பது தெரிந்தது. அந்த வெப்பத்தினூடே ஓர் அதிர்வு கிளம்பி அவர் உச்சந்தலை வழியே உள்ளிறங்கியது.

''அக்கா, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

''உன்னைத் தொடுகிறேன் சுப்ரமணியம்.''

''நீங்கள் தொட்ட இடம் கொதிக்கிறது. வெறும் தொடலாகத் தெரியவில்லையே...''

''நான் உன்னை என்று சொன்னது உன் உடம்பையல்ல சுப்ரமணியம்.''

''நீங்கள் உள்ளே தொடுவது புரிகிறது அக்கா, அமானுஷ்யமாக இருக்கிறீர்கள்.''

''மனுஷ்யம், அமானுஷ்யமெல்லாம் பாலா திரிபுர சுந்தரிதான்.''

''அக்கா இறை தரிசனம் ஏற்பட்டு விட்டதா உங்களுக்கு?''

''ஆமாம், நடந்து கொண்டிருக்கிறது.''

''புரியவில்லை அக்கா.''

''ஒருமுறை இறை தரிசனம் ஏற்பட்டு விட்டால், மறுபடி மறுபடி அது தோன்றிக் கொண்டே இருக்கும். நாம் விரும்பிய போதும் வரும். விரும்பாத போதும் வரும்.''

''அக்கா, எனக்கு இது ஏற்பட வேண்டுமே...''

''உன்னை இழந்துவிடு சுப்ரமணி. இது நடக்கும்.''



''அக்கா. நான் குடும்பத்தை உதறி விடட்டுமா.''

''எதற்காக சுப்ரமணியம்?''

''இறை தரிசனம் பெறுவதற்கு.''

''நீ யாரோடு இருந்தாலும் தனிதான் சுப்ரமணியம். நீ தனியாக இருப்பதை உணர்ந்து கொண்டால், யாரோடு வேண்டுமானாலும் இருக்கலாம்.''

''இல்லறம் சுமையல்லவா?''

''இல்லறமல்லது நல்லறமன்று.''

''இல்லறமிருப்பதால் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. சம்பாதிக்க வேண்டியிருப்பதால்தான் நாலு பேரிடம் அனுசரித்து நடக்க வேண்டியிருக்கிறது. அதில் அவசரமும் ஆயாசமும் ஏற்படுகின்றன. அவசரமும், ஆயாசமும் இருப்பதால் இறையுணர்வு மங்கலாக இருக்கிறது. மங்கிய விளக்கொளியில் எல்லாம் பூதாகாரமாகத் தெரிகிறதே யொழிய, எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. சில சமயம் இந்த பூதாகாரம் பயமுறுத்துகிறது. இந்த இருட்டே தேவலாம் என்றிருக்கிறது.''

ராஜம் அக்காள் வாய்விட்டுச் சிரித்தாள்.

''நீ பேசுவது தர்க்கம். இது உண்மையாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. துறவால் இறையை அடைந்துவிட முடியாது. துறவு நிறைய பேருக்கு கர்வத்தைக் கொடுத்திருக்கிறது. காமத்தை அதிகரித்திருக்கிறது. கோபத்தை விளைவித்திருக்கிறது.

''இல்லறத்தைத் துறப்பது துறவல்ல. அகந்தையைத் துறப்பதே துறவு. மற்றதெல்லாம் வெளிவேஷங்கள்.

அகந்தையைத் துறக்க வேண்டும் என்பதற்காகத் தான் இல்லறத்தைத் துறப்பது. ஆனால், இல்லறத்தைத்

துறந்ததையே கர்வமாக்கிக் கொண்டால் இல்லறம் துறந்தது தவிர, வேறெதுவும் மிச்சமில்லை. எதையோ துறக்க எதுவோ ஒட்டிக் கொள்ளும்.

''எல்லாரையும் நேசிக்கத்தான் இல்லறத்தைத் துறப்பது. இல்லாளை வெறுத்துவிட்டு எல்லோரையும் நேசிப்பது எத்தனை அறிவீனம்?

''அதிர்ஷ்டவசமாக சுப்ரமணியம், உன் வாழ்க்கை, உன் தொழில் இறைதேடுதலை ஒட்டியே இருக்கிறது. இதில் பூரணமாக ஈடுபடுகிறபோது, இறையருள் சமீபிக்கிறது.

''அடக்குமுறையோ, வன்முறையோ இருந்தாலொழிய இல்லறத்தை விட்டு வெளியேற வேண்டாம். உன் வீடு இனிமையானது சுப்ரமணியம். நீ எங்கேயும் போக வேண்டாம், இல்லறத்தை இறை விஷயமாக மாற்று.

''ஆடறுத்து மாமிசம் விற்றவருக்கும், நெல்லறுத்து ஊழியம் செய்தவருக்கும், மண்ணறுத்து பாண்டங்கள் செய்பவருக்கும், இறை தரிசனம் கிடைத்திருக்கிறது. நீ உன்னை அறு. நான் என்ற கர்வத்தை அறு. இப்படி அறுப்பதுகூட இன்னொருவருக்குத் தெரிய வேண்டாம். உன் மனைவி கூட இதை அறிய வேண்டிய அவசியமில்லை. இது உன்னுள் நிகழ வேண்டிய மாயம்.

''அறுக்க மாட்டாதவன்தான் அறுத்ததாய் பேசுவான். அறுத்தவனுக்கு ஒட்டாது. அடுத்தவரே இல்லாது போகும்.

''இந்த நிமிடத்திலிருந்து எது செய்தாலும் இறையுணர்வோடு செய். உன்னையே பார்த்துக் கொண்டிரு. இதற்கு யாகம் செய்ய வேண்டாம். மந்திரம் ஜெபிக்க வேண்டாம். குளிக்க வேண்டாம். திருச்சின்னங்கள் இட வேண்டாம். கோயிலுக்குப் போக வேண்டாம். கும்பிட



வேண்டாம். உள்ளேயே எக்காலமும் இரு. உன் உணர்வுகள் மொத்தமும் உள்நோக்கிப் பாயட்டும். உன்னைத் தேடட்டும்.

''நான் இப்போது பேசுவது கூட வார்த்தைகள். இது சொல்லுக்கு அப்பாற்பட்ட சுகம். உலகத்தின் எல்லா சுகங்களையும் கொண்டு வரக்கூடிய சுகம். இந்த சுகம் பற்றி உனக்கொரு உதாரணம் சொல்கிறேன். இதைப் பெரிதாக்கி உணர்வது உன்னுடைய செயல்.

''தாகம் கொள்ளுகிறபோது, நிழலில் உட்கார வைத்து, ஒரு சொம்பு நிறைய குளிர் நீர் கொடுத்தால், தொண்டையிலிருந்து உடம்பு முழுவதும் ஒரு சுகம் போகுமே... அதைப் போன்றது. வயிறார உண்டுவிட்டு, திண்ணையில் தூங்க, யாரோ விசிறிவிட வரும் தூக்கம் போன்றது. ஒரு காவியம் முடித்த களைப்பு போன்றது. குளித்து விட்டு, நன்கு உலர்ந்த உடை மாட்டி, காற்றாட உட்காரும் சுகத்திற்கு நிகரானது. தூங்கும் பொழுது அரைத்தூக்கத்தில் பிரியமானவர் அடுத்து செய்யும் கூடல் போன்றது. ஒரு மலையுச்சிக்கு சிரமப்பட்டு ஏறி, கால் நடுங்க, அங்கு உட்கார்ந்து தரை பார்ப்பது போன்றது.

''சுப்ரமணியம் உன் மந்திர ஜபம் முடிந்து விட்டது. உன் பஞ்சாங்க வேலை முடிந்து விட்டது. உன் கோயில் தொழுகை ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இறைவனை அறிந்து கொள்வதற்கு இதெல்லாம் ஒரு சாக்குபோக்கு.

''உண்மை உனக்கு அருகே இருக்கிறது. உனக்கு உள்ளே இருக்கிறது. இறை உன்னை கவ்வி தின்னப் போகிறது.

''ஒருவேளை எங்கேனும் இது கண்டு நீ பயப்படலாம். சாதாரண மனிதனாக நின்று பார்க்கும் போது, ஒரு பதட்டம் ஏற்பட்டு விடலாம். மனம் மேலும் கீழுமாய்

அலை மோதலாம். இறைவன் சோதிக்கிறானோ என்று அச்சப்படலாம். அந்த நேரம் நான் உன்னருகே இருப்பேன். இந்த உலகம் உன்னை மிரட்டுகிறபோது, உன்னை காபந்து செய்வேன்.

''சுப்ரமணியம் எது குறித்தும் கவலைப்படாதே வேறெங்கும் அலையாதே. திருக்கடவூர் போ. நீ பிரகாசிக்கிற நேரம் வந்துவிட்டது. எழுக, எழுக, ஞாயிறு போல் எழுக. நீ ஒரு தகதகப்புடன் இவ்வுலகில் வலம் வரப் போகிறாய். சந்திர சூரியர்கள் இருக்கும்வரை வாழப் போகிறாய்.

''சுப்ரமணியம் உனக்கு அழிவில்லை. அபிராமி கண்பட்டவனுக்கு அழிவில்லை. எல்லாம் அன்பு மயம், எல்லாம் அறிவு மயம், எல்லாம் ஞானமயம்.

''அம்பி... உன்னை வழிப்படுத்தவே என்னை இந்த பூமியில் தோன்றச் செய்திருக்கிறாள்.

''முன்பு ஒரு தமிழ்ப் புலவனை, அவனுடைய தமக்கை வழிப்படுத்திய கதை இருக்கிறது. முருகனுக்கு ஆற்றுப்படுத்திய நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஆனால் உன்னை இங்கே வழிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. பாதுகாக்க வேண்டிய அவசியமிருக்கிறது.

''என் புருஷன் இனிமேல் திருக்கடவூர் வரமாட்டான். அன்று விழுந்த அடி, மெல்ல மெல்ல உடம்பு பூராவும் பரவி, அவனை அணுஅணுவாய் கொல்லப் போகிறது. எனவே, திருக்கடவூர் தான் எனது ராஜ்ஜியம். நான் உனக்கு பட்டாபிஷேகம் செய்வேன். போய் வா அம்பி. இந்த அக்காள் எப்போதும் ரக்ஷையாக உனக்கு இருப்பாள்.''

அவர் அவளை மறுபடியும் நமஸ்கரித்தார். தரையில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார்.



நமஸ்கரிப்பது என்பது அங்கு பொய்யான பவ்யமாக இல்லாமல், எல்லாவற்றையும் விட்டுவிட்ட ஒரு மனோ நிலையாக இருந்தது.

நடுவீதியில் சுடும் மண்ணில் உடம்பெல்லாம் புழுதிபட, அவர் கிடந்தார். அப்படி கிடக்கும் போதே மனம் கழண்டு போயிற்று. உடம்பை விட்டு வேறெதுவோ எழுந்து, திருக்கடவூர் நோக்கிப் போயிற்று. உடம்பு அங்கே வெறுமே கிடந்தது.

ராஜமக்காள் அதைப் பார்த்து விட்டு வாய்விட்டுச் சிரித்தாள்.

''என் தம்பிக்கு பட்டாபிஷேகம். என் தம்பிக்கு பட்டாபிஷேகம்'' என்று கத்தினாள்

''எல்லா கந்தர்வர்களும் வாருங்கோ. எல்லா கின்னரர்களும் வாருங்கோ. எல்லா தேவதைகளும் வாருங்கோ. எல்லா ராஜாக்களும் வாருங்கோ. என் தம்பிக்கு பட்டாபிஷேகம்.''

தன் வலக்காலை உயர்த்தி, கீழே கிடந்த அவர் தலை மீது வைத்தாள். குனிந்து முதுகிலடித்தாள். தோள் பக்கம் வெடுக்கென்று கிள்ளினாள்.

அவர் உடம்பிற்கு சுய நினைவு வர, வெளியே போனது உள்ளே நுழைந்து கொண்டது.

அவர் முகம் முன்னிலும் பிரகாசமாகியது.

ஒரு சந்தோஷத்தோடு கைகூப்பினார்.

''அக்கா விடை பெறுகிறேன்.'' அவளை வலம் வந்து, கிழக்கு நோக்கி நகர்ந்தார்.

உடம்பு தனியாக இருப்பதும், அந்த உடம்பில் கை கால்கள் இயங்குவதும் அவருக்குத் தெரிந்தது.

தன்னைப் பார்த்த அந்த வினோத உணர்வுடன் அவர் வெளியே பார்த்தபடி நடந்தார்.

நாய்கள் அவரைப் பார்த்து வாலாட்டின. தள்ளி நின்று அவரைப் பார்த்து முனகின. கிளிகள் முன்னும் பின்னும் அலைந்து, வருக வருக என்று கூவின. ஆந்தை பராக், பராக் என்று சொல்லியது. ரெட்டைவால் கருங் குருவி சந்தோஷத்தில் புரண்டு புரண்டு பறந்தது. பருந்துகள் தாழப் பறந்து, பின்னர் உயரப் போயின. புறாக்கள் தரையிறங்கி நடந்தன. ஒரு நீண்ட தோகையுள்ள மயில் தன் துணை மயிலோடு வந்து, பெருங்குரலில் அகவிற்று. மாடுகள் திரும்பிப் பார்த்தன. சிறியதாய் குரல் கொடுத்தன. குரங்குகள் கூடவே பின்தொடர்ந்து வந்தன. பாம்புகள் புதரிலிருந்து எட்டிப் பார்த்தன.

எல்லா உயிரினங்களுக்குள்ளும் அவரால் பார்க்க முடிந்தது.

'அடடே... அடடே...' என்று அதிசயமாய் அவர் நடந்தார். எல்லாவற்றையும் பார்த்து பரவசமாய் கும்பிட்டார்.

அவர் கும்பிட, குரங்குகள் வெட்கப்பட்டன. பசுக்கள் முதுகு சிலிர்த்துப் பின்னடைந்தன. புறாக்கள் குபீரென்று பறந்தன. மயில் விலகி ஓடிற்று. பாம்புகள் மறைந்து கொண்டு மறுபடியும் எட்டிப் பார்த்தன. கிளிகள் தங்களுக்குள் வேகமாகப் பேசி வெட்கப்பட்டன.

அவர் இரவு பகல் பார்க்காமல், எங்கும் தங்காமல், தன் நினைவில்லாமல் திருக்கடவூர் போய்ச் சேர்ந்தார். அமிர்தகடேஸ்வரர் முன் போய் நின்றார்.

அந்தக் கருவறை முழுவதும் அடர்த்தியாய், மிகமிக அடர்த்தியாய் ஓர் இறையுணர்வு, வலிவுமிக்க இறைசக்தி உறைந்து கொண்டிருந்தது.



அந்தக் கருவறையின் அடர்த்தி முழுவதும் அவரைப் பார்த்து புன்னகை செய்தது. மிகக் கனிவோடு அவரை பார்த்தது.

கருவறையின் வெளியில் ஒரு ஒற்றைவெளி தோன்றி அவரைப் பிரியத்துடன் பார்த்தது.

'ஹா...' என்று தன்னை மறந்து சுப்ரமணியம் வியப்போடு கூச்சலிட்டார்.

அங்குள்ளவர்கள் அவரைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அவர் ஸ்வாமி சன்னதியை விட்டு, அபிராமியின் சன்னதிக்கு மெல்ல நடந்தார்.

அந்த சன்னதிக்குள் நுழையும்போது, நெருப்புக்குள் புகுந்த ஈ போல, அங்கு பரவிக் கிடந்த சக்தி அவரை விழுங்கியது.

அவர் அந்த நெருப்பின் மையத்தை நோக்கி நடந்தார்.

கால் தடுமாறியது. உடம்பில் வலு குறைந்தது. உடை நழுவியது. நாக்கு குழறியது. கண்களிலிருந்து கண்ணீர் பொங்கியது.

சன்னதியைப் பார்த்த மண்டபத்தில், தூணருகே அவர் சரிந்து உட்கார்ந்தார்.

எங்கேயும் போய் எதையும் பார்க்கத் தேவையில்லை என்று அவருக்குத் தோன்றியது.

அவர் கண்மூடி சிரித்துக் கிடந்தார்.

தான் எதிலிருந்தும் பிரிக்க முடியாத முழுமை என்பதாய் உணர்ந்தார். இந்த நிலை எப்போது முடியும் என்ற எண்ணமும் அவருக்குள் இருந்தது. இது வரும் போகும் விஷயமாக இருக்கிறதே என்கிற கவலையும் அவருக்கு வந்தது.

''சுப்ரமணியம், தஞ்சாவூர் போயிட்டு வர்றியா. ஏன் இவ்ளோ களைப்பா இருக்கே. இந்தா... மிளகு சாதம், இந்த இலையில் தயிர் சாதம் இருக்கு.''

அதிகம் பேசாத மடப்பள்ளி பிராமணர் யாரோ தள்ளி விட்டது போல் முன்வந்து, இரண்டு பட்டை சாதங்களை சுப்ரமணியத்திடம் நீட்டினார். ஒரு கனவில் நடந்து போவதைப் போல திரும்பிப் போனார்.

உணவு எதிரே இருந்தது.

மெல்ல உணவு எடுத்துக் கொண்டு குளக்கரைப் பக்கம் போனார். நீர் குடித்தார். உணவை ஆழ்ந்து பார்த்தார். உணவு பற்றிய உணர்ச்சிகளை அப்புறப்படுத்திவிட்டு நிதானமாய் உண்ணத் துவங்கினார்.

மனம் உள்ளே சுருண்டு அமர்ந்து தன்னையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அவர் உடம்புக்குள்ளே, உடம்பு முழுவதும் மிகப் பெரிய பிரகாசம் குடி கொண்டிருந்தது.

குளியல் இல்லை. நேரத்துக்கு சரியான உணவு இல்லை. பூஜை புனஸ்காரங்கள் எதுவுமில்லை.

''சுப்ரமணியம், கோயில்லதான் இருக்கியா... வந்து நாள், கிழமை திதி சொல்லு. எல்லாரும் தஞ்சாவூரைப் பார்க்கப் போயிட்டா. உற்சவருக்கு அலங்காரம் பண்ணி வைக்கறயா.''

அலங்காரம் உள்ளே நடந்து கொண்டிருந்தது.

யார் பேசுவதும் காதில் விழவில்லை. இடைவிடாத டமருக சப்தம் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது.

''சுப்ரமணி, சுப்ரமணி. தஞ்சாவூரை மைசூர் நவாப்பெல்லாம் சுத்தின்னுட்டாளாம். காசைக் கொண்டா நகையக் கொண்டான்னு மிரட்டறாளாம். ஜனங்க அல்லாடறதாம். பொம்மனாட்டிகள்லாம் வெளியே தலைகாட்டவே பயப்படறாளாம். விடிகார்த்தால நவாப்பு படை தூங்கற போது, ஒவ்வொருத்தரா சொம்பு எடுத்துண்டு, காவேரிக்குப் போறாமாதிரி, ஊரை விட்டு வெளியே வந்துண்டிருக்காளாம். உங்கப்பா அண்ணால்லாம் என்ன ஆனான்னு தெரியலியே...''



''யாருக்கும் ஒண்ணும் ஆகாது. நவாப்பு காசை வாங்கிண்டு போய்டுவான்.''

''சுப்ரமணி, சுப்ரமணி, நவாப்பு பாதி காசு வாங்கிண்டு போயிட்டானாம். மீதியை சரபோஜி அப்புறம் தர்றேன்னு சொல்லியிருக்காராம். இந்த தடவை, வரி கெடுபிடி ஏகமா இருக்கும்னு சொல்றார். இதுக்கும் மேல வரி போட்டா, யாரும் வெண்டைக்கா, கத்தரிக்கா கூட போடமாட்டா. எல்லாம் காட்டுக்கு போயிடப் போறா. நிலம் தரிசா கிடக்கப் போறது.''

''அப்படி ஆகாது.''

''ஏன் ஆகாது. அமிர்தகடேஸ்வரருக்கே ஆழாக்கு சாதம், அரைஆழாக்கு நெய். அந்த சாதத்துக்கு உன்னப்பிடி என்னைப் பிடின்னு சண்டை. இதான் நடக்கப் போறது.''

''அப்படி ஆகாது.'' சுப்ரமணியம் மறுப்பு சொன்னார்.

''தெலுங்கு பேசற ஜனத்துலேருந்து கூட்டம் கூட்டமா ஜனங்கள் தெற்கே போயிண்டிருக்கா. கரிசல் காட்டுல போய் வாழப் போறாளாம். நவாப்புக்கெல்லாம் துணி பிடிக்குமோன்னோ... அதனால, பருத்தி பயிர் பண்ணப் போறாளாம்.

''பயிர்த் தொழில் பண்றவா பருத்தி பண்றா, துணி நெய்றவா பாத்திரம் பண்றா, ஏகப்பட்ட குழப்பம். தஞ்சாவூர்ல பல கோயில் பூட்டியே கிடக்கிறது. இங்கே

கிழக்குப் பக்கம்தான் கொஞ்சம் விவசாயம். இதுவும் நின்னுடுத்துன்னா சோழதேசம் வெறும் மணல் மேடு தான். நீ என்ன சொல்றே சுப்ரமணி?''

''அப்படி ஆகாது. அமிர்தகடேஸ்வரர் சாப்பாட்டுக்கு ஒரு குறையும் வராது.''

''அப்பா...உன் வாயால் சொனனா சந்தோஷம். நீ என்ன சொன்னாலும் பலிக்கறதுன்னு ஊர்ல எல்லாரும் சொல்றா.''

''அமிர்தகடேஸ்வரர் சாப்பிட்டா நாம சாப்பிட்டா மாதிரி.''

''ஐயா, நான் மாடசாமி பேசறேன். என்னை ஞாபகம் இருக்குங்களா. ஏன் ஐயா சோர்ந்தாப் போல இருக்கிங்க.''

''வா மாடசாமி, என் பக்கத்துல வந்து உக்கார்.''

''ஐயா. அது தப்பாச்சுங்களே...''

''ஒரு தப்புமில்லை மாடசாமி. நீ ரொம்ப நல்லவன்.'

சுப்ரமணியம் ஒரு நண்பனைப் போல மாடசாமியைத் தடவிக் கொடுத்தார். மேல்முதுகில் தட்டினார். தோளை அணைத்தபடி அவன்மீது சாய்ந்து கொண்டார்.

''மாடசாமி குடியானவனில்லையோ... அவன் மேல சாஞ்சுண்டிருக்கிறே...''

''நான்கூட குடியானவன்தான். உள்ளே பச்சைப் பசேல்னு இருக்கு. சலசலன்னு ஜலம் ஓடிண்டே இருக்கு. பெரிய வயல் வெளி. சுளீர்னு வெய்யில். சிலுசிலுன்னு காத்து. கண்ணு திறந்து பாக்கறவாளுக்கு உள்ளே வெளியே எல்லாம் ஒன்னுதானே...''

''சுப்ரமணி, எனக்கு கொஞ்சம் விஷய ஞானம் போறாதுதான். அதுக்காக மாடசாமி கூடல்லாம் உட்கார்ந்துக்க முடியாது.''



''அது உண்மை. ஞானம் இருந்தாதான் எல்லாரோடயும் உட்கார முடியும். ஞானமில்லாதவாளுக்கு உட்கார முடியாது.''

''நம்ம ஊருக்கு கெட்ட பேர் வரப்போறதுப்பா, இது மாதிரியெல்லாம் பண்ணாதயேன்.''

''நம்ம ஊருக்கு ஒரு நல்லது வரணும்னா அது இந்த மாடசாமியாலதான். நான் வேற, மாடசாமி வேறயில்லை.''

''நீ பண்றது தப்போன்னு தோன்றது சுப்ரமணி.''

''சரி'' சுப்ரமணியம் கண்மூடிக் கொண்டார்.

''சுப்ரமணி, தஞ்சாவூர் போனவா எல்லாரும் திரும்பி வர ஆரம்பிச்சுட்டா. நீ இன்னும் கோயில்லியே கெடக்கறியே...''

''ராஜா வரட்டும் பார்த்துப்போம்.''

''ராஜா எதுக்கு திருக்கடலூர் வர்றார்? ராஜாவோட ஆட்களே திருக்கடலூருக்கு வர்றதில்லை. ஆடுதுறையோட நின்னு போயிடறாங்க.''

''ராஜா வருவார்.'' சுப்ரமணியம் மறுபடி சொன்னார்.

எல்லோரும் அவரை வினோதமாகப் பார்த்தார்கள்.

''முதல்ல உம் பொண்டாட்டி வருவாளான்னு பாரு. அந்த சிறுக்கி எதப்பாத்தாலும் நிலைகொள்ளாது ஆடுவா. நவாப்பு அப்படியே லாவிண்டு மைசூர் பக்கம் போயிடப் போறான். இந்த மாதிரி பலபேர் காணாமப் போயிருக்கா.''

சுப்ரமணியத்தை கோபமூட்ட, யாரோ கேலியாய் பேசினார்கள்,

''அம்பிகை காப்பாற்றுவாள்.'' சுப்ரமணியம் சலனமில்லாது பதில் சொன்னார்.

நாட்கள் நகர்ந்தன.

சுப்ரமணியம் எப்போதாவது குளித்தார். எப்போதாவது சாப்பிட்டார். எப்போதாவது பேசினார். ஆனால் எப்போது தூங்கினார் என்றுதான் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

''தூங்காம இருக்கிரே... முடியறதா?''

யாரோ விசாரித்தார்கள்.

''புத்தி அலுத்தாலோ, உடம்பு அலுத்தாலோ தூக்கம் வரும். எதுவும் அலுக்கலை. எப்பவும் அலுக்கலை. நான் ஏன் தூங்கணும்?''

கேட்டவருக்கு மேற்கொண்டு கேள்வி இல்லாமல் போய்விடும்.

''அப்போ எங்க புத்தியெல்லாம் அலுத்துப் போய் தூங்கறதுங்கறயா?''

''ஆமாம்.''

''ஏன் எங்களுக்கு அலுக்கிறது. உனக்கு ஏன் அலுக்கலை...?''

''ஆசை, ஆங்காரம், அதைரியம் மூன்றும் புத்தியை அலுப்படைய வைக்கும். உடம்பிலுள்ள சுரப்பிகளை தேவையில்லாமல் வேலை வாங்கும். சுரப்பிகள் வேலை அதிகமானால் தூக்கம், கனவு, மயக்கம், வியாதி இவைகள் ஏற்படும். ஆசையற்று இருப்பவருக்கு வியாதியில்லை. தூக்கமும் ஒருவித நோயே.''

'சுப்ரமணியம் உம்ம பொண்டாட்டி ஊர்ல இல்லை. ஓய்ஞ்சு உக்கார்ந்திருக்கீர். அவ வந்து இழுத்துப் பிடிச்சி பிள்ளை வரம் கேட்டா... மாட்டேங்க முடியுமா.''

''வரும்போது பார்த்துக் கொள்ளலாம். வரும்முன் வந்ததாய் யோசித்துக் கொள்வது பேதமை.''



''திருக்கடலூர்ல நவாப்பு படையெடுத்து வந்தா அப்போ பார்த்துக்கலாங்கறீர், அப்ப படை திரட்டலாம்கறீர் அப்படியா...''

''திருக்கடலூருக்கு மேற்கேயிருந்து ஆபத்தில்லை.''

''அப்போ கிழக்கேருந்து வருமோ?''

''என்ன ஓய் சொல்றீர். நவாப்பு கப்பல்ல வருவானா?''

''இது வேற நவாப்பு, வேற மதம், வேற மொழி, வேற நிறம், வேறு வகை கலாச்சாரம்.''

''வெள்ளைப் பரங்கியா...''

''அந்த மாதிரி.''

''சரபோஜி பரங்கியனை சும்மாவிட மாட்டார்.''

''சரபோஜி விட்டாலும் மொகலாயர்கள் விட மாட்டா.''

''இல்லை, அது முடிஞ்சு போச்சு. அந்த வம்சம் இனிமே இங்கே கிடையாது. இனிமே புது நவாப், பரங்கி தான் நவாப்.''

''எப்பத்திலேருந்து?''

''நேத்திலேருந்து. வியாபாரத்துக்கு வந்தவன், வாங்கி விற்க வந்தவன், உலகம் சுத்திப் பாக்க வந்தவன் ராஜ்யமாளப் போறான்.''

''சுப்ரமணியம், தஞ்சாவூருக்குப் போனவா எல்லாரும் வந்துட்டா, உங்க வீட்டைத் தவிர. உனக்கு கவலையா இல்லையா?''

''எல்லாரும் சௌக்யமா இருக்கா. எந்தக் கவலையு மில்லை.''

நாட்கள் நகர்ந்தன.

சுப்ரமணியனை வியந்து ஒரு கும்பலும், வேடிக்கைப் பார்க்க ஒரு கும்பலும், அவரை கேலி செய்து குறை சொல்லும் கும்பலும் திருக்கடவூரில் உலவின.

ஆனால், அவரை கவனித்து நமஸ்கரிக்கவும் நாலுபேர் இருந்தார்கள். ஏதோ உள்ளுணர்வில் உந்தப் பட்டு மரியாதையாய் நடத்தினார்கள்.

''சுப்ரமணியம், ராஜா கிளம்பிட்டார். உன் குடும்பமும் ராஜாவோட பரிவாரத்தோட வருது. அய்யாவையன் ராஜாவுக்கு ரெண்டுநாள் முன்னாடி வந்துண்டிருக்கார். ராஜா ஒரு கிராமத்துக்கு வந்ததும் அவரைத் தங்க வைச்சுட்டு, அய்யாவையன் கிளம்பிடறார். உன் மச்சினன் பொண்டாட்டி தமிழ் பாட்டா பாட்றாளாமே... ஒவ்வொரு ஊர்லயும் ஜனங்களை உட்கார வைச்சு, அய்யாவையன் பாடச் சொல்றாராம். அவ்ளோ அருமையான பாட்டாம், சுகமான குரலாம். அய்யாவையன் கூடவே நாலு பையன்களைக் கூட்டிண்டு வந்து மச்சினன் பொண்டாட்டி பாடப்பாட ஓலையில படியெடுக்கச் சொல்றாராம். வாலிபமா பசங்கள்லாம் கண்ணை மூடிண்டு கேக்கறாளாம். வயசானவா எல்லாம் தாரைதாரையா கண்ல ஜலம் விடறாளாம்.

''புடவை என்ன? நகையென்ன? பொற்கழஞ்சு என்ன? ஜனங்கள் கேட்காமலேயே பாடற பொம்மனாட்டிக்கு வாரிக் கொடுக்கறாளாம். பாட்டுப் பாடிட்டு அப்படியே கண்மூடி உறைஞ்சு உட்கார்ந்துடறாளாம். அவா புருஷன்தான் அப் பொம்மனாட்டிக்கு சிஷ்ருஷை. சாதம் பிசைஞ்சு ஊட்றானாமே...''

சுப்ரமணியம் சிரித்தார்.

''அவ ரொம்ப பெரியவோ. என்னவேணா பண்ணுவோ.''



''யார், உன் மச்சினன் பொண்டாட்டியா?''

''உள்ளே ஒருத்தி உட்கார்ந்துண்டு சிரிச்சிண்டிருக் காளே... அவளைச் சொன்னேன்.''

''கருவறைல இருக்காளே... அந்த அபிராமிய சொல்றியா...''

''ஆமாம் அவ கருவிலதான் இருக்கா.''

''சுப்ரமணியம் நீ சொல்ற பதில் சரியா இருக்கு. ஆனா, வேற மாதிரியும் இருக்கேப்பா.''

''அப்படியா... சரி.''

அவர் கண்மூடிக் கொண்டார்.

நாட்கள் நகர்ந்தன.

அவருக்குள் இருந்த வெளிச்சம் வெளியே பரவத் துவங்கியது. எல்லா உயிரின் அசைவும் வெளிச்சமாகத் தெரிந்தது. எல்லா வெளிச்சமும் சந்தோஷமாக இருந்தது. எல்லா சந்தோஷமும் இறைவனுடைய சாயலாக இருந்தது.

எல்லா உயிர்களும் சந்தோஷப் படுகின்றன. எல்லா உயிரிலும் இறைவனின் சாயல் இருக்கிறது.

எல்லா உயிரும் சந்தோஷத்தைத் தேடுகின்றன. எல்லா சந்தோஷங்களும் இறைவடிவமாக இருக்கின்றன.

சந்தோஷத்தைத் தேடுபவர்கள் எல்லோரும் இறைவனைத் தேடுபவர்கள்தான். இறைவனைத் தேடாத உயிரினமே இல்லை. இறைவனை நாடாத மனிதர்களே யில்லை.

பெண் சந்தோஷமென்று சிலர் சொல்கிறார்கள். பொருள் சந்தோஷமென்று சிலர் சொல்கிறார்கள். பெரிய பதவி சந்தோஷம் என்று சிலர் சொல்கிறார்கள். மதுவும், உணவும் சந்தோஷமென்று சிலர் சொல்கிறார்கள்.

ஒவ்வொரு விஷயமும் ஒரு கண்ணாடிச் சில்லு. சூரிய ஒளிபட்டு கண்ணாடி மின்னுகிறது. அந்த சூரிய ஒளி தான் கண்ணாடியை மின்ன வைக்கிறது, ஆர்வமாய் பார்க்க வைக்கிறது என்று நிறைய பேருக்குத் தெரியவேயில்லை.

பெண் சந்தோஷமல்ல. இயக்கினால்தான் சந்தோஷம். இயங்காத சவம் சந்தோஷமில்லை. சக்திதான் சந்தோஷம்.

சக்தி இருந்தால்தான் சிவம். அந்த சக்தி பூரணமாக இருந்தால்தான் சந்தோஷம். சக்திதான் சகலமும். சக்திதான் உலகம் முழுவதும். சக்திதான் பிரபஞ்ச ஆட்சி.

சக்தியினுடைய ஒரு வடிவம்தான் பூமி. பூமியினுடைய இன்னொரு வடிவம் பெண்.

பிரபஞ்ச சக்தி, பூமி என்கிற சக்தியை தாங்கிக் கொண்டிருக்கிறது. பூமி உயிரினங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. உயரினங்களில் பெண் உயிரினம் இந்தத் தாங்குதலை கர்ப்பாருபமாகச் செய்து கொண்டிருக்கிறது.

எனவே, பெண்ணே சக்தி. பெண்ணே கடவுள். பெண்ணே தொழப்பட வேண்டியவள்.

எனவே, கடவுளைத் தொழ வேண்டுமெனில், பெண்ணைத் தொழுங்கள். பெண்ணைத் தொழாது வேறு எதைத் தொழுதாலும் வீண்.

பெண்ணே ஆதி, பெண்ணே கடவுள். பெண்ணே எல்லாவற்றிற்கும் மூலம்.

சுப்ரமணியம் உள்ளே தெளிந்தார்.

ஓர் ஊழித்தீயை சிறு விளக்காகப் பார்த்து அணைத்து விடலாம், அழித்து விடலாம், என்று மனிதன் நினைப்பது பேதமை.

அகல் விளக்கு ஊழித்தீயின் ஓர் அம்சம். உன் மனைவி பிரபஞ்ச சக்தியின் ஒரு தோற்றம்.



விளக்கை ஊதி அணைத்து விடலாம். மனைவியை மிரட்டி அடக்கி விடலாம். ஆனால் மரணத்திற்குப் பிறகு அங்குதான் போக வேண்டியிருக்கிறது. உன் உயிர் சக்தி மிகப்பெரிய சக்தியிடம் மண்டிபோட வேண்டியிருக்கிறது. பெண்ணைக் கோபமில்லாமல் நடத்தத் தெரிந்து கொண்டு விட்டால், வேறு எதிலும் கோபம் வராது. பெண்ணைப் புரிந்து நடந்துவிட்டால், புரியாத விஷயமே எதுவும் இருக்காது.

இங்கு இதுதான் விதி. இதுதான் வழி. மற்ற எல்லா வழியும் வீண். வெறும் விவகாரம்.

தனக்குப் புரிந்ததை எவருக்குச் சொல்வது, எப்படிச் சொல்வது, எப்போது சொல்வது?

சுப்ரமணியம் தனக்கு உள்ளேயிருந்த சக்தியிடம் கை கூப்பினார். 'என்னை நீ இயக்கு' என்று புன்னகை செய்தார்.

பதிலுக்கு அந்தச் சக்தியும் வெளிச்சமாய் சிரித்தது. நான் அறிவேன் என்றது.

அவர்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி வெறுமே கிடந்தார்கள்.

நாட்கள் நகர்ந்தன.

நல்லவர்கள் சுப்ரமணியத்தைப் பார்த்துக் கொண்டார்கள்.

சட்டென்று ஒருநாள் விடியலில் திருக்கடலூர் எல்லைக்கு மனைவி வந்துவிட்டாள் என்பது சுப்ரமணியத்திற்குத் தெரிந்தது. அவள் பயந்திருப்பதையும் உணர முடிந்தது.

'தாயே... என் குழந்தை வருகிறாள். என்னைத் தேடி ஆவலாக ஓடிவருகிறாள். அவளை ஆசீர்வாதம் செய். அமைதியாக்கு.' வேண்டிக் கொண்டார்.

''என்னா... உங்களுக்கு ஒன்னும் இல்லையே?'' அடுத்த அரை நாழிகையில் கண்மூடி அமர்ந்திருந்த சுப்ரமணியத்திற்கு எதிரே உட்கார்ந்தவாறு அவர் மனைவி பயத்தோடு வினவினாள்.

''வா... கண்மணி...'' அவர் கை கூப்பினார்.

''உங்களால பேச முடியறதில்லையா...''

''பாடவும் முடியும் கண்மணி. நீ நலமா? பயணம் சுகமாக இருந்ததா...?''

''வழி முழுவதும் நான் யாரோடும் பேசவில்லை. உங்களையே நினைத்துக் கொண்டு வந்தேன். நான் போகும் போது பேசியதும், செய்தவையும் என் நினைவுக்கு வந்தன. நீங்கள் நலமா?''

''அபிராமி இருக்க எனக்கு என்ன குறை கண்மணி?''

''ஏன் வீடே திறக்கவில்லை?''

''அபிராமியோடே தங்கி விட்டேன் கண்மணி. இங்கேயே உணவு, இங்கேயே இருப்பிடம் என்று இருந்துவிட்டேன்.''

''வீட்டிற்கு வருவீர்கள் அல்லவா?''

''துறந்து விட்டேன் என்று யார் சொன்னார்கள்?''

''அப்பா... இப்போதுதான் நிம்மதி. திருபுவனத்தி லிருந்து உங்களைப் பற்றி விதம்விதமாகக் கேள்விப் பட்டேன். அரசர் நிச்சயம் வருவார் என்று முன்கூட்டியே சொன்னீர்களாமே... என்னோடு வருகிறீர்களா... வீட்டை சுத்தம் செய்து விருந்து தயார் செய்ய வேண்டும். அய்யாவையர் நமது வீட்டில் தங்குவதாக வாக்களித் திருக்கிறார். அரை நாள் தொலைவில் இருக்கிறார். அவர் வந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அரசர் வருவாராம்.



அரசர் நமது ஊரில் தங்கினாலும் தங்குவார். நேரே சமுத்திரம் பார்க்கப் போனாலும் போய்விடுவார் என்று சொல்கிறார்கள்.''

''அரசர் எதற்கு வருகிறார் கண்மணி?'' சுப்ரமணியம் மெல்லிய சிரிப்போடு கேட்டார்.

''தை அமாவாசைக்கு சமுத்திர ஸ்நானம் செய்யலாம்.'' கண்மணி பதில் சொன்னாள்.

''இல்லை சுப்ரமணியம்.'' அண்ணன் அருகே வந்து உட்கார்ந்தார். ''தஞ்சையைச் சுற்றி இருக்கும் கிராமங்களில் வரும்படி இல்லை. வரிவசூல் முடிவதில்லை. விளைச்சல் குறைவு. இங்கே கிழக்குப் பக்கம் கடைமடை ஆயினும் மூன்று போக விளைச்சல் என்று அவருக்குத் தெரிந்து விட்டது. நடராஜய்யர் உளறி இருக்கிறார். தங்க ருத்ராட்சம், தோடா, வைரமோதிரம் என்றெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறீர்களே...' நல்ல வரும்படியா என்று மன்னர் கேட்க, விலாவாரியாய் தன் சம்பாத்தி யத்தைச் சொல்லியிருக்கிறார். அரசருக்கு அப்போதே ஆடுதுறையைத் தாண்டி வரவேண்டும் என்று தோன்றி விட்டது. இதைத்தவிர திருவெண்காடு, தரங்கம்பாடி பகுதியில் காரைக்கால் பக்கங்களில் பெரிய கப்பல்களில், பரங்கியர் இறங்கியிருப்பதாய் கேள்வி. அவர்களை மிரட்டி வரி வசூல் செய்யவும், அதாவது கொள்ளை அடிக்கவும் திட்டமிட்டிருக்கிறார். மூன்றாவதாக இன்னொரு செய்தி இருக்கிறது.

''மன்னர் சரபோஜியின் வைப்பாட்டி மகன், கும்பி என்கிற பெண்ணுக்குப் பிறந்தவன், காட்டுராஜா என்கிற பெயரில் மறவர்களிடம் போர் பயிற்சி பெறுகிறானாம். மன்னவர் அவனைப் பார்க்கவும் முயற்சி செய்கிறார்.

அவனை அரசனாக்குவாரா அல்லது அடித்து விரட்டுவாரா என்று யாருக்கும் புரியவில்லை.

''மன்னர் தங்குவதற்கு இந்த ஊரில் வேறு வசதியில்லாததால் கோயில் மண்டபத்தைத்தான், கனத்த திரை கட்டி ஏற்பாடு செய்து தரப்போகிறார்கள். நீ வீட்டுக்கு வந்து விடுவது நல்லது.''

சுப்ரமணியன் எழுந்தார். அண்ணனின் தோள் பற்றிக் கொண்டார். இரண்டு கால்களும் மரத்துப்போய் மேல் தோல் பிடுங்கியது. பாதத்தில் கல் முளைத்தது போல் உறுத்தியது.

''ஏன் பலஹீனமாக இருக்கிறாய், சுப்ரமணியம்? ஏன் உடம்பு தள்ளாடுகிறது?''

''இந்த சின்னக் குடிலுக்குள் ஒரு பெரிய யானை புகுந்து விட்டது. குடில் ஆடாது என்ன செய்யும்?''

''உங்களுக்கு ஒன்று தெரியுமா...?'' சுப்ரமணியத்தின் மனைவி ஆவலாக ஆரம்பித்தார். ''அண்ணா மிகவும் மாறிப் போய் விட்டான். மன்னியின் பாட்டுக்கு அவனும் கண்ணீர் விட்டு அழுகிறான். நேற்று இரவு அவள் காலில் விழுந்து மன்னித்துவிடு என்று அழுதான். மன்னி ரொம்ப கம்பீரமாய் மன்னித்தேன் என்று சொல்லிவிட்டாள். நான் அதிர்ந்து போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''மன்னி என்னைக் கட்டிக் கொண்டாள். தெய்வத்தைப் புருஷனாய் கொண்டிருக்கிறாயடி. உன் புருஷனுக்கு ஒரு வேளை சோறு போட்டேன். என் மொத்த வாழ்க்கையும் சுகமாய் மாறிவிட்டது. உன் புருஷன் மிகப் பெரிய மஹான். கடவுளோடு கலந்தவன். என் எல்லா நிம்மதிக்கும், உன் புருஷனுடைய ஆசீர்வாதம்தான் காரணம் என்கிறாள்.



''மன்னி எனக்கு எதுவும் கற்றுத் தரவில்லை. நீ கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி விட்டாள். மரண பரியந்தமும் உங்களுக்கும் எனக்கும் அவளே சமைத்துப் போடுகிறாளாம். அவளே துணி துவைத்துப் போடுகிறாளாம். அவள் புருஷனை நம் வீட்டு வேலைக்காரனாக்கப் போகிறாளாம். அவள் ஜென்மம் சாபல்யம் அடைய இதுதான் வழியாம். இது ஒன்றுதான் வழியாம்.''

சுப்ரமணியம் சலனமில்லாமல் அவர்களோடு வீடு நோக்கி நடந்தார்.

மாலையில் அய்யாவையன் பல்லக்கிலிருந்து இறங்கியதும் சுப்ரமணியம் வாசலுக்கு பூரண கும்பம் ஏந்தி தமையனோடு வரவேற்றார்.

அய்யாவையன் கூப்பிய கரங்களோடு சுப்ரமணியத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஸ்வாமியப் பார்த்துட்டியா சுப்ரமணியம்?'' மெல்லிய குரலில் கேட்டார்.

''எதெதுவோ பார்க்கறேன். எது, என்னதுன்னு தெரியவேயில்லை. எனக்கு தெரியப்படுத்தற பொறுப்பை அவகிட்டே ஒப்படைச்சுட்டேன்.''

''என்னமோ நடக்கப் போறது சுப்ரமணியம். மனசு சந்தோஷமாவும் இருக்கு. கவலையாவும் இருக்கு.'' அய்யாவையன் தழுதழுத்த குரலில் கூறினார்.

''உள்ளே வரணும், பெரியவா உள்ளே வரணும்.''

வீட்டுக்குள் நுழைந்த அய்யாவையனை சட்டென்று ஒரு குளிர் சுற்றிக் கொண்டது, அவருக்கு உடம்பு உதறிப் போட்டது.

இரவு உணவுக்குப் பிறகு அய்யாவையனைச் சுற்றி வட்டமாக எல்லோரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

சுப்ரமணியத்தின் மைத்துனன் மனைவி சபைக்கு நடுவே சுப்ரமணியத்தைத் தனியாக நமஸ்கரித்தாள். மண்டியிட்டு முகத்தைப் பொத்திக் கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

''தெய்வமே...தெய்வமே-'' என்று அலறினாள்.

''கோடி பேருக்கு ஒருத்தர்தான் மஹானா இருப்பார்னு சொல்வா. அப்படிப்பட்டவாளை தரிஸனம் பண்றது சிரமம் சொல்வா - தரிஸனம் பண்ணாலும் அவாளை மஹான்னு கண்டுபிடிக்கறது கஷ்டம்னு சொல்வா. நீங்க மஹான். நான் உங்களைப் பார்த்துட்டேன். நான் உங்களோட பேசிட்டேன். உங்களுக்கு ஒரு வேளை சாதம் போட்டதுக்கே என் மொத்த வாழ்க்கையும் சுபிட்சமாயிடுத்து. என் புருஷனை பொட்டிப் பாம்பாய் என் எதிர்க்க உட்கார வச்சுட்டேள். என் குரல்வளத்தை அற்புதமாக்கிட்டேள். நான் பாடற பாட்டாலே எனக்கொரு மரியாதை கொடுத்திருக்கேள்.

''ஒருவேளை சோத்துக்கே இத்தனை பொக்கிஷம் கிடைக்கும்னா காலா காலத்துக்கும் உங்களுக்கு சோறு போட்டா எங்களுக்கு என்னெல்லாம் கிடைக்கும். அந்த பாக்யத்தை நீங்க எனக்கு தரணும். உங்க ரெண்டு பேருக்கும் சேவை பண்ற மஹாபாக்யத்தை எனக்கும், என் புருஷனுக்கும் தரணும்.'' அவள் குழறி குழறி கதறினாள்.

அய்யாவையன் அவளையே வியப்பாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

''மந்திரி பார்த்துண்டிருக்கார். இப்படியெல்லாம் பேசப்படாது.'' யாரோ ஒரு திருக்கடலூர் அந்தணன் உரக்கக் கத்தினான்.



''நான் தெய்வத்துக்கிட்டே பேசிண்டிருக்கேன். மந்திரியே சும்மா உட்கார்ந்துண்டிருக்கும் போது, எடுபிடியெல்லாம் வாயைத் திறக்கப்படாது.'' அவள் சீறினாள்.

''நீங்க சரின்னு சொல்றவரைக்கும் நான் சாப்பிட மாட்டேன். தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். தயவு செய்து சரின்னு சொல்லுங்கோ.'' அவரெதிரே தரை பார்த்து உட்கார்ந்து கொண்டாள்.

அந்த இடம் மௌனத்தில் மூழ்கியது.

மந்திக்கு எதிரே வைத்த வாழைப்பழத்திலிருந்து இரண்டு பழங்கள் எடுத்து சுப்ரமணியம், அந்தப் பெண்ணிடம் நீட்டினார். சாப்பிடம்மா என்றார்.

அவள் விழி விரிய, முகம் மலர, வாங்கிக் கொண்டாள்.

ஓரமாகப் போய் பழம் சாப்பிட்டாள். புருஷனுக்குக் கொடுத்தாள். புருஷனும் மனைவியும் தாளத்தோடு பாடத் துவங்கினார்கள்.

நால்வர் பாடிய தேவார, திருவாசகங்களை மனமுருகப் பாடினார்கள். ஊர் காது குளிரக் கேட்டது. சில பேருக்கு சுப்ரமணியத்துக்கு வந்த மகிமை எரிச்சலாகவும் இருந்தது.

''பஞ்சாங்க பிராமணன், இவன் என்னடா போறவர்றவாள ஆசீர்வாதம் பண்றது?

''நான் நாலுவேதம் படிச்சவன். முப்பத்தி ஆறு வருஷம் அத்யானம் பண்ணினவன். ஆயிரம் பேருக்கு பாடம் சொல்லிக் கொடுத்தவன். என்னைவிட, இந்தப் பையன் ஒசத்தியா... பித்துப்பிடிச்சா மாதிரி கோயில்ல

உக்காந்துட்டா, சுவாமி தெரிஞ்சுடுத்துன்னு அர்த்தமா... ஒரு பிராமணன் அப்படி உட்காரக் கூடாது. சுவாமியை எதுக்குடா தெரிஞ்சுக்கணும். தெரிஞ்சுக்க வேண்டாம்னு தானேடா அது ரகசியமா இருக்கு.

''உன் குல தர்மம் என்ன? அதைச் செய் போறும்னு சொல்லிருக்கு. இவன் உட்கார்ந்தா மாதிரி ராஜா உட்கார்ந்துட்டா... மந்திரி உட்கார்ந்துட்டா... பயிர் பண்றவனும், பால் கறக்கறவனும் உட்கார்ந்துட்டா... வேலை நடக்குமா, உலகம் தன்னைத்தானே சுத்த வேண்டாமா...

''இது பொய். தினம் கோயில்ல வந்து பஞ்சாங்கம் சொல்றதுக்கு சோம்பேறித்தனம்.

''ஜோஸியம் பார்க்கறதுக்கு புத்திசாலித்தனம் வேணும். நாள், கிழமை, கணக்கு ஞாபகம் வைச்சுக்கணும். ஹான்னு உக்காந்துட்டா, பெரிய ஆளாயிடுவானா... எனக்கும் பட்டை சாதம் கொடுங்கடா. நானும் போய் நிழல்ல உக்காந்துக்கறேன்.

''மல, மூத்திரதாரிதானே... கடவுளாயிடலையே... கையில சங்குச் சக்கரம் வந்துடலயே... யாரோ... ஒரு சொந்தக்கார பொம்மனாட்டி, ஆம்படையானை பக்கத்துல வைச்சுண்டே, இவனை தெய்வம் தெய்வங்கறா. ஒரு ராஜாங்க மந்திரியும் இதைப் பார்த்துண்டுருக்கான். என்னடா நடக்கறது இங்கே...?''

பிரும்மாண்டமான உருவத்தோடு இருந்த அந்தணர் ஒருவர் பேசினார்.

அவரைச் சுற்றி பலபேர் நின்று கைகட்டித் தலை யாட்டினார்கள். ''அதுதானே... அதுதானே...'' என்று தூண்டி விட்டார்கள்.



''அண்ணா. உங்களுக்கு சேதி தெரியுமா. இப்போ மொட்டையடிச்சுண்டு அலையறானே... நடராஜன் பொண்டாட்டி ராஜம். அவ திருபுவனத்துல இருக்காளாம். இவனைப் பார்த்துட்டு, ஒரே கொஞ்சலாம். காலைத் தூக்கி தலையில வைச்சாளாம். பேய் சிரிப்பாம்.''

நைச்சியமாகக் கோபப்பட்டவரைத் தூண்டி விட்டார்கள்.

''சுப்ரமணி, ஸ்வாமி தெரிஞ்சுடுத்துங்கறான். இந்த குண்டன் ஸ்வாமிய யாருமே பாக்க முடியாதுங்கறான். ரெண்டு பேரையுமே மோதவிட்டு, என்ன நடக்கறதுன்னு பார்த்துத் தெரிஞ்சுப்போமே?''

வெட்டிப் பொழுது போக்குபவர்கள், வாழ்க்கையின் வேர் அறியாதவர்கள், தினம், தினம் விறுவிறுப்பாக ஏதாவது நடக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் ஊதிவிட்டார்கள்.

''எனக்கொரு சின்ன சந்தேகம். சுப்ரமணியத்தோட மச்சினன், அதான் அந்த கும்பகோணத்துப் பையன், அவன் பொண்டாட்டி தினம் ராத்திரியாச்சுன்னா அய்யாவையன் முன்னாடி உட்கார்ந்து பாடறாளாமே... இது தப்பில்லையா... பரபுருஷன் முன்னாடி குடித்தனம் பண்ற பொம்மனாட்டி பாட்டுப் பாடலாமா, என்னமோ தப்பு இருக்கு?''

''ஒரு மந்திரிக்கு என்னய்யா பஞ்சாங்கக்காரன் வீட்ல வேலை. அப்போ, நாங்கள்லாம் மட்டம்னுதானே அர்த்தம். எங்களை நீ மதிக்கலேன்னுதானே அர்த்தம். இந்தப் பக்கம் ராஜா வரட்டும். வெத்தலைக்கு நடுவுல தேளை வைச்சு பொட்டியோட கொடுக்கறா மாதிரி, ராஜாவுக்கு முன்னாடி பலதும் பேசி, இதையும் தள்ளி விட்ருவோம். சுருட்டின வெத்தலையோட தேள்குஞ்சி

போய் தொண்டைக் குழிய கொட்டினா, ராஜா சுத்தாதயா இருப்பான். தேள்குஞ்சு தொண்டைக்குப் போக, பகவான்தான் அருள் செய்ய வேண்டும்.''

எதற்கு வேண்டிக் கொள்வது என்று தெரியாமல் வேண்டிக் கொண்டார்கள்.

அந்தக் குடும்பத்தை அங்கேயே விட்டுவிட்டு, அய்யாவையன் தன் படைகளுடன் வேதாரண்யம் நோக்கி பயணமானார்.

சுப்ரமணியத்தின் மைத்துனனும், அவன் மனைவியும் விதவிதமாய் சுப்ரமணியனை உபசரித்தார்கள்.

உடம்பு சூடுபோக, எண்ணெய் தேய்த்து மைத்துனன் குளிப்பாட்டினான். வெகுநாள் கழித்து உடம்பில் எண்ணெய் பட்டதும் சூடு அதிகமாயிற்று. ஜுரம் போலும் உடம்பு கொதித்தது. கண்கள் கோவைப் பழமாய் சிவந்து கிடந்தன.

குடுமியை நுனியில் மட்டும் முடித்து சற்று தளர்வாய் நடக்கும்படி நேர்ந்தது. எப்போதும் கண்மூடிக் கிடக்க வேண்டும் என்றே தோன்றியது. வெய்யில் வெளிச்சம் கண்ணைக் கூசியது.

ஆசன வாய் மூலம் போலும் எரிந்தது.

மனதின் கட்டளையைக் கேட்டு, சட்டென்று உடம்பு இயங்க முடியாமல் தவித்தது. வெளிச்சத்திற்கு பயந்து கண்ணை மூடிக் கொண்டால் மனம் உள்ளே அழைத்தது. நாக்கு புரள மறுத்தது. செவிப்புலன்கள் உள்ளே திரும்பிக் கொள்ள, காதுக்குள் ஹிருதயத் துடிப்பே அதிகம் கேட்டது.

கண்மூடி நடந்துபோய், கண் திறக்க மறந்துபோய் சுப்ரமணியம் சுவரில் முட்டிக் கொண்டார்.



''என்ன என்ன...'' என்று பலர் பதறி வந்தபோது வாய் குழறினார். தூக்கி நிறுத்திய போது சிவந்த கண்களோடு அவர்களை வினோதமாகப் பார்த்தார்.

''என்ன சுப்ரமணியம் அப்படிப் பார்க்கறே... நான் யார்னு தெரியலையா...?''

''தெரியறதே...''

''யார் சொல்லு?''

''அம்பாள்.''

''அடி சக்கை. எந்த ஊர் அம்பாளோ...?''

''நம்ம ஊர் அம்பாள். அபிராமி.''

''அமிர்தகடேஸ்வரா, இந்தத் திருக்கடவூரைக் காப்பாத்து. இப்பத்தான் ஒரு பைத்தியம் ஊரைவிட்டு ஒழிஞ்சது. அதுக்குள்ளே இன்னொரு பைத்தியமா, இந்த ஊரை அழிச்சுடாதீங்கடா. இந்த ஊருக்கு அவமானத்தைத் தேடிக் கொடுத்துராதீங்க.''

யாரோ அதீத அலட்டலோடு கூவினார்கள்.

சுப்ரமணியம் அவர்களை உதறிவிட்டு தனியாக நடந்தார். கொஞ்சம் தள்ளாடி நடந்தார்.

''அண்ணா, நீங்க ஏன் அவனைப் பிடிச்சு தூக்கினேள். கொஞ்சம் கூட நன்னியில்லாம போறான் பாருங்கோ, கார்த்தால முக்காகுப்பி குடிச்சுட்டு நிக்கறான்.''

''சுப்ரமணியனா... இருக்காதுடா.''

''ராஜா... ஸ்நேகிதம் ஏற்பட்டுப் போச்சு. அய்யாவையன் தூக்கத்துக்காக ராத்திரி அரைக் குப்பி குடிப்பார். இப்போ இவனும் கூட்டு சேர்ந்துண்டிருக்கான். அவா ஆத்து வாசல்ல நாலஞ்சு காலிக்குப்பி பார்த்தேன்.''

''அந்தக் கண்ணு சிகப்பை கவனிச்சேளா...?''

''கால் பின்னிப் பின்னி போறதைப் பார்த்தேளா?''

''நேரா போய் செவுத்துல நங்குன்னு முட்டிக்கறான்.''

''தூக்கி நிறுத்தினா கொழ கொழன்னு பேசறான்.''

''எப்பவும் முழு போதைல இருக்கான்.''

''அயோக்கியத் தனமான்னா இருக்கு. இனிமே அவனை கோயிலுக்குள்ளே விடாதே.''

''அதுக்கெல்லாம் அவசியமே இல்லை. அவன் ஸ்வாமி சன்னதிக்கே வர்றதில்லை. அபிராமி சன்னதி குளுகுளுன்னு இருக்கா. அங்கே நல்ல மூலையாய்ப் பாத்து, காத்துவர இடமாப் பாத்து உட்கார்ந்துண்டு தூங்கறான்.''

''கோயில் மானியக்காரன், கேட்பாரில்லை. நீயாடா கொட்டிக் கொடுக்கறே, உன் காசுலேயா திங்கறேன்னு கேட்பான்.''

''அப்போ கொட்டிக் கொடுக்கறவா கேட்டாத்தான் உண்டு.''

''யார் கொட்டிக் கொடுக்கறவா?''

''ராஜாதான். சரபோஜி ராஜாதான்.'

''மன்னர் வரலையாமே. வேற வழியா வேதாரண்யம் போறாராமே...''

''திரும்பறபோது வழில மடக்கி வாங்கோன்னு கூப்பிடணும்.''

''எதுக்கு?''

''இவனைச் சொல்லி இவன் வேலையை நாம பிடுங்கிக்கலாம்.''



''பஞ்சாங்கம் சொல்றதுக்கு புத்தி வேண்டாம். ஓலை இருந்தாப் போதும்.''

''இவன் அப்பா, அண்ணாவெல்லாம் இருக்காளே... இவன் பின்னாடியும் பெரிய கூட்டம் இருக்கே...'

''அமிர்தகடேஸ்வரர் நம்ம பக்கம் இருக்கார். நிச்சயம் அவன் வேலைய நமக்கு வாங்கித் தருவார்.''

''அதுவரைக்கும் என்ன பண்றது?''

''அவன் என்னெல்லாம் பண்றான்னு வேடிக்கைப் பார்ப்போம். பாதிபேர் வேதாரண்யத்துக்குப் போய், ராஜாவை பார்த்து, நம்ம ஊருக்குக் கூட்டிண்டு வருவோம்.''

அவர்கள் வேதாரண்யம் போய் அரசனைத் துதித்தார்கள்.

''கோயில் செஞ்சடை வளர்த்த சிவனுடையதாக இருந்தாலும், இங்கே லக்ஷ்மி வாசம் செய்தால்தான் சுபிட்சமாக இருக்கும். சுபிட்சமான இடத்தில்தான் மக்கள் புழங்குவார்கள். மக்கள் புழங்கினால்தான் கடவுளுக்கு மரியாதை.

''எங்கள் கோயிலில் லக்ஷ்மிகரம் வந்து சேர, மன்னர் வரவேண்டும்.

''லக்ஷ்மியின் புருஷன் விஷ்ணு. மன்னன் என்பவன் விஷ்ணு அம்சம். விஷ்ணுவின் காலடிப்பட்ட இடத்தில் லக்ஷ்மி இருப்பாள்...

''அதனால் மன்னவனே. அந்நியர்கள் நடுங்கும் மிகப் பெரிய வீரனே... மன்மத சொரூபனே... நீ திருக்கடவூருக்கு எழுந்தருள வேண்டும். நீ வர, லக்ஷ்மியும் வருவாள். எங்கள் அமிர்தகடேஸ்வரர் மனம் குளிர்வார்.''

வடமொழியில் கவிதை எழுதி, அதை பட்டுத் துணியில் சுற்றி, மன்னவர் முன்பு வாழ்த்தி பரிசளித்

தார்கள். இதுபோல நிறைய பொய் கவிதைகளை சரபோஜி கேட்டு சலித்திருக்கிறார்.

மன்னர் சரபோஜி அய்யாவையனை ஏறிட்டு, என்ன என்பதுபோல் பார்க்க, அய்யாவையன், ''அமாவாசை யன்று ஸ்நானம் முடித்தபிறகு, நேரே திருக்கடவூருக்குப் போய், ஸ்வாமி தரிசனம் செய்யலாம்'' என்று சொன்னார்.

அரசர் ஒரு பொன் மோதிரத்தை அந்த அந்தணருக்குக் கொடுக்க, அதை யார் போட்டுக் கொள்வது என்று அவர்களுக்குள் சண்டையிட்டார்கள்.

சுப்ரமணியத்திற்கு கண்மூட, பச்சை வண்ணம் படிந்தது. நாக்கடியில் விதம்விதமான ருசிகள் ஏற்பட்டன. உள் சுகம் அதிகமாகி, கண் திறக்கவே முடியாத ஒரு போதை ஏற்பட்டது.

உச்சி மண்டை கொதிக்கத் துவங்கியது. மேல் துணியால் போர்த்திக் கொண்டாலும் குளிரெடுத்தது.

சட்டென்று எதிரே ஓர் ஆறுவயது பெண் தோன்றினாள். மிகப் பிரியமாகச் சிரித்தாள்.

சுப்ரமணியம் அவளை நோக்கிக் கைகூப்ப, பதிலுக்கு அவளும் கைகூப்பினாள்.

அவள் நின்ற பின்புறமெல்லாம் பச்சை வண்ண மிருந்தது.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

சுப்ரமணியத்திற்கு கடைவாய் ஒழுகியது. கண்கள் கருடப் பார்வையாகி, மூக்கின் நுனியைப் பார்த்தன. நெற்றி குறுகுறுத்தது.

அந்த ஆறுவயதுப் பெண், வாலைக்குமரி நகர்ந்து போனதும், சுழல் போலும் ஒரு சிகப்பு சூழ்ந்து



கொண்டது. மிகப் பெரிய சூரியன் கபாலத்திற்கு நடுவே உதித்தது.

அவரை அணைத்தபடி, தூக்கிக் கொண்டு வீட்டிற்கு போனார்கள். நழுவிய வேட்டியைக் கட்டி விட்டார்கள். மெல்லிய பிரம்புக் கொடியால் துணியை இடுப்பில் கட்டினார்கள்.

முகம் துடைத்து, திண்ணையில் உட்கார வைத்தார்கள். அங்கேயே உணவு கொடுத்து படுக்க வைத்தார்கள்.

''இது நன்னாவேயில்லையே, பார்க்கறதுக்கு?'' அப்பா புலம்பினார்.

இது சரியா தவறா என்று தெரியாமல் அந்த வீடு குழம்பியது.

இது நோயா, தெளிவா என்று தெரியாமல் பயப் பட்டது.

கடவுள் அறிதல் என்கிற விஷயம் அந்தணர்களுக்கும் அப்பாற்பட்டுத்தானிருந்தது. படித்தவர்களுக்கும் புரியாமல் தானிருந்தது. நல்லவர்களுக்கும் அதன் வேகம் விளங்க வில்லை.

இந்த உன்மத்த நிலைதான் கடவுளின் நிலையென் றால், அது இல்லாமலிருப்பதே உத்தமம் என்று தோன்றியது.

எல்லா நரியும், வாலை அறுத்துக் கொண்டு வாழும் போது, வால் முளைத்து வலம் வரும் நரி தவறென்று தோன்றியது.

இது அவமானமாக இருந்தது. அடுத்தவரின் கேலிப் பேச்சு மனதைச் சுட்டது.

''வேட்டி நிக்கலைன்னா என்ன, சரபோஜி போட்டுப் பாரே... அது மாதிரி ஓர் அங்கியை மாட்டி விட்டுடுங்க. அவர் பாட்டுக்கு எங்கவேனா திரியட்டும்.''

''என்ன... அங்கி போட்டுண்ட பிறகு தலைப் பாகையைக் கொடு, கத்தியைக் கொடு, சிம்மாசனத்தைக் கொடு, ஒண்ணுக்கு மூனா பொண்டாட்டியக் கொடுன்னு கேட்காம இருக்கணும்.''

''சரபோஜி அங்கிக்கு, எங்கே ஓய் போறது?''

''ராஜா இந்தப் பக்கம்தானே வர்றார். நீங்க போட்டுக் கழட்டின அங்கியைக் கொடுங்கோ. எங்க ஊர் பிராமணனுக்கு வேணும்னு கெஞ்சிக் கேட்டு வாங்கிண்டு வரலாம்.''

''இதையும் நாம ஏன் கேட்கணும். அந்த அகத்துக்கு எல்லாம் செய்ய அய்யாவையன் சித்தமா இருக்காரே...''

''ஆமாம்... ராத்திரி பாடறபோது மைத்துனன் பொண்டாட்டிய விட்டு ஒரு விக்ஞாபனம் கொஞ்சலா பண்ணிண்டாப் போறது.''

''சண்டாளப் பாவிகளா...'' சுப்ரமணியத்தின் மனைவி ஆத்திரத்தோடு பேச்சு வந்த எதிர் திண்ணைக்கு விறகுக்கட்டையோடு ஓடினாள்.

சுப்ரமணியம் அவளை கைதட்டி அழைத்தார்.

''நாம் கடவுளை நம்புகிறவர்கள். சக்தியின் காலில் சரணாகதி அடைந்தவர்கள். நாமாய் இயங்கக் கூடாது. நம் விருப்பு வெறுப்புகளை காட்டக் கூடாது. அவர்களும் அம்பாள் ரூபம், அது வசவேயில்லை வாழ்த்து. அது கேலியேயில்லை. பாராட்டு.

''அவர்கள் சொல்வது பொய்யில்லை, நிஜம். அவர்களுக்கு இதில் சந்தோஷம். இதை மறுப்பானேன்.

''நமது வீட்டில் பட்சணங்கள் இருக்கிறதல்லவா... உன் மன்னி எனக்கென்று செய்திருக்கிறாளல்லவா...



அவைகளை ஒரு தட்டில் போட்டு, கொண்டு போய் கொடு''

அவர் கட்டளையிட்டார். அவர்கள் அதை உடனே செய்தார்கள்.

அவர் வீட்டு மனிதர்களுக்கும் ஓர் அமைதி வந்தது. எது வந்தாலும் கடவுள் பார்த்துக் கொள்வார் என்று நம்பிக்கை வந்தது. வீட்டிலுள்ள அனைவர் நெஞ்சிலும் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. வீட்டிலுள்ளோர் செயல்க ளெல்லாம் இறை வழிபாடாகவே இருந்தது.

ஆனாலும், இப்படிப்பட்ட பித்துநிலையா இறையுணர்வு என்கிற கேள்வியும் இருந்தது.

'அம்பிகே...' சுப்ரமணியத்தின் மைத்துனனின் மனைவி, எரியும் குத்துவிளக்கு பார்த்து இறைஞ்சினாள். 'இது பற்றி இன்னும் தெளிய எங்களுக்கு சொல்லிக் கொடேன். ஏன் இவர் தள்ளாடுகிறார் என்று எங்களுக்கு எப்படியாவது விளக்கிச் சொல்லேன்.''

அவள் வாய்விட்டுக் கேட்ட மறுநாள் ராஜம் அங்கே தோன்றினாள். வாசலில் நின்று ''என் தம்பிக்கு பட்டாபிஷேகம், என் தம்பிக்கு பட்டாபிஷேகம்'' எனறு கூவினாள்.

சுப்ரமணியம், விலுக்கென்று எழுந்து நின்றார். ஓடிப்போய் நடுவீதியில் அவள் கால்களில் விழுந்து வணங்கினார். அவர் தந்தை உட்பட அவர் வீடும் வணங்கியது.

''எங்கே இன்னொரு பைத்தியம்னு கேட்டேளே... வந்தாச்சு. இனி ஊரு திமிலோகப்படப் போறது.'' யாரோ கொக்கரித்தார்கள்.

வீடு ராஜத்தை உள்ளே அழைத்துக் கொண்டு போயிற்று.

''உலகில் எல்லா மதத்திலும், எல்லா மஹான்களும் இந்த நிலையைத் தாண்டித்தான் வர வேண்டும். இறையை அறியும் போது உண்டாகும் வேதனையை அனுபவித்துத் தான் ஆக வேண்டும். தரிசனம் பூரணமான பிறகு இது மட்டுப்படும். தரிசனம் நாளையும் பூரணமாகலாம். நாலு ஜென்மம் கழித்தும் பூரணமாகலாம்.

''உள்ளே ஒரு மகத்தான சக்தி பொங்கிக் கொண் டிருப்பதால், உடம்பு அதைத் தாங்க மாட்டாமல் தடுமாறுகிறது.

''சக்தி விகசித்து, விரிந்து பின் அடங்கும். அப்பொழுது எல்லாம் சரியாகும்.

''சுப்ரமணியத்தின் சக்தி நெற்றியிலிருந்து தலை யுச்சிக்குப் போக முயற்சி செய்து கொண்டிருக்கிறது. பார்க்குமிடமெல்லாம் சிகப்பாய், செந்தழலாய் தெரியும் நிலையிது. மிகப்பெரிய ஞானிகளுக்கே சக்தி கபால உச்சியைத் தொடும். சகஸ்ராரம் திறக்கும்.

''சுப்ரமணியத்திற்கும் இது விரைவில் நடக்கும்.

''சுப்ரமணியத்தை யாரும் காப்பாற்ற வேண்டாம். இறை காப்பாற்றும். எந்நேரமும் துணை நிற்கும். சுப்ர மணியத்தை யாராவது ஹிம்சித்தால் இறை சீறியெழும்.

''எனவே, எவர் பேசினாலும், எது பேசினாலும், யார் அலட்டினாலும், யார் அதட்டினாலும் எந்தக் கவலையும் பட வேண்டாம்.

''ஒரு புலி மெல்லிய கயிறால் கட்டப்பட்டிருக்கிறது. அதைக் குச்சியால் சீண்டியவன் கதி என்னாகும் என்று யோசித்துப் பார்.



''புலி அடிக்கக்கூட வேண்டாம். கர்ஜித்தாலே இங்கு பல பேர் காணாமல் போவார்கள்.

''நீங்களெல்லாம் புலியோடு பழக்கமானவர்கள். புலி வளர்ப்பவர்கள். இந்தப் புலி பூனைபோல் உங்களிடம் வந்து ஒட்டிக்கொள்ளும், உறவாடும். உங்களுக்குக் கட்டுப்படும்.

''திருக்கடவூருக்கா அவமானம் என்று சொன்னார்கள். திருக்கடவூரின் முகமே சுப்ரமணியம்தான். திருக்கடவூரின் ஸ்ரீநிதியே சுப்ரமணியம் தான்.

''ஊருக்கு வெளியே நின்று பார்த்தேன். அபிராமி வானளாவ நிற்கிறாள். ஆனந்தமாய் சிரித்தபடி உலகம் பார்க்கிறாள். அழுகிறவர்கள் யார், அழச் செய்தவர்கள் யார் என்று தெரிந்து வைத்திருக்கிறாள். தன்னை வேகமாய் வெளிப்படுத்திக் கொள்ளப் போகிறாள். அன்பில் கனிந் திருக்கும் சுப்ரமணியனை தன்வசப்படுத்திக் கொண்டு, அவன் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளப் போகிறாள்.

''இங்கே அதிசயம் நிகழும். நாம் யாவரும் அறியும் வண்ணம் நிகழும்.

''சுப்ரமணிக்கு விசிறுங்கள். பாதம் பிடித்து விடுங்கள். தகப்பன் பிள்ளை, அண்ணன் தம்பி என்ற பேதமெல்லாம் தாண்டியாகி விட்டது. அவன் அறிந்தவன். நீங்கள் அறியாதவர்கள். அவன் குரு. நீங்கள் சீடர்கள். தயங்காது சேவை செய்யுங்கள். தானாய் முன்வந்து செய்யுங்கள். இறை உங்கள் வீட்டில் இருக்கிறது'' என்றாள்.

அந்த வீடு அவளுக்கும் செய்தது. தை அமாவாசை விடியல் நேரத்தில் அந்த வீட்டில் ஒவ்வொருவராய் நீராடினார்கள்.

பித்ரு கடன் தீர்ப்பதற்காக அண்ணாவும், அப்பாவும் முற்றத்தில் உட்கார்ந்து கொள்ள, சுப்ரமணியம் அவர்கள் செய்யும் தர்ப்பணத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். உட்கார்ந்தபடியே மெல்லச் சிரித்து கைகூப்பினார்.

அப்பாவின் அப்பாவும், அப்பாவின் தாத்தாவும் முன் வந்து, கையேந்தி தர்ப்பண ஜலத்தின் சக்தியை வாங்கிக் கொள்வதைப் பார்த்தார்.

அவர்கள் பதிலுக்கு சுப்ரமணியத்தை நமஸ்கரித் தார்கள்.

அந்த வீடு நறுமணமாகவுகம், குளுமையாகவும் மாறிற்று.

சுப்ரமணியனுக்கு அவர் மனைவி சாதம் ஊட்டி விட்டாள். ஈரத் துணியால் முகம் துடைத்து, வேறு உடை மாற்றி திண்ணையில் உட்கார வைத்தாள்

வயல் நோக்கி அண்ணனும், அப்பாவும் போக, பெண்டுகள் பின்கட்டில் வேலை செய்ய, தெருவில் அந்த ஆறு வயதுப் பெண் அவரைக் கைதட்டி அழைத்தாள்.

சுப்ரமணியம் பின்தொடர, கோயில் நோக்கி நடந்தாள்.

வெகு தொலைவே எக்காளம் கேட்டது. பட்டத்து யானை பிளறியது. குதிரைகள் குதித்து ராஜநடை நடந்தன.

பல்லக்கில் தூங்கிக் கொண்டு வந்த அரசர், தன்மீது நெல்மழை பொழிவது போல கனவு கண்டார்.

'அடடா... என்ன அதிசயம்' யாரோ சுப்ரமணியத்தை மடக்கி கண் சிமிட்டினார்கள்.

''சுவத்துல முட்டாம, தள்ளாடாம எப்படிப் போறீர்?'' கேலி செய்தான்.



''எனக்கும் அதிசயமாகத்தான் இருக்கிறது'' சுப்மணியம் பதில் சொன்னார்.

''ராஜ வைத்தியன் ஒரு லேகிய உருண்டை தருவானாம். வாய்ல அடக்கிண்டு பால் குடிச்சா, வாழைப்பழம் சாப்பிட்டா எல்லாமும் பிரும்மாண்டமா தெரியுமாம். எப்பவும் சந்தோஷம் இருக்குமாம். நீர் அதானே போடறீர்.''

''நான் வாயில் ஒதுக்கிக் கொள்ளவில்லை. நெஞ்சில் ஒதுக்கிக் கொள்கிறேன்.''

''எப்படி, வாய்வழியா போட்டு நெஞ்சுக்குக் கொண்டு வந்துடறீரோ...''

''ஐம்புலன்களிலும் போட்டு நெஞ்சுக்குக் கொண்டு வந்து விடுகிறேன்.''

''இந்த இடக்குத்தானே வேண்டாங்கறது, எனக்கு ஒரு உருண்டை லேகியம் கொடு.''

''என்னிடம் இல்லையே...''

''ஒரு விரலளவு கொடு.''

''நீங்கள் கேட்பது என்னிடம் இல்லையே...''

''உன்னிடம் என்ன இருக்கிறதோ அதைக் கொடு. ஒரு வெற்றிலைக் காம்பாவது கொடு.''

சுப்ரமணியம் சிரித்தார். தன் நெஞ்சை மெல்லக் கிள்ளி, கேட்டவர் முகத்தில் தேய்த்தார்.

விருட்டென்று தேய்க்கப் பட்டவர் உடம்பில், ஒரு மாறுதல் ஏற்பட்டது.

ஏதோ தாக்கியது போல் உணர்ந்தார். கால் பிடரிபட வேதாரண்யம் பாதையில் ஓடினார்.

வெகுதூரம் ஓட, மன்னர் ஊர்வலமாக எதிரே வந்து கொண்டிருந்தார்.

மன்னருக்குப் பின்னால் வந்த பிராமணர்கள், அவரை பிடித்துக் கொண்டார்கள்.

''என்னடா ஆச்சு. கள்ளு குடிச்சுட்டு ஓடறியா...''

''அவன் என்னமோ நெஞ்சைக் கிள்ளி தடவினானய்யா. உடம்புல ஒரு குதிரை வேகம் வந்துடுத்து.''

''சுப்ரமணியனா... அவனை ஒழிச்சுக் கட்றதுன்னு முடிவு பண்ணிட்டோம்.''

''அதெல்லாம் உம்மால முடியாதய்யா. அவன் ரொம்பப் பெரியவன்.''

''நான் சதுர்வேதிடா.''

''அவன் சகலத்தையும் தாண்டினவன்.''

''இப்போ அவன் எங்கே இருக்கான்?''

''கோயில்ல.''

''வயல் குறுக்க புகுந்து போவோம் வா.''

அவர்கள் ஓட்டமும், நடையுமாய் ஊரை நோக்கி நகர்ந்தார்கள்.

சுப்ரமணியம் உள்ளுக்குள் அமர்ந்து கொண்டார்.

வாலைக்குமரி சிறிது நேரம் சன்னதியில் இருந்து விட்டு மறைந்து போனாள்.

பச்சை நகர்ந்து, சிகப்பு சூழ்ந்து கொண்டது. பெரிய செஞ்சுடர் உள்ளே எழுந்தது. உடம்பில் சூடு படர்ந்தது. குளிரும் சூடும் ஒரு சேர வாட்டின.

அரசன் ஊருக்குள் நுழைந்தார்.

அந்த பிராமணர்கள் கோயிலுக்குள் நுழைந்து சுப்ரமணியத்தையே பார்த்த வண்ணம் இருந்தார்கள்.

''வேண்டாம் அண்ணா. இவனை விட்டுடுவோம்.''



அவரைப் பார்த்துவிட்டு பின்வாங்கினார்கள்.

''இல்லை, இவனை சாய்ச்சே ஆகணும். இவனை இப்படியே விட்டா, நமக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லிடுவான்.''

''அவனுக்கு தெரிஞ்சுடுத்து போல இருக்கே...''

''தெரிஞ்சுட்டா இங்கேயென்ன வேலை. எங்களுக்கு தெரியலை, அதான் முக்கியம்.''

''மத்தவாளுக்குத் தெரிஞ்சாலும் அதை நாங்கள் வெளியே சொல்லுவோமா.''

''அண்ணா... விட்டுடலாம் அண்ணா.''

''ஏண்டா பயப்படறே... இவன் போதையில் இருக்கான். ராஜா உள்ளே வரப்போறார். இதான் நல்ல சமயம். ராஜா வர்றபோது ராஜா கண்லேருந்து இவனை மறைக்கற மாதிரி நீ பார்த்துக்கோ. ஏன் மறைக்கறேன்னு நான் அதட்டறேன். ராஜா என்னன்னு கேட்பார். அப்போ சொல்லிடலாம் புரியறதா.''

சுப்ரமணியம் காதில் இது விழ, மெல்லச் சிரித்தார். அவர் சிரிக்க, உள்ளே அம்பிகையும் சிரித்தாள்.

அரசருக்கு தரையில் கால் வைத்ததும் தலை சுற்றியது. கோயில் ஆடுவது போல் தோன்றியது. வேகமாய் நடக்க முடியாமல் இடுப்பில் வலியிருந்தது. அதை மறைக்க கம்பீரமாய் நிதானமாய் உள்ளே நுழைந்தார்.

அந்தணர்கள் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றார்கள்.

அரசருக்குத் தூக்கம் வந்தது. சமுத்திரத்தில் ஆட்டம் போட்டது அலுப்பாக இருந்தது. பல்லக்கில் தூங்கியது போதவில்லை. எங்கேனும் காற்று வருமிடத்தில் மெத்

தென்று படுத்து தூங்க வேண்டும் போலிருந்தது. அப்படி தூங்கினால் நல்ல கனவுகள் வருமென்று தோன்றியது.

இருபுறமும் பார்த்தவாறு வெகு நிதானமாக நடந்து போனார்.

'வழிவிடு, வழிவிடு.' காவலர்கள் அதட்டினார்கள். ஒரு வியூகம் வகுத்து அரசரை அழைத்துப் போனார்கள்.

'அபிராமி சன்னதி. அபிராமி சன்னதி' யாரோ கூவினார்கள்.

'முதல்ல அமிர்தகடேஸ்வரர். பிறகுதான் அபிராமி சன்னதி.'' வேறு யாரோ பதில் சொன்னார்கள்.

''வரணும் வரணும், இந்தப் பக்கம் வரணும்'' உரக்கக் கத்தினார்கள்.

ராஜா திண்டாடினார். எரிச்சலானார். ''என்ன...?'' என்று பிராமணர்களை நோக்கி அதட்டினார்.

''மறைச்சுக்கோ, மறைச்சுக்கோ'' யாரோ கூவ, இரண்டு பேர் பெரிய வெள்ளைத் துண்டை தூக்கிப் பிடித்து சுப்ரமணியத்தை மறைத்துக் கொண்டார்கள்.

அந்தப் பக்கம் பார்க்காதவர்களையும் அது பார்க்க வைத்தது.

அரசர் அந்த துண்டையே உற்றுப் பார்த்தார்.

கசங்கிய அந்த வெள்ளைத் துண்டின் மடிப்புகளில் மிகப் பெரிய பெண்முகம் அவருக்குத் தெரிந்தது. துணி ஆட, இதழ்கள் விரித்து அவரைப் பார்த்து மிருதுவாய் சிரித்தது.

மன்னர் திரும்பி அய்யாவையனைப் பார்த்தார்.

''ஐயன் நீர் பார்த்தீரா?'' அடிக்குரலில் கேட்டார்.

அய்யாவையனுக்கு துண்டும் தெரியவில்லை. மறைப்பும் தெரியவில்லை. அதற்குப் பின்னே யாரோ



ஆளிருப்பது தெரிந்தது. எதற்கு அந்தணர்கள் ஓர் ஆளை மறைக்கிறார்கள் என்று கோபம் வந்தது.

மன்னர் மறைப்பைக் கேட்கவில்லை. மறைக்கப் பட்டதைக் கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டார்.

''என்ன அங்கே?'' என்று அதட்டினார்.

''ஒன்னுமில்லை. பெரியவா ஸ்வாமி சன்னதிக்கு போகலாம்.'' பிராமணர்கள் நாடகமாடினார்கள்.

''விலகுங்கள்.'' அய்யாவையன் கைதட்டினார்.

துணி பிடித்த பிராமணர்கள் பளிச்சென்று விலகினார்கள். பயந்தது போல் நடித்தார்கள். அவர்களுக்கு உள்ளே சிரிப்பு கொப்பளித்தது.

அய்யாவையன் திகைத்துப் போனார்.

சுப்ரமணியம் வெள்ளை வேஷ்டியில், வெள்ளை மேல் துண்டில், குவித்து வைக்கப்பட்டிருந்த மல்லிகை போல உட்கார்ந்திருந்தார்.

''சுப்ரமணி, சுப்ரமணி. எழுந்திரு, எழுந்திரு... ராஜா... ராஜா.'' அந்தணர்கள் விரட்டினார்கள்.

சுப்ரமணியம் எழுந்து விடக்கூடாதே என்று கவனமாய் கூச்சலிட்டார்கள்.

சுப்ரமணியத்தின் எல்லா புலன்களும் உள்ளுக்குள் போய் ஒரு புள்ளியில் தைத்துக் கிடந்தன.

''யாரிவர்?'' அரசர் மெல்லக் கேட்டார்.

அத்தனை சாந்தமான ஒரு முகத்தை அவர் இதுவரை பார்த்ததேயில்லை.

''இவர் பிராமணர்தான். ஆனால்...'' அருகே யிருந்தவர்கள் வேண்டுமென்றே இழுத்தார்கள்.

அய்யாவையன் சட்டென்று விழித்துக் கொண்டார்.

''அவர் நிஷ்டையில் இருக்கிறார். வாருங்கள் போகலாம்.'' காதோரம் மராட்டியில் பேசினார்.

அரசருக்கு அதைக் கலைப்பதில் விருப்பமில்லை. சட்டென்று வேகமாக நடந்தார்.

அவர் இடுப்பிலிருந்த வலி கழன்று தரையில் விழுந்தது. அவரால் வேகமாக நடக்க முடிந்தது. 'அட...' என்று ஓர் ஆச்சரியம் தோன்றியது.

அமிர்தகேடஸ்வரர் கோயிலுக்கு வந்ததும், உடம்பு ஸ்வஸ்தமாகி விட்டது. ஆவலாய் கோயிலுக்குள் நடந்தார்.

சுப்ரமணியத்திற்கு அருகேயிருந்த பிராமணர்கள் சோர்வானார்கள்.

''என்ன ஓய்... விட்டுட்டீரே...?''

''விட்டுடலாம் அண்ணா.''

''விடப்படாது. ஏதாவது பண்ணியே ஆகணும்.''

''ராஜா இந்தப் பக்கம் வந்துதானே ஆகணும். அப்போ சட்டுன்னு மாட்டி விட்டுடலாம்.''

''இல்லை. இது வேண்டாம்னு எனக்கு தோன்றது.''

''நீ சும்மா இருடா.''

''இது மஹா பாவம். சுப்ரமணி நமக்கு ஒரு கெடுதலும் பண்ணலியே...''

''என்னடா கட்சி மாறரே... இத்தனை நாள் என் விட்டு சோத்தைத் தின்னுட்டு, அவர் பக்கம் பேசறியே...''

''சுப்ரமணியத்தைப் பார்த்தா ரொம்ப பிரகாசமா இருக்கான்னா.''

''அது வெள்ளைத் துணி வெளிச்சம்டா.''



''பெரிய ஞானி மாதிரி தெரியறது அண்ணா.''

''ஒரு கத்திரிக்காயுமில்லை. சுப்ரமணி, இது எத்தனை?'' அவர் நாலுவிரல் நீட்டினார்.

''ஒன்று.'' சுப்ரமணியம் பதில் சொன்னார்.

''இது நாலுடா. நாலு வேதம் கேள்விப்பட்டதில்லையா.''

''இது ஒன்று.'' சுப்ரமணியம் மீண்டும் சொன்னார்.

''வேதம் நாலுன்னு தெரியாதவன் பிராமணனா, ராஜா திரும்பி வரட்டும். இதையே கேட்க வைப்போம்.''

''நான் வரலை. இது விஷப்பரிட்சை.''

''போ நாயே... போ. இந்த பஞ்சாங்க வேலையை உனக்குத்தான் வாங்கித் தரலாம்னு நினைச்சேன். இது உனக்கு ஒட்டலை. போ.''

''எனக்கு வேண்டாம் ஸ்வாமி. ஸ்வாமிகிட்டேருந்த தங்க சூலத்தைப் பிடுங்கி, மத்தவா சாப்பாட்டுக்கு கொடுப்பேளோ...''

அவர்களுக்குள் பேதம் முற்றியது.

ஒருவர் பயந்து ஒதுங்கியதாலே, மற்றவர்களுக்கு அவமானப்படுத்தும் வேகம் அதிகரித்தது. மனம் கறுவியது. ஆத்திரம் அதிகரித்தது. சூளுரைத்தல் அதிகமாயிற்று. அபிராமி மனிதர்களை நகர்த்தி விளையாடத் துவங்கினாள். தன்னை வெளிப்படுத்த லீலை செய்தாள்.

அவர்கள் வேகமாகத் திட்டமிட்டார்கள்.

மன்னர் சன்னதி நோக்கி வருவது தெரிந்தது.

சுப்ரமணியம் மெல்ல சிரித்தார். உள்ளே அவளும் சிரித்தாள்.

''அடேய்... ஒன்னு செய். அய்யாவையனை தனியா பிரிச்சுக் கூட்டிண்டு போயிடு. அந்தக் கிழவன் ராஜாகிட்ட இருக்கற வரைக்கும், இவனை தண்டிக்க விட மாட்டான். மடப்பள்ளி இடிஞ்சு விழுந்துடும் போல இருக்குன்னு, கூட்டிக்கொண்டு போய் காண்பி.''

ஒருவன் அப்படியே செய்ய, அய்யாவையன் தயங்கி, மடப்பள்ளி நோக்கி திரும்பினார்.

அரசரை அபிராமி சன்னதி நோக்கிக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

'சுப்ரமணி. எழுந்திரு, எழுந்திரு'' என்று அதட்டினார்கள்.

சுப்ரமணி வெளி நினைப்பே இன்றி உள்ளாழ்ந்து கிடந்தார்.

அவர்கள் தள்ள சரிந்து விழுந்தார். அரசர் பார்க்க தூக்கி மறுபடியும் உட்கார வைத்தார்கள்.

''இவர் ஏன் இப்படி இருக்கிறார்?'' அரசர் மறுபடி கேள்வி கேட்டார்.

''மதுபானம் செய்திருக்கிறார்.''

துவேஷமுடையவர்கள் பயந்து உண்மை சொல்வது போல் நடித்தார்கள்.

''இவர் பிராமணரல்லவா...'' அரசர் சுருக்கமாகக் கேள்வி கேட்டார்.

''பிராமணர்தான். பிராமணர்கள் சிலர் மதுபானம் செய்வதுண்டு.''

''என்ன?'' அரசர் சந்தேகத்தோடு முகம் சுருக்கினார்.

''துர்தேவதை வழிபாடு செய்பவர்கள் மது, மாமிசம், இரண்டுமே எடுத்துக் கொள்வதுண்டு.''

அரசரை ஒரு பயம் கவ்வியது.



''அப்படியானால் இவருக்கு இங்கென்ன வேலை? வெளியே அனுப்பிவிட வேண்டியதுதானே...''

''செய்யலாம். இவருக்கும் இந்தக் கோயிலில் வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்களே...''

''என்ன வேலை?''

''பஞ்சாங்கப்படனம். நாள், கிழமை, திதி சுவாமிக்குச் சொல்லுதல்.''

''சொல்லிவிட்டு இப்படி அமர்ந்து விடுவாரா?''

''இதுவரை சொன்னதேயில்லை.''

''ஏன்?''

''சொல்லத் தெரியாது. அவ்வளவுதான்.''

''படித்தவராய் தெரிகிறார். நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லையே...''

அரசர் ஆவலுடன் சுப்ரமணியத்தை ஊடுருவிப் பார்த்தார்.

''சுப்ரமணியம். இது என்ன?'' அந்த அந்தணர் நாலு விரலை சுப்ரமணியத்தின் முன் நீட்டினார்.

''ஒன்று.''

''ஏன் ஒன்று என்கிறாய்?''

''ஏகம்.''

''என்னது ஏகம்?''

''ஒன்று.''

''நாலு விரலைக் காட்டினால் ஒன்று என்று சொல்கிறான். ஒரு விரலைக் காட்டினால் நாலு என்று சொல்கிறான். இவனுக்கு ஒரு நாளைக்கு ஒரு மரக்கா நெல் சம்பளம், இரண்டு பட்டைச் சோறு இலவசம், வேட்டித் துணி, தலைக்கு எண்ணெய் எல்லாம் தரவேண்டும்.''

'இவரைப் பார்த்தால் தவறாகவே தெரியவில்லையே. ஏன் தவறாக சொல்கிறார்.' மன்னர் கவலைப்பட்டார்.

''மன்னரே சோதித்துப் பார்க்கலாமே...'' அவர்கள் தூண்டினார்கள்.

''இன்று என்ன திதி என்று கேட்கலாமே...'' அவர்களே எடுத்துக் கொடுத்தார்கள்.

நாலு விரல் நீட்டினால் புரியாதவனுக்கு, நாள் கிழமை, திதியா தெரியும் என்று எண்ணினார்கள்.

உள்ளே அந்த செஞ்சுடர் சூரியன், மெல்ல குளிரத் துவங்கியது. அந்த வட்ட வெளிச்சத்தையே பார்த்துக் கொண்டிருக்க, அந்த தங்கத் தகடு அவர் முன்னே பெரிதாய் வியாபித்திருந்தது.

மிகப் பெரிய நிலா அவர்முன், அவளாய் காட்சியளித்தது.

'அம்மா' மனம் கூவியது.

காயும் நிலவும் தானும் வேறல்ல என்று தெரிந்தது.

'அடி என் ஆத்தி' மனசு கை கொட்டி குதூகலித்தது.

'கண்டேன் கண்டேன். கண்ணுக்கினிய கண்டேன்.' ஆனந்த சாகரத்தில் தத்தளித்தது... சந்தோஷம் பீறிட்டது.

''அந்தணரே...''

அரசர் கூப்பிட்டார்.

சுப்ரமணியம் உள்ளே அந்த சந்தோஷத்திற்குப் பல பெயர்கள் சூட்டி அனுபவித்துக் கொண்டிருந்தார்.

''அந்தணரே... இன்று என்ன திதி?'' மன்னர் கனத்த அடிக்குரலில் குனிந்து கேட்டார்.

''பௌர்ணமி'' தயங்காமல் பதில் வந்தது. மனம் பார்த்ததை வாய் சொல்லிற்று. அனுபவித்துக் கொண்டிருப்பதை அறிவு சொல்லிற்று.



மனதின் சந்தோஷத்திற்கு, பௌர்ணமி என்றுதான் பெயர்.

நிலவை யாராவது துக்கமென்று சொல்வார்களா...

இன்று என்ன திதி என்பது, இன்று என்ன ஸ்திதி என்று காதில் விழுந்தது.

வார்த்தைகளுடே 'ஸ்ஸ்ஸ்' என்று அம்பிகை காற்றாய் விளையாடினாள்.

ஸ்திதி என்றால் நிலை என்று பொருள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிலை. இன்று பௌர்ணமி நிலை.

சுப்ரமணியம் மிகச் சரியான பதிலைச் சொன்னார்.

அரசர் பின்னடைந்தார். மற்றவர்கள் முகம் சுளித்தார்கள்.

''சுப்ரமணியம். இன்று அமாவாஸ்யைடா.''

அவர்கள் அடிக்குரலில் அதட்டினார்கள்.

''இல்லை. இன்று பௌர்ணமி'' அவர் மூடின கண்களுக் குள்ளே, தொடர்ந்து நிலவு தெரிந்து கொண்டிருநதது.

''ராஜா கேட்கிறார். தப்பா சொல்றயே, இன்னிக்கு என்ன திதி?'' அவர்கள் அழுத்தம் திருத்தமாய் தவறை சுட்டிக்காட்ட விரும்பினார்கள்.

''இன்று பௌர்ணமி ஸ்திதி'' மூன்றாம் முறையாக சுப்ரமணியம் பதில் சொன்னார்.

மன்னருக்குள் ஒரு சீற்றம் தலைதூக்கியது.

காற்று ஒரு மதுவாடையை எங்கிருந்தோ சுமந்து வந்தது.

''எழுந்திருக்கிற பணிவுமில்லை. ஏற்புடையதான பதிலுமில்லை. என்ன திமிர் இந்த இளைஞனுக்கு?''

அரசர் கைப்பிரம்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டு சுப்ரமணியத்தை உற்றுப் பார்த்தார். பிரம்பால் மெல்ல தரை தட்டினார்.

''அப்படியானால் இன்று இரவு நிலவு தோன்றுமோ?'' மன்னர் கத்தினார். கேட்டவரை சுப்ரமணியத்தின் மனம் ஒரு கணம் முறைத்துப் பார்த்தது. எதிர்காலம் பளிச்சென்று புரிந்தது.

தனக்குத் தோன்றியது இவருக்குத் தோன்றாதா? தாய் நினைத்தால் எவருக்கும் தோன்றாதா? அவள் அருளிருந்தால் எங்கேயும் தோன்றாதா, இடைவிடாது தோன்றாதா?

''தோன்றும்.'' பதில் சொன்னார்.

அவர்கள் சந்தோஷமானார்கள்.

அரசர் கோபமானார்.

''இவர் பெயரென்ன?'' சீறலாய் கேட்டார்.

''அரசே... தயவு செய்து இவரை மன்னித்து விடுங்கள்.'' அவர்கள் பொய்யாய் கெஞ்சினார்கள். அவர்களுக்கு எப்போது கெஞ்சுவது, எப்படிக் கெஞ்சுவது என்று தெரியும்.

''இவர் பெயரென்ன...?'' மறுபடியும் அரசர் வினவினார்.

''சுப்ரமணியம்'' என்று பதில் சொன்னார்கள்.

''சுப்ரமணியரே... இன்று இரவு வந்து, இருள் படர்ந்து இரண்டரை நாழிக்குள் நிலவு உதிக்காவிட்டால், உம்மை கோயில் வாசலில் குனியவைத்து, முதுகு முழுவதும் பிரம்பால் அடிப்போம். சுத்தமாய் இல்லாத அந்தணரை சுத்திகரிப்பது அரசர் வேலை.'' கைப்பிரம்பை சப்தமெழ சொடுக்கி, வாயில் நோக்கி நடந்தார்.



அரசர் நகர்ந்து மறைந்ததும், அவர்கள் மேல் துணியை விசிறிப்போட்டு சந்தோஷமானார்கள். ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டார்கள் 'ஓஹோ... வாரும் பிள்ளாய்' என்று தொடை தட்டினார்கள். 'ஜெய விஜயீபவ' தங்களுக்குத் தாங்களே கட்டியம் சொல்லிக் கொண்டார்கள். 'சுவாமி நம்ம பக்கம் இருக்கார்' என்று மார் தட்டினார்கள்.

''இப்பவே முதுகுக்கு எண்ணெய் தடவி வை. அப்பதான் முதுகுப் பட்டை பளபளன்னு தெரியும்'' வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''ஒருவேளை நிலா வந்துடுத்துன்னா?'' அவர்களில் மனம் மாறியவன் உரக்கக் கேட்டான்.

அவனை பளாரென்று ஓங்கி அறைந்தார்கள்.

''போய் நடந்ததை, அவன் மச்சினன் பொண்டாட்டிக் கிட்ட சொல்லு. சாயந்திரமா என் முன்னாடி வந்து பாட்டு பாடச் சொல்லு. வெத்தலை பாக்கு மடிச்சுத்தரச் சொல்லு. நான் ராஜாகிட்டேருந்து மன்னிப்பு வாங்கித் தர்றேன். என்னால ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும், போ.''

அந்தச் சதுர்வேதி கொக்கரிக்க, மற்றவர்கள் கை தட்டினார்கள்.

அய்யாவையனுக்கு சேதி தெரிய கவலைப்பட்டார்.

சுப்ரமணியத்தின் வீடு துயரத்தில் ஆழ்ந்தது.

ராஜம் குளக்கரையில் முழங்கால் ஜலத்தில் நின்று, உக்கிரமாய் மந்திர ஜபம் செய்ய ஆரம்பித்தாள்.

வானம் இருட்டிக் கொண்டு வந்தது. காற்று சுழன்றடித்தது. பனை உயரத்துக்கு தூசி தூணாக எழும்பி, தெருவில் விரைந்து போயிற்று.

நாய்கள் பயந்து ஊளையிட்டன.

பகலில் குளிர் பிடுங்கிற்று.

''சுப்ரமணியம், சுப்ரமணியம், கொஞ்சம் கண் முழிச்சுப் பாரப்பா.'' அப்பா மெல்ல உலுக்கினார்.

சுப்ரமணியம் கண் விழித்தார்.

## 5

''என்ன காரியம் பண்ணிட்டே சுப்ரமணி. சரி பண்ண முடியாத தப்பா பண்ணிட்டியே... அமாவாசை முடிந்து ரெண்டு நாழிகையாறது. இன்னிக்கு பிரதமை, இன்னிக்குப் போய் பௌர்ணமின்னு சொல்லிட்டியே... எல்லாரும் வாய்விட்டு சிரிக்கும்படியா நடந்துண்டுட்டியே...

''மறந்து போய் சொல்லிட்டான், உடம்பு சரியில்லை. பித்த மயக்கத்துல சொல்லிட்டான். அப்படின்னு கூட சொல்ல முடியாதே...

''சரபோஜி ராஜா கேக்கறார். பௌர்ணமின்னு சொல்றயே... இன்னிக்கு நிலா வருமான்னு கேக்கறார், வரும்னு அழுத்தம் திருத்தமா சொல்றயே...

''கர்வத்துல சொல்றே. கண்மண் தெரியாது அலையறே. அசட்டுத்தனமா பேசறே. அகம்பாவத்துல பேசறே. இப்படி உன்னைப் பத்தி சொல்ல ஆரம்பிச்சுட்டா ளேப்பா.

''உன்னால நம்ம குலத்துக்கே அவமானம்னு பேச ஆரம்பிச்சுட்டாளேப்பா.

''பொண்டாட்டிக்கு மட்டும் அவமானம்னா பொறுத்துப்பா. ஒரு வீட்டுக்கு அவமானம்னாலும்



தாங்கிக்கலாம். திருக்கடவூர் பிராமணனுக்கு திதி தெரியாதுன்னு சொல்லி, தஞ்சாவூர்ல சிரிப்பா சிரிப்பாளே...

''ராஜா, பிராமணனை நாடு கடத்தலாம். 'சம்பாவனை இல்லை போ' என்று சொல்லலாம். சொத்து பிடுங்கிக் கொள்ளலாம். ஆனால் இன்று இரவு, நிலவு வராவிட்டால், பிரம்பால் உன்னை அடிப்பேன் என்று அரசன் சொல்ல, நான் கேட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கு மரண தண்டனை விதித்திருக்கலாம். மரணம் போலும் தண்டனை ஆகிவிட்டதே.

''சுப்ரமணி, நீ கடவுளை தேடியிருக்கக் கூடாதோ. கடவுளைத் தேடுகிறவனுக்கு இதுதான் தண்டனையோ... அவமானம் நிச்சயம் வருமோ.

''சுயம் மறப்பதா கடவுள் தேடல். அப்பொழுது பூமியில் வாழ்க்கை எதற்கு? உடம்பு மறப்பதா இறைத் தன்மை... அப்போது உறவுகள் எதற்கு..?

''சுப்ரமணியம், நீ அதிக தூரம் போய் விட்டாயப்பா.

''வாழ்க்கையை வளமாக்கத்தான் இறைவன். வளங்களைப் பெருக்கிக் கொள்ளத்தான் பூஜை. நீ இது இல்லை, இது இல்லை, என்று எதையோ நோக்கி போய் கொண்டிருக்கிறாய். எதையோ நோக்கி போய் என்ன புண்யம்? இங்கு இதை, இந்த அவமானத்தைத் தவிர்க்க முடிந்ததா, தடுக்க முடிந்ததா?

''வா, எழுந்திரு. முதலில் நம் குலத்துப் பெரியோர்களிடம் மன்னிப்பு கேட்போம். அவர்களைத் துணைக்கு அழைப்போம். அரசனிடம் கைகூப்பி மன்றாடுவோம். தயவு செய்து தண்டனை தராதே என்று கெஞ்சு

வோம். தண்டிக்கத்தான் வேண்டுமெனில், மானியத்தைத் பிடுங்கிக் கொள்ளட்டும். சோழ தேசம் விட்டு போகச் சொல்லட்டும். இங்கிருந்து நகர்ந்து போய், தொண்டை மண்டலத்திற்குச் சென்று, பரங்கியர் பட்டினத்தில் குடியேறிகளாக வாழ்வோம். ஆனால், தயவு செய்து பிரம்படி வேண்டாம் என்று சரபோஜியைக் கெஞ்சுவோம்.

''இது மிகப் பெரிய அவமானம். நிச்சயமான தலை குனிவு. மாறாத வடு ஏற்படுத்தும் மரணத்தின் நிழல்.

''நாம் அடிபடக் கூடாது. அவமானப்படக் கூடாது.

''சுப்ரமணி, விழித்துக்கொள். கண் திற. என்ன நடக்கிற தென்று பார். எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம் செய்து விட்டாய் என்பதைப் புரிந்துகொள். உடனே நீ கண்விழிக்க வில்லையெனில், நான் நடுவீட்டில் நாணிட்டுக் கொண்டு சாவேன்.

''இந்த மரண அவமானத்திற்கு தற்கொலை மானமுள்ள காரியம்.''

அப்பா அலறினார். அதிகம் அதிர்ந்து போயிருந்தார்.

வழிசொல்லிக் கொடுத்த அப்பாவே விழி பிதுங்கிக் கத்துவது வேடிக்கையாக இருந்தது. சொல்லிக் கொடுக்கத் தெரிந்த நிறைய பேருக்கு, செயல் தெளிவு இல்லா மலிருக்கிறது. கடவுளுக்கு அர்த்தம் சொல்லும் நிறைய பேருக்கு, கடவுள் எதிரே வந்தால் கண் திறக்க பயமாயிருக்கிறது.

கடவுள் என்பது அறிவல்ல. அதுவொரு அனுபவம். அது படிப்பறிவல்ல. பட்டறிவு. அது அறிந்து கொள்வதல்ல. கேட்டுத் தெரிந்து கொள்வதல்ல. அது உணரப்படுவது.



உணரப்படுதலுக்கு முன்பே அறிவு மிரண்டு போய் ஆயிரம் கேள்வி கேட்கிறது. அமைதியில்லாமல் அரற்றுகிறது.

நிறைய அறிவாளிகள் அப்பாவைப் போல்தான் இருக்கிறார்கள். கடவுள் அனுபவம் நெருங்கும் போது, ஐயோ வேண்டாம் என்கிறார்கள். கடவுளை ஒருவகைப் பிழைப்பாக வைத்துக் கொள்கிறார்கள். மரணத்தைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். மரணமில்லா பெருவாழ்வு என்பது அவர்களுக்கு வெறும் வார்த்தைதான்.

வீட்டிலுள்ள அனைவரும் சூழ்ந்து கொண்டிருக்க, சுப்ரமணியம் எழுந்து நின்றார். எல்லோரையும் புன்முறு வலுடன் பார்த்தார். வாசலில் வந்து நின்றார்.

அக்ரஹாரத்தின் எல்லா வீடுகளும் அவர் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தன. உள்ளே என்ன நடக்கிறது, எப்போது உதை விழும் காட்சியைப் பார்க்க முடியும் என்று ஆவல் பட்டுக் கொண்டிருந்தது.

சுப்ரமணியம் வெளியே வந்தவுடன், பரபரத்து அவரைச் சுட்டிக்காட்டின.

மாடசாமி திண்ணையிலிருந்து அவசரமாய் இறங்கி கைகூப்பினான்.

அவன் முகம் வாடியிருந்தது.

''மாடசாமி கயிறு வேண்டுமே... கிடைக்குமா?''

''கிடைக்கும் ஐயன். எவ்வளவு வேண்டும்?''

''ஐம்பது கோல் கயிறு.''

''இங்கு ஒரு வேளாளர் வீட்டில் இருக்கிறது ஐயன்.''

சுப்ரமணியம் காசு கொடுக்க, அவன் தெருவோடு ஓடினான்.

மாடசாமிக்கு நடந்தவை வருத்தமாக இருந்தாலும், ஐயனின் முகப்பொலிவு குறையாதிருப்பது கண்டு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது.

ஐயனிடம் வெறும் பார்ப்பன கர்வமில்லை. ஐயன் வெறும் பகட்டான பேச்சாளி இல்லை. சுப்ரமணிய ஐயன் தெளிவானவர். திடமானவர். அவரை அடிக்கவோ, அப்புறப்படுத்தவோ யாராலும் ஆகாது.

''உள்ளே என்ன பேசுகிறார்கள் என்று கேட்டு, எங்களுக்குச் சொல்லு.'' வெளியே இருந்த கும்பல் கண் சிமிட்டிப் பேசுகிறது. நமக்கு அவமானம், நம்ம ஊருக்கு அவமானம் என்று கூவுகிறது.

ஆனால், ஐயன் அலட்டவுமில்லை. அவமானத்தில் சிரிக்கவுமில்லை. அமைதியாக இருக்கிறார். மற்ற எவரிடமும் இல்லாத சிறப்பு இதுதான். வேறு யாராக இருந்தாலும் இந்த நிலைக்குத் துவண்டு போயிருப்பார்.

பெரிய ஐயன் புலம்புகிறார். அவருக்குப் போத வில்லை. பெண்டுகள் இரண்டு பேரும் பயமில்லாமல் நிற்கிறார்கள்.

கயிறு வாங்கித் திரும்பும் போது கொல்லைப் புறத்தில் ஐயனுக்கு தலையில் நீரூற்றி குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள். மனைவி முதுகு தேய்க்க, மைத்துனனைக் கொண்டவள் நீர் இறைத்து ஊற்றினாள்.

பெண்களே தெளிவாக இருக்கும்போது, பெரிய ஐயன் எதற்கு புலம்புகிறார் என்று தெரியவில்லை.

ஐயன் ஊஞ்சல் பலகையைக் கழற்றி கொல்லைப் புறம் கொண்டுவரச் சொன்னார்.



மாடசாமியும் மைத்துனரும் வீட்டுக்குள்ளிருந்து ஊஞ்சல் பலகையைக் கொண்டு வந்துபோட, ஐயன் மாடசாமியை உறி கட்டச் சொன்னார்.

நீளவாட்டில் நாற்பதும் நாற்பதும் எண்பது கயிறு. அகலவாட்டில் பத்தும் பத்தும் இருபது கயிறுகள் கட்டச் சொன்னார்.

எல்லாவற்றையும் கொண்டை உயரத்திற்கு கொண்டுக் வந்து, முடிச்சாக்கி ஒரு முழம் உயரத்தில் முறுக்கி, அங்கும் ஒரு முடிச்சிட்டு, கோயில் வாசலுக்குக் கொண்டு போகச் சொன்னார்.

அங்கே உறியை வைத்துவிட்டு வீட்டுக்கு வர, உணவு முடித்துவிட்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

மாடசாமிக்கு உணவு போடச் சொன்னார்.

உணவு முடித்தபிறகு, உறிகட்டிய வேலைக்கு வெற்றிலையும், பாக்கும், பொற்காசும் கொடுத்தார்.

வீட்டிலுள்ள யாருக்கும் என்னவென்று கேட்க தைரியமில்லை. மாடசாமி கேட்டான்.

''ஐயன் எதற்கு இந்த உறி? என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அரிகண்டம் பாட உத்தரவு உள்ளே வந்திருக் கிறது.''

''ஏன் இந்த முடிவு ஐயன்?''

''இன்று பௌர்ணமி என்று நான் சொல்லவில்லை. என்னுள் இருக்கும் தெய்வம் சொல்லிற்று. மனிதன் பொய்க்கலாம். தெய்வம் பொய்க்குமா? இரவு நிலவு வரும்.''

''அப்படியானால் உறியும், அரிகண்டம் பாடுதலும் எதற்கு ஐயன்?''

''நிலவு எனக்குள் வந்துவிட்டது. எனக்குத் தெரிந்து விட்டது. உங்களுக்கெல்லாம் தெரிய ஊருக்கெல்லாம் காட்சி கொடுக்க, என் தவம் இது.

''என் அவமானத்தைத் தானே இந்த ஊர் எதிர் பார்க்கிறது. நான் அடிபட்டு, எப்போது மரணமடைவேன் என்றுதானே ஆவலாகக் கேட்கிறது. அவர்கள் ஆவலைத் தூண்டிவிட அபிராமி முடிவு செய்திருக்கிறாள்.

''சோழ மண்டலத்தில் அகங்காரமுள்ள அத்தனை பேரையும் ஒரு வாசலில், ஒரு புள்ளியில் நிறுத்தத் திட்ட மிட்டிருக்கிறாள்.

''எல்லோரும் கூடி ஒருமுகமாய் என்னைப் பார்க்க, மாறுதல் உடனே வரும். உள்ளே நிகழும்.''

''எனக்குப் புரியவில்லை. ஐயனே...''

''உனக்கு புரிய வைக்கவும் இது நடக்கிறது மாடசாமி. தெய்வம் பற்றிய கேள்வி, உனக்குள் இன்னும் இருக்கிறதல்லவா... கடவுள் உண்டா, இல்லையா என்று தொடர்ந்து கேட்கிறாய் அல்லவா... உனக்கும் பதில் வரும் மாடசாமி.''

''ஐயன் நான் தவறாக எதுவும்...'' மாடசாமி லேசாக மிரண்டான்.

''எதுவும் தவறில்லை... எல்லாமும் சரி. இடது இருந்தால்தானே வலது. இருள் இருந்தால்தானே ஒளி. வெப்பம் இருந்தால்தானே குளுமை. தீது இருந்தால் தானே நன்மை. எல்லாம் அவள் ஆட்டம். நீ வெறுமே இருந்து வேடிக்கை பார்.''

''உறியை என்ன செய்ய வேண்டும் ஐயன்?''



''நாலு மூலையும் கம்பு நட்டு, குறுக்கே சவுக்குக் கட்டைகள் போட்டு, உயரக்கட்டு. கீழே குழி வெட்டு, கட்டைகள் பரப்பி, தீ மூட்டு.

''நான் உறியில் அமர்ந்து அவளைப் பாடுவேன். மீதியை அவள் பார்த்துக் கொள்வாள்.''

''அரிகண்டம் என்கிறாயே... ஒவ்வொரு கயிறாக அறுத்துப் பாடுவாயா...'' அண்ணன் கேட்டார்.

''மொத்தமும் அறுந்து உறி விழுந்து விட்டால்...'' அப்பா கேட்டார்.

''மொத்தமும் அறுக்க வேண்டிய அவசியமிருக்காது. எண்பது அல்லது எண்பத்தைந்துதான் தாங்கும். என் கனம் தாங்காது, அதற்கு முன்னரே கூட அறுந்து விடலாம்.''

''இது தற்கொலையல்லவா...''

''இல்லை, தவம்.''

''இது விஷப்பரீட்சையல்லவா...?''

''இல்லை, வேள்வி.''

''அம்பிகையை சோதிக்கிறாயா...?''

''இல்லை. என்னை சோதித்துக் கொள்கிறேன்.''

''இப்படிச் செய்தால் நிலவு வருமா?''

''வருமென்று சொன்னது அவள். வந்தே ஆக வேண்டும்.''

''வராது போனால்...?''

''இனி, பூமிக்கு நிலவே இல்லையென்று அர்த்தம்.''

''நீ அகங்காரமாய் பேசுகிறாய் சுப்ரமணியம்.'' அப்பா கோபமாய் கூவினார்.

''இல்லையப்பா, நான் பேசவில்லை. நான் செய்யவு மில்லை. அவள் ஆடுகிறாள். நான் ஆட்டுவிக்கப் படுகிறேன்.''

''அமிர்தகடேஸ்வரா... இதென்ன சோதனை...?'' அப்பா அலறினார்.

''அபிராமியைக் கூப்பிடுங்கள் அப்பா. அமிர்தகடேஸ் வரருக்கும் அவளே துணை.''

''அடேய்... போய் ராஜம் அக்காளை அழைத்து வா.'' அண்ணனை ஏவினார்.

ராஜம் அக்காள் அட்டகாசமாய் உள்ளே நுழைந்தாள்.

''அரிகண்டமா... அற்புதம்... அற்புதம். அம்மை உன் நெஞ்சுக்குள் புகுந்து எவ்வளவு அழகாக இயங்குகிறாள். சூரியன் மேற்கே இறங்கத் துவங்கிவிடும். ஏறிவிடு. தணல் நான் மூட்டுகிறேன்.'' கைகொட்டினாள்.

''அடியே ராஜம்... அவனை சாகடிப்பதாய் முடிவு செய்து விட்டாயா?'' அப்பா கத்தினார்.

''அவன் செத்தால் தடுக்க உம்மால் ஆகுமா? உமது மரணத்தை நீர் கவனித்துக் கொள்ளும். அவன் மரணத்தை அவன் பார்த்துக் கொள்வான்.'' ராஜம் அதட்டினாள்.

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?'' சுப்ரமணியத்தின் மனைவி கைகூப்பி கேட்டாள்.

''இது நல்ல கேள்வி. பிரார்த்தனை செய். புருஷன் வெற்றியடைய வேண்டும் என்று உள்ளே கைகூப்பிக் கேள். அவன் மீதே கருத்தாக இரு. வெறுமே வாழ்க்கையில் நடப்பதை வேடிக்கை பார்.''

''அபிராமி தானே உனக்கு நல்ல புருஷனைக் கொடுத்தவள். அவளே அவனைப் பிரகாசமாகவும் மாற்றி உனக்குத் தருவாள். அவளைப் பிடித்துக் கொள். அதுவே அவனை பலப்படுத்தும்.''



உறி இணைத்த கயிறு உயரே ஏறியதும், ஊர் சுற்றி நின்று கொண்டது.

சுப்ரமணியம் கோயிலுக்கு உள்ளே போனார். வலம் வந்தார். விறகுக் குவியலில் நடந்து, உறியை நோக்கி நகர்ந்தார். முடிந்த சிகையை தட்டிவிட்டார்.

குடுமி பிரிந்து முதுகில் படர்ந்தது.

சுற்றியுள்ள ஜனங்களைப் பார்த்து கைகூப்பினார். கவலை தோய்ந்து நிற்கும் மனைவியைப் பார்த்தார். வணங் கினார். மெல்லச் சிரித்தார்.

தாயை, தந்தையை, அண்ணனை, மன்னியை, ்மைத்துனனை, அவன் மனைவியை தனித்தனியே கவனித்தார். கைகூப்பினார்.

மாடசாமிக்கு வணக்கம் சொன்னார். உறியில் போய் அமர்ந்தார். கயிறை இழு என்று சைகை செய்தார்.

மாடசாமி கயிறு இழுக்க, உறி மேலே போயிற்று.

மன்னருக்கு சேதி சொல்ல ஓடினார்கள்.

கோயில் மண்டபத்தில் திரைகள் தொங்க, மன்னர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அவரை எழுப்ப, அய்யாவையன் சில முயற்சிகள் செய்து முடியவில்லை.

இரவு வரும்வரை மன்னரை எழுப்ப முடியாது என்று அய்யாவையனுக்குத் தெரிந்து விட்டது. உறிக்கு அருகே போனால், தடுத்து நிறுத்தும்படி எவரேனும் கேட்கலாம்.

மன்னரின் பிரம்படியைவிட உறி உத்தமம்.

மன்னர் உறக்கத்தைக் கலைப்பது எளிதல்ல. மீறி கலைத்தாலும் விளைவுகள் நன்றாக இராது.

அரசனைச் சுற்றியிருக்கும் புலவர்களை ஓலையும், எழுத்தாணியுமாய் உறிக்கு அருகே போகச் சொன்னார்.

சுப்ரமணியம் அரிகண்டம் பாட, அதை எழுதிக் கொண்டு வர கட்டளையிட்டார்.

மன்னர் கண்விழிக்க ஆவலாய் காத்திருந்த அய்யாவையனின் மனம், கோயில் வாசலிலேயே இருந்தது. பத்மாசனமிட்டு அமர்ந்து கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

அவர் அமர, ராஜம் அக்காள் கோயில் வாசலில் அடுக்கிய விறகுகளுக்கு தீ மூட்டினாள். பரப்பி விட்டாள்.

சுப்ரமணியம் வெப்பம் பட்டதும் கண்களை மூடிக் கொண்டார். இடுப்புக்குக் கீழேயுள்ள மூலாதார சக்தியை உற்று கவனித்தார். வளர விட்டார்.

மனசுக்குள் மஞ்சள் புகை எழுந்தது. உடம்பு முழுவதும் சக்தி படர்ந்தது.

அந்த மஞ்சள் நிறத்திலிருந்து கொன்றைப் பூக்கள் தோன்றின. அந்த மஞ்சள் நிறத்திலிருந்து செண்பக மாலை தோன்றியது.

சுப்ரமணியம் பாடத் துவங்கினார்.

''தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரார் தம்பாகத்து உமை மைந்தனே உலகேழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.''

யோகத்திலிருப்பவர் குரல் கணீரென்று இருக்கும். வெண்கல மணி நாதமாய் ஒலிக்கும்.

சுப்ரமணியத்தின் காப்புச் செய்யுள் திருக்கடவூர் வெட்ட வெளிமீது மோதியது.



அவர் மனதுக்குள் யானைகள் பவனி வந்தன.

அவைகளைப் பார்த்து சுப்ரமணியம் வணங்கினார். அமைதியானார்.

உள்ளே வட்டத் திகிரியாய், உதயசூரியனாய், சிகப்புக் கோளமாய் ஓர் ஒளி தோன்றி, அவர் நெற்றிக்கு நடுவே நின்றது. அந்த சிகப்புக் கோளத்திற்குள் மிகப் பெரிய மாணிக்கப் பரல் மின்னியது.

''உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடை யோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித் துணையே.''

இங்கே துணை நிற்பது, தன்னை செயல் செய்ய வைத்து வேடிக்கை பார்ப்பது அபிராமி.

உறியில் சுப்ரமணியம் தனியே அமர்ந்திருக்க வில்லை. அபிராமி துணையோடு அமர்ந்திருக்கிறார்.

அவர் பாடலை புலவர்கள் எழுதிக் கொண்டார்கள்.

அவர் வீடு அபிராமியை கைகூப்பித் தொழுதது.

அவர் முதல் கயிறை அறுத்தார். இரண்டு, மூன்று, நான்கு... ஏழு, எட்டு, பத்து என்று பாடல்கள் பாடி கயிறு அறுத்துக் கொண்டு போனார்.

''அந்தரி...'' என்று அபிராமியைப் புகழ்ந்தார். தன் நெஞ்சுக் கூட்டுக்குள், உள்ளுக்குள் உள்ளே நிற்பது அவளே... என்று வெளியே சொன்னார்.

அவள் பாதம் என் தலைமேல் இருக்கிறது. அதை நான் சூடிக் கொண்டிருக்கிறேன்.

'நான் சாதாரண அறிவு படைத்தவன். மகா சக்தியாக நீ எனக்கு வந்து காட்சி கொடுத்தது அதிசயம்' என்று தான் காட்சி கண்டதை வெளிப்படுத்தினார்.

ஒவ்வொரு ஆதாரத் தாமரைகளிலும் ஒவ்வொரு வடிவம் காட்டியதைக் குறிப்பிட்டார்.

எனக்கு மரணம் போலும் ஒரு தண்டனை தருகிறார்கள். என் உடம்பை அடிக்க, அழிக்க நினைக்கிறார்கள். அப்படி மரணம் வருகிறபோது, அம்மையே... நீயும் இறைவரும் இணைந்திருக்கும் திருமணக் கோலம் காட்டுவாயாக... என்று கேட்கிறார்.

மூலாதாரத்திலிருந்து ஒவ்வொரு நிலையாக, அம்பிகையின் பல்வேறு வடிவங்கள் தோன்றும். உச்சியில் ஸகஸ்ராரத்தில் இறைவனும், இறைவியும் அர்த்த நாரீஸ்வரராய் இருக்கும் உருவம் தோன்றும்.

தன் குண்டலினி சக்தி உச்சிக்கு வந்து, சக்தியும் சிவனும் கூடியிருக்கும் நிலை காட்டு என்று வேண்டினார்.

''வெட்ட வெளியில் மறைந்திருக்கும் கடலோ...'' என்று அவள் பிரும்மாண்டத்தை பாடலில் காட்டினார்.

கயிறுகள் ஒவ்வொன்றாய் அறுந்தன. தழல் தகதகத்து எரிந்தது. கீழேயுள்ள உஷ்ணம் அவர் உடம்பைத் தாக்கியது.

குண்டலினி சக்தி, சீறி சீறி அவர் உச்சியை முட்டியது. நெற்றிக்கும் உச்சிக்கும் நடுவே போய் போய் வந்தது.

கீழேயுள்ள வெப்பத்தால் உடம்பிலுள்ள சக்திகள் தவித்து உச்சியைத் தாக்கின.

அவர் முன்னே பல்வேறு விதமான வடிவங்கள் வந்து கொண்டே இருந்தன.

கீழே ராஜம் அக்காள், பாலா திரிபுர சுந்தரி மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருந்தாள்.

வீட்டுப் பெண்கள், அபிராமி, அபிராமி என்று கதறிக் கொண்டிருந்தார்கள்.



உறி உயரே இருந்து விழுந்து, நெருப்பு சிதறும் என்று ஜனங்கள் விலகிக் கொண்டார்கள்.

தொலைதூரத்திலிருந்தபடி தழலையும், தழலுக்கு மேலேயிருந்த சுப்ரமணியத்தையும் திருக்கடவூர் ஜனங்கள் பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறை முடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே."

என்னை என்ன... அடியும், அவமானமும் அலங்காரச் சின்னங்களாகப் பெற்று, ஓடும் ஆள் என்றா நினைத்தாய். நான் ஸ்ரீவித்தைக்காரன். அபிராமியின் நேசன்.

நிலம், குதிரை, யானை, இவைகளோடு கிரீடமணிந்து சொகுசாய் சிவிகையில் வலம் வரும் புலவன் நான்.

மழைபோல பொற்காசுகள் என் வாழ்க்கையில் பெய்யும். விலை மதிப்பில்லாத மாலை என் மார்பில் துவங்கும்.

மக்கள் ஆசைப்படுகின்ற இந்த அற்புதங்கள் எல்லாம் சர்வசாதாரணமாக எனக்கு கிடைக்கும்.

ஐம்பத்தி இரண்டாவது கயிறு அறுந்தது.

செல்வத்தை என் தாய் கொடுப்பது மட்டுமல்ல. இல்லாமை சொல்லி, பக்தியோ, தவமோ கல்லாத கயவர்களிடம் என்னை நெருங்கவொட்டாமல், உன் திருவடிக்குக் கீழ் என்னை இழுத்துக் கொண்டதற்காக வந்தனம் என்று பாடினார்.

ஸ்ரீசக்கரத்தில் முதல் ஆபரண தேவதையான திரிபுரை எல்லா சுக சித்தியும் அருளக் கூடியவள். எனவே ஸ்ரீவித்தையில் லயிப்பவன் வேறு எவரிடமும் போக வேண்டிய அவசியமேயில்லை.

ஐம்பத்தி நாலாவது கயிறு அறுந்தது.

பாடப்பாட மனம் முழுவதும் பிரகாசமாயிற்று.

"வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின் புகழ்ச்சியின்றிப்
பேணேன்; ஒரு பொழுதும்; திருமேனி ப்ரகாசமின்றிக்
காணேன் இரு நிலமும் திசைநான்கும் ககனமுமே."

அபிராமி... நான் உன்னைச் சரணடைந்தவன். உனக்கு அன்பு பூண்டவன். வெறும் பலி கேட்கும் துர்தேவதைகளை ஆராதிப்பவனல்ல. என் நிலையினைப் பார்த்தவர்கள் அவ்விதம் எண்ணி விட்டார்கள். மேலும் கீழும் நாலு திசைகளும், என்னைச் சுற்றிலும், முழுவதுமாய் படர்ந்திருப்பது உன் பிரகாசமே... நான் பாடுவது உன் புகழே.

அறுபத்தி நாலாவது கயிறு அறுந்தது.

"பாரும், புனலும் கனலும் வெங்காலும் படர் விசும்பும்
ஊரும் முருகு சுவை ஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே."

பார் என்பது பூமி. பூமி என்பது குண்டலினி சக்தியின் மூலாதாரம். புனல் என்பது நீர். இது குண்டலினி சக்தியின் மணிப்பூரகம். கனல் என்பது நெருப்பு. இது ஸ்வாதிஷ்டானம். வெங்கால் என்பது வலிமையான காற்று. அதன் இருப்பிடம் உடம்பில் நெஞ்சு. அதாவது அனாஹதம். படர் விசும்பு என்பது விசுக்தி, தொண்டைக்குழி. இங்கே இருக்கும் சக்தி ஒலிரூபம். ஆகாயத் தத்துவம்.

இவை எல்லாமும் சுப்ரமணியத்தின் உடம்பில் விழித்தெழுந்தன. முழு பலத்தோடு பிரகாசித்தன.

இவையனைத்தாலும் வணங்கப்பட வேண்டிய தலைவியை, இந்த சக்திகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட



சக்தியைச் சேர்ந்தவருக்கு இல்லாத செல்வம் என்று ஒன்றில்லை. அவர் எல்லா செல்வமும் பொருந்தி வாழ்பவர்.

அறுபத்து எட்டாவது கயிறு அறுந்தது.

உறி ஆடிற்று.

உடம்பிலுள்ள எல்லா தாமரைகளும் பூத்து, தேவதைகளை வரிசையாக அனுப்பின. சக்தியின் பல்வேறு வடிவங்களைக் காட்டின.

"பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சர்
உயிர் அவிஉண்ணும் உயர்சண்டி, காளி, ஒளிருங்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்றே
செயிர் அவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே.

விதம் விதமான சக்தி சொரூபங்களைக் கண்டு மனம் ஆனந்தப் பரவசப்பட்டது. அதோ இதோ, அங்கே இங்கே என்று சூட்சும ரூபத்தில், பல்வேறு இடத்தில், பல்வேறு வடிவில் தெய்வ உருவங்கள் அவருக்குத் தோன்றின. தோன்றும் போதே அவைகளின் பெயர்களும் குணங்களும் அவருக்குத் தெரிந்தன.

அவர் சிறிதுகூட பயமில்லாமல் எழுபத்தி ஏழாவது கயிறை அறுத்தார்.

உறி கிறீச்சிட்டு ஆடியது.

கீழே பெண்கள் பயத்தில் வாய் பொத்திக் கொண்டார்கள்.

ராஜம் அக்காள் மாடசாமி கொண்டு வந்த விறகுகளைப் போட்டு, தழலை இன்னும் பெரிதாக்கினாள்.

பச்சை விறகும் உடனே பற்றிக் கொண்டது. புகையோடு தகதகத்து எரிந்தது.

இருளும் ஒளியுமில்லாத சூரியன் சுத்தமாக மறைந்த அந்த நேரத்தில், சுருள் சுருளாய் புகை எழுந்து வானை நிறைத்தது.

காற்று அசையாதிருந்தது.

மன்னர் புரண்டு படுத்தார். யாரோ முதுகில் பிரம்பால் அடித்ததுபோல் உணர்ந்தார்.

திடுக்கிட்டு எழுந்தார். 'யாரது?' என்று கூவினார்.

தாதிகள் பரபரத்தார்கள். வேலையாட்கள் ஓடிவந்து கைகட்டி நின்றார்கள்.

''அய்யாவையன் எங்கே?''

மன்னர் எழுந்து உடை சரிசெய்து கொண்டார்.

அய்யாவையன் வந்து நின்றதும், அரசனுக்கு ஏனோ சுப்ரமணியம் ஞாபகம் வந்தது.

''அந்த அந்தணர் எங்கே?''

''மேலே...''

அரசருக்கு பகீரென்றது.

''தற்கொலையா... இறந்து விட்டாரா...'' மனம் கலவரப்பட்டது.

''இல்லை மன்னா. கீழே தீ வளர்த்து மேலே உறி கட்டி, உருகி, உருகி அம்பிகையைப் பற்றி பாடிக் கொண்டிருக்கிறார். அழகுத் தமிழில், அற்புதமான பொருள் நயத்தோடு, வேத மந்திரத்தின் ஒலி அம்சங்களோடு, பாமாலைகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

''நூறு கயிறு கட்டி, பயமே இல்லாமல் ஒவ்வொரு உறியாய் அறுத்துக் கொண்டிருக்கிறார். வாட்டமேயில்லாத முகத்தோடு இருக்கிறார்.

''தழலால் எழுந்த புகை தூண் போல நிற்கிறது. காற்று அசையவில்லை. காக்கை, கிளி, குருவி எதுவும் பேசவில்லை. மிருகங்கள் நகரவில்லை. ஊர்வனவும் சுருண்டு கிடக்கின்றன.



''திருக்கடவூர் மக்கள் அனைவரும், உங்களோடு வந்த பிரதானிகள் அனைவரும், படைவீரர்களும், வேலைக்காரர்களும், ஆடுபவர்களும், பாடுபவர்களும், புலவர்களும், அடிமைச் சேவகர்களும் அவரையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

''இன்னும் கால் நாழிகையில் இருட்டி விடும். அதே சமயம் நிலவும் தோன்றும் என்று எனக்குத் தோன்றுகிறது.'' அய்யாவையன் அமைதியாகச் சொல்லி முடித்தார்.

''சரி.'' அரசர் கொட்டாவி விட்டார்.

''உறி கட்டிய இடத்திற்கு நீங்கள் போங்கள், பின்னால் வருகிறேன்'' கோயில் தோட்டத்துக்குள் புகுந்தார். குளிப்பதற்கு ஆட்களைக் கூப்பிட்டார்.

''செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும், விழியின் கொழுங்
கடையும் துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணை விழிக்கே.''

சுப்ரமணியத்தின் நெஞ்சுக் கூட்டுக்குள் நிலவு தோன்றியது. நிலவு தோன்றிய போதே, நிலவுக்குள்ளாகவே, நிலவுக்கு நிகரிணையான ஒளியாய் அபிராமியின் முகம் தோன்றியது. உதடு பிரித்துச் சிரித்தது.

சிரித்தது நிலவா, அபிராமியா என்று தெரியவில்லை.

அபிராமி காதுகளில், கொப்பும் குழையும் அணிந்திருந்தாள்.

கொப்பு மேற்காதில் அணிவது. குழை கீழ்காதில் அணிவது. அபிராமியின் கொப்பு முத்துக்களால் நிரம்பியிருக்கிறது. குழை வைரத்தால் செய்யப்பட்டிருக்கிறது.

முகத்தின் வெண்மையும், வைரத்தின் பளீரும் மாறி மாறி ஜொலிக்கின்றன. இவற்றை உற்றுப் பார்க்க அவையும் நிலவாகின்றன.

அபிராமியின் வலக்காதில் சூரியன், இடக்காதில் சந்திரன் என்று மீண்டும் மின்னுகின்றன.

சுப்ரமணியத்தின் உள்விழிகள் இரண்டும் அசையாது நின்றுவிட்டன. அவருடைய மனக்கண் அபிராமியையே பார்த்துக் கொண்டிருக்கிறது.

மிகப்பெரிய நிலவு அவரைச் சுற்றிக் கொண்டது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. இரண்டு கைகளையும் விரித்துப் பரமானந்தமாகப் பார்த்தார்.

ஒரு காற்று சுழன்று வந்து புகையை விலக்கியது.

குதிரைகள் மிரண்டன. பட்டத்து யானை பிளிறிற்று.

கிணற்றில் நீரிறைத்து அரசன் தலையில் கொட்டினார்கள்.

நாய்கள் வானம் பார்த்து குரைத்தன.

பறவைகள் மறைவிடங்களிலிருந்து பொங்கி எழுந்து திருக்கடவூர் வெளியில் சுற்றின.

எங்கோ தென்திசையில் பலமாக இடி இடித்தது.

பசுக்கள் நிலை கொள்ளாமல் அலைந்தன.

ஊர் ஜனங்கள் உயரே தன்னை மறந்து கைவிரித்து அமர்ந்திருக்கும், சுப்ரமணியத்தைப் பார்த்துக் கை கூப்பினார்கள். அவருக்கு ஏதோ தெரிகிறது என்பதை உணர்ந்து கொண்டார்கள். அவருக்குத் தெரிந்தது, நமக்குத் தெரியவில்லையே என்று ஒட்டுமொத்தமாய் ஆதங்கப் பட்டார்கள்.



இன்னும் இரண்டு கயிறுகள் அறுத்தால் போதும். உறி நிச்சயம் நெருப்பில் விழும். கனம் தாங்காமல் மற்ற கயிறுகள் தானே அறும்.

ஆனால், சுப்ரமணியத்தைப் பார்த்தால் உறியின் மீது அமர்ந்தவராய் தெரியவில்லை. உறுதியான பாறையில் அமர்ந்தவர் போல் இருக்கிறார்.

இறையருள் பெற்றவரால்தான் இது முடியும். இந்நேரம் இப்படிப் பாட முடியும். இறையருள் பெற்றவரால்தான் இப்படி பயமில்லாமல் இருக்க முடியும். இறையருள் பெற்றவரால்தான் இப்படி பரவசமாய் காட்சிதர முடியும்.

''சுப்ரமணியம்... சுப்ரமணியம்... உனக்குள் தெரிந்ததை எனக்கு காட்டேன் அப்பா. எனக்கு இறைவனைக் காட்டி வையேன் மகனே...'' சுப்ரமணியனின் தந்தை அழுதார். இனி இவன் தனக்கு மகனில்லை என்று தெளிந்தார்.

''என் குருநாதா... என் சுப்ரமணியா, என் தகப்பன் சாமியே... என் தயாநிதி...'' தொடர்ந்து சுப்ரமணியத்தின் அப்பா உரத்த குரலில் சுப்ரமணியத்தை நோக்கிக் கதறினார். நெருப்பென்று பாராமல் அவரை நெருங்க முற்பட்டார்.

அய்யாவையன் ஓடிப்போய் அவரை கட்டிக் கொண்டார்.

அங்குள்ள எல்லார் மனதும் அப்படியே கதறிற்று. சுப்ரமணியத்தின் தந்தை சொன்ன வாக்கியங்களை தம் வாக்கியங்களாய் எல்லார் மனமும் கூவத்துவங்கியது.

வானில் எந்த முகாந்திரமுமின்றி ஓர் ஒளி படர்ந்தது.

கோயிலுக்குள்ளிருந்து பளீரென்று ஓர் ஒளி கீறிக் கொண்டு போய் நடுவானில் நின்று தகதகத்தது. சிறிய சுடராய் இருந்தது. பரபரவென்று பெரிதாயிற்று.

''அதோ... அதோ'' என்று எல்லோரும் கூவினார்கள். கண்ணாரப் பார்த்தார்கள்.

அரசன் தானே நீர்க் குடத்தை தன் முகத்தில் கவிழ்த்துக் கொண்டான். வழியும் நீரினூடே வானம் பார்த்தான். வட்டமான சுடர் பார்த்தான். அது பெரிதாகி வருவது பார்த்து திகைத்தான். குடம் தவற விட்டான். கை கூப்பினான்.

''நிலவு, நிலவு, நிலவு...'' தாதிகள் கத்தினார்கள். வேலைக்காரர்கள் கூவினார்கள்.

தொலைவே ஜனக்கூட்டத்தின் மிகப் பெரிய ஆரவாரம் காதில் விழுந்தது.

அரசன் ஒற்றை ஆடையோடு நதியில் நனைந்த கரடி போல், நீர் சொட்ட வானம் பார்த்தபடியே கோயில் வாசலுக்கு ஓடினான்.

நிலவு இன்னும் பெரிதாயிற்று.

பௌர்ணமி நிலவைவிட மூன்று மடங்கு பெரியதாய், மிகப் பெரிய வட்டமாய் வானத்தில் நிலைத்து நின்றது.

சுப்ரமணியம் கண் திறந்தார். நிலவு பார்த்தார். ''அம்மா...'' என்று கூவினார். இறையோடும் எதிரேயுள்ள சக்தியோடும் இணைந்தார். தன்னை அவளுள் கண்டது போல, அவளைத் தன்னுள் கண்டார். மகோன்னதமான சந்தோஷத்தில் கூவினார். பாடினார்.



''கூட்டியவா, என்னைத்தன் அடியாரில் கொடிய வினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ள வண்ணம்
கூட்டியவா, கண்ட கண்ணும் மனமும் களிக் கின்றவா,
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.''

''எப்பேர்ப்பட்ட நாடகம் ஆடினாய் தாயே. உன்னை வெளிப்படுத்த என்னைக் கருவியாக்கிக் கொண்ட ஆடகத் தாமரை அணங்கே, என் மூலம் திருக்கடவூர் முழுவதும் உன் இருப்பை நிரூபித்து விட்டாயே... இறை உண்டென்று அடித்துச் சொல்லிவிட்டாயே... எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி காட்சி கொடுத்து விட்டாயே...

என்ன அற்புதமான நாடகம் தாயே...

பரவசத்தோடும் நன்றியோடும் கைகூப்பினார்.

அரசர் வந்து நின்றார்.

சுப்ரமணியத்திற்கு அவர் வருகை தெரிந்தது.

மன்னனையோ, மந்திரியையோ, வேதியர்களையோ நான் வணங்கத் தேவையில்லை.

பரிவார தேவதைகளோடு காட்சி தரும் அபிராமியே, நெஞ்சில் வஞ்சமுள்ளவரோடு நான் தொடர்பு கொள்ள மாட்டேன். என்னுடையதெல்லாம் உன்னுடையதே என்று உன்னைத் தொழும் அடியவரோடு பிணங்க மாட்டேன்.

இதை என் அறிவால் நான் பேசவில்லை. என்னுள் நீ ஏற்றி வைத்த பேரொளியால் பேசுகின்றேன்.''

அரசனுக்கு சுருக்கென்று தைத்தது. பயத்தில் உடம்பு பதறியது. நிலவைப் பார்க்க பார்க்க கண்கள் இருண்டன.

''அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை, வாழ்த்துகிலேன், நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன், எனது உன தென்றிருப் பார்சிலர் யாவரோடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன், என்கண் நீ வைத்த பேரளியே.''

சுப்ரமணியம் எண்பத்தோராவது கயிற்றின்மீது கத்தியை வைத்தார்.

''ஐயன்... ஐயன், இறங்கி விடுங்கள் ஐயன்'' அரசர் வாய்விட்டு கதறினார். கண்ணில் நீர் பெருக்கி மன்றாடினார்.

நெருப்புக்கு நேரே, நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வணங்கினார்.

அரசன் விழுந்து வணங்க, அமைச்சர் அய்யாவை யனும் தரையில் விழுந்து வணங்கினார்.

தகப்பன் வணங்கினார். தமையன் வணங்கினார். தருக்குற்றுப் பேசிய ஆட்கள் அனைவரும் நெற்றி நிலம்பட விழுந்து வணங்கினார்கள்.

அம்மாவும், மனைவியும், மைத்துனனும், அவர் மனைவியும், அரசாங்கப் பரிவாரங்களும், புலவர்களும் தரையில் மண்ணோடு மண்ணாய் கிடந்தார்கள்.

ராஜம் அக்காள் கீழும் மேலும் பார்த்து விட்டு ஆனந்தப்பட்டாள். ''அபிராமி அபிராமி அபிராமி...'' என்று எல்லோரையும் தாண்டித் தாண்டி தீயைச் சுற்றி வலம் வந்தாள்.

''பொலிக பொலிக பொலிக... இங்கு போயிற்று பல்லுயிர் சாபம்'' என்று கூவினாள். இங்கே வணங்கியவர் வினையெல்லாம் அறுந்தது என்று எக்காளமிட்டாள்.

''இங்கே பாடிய பாடலை எங்கே கேட்டாலும், எப்போது கேட்டாலும் தீவினை அறும். நல்லன வரும். வேண்டிய வரம் கிடைக்கும். அபிராமி... அபிராமி... அபிராமி... அபிராமி...''



ராஜம் அக்காளின் கால் தூசு, திருக்கடவூர் பெரிய மனிதர்களின் முகம், தலை எல்லாம் பட்டது.

''மாடசாமி, எழுந்திரு.'' அவன் முதுகு தட்டி எழுப்பினாள். ''ஏணி கொண்டுவா'' என்று கட்டளை யிட்டாள்.

மாடசாமி நடுக்கட்டையில் ஏணியை சார்த்த, அய்யாவையன் எழுந்து தீயை அணைக்கச் சொன்னார்.

விறகால் விறகை இழுத்து, நீர் தெளித்து நெருப்பை சமனப்படுத்தினார்கள்.

ராஜம் அக்காள் ஏணியில் வேகமாக ஏறினாள். பின்னால், மாடசாமி ஏறினான்.

அரச பரிவாரங்கள் ஏணியை பிடித்துக் கொண்டன. வேறு கம்புகளால் முட்டுக் கொடுத்தன.

''குழந்தாய் வா.'' ராஜம் அக்காள் சுப்ரமணியனுக்கு கை நீட்டினாள்.

''என் குட்டனே வா... அபிராமிப் பட்டனே வா.'' அவன் வலக்கையை தன் வலக்கையால் கோர்த்துக் கொண்டாள். அவன் விழிகளை தன் விழிகளால் உற்றுப் பார்த்தாள்.

அந்த அன்புத் தொடலில் சுப்ரமணியத்தின் ஜுரம் இறங்கியது, மனம் பூமிக்கு திரும்பியது.

ராஜம் அக்காள் சுப்ரமணியத்தை உறியிலிருந்து தூக்கி, ஏணியில் நிறுத்தினாள்.

நடுங்கும் உடம்புடைய சுப்ரமணியனின் இடக்கையை மாடசாமி பிடித்துக் கொண்டான். வலக்கையை ராஜம் அக்காள் பிடித்துக் கொண்டாள்.

மூவரும் ஏணியின் வழியே மெல்ல கீழே இறங்கினார்கள்.

அபிராமிப் பட்டர் தரை தொட்டார்.

நிலவு தீவிரமாய் ஒருமுறைப் பிரகாசித்து விட்டு பின்னடைந்தது.

மறுபடியும் பறவைகள் எழுந்து ஆரவாரித்தன. யானைகள் பிளிறின.

அரசர் எழுந்து மறுபடி நிலம்பட வணங்கினார். மன்னிப்பு கேட்டார்.

''எண்பத்தோரு பாடல்கள் தானே ஆயிற்று. அந்தாதி எனில் நூறு பாடல் இருக்க வேண்டுமே... கூடவே நூற்றி ஒன்றாக ஒரு நூற்பயன் செய்யுளும் இருக்க வேண்டுமே...'' புலவர்கள் பேசினார்கள்.

அரசர் அபிராமிப் பட்டரை கோயிலுக்குள் அழைத்துப் போனார். ஆசனமிட்டார். அவர் கையாலேயே பருக நீர் கொடுத்தார். வெப்பம் குறைய விசிறினார். மீதி எழுதி நூறாக்கி, கூடுதலாக நூற்பயன் ஒன்று எழுதி நூற்றி ஒன்றாக்கி பட்டர் நிறைவாக்கினார். அந்தாதியைப் பூர்த்தி செய்தார்.

மறுநாள் அரசர் பல பரிசுகள் கொடுக்க முன்வந்தார்.

அபிராமிப் பட்டர் வாங்க மறுத்தார்.

அப்பாவும், மற்ற அந்தணர்களும் வாங்கிக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். நமது வம்சத்திற்கு ஆகுமென்று எடுத்துரைத்தார்கள்.



சோழ தேசத்தில் உள்ள நெல்வயல்களில் வேலிக்கு ஒரு குறுணி, அறுவடை காலத்தில் அபிராமிப் பட்டருக்கு சம்பாவனையாக நெல் அளக்க வேண்டும் என்று அரசர் தாமிரப் பட்டயம் எழுதிக் கொடுத்தார்.

அபிராமிப் பட்டர் அதை வாங்கி மனைவியிடம் கொடுத்தார். அதை அவர் மனைவி தன் மாமனாரிடம் கொடுத்தார். அதை அவர் மூத்த மகனிடம் கொடுத்தார்.

ஊர் அவரைப் போற்றிக் கலைந்தது.

அவர் எழுதிய நூற்றியொரு பாடல்கள் பல பிரதிகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு பயனுண்டு என்று சொல்லப்பட்டன.

ராஜம் அக்காள் தொடர்ந்து சக்தி வழிபாட்டிற்காக மேற்கேயுள்ள சேர தேசம் போனாள்.

அபிராமிப் பட்டர் மனைவியோடும், மைத்துனனோடும், மைத்துனன் துணைவியோடும், சான்றோர்கள் வாழும் தொண்டை மண்டலம் போனார்.

அபிராமி அந்தாதி என்கிற அந்த நூலும், மன்னன் சரபோஜி அவருக்கு அளித்த தாமிரப் பட்டயமும் இன்றும் இருக்கின்றன.

சந்திர சூரியர்கள் இருக்கும்வரை இவ்வுலகில் அபிராமி அந்தாதியும், அந்தப் பட்டயமும் இருக்கும். சுப்ரமணியம் என்கிற அபிராமிப் பட்டரின் புகழை இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கும். இறையுணர்வு என்கிற தீபத்தை, அழியாச் சுடரை, உலகத்தில் மிளிரச் செய்து கொண்டிருக்கும்.

சக்தி வழிபாட்டின் சாரம் அபிராமி அந்தாதி. சக்தி என்பது இப்புவியில் பெண்ணுருவம்.

பெண்கள் எங்கெல்லாம் போற்றப்படுகிறார்களோ, எந்த இடத்தில் அன்பும், மரியாதையுமாய் நடத்தப்படு கிறார்களோ, அங்கு எல்லா செல்வங்களும் சிறந்து விளங்கும்.

'கண்மணி கண்மணி' என்று காதலாய் மனைவியை அழைத்த சுப்ரமணியம் என்கிற அந்த இளைஞர், உள்ளே தாமரையாய் மலர்ந்தார். அந்த மனமலர்ச்சியால் உலகப் புகழ் பெற்றார். இறவா வரம் பெற்றார்.

சுப்ரமணியம் என்கிற அபிராமிப் பட்டர், கண்மணியால் மலர்ந்த தாமரை. கண்மணித் தாமரை.

- முற்றும் -